# அலைகள்

ஓர் இலக்கிய மாணவரின் நாட்குறிப்பு

*நெஞ்சம் நிறைந்த அய்யா இரா. இளவரசு அவர்கள் மறைந்து ஓராண்டு நிறைவுறுகிறது. அவரது முதலாம் ஆண்டு நினைவாக இந்நூல் மீள்பதிப்பாக வெளிவருகின்றது.*

**முனைவர் இரா. இளவரசு**
*மேனாள் பேராசிரியர் & தலைவர்*
*பாரதிதாசன் உயராய்வு மையம்*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்*

**அமிழ்தம் பதிப்பகம்**

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **அலைகள்** |
| ஆசிரியர் | : | முனைவர் இரா. இளவரசு |
| பதிப்பாளர் | : | இ. வளர்மதி |
| மறுபதிப்பு | : | 2015 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 256 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 240/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | மதர்போர்டு<br>சென்னை - 14. |
| அட்டை வடிவமைப்பு | : | டிராட்ஸ்கி மருது |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>வடபழனி, சென்னை - 26. |
| வெளியீடு | : | **அமிழ்தம் பதிப்பகம்**<br>பி-11, குல்மொகர் அடுக்ககம்,<br>15பி, தெற்கு போக்கு சாலை,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017. |
| விற்பனையகம் | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017.<br>9444410654, 044-24339030 |



**தோற்றம்: 12-6-1939**
**மறைவு : 22-1-2015**

# மீள்பதிப்பு

பேராசிரியர் இளவரசு என் நெஞ்சம் நிறைந்த தமிழ்ப் பேரறிஞர் திராவிட இயக்கக் கொள்கைகளிலும் தனித்தமிழியக்கக் கொள்கை களிலும் பேரீடுபாடு கொண்ட பெருந்தமிழ் அறிஞர். தனித்தமிழியக்க முன்னோடிகளில் முன்னவர். தனக்கென வாழாது தமிழ்க்கென வாழ்ந்தவர். என் தமிழ் வாழ்வில் என்னைத் தூக்கி நிறுத்திய பெருமக்களில் இவருக்குப் பெரும் பங்குண்டு. கொள்கையில் உறுதியும், அஞ்சா நெஞ்சமும், எந்த நிலையிலும் யாரிடமும் தலைதாழா தன்மானப் பேராசான்.

இப்பெருந்தமிழ் அறிஞர் மறைந்து ஓராண்டு முடிந்து விட்டது. என்போன்றார்க்கு அவர் மறைந்தார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரோடு பழகிய நாட்கள் என் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் நினைவுகள். மலேசியத் திருமண்ணில் மொழிநூல் கதிரவன், மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டை ஒட்டி தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட நூல்களின் அறிமுக விழா 2002 இல் நடைபெற்றது. நாங்கள் இருவரும் கலந்துகொண்ட அந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறேன். கண்களில் நீர்வழிய அவருடைய நினைவாக அவர் எழுதிய அறிவுச் செல்வங்களை தமிழ் கூறும் நல்லுலகம் பயன்கொள்ளும் வகையில் மீள் பதிப்புச் செய்வதை என் கடமையாகக் கொள்கிறேன்.

**- கோ இளவழகன்**

# அலைகள்

1947 ஆம் ஆண்டு வெள்ளையரிடமிருந்து விடுதலை என்ற மிகப் பெரிய அரசியலதிகார மாற்றத்தை இந்திய நாடு கண்டது. இதற்கடுத்து 1967ஆம் ஆண்டு தமிழகமும் ஆட்சி மாற்றம் என்ற அரசியல் மாற்றத்தைக் கண்டது. 1966, 1967, 1968 ஆம் ஆண்டுகள் தமிழக அரசியல் வரலாற்றில் 'பற்றி எரிந்த' முக்கியமான ஆண்டுகள்.

1958 ஆம் ஆண்டு முதலே நாட்குறிப்பு எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்த இலக்கிய மாணவர் இளவரசு அவர்கள் தமது 27, 28, 29 ஆம் அகவையில் 1966, 67, 68, ஆம் ஆண்டுகளில் எழுதிய நாட்குறிப்பு 2002 ஆம் ஆண்டு வெளிவந்தது.

நாட்குறிப்பு எழுதப்பட்டு 36 ஆண்டுகள் கழித்து இளவரசு அவர்கள் தமிழ்ப் பேராசிரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் நூல் வடிவம் பெறுவது வரலாற்று ஆவணம் என்ற தகுதி நிலைக்கும் உரியதாகிறது.

பேராசிரியர்கள் பலரும் நாட்குறிப்புகள் எழுதியிருக்கலாம். ஆனால் இளவரசு அவர்களின் தமிழ்நிலைப்பாடு, ஒடுக்கப்பட்டோர் சார்புநிலை, அரசியல் கண்ணோட்டம் ஆகியவை மற்றவர்களிடம் காணப்படாத தனித்த நிலையாகும்.

புதினங்கள், கவிதைத் தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்புகள், பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கியத்திறனாய்வுகள், இலக்கிய நிகழ்வுகள், அரசியல் நிகழ்வுகள் அவருடைய இளம் நெஞ்சத்தில் ஏற்படுத்திய ஏக்கங்கள், மயக்கங்கள், சீற்றநிலைகள் மகிழ்வுப் பெருக்குகள் ஆகியவற்றைப் படிக்க, படிக்க அவரை இழந்த இழப்பு நெஞ்சைப் பிசைகிறது.

நாட்குறிப்புகள் அவருடைய அழகிய கையெழுத்தால் அமைந்த வெறும் எழுத்து வரிசைகள் அல்ல. அவை நம் இயலாமையைக் காலில் குத்தும் கருவேலம் முட்களாகச் சுட்டிச் செல்பவை. எதிரிகள் நெஞ்சில் 'சர'க்கென்று பாயும் ஈட்டிகள்.

2015 ஆம் ஆண்டு சனவரி 22ஆம் நாள் பேராசிரியர் இளவரசு அவர்கள் இயற்கையெய்தினார். 2016 ஆம் ஆண்டு நிகழ்வுறும் முதலாண்டு நினைவேந்தல் நிகழ்வையொட்டி அலைகள் மறுப்பதிப்பாக வெளியிடப்படுகிறது.

முதல் பதிப்பைப் போலவே மறுபதிப்பையும் தமிழ்மண் பதிப்பகமே அழகுற வெளியிடுகிறது.

**– வைகறை**

# கரையிலிருந்து...

மனக்கடலில் அலைந்துகொண்டேயிருக்கும் எண்ணங்களைப் பதிவுசெய்திருக்கும் நாட்குறிப்பு ஏடுகளிலிருந்து சில பகுதிகள் 'அலைகள்' என்னும் பெயரைத் தாங்கி உங்கள் கைகளில். தூயவளனார் கல்லூரியில் பட்டவகுப்புப் பயின்ற காலத்திலேயே நாட்குறிப்பு எழுதும் பழக்கம் தொடங்கிவிட்டது. அப்போது அறிஞர் மு.வரதராசனார் எழுத்துகளில் ஆராக்காதல் கொண்டிருந்தேன். அவர் தனது புதினம் ஒன்றில் நாட்குறிப்பு வாயிலாகக் கதையை நடத்திச் செல்லும் உத்தி எனக்கு உவப்பளித்தது. ''நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்குபடுத்திக் கொள்வது போல் தன் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். தலைவாரி அமைத்துக்கொள்ள கண்ணாடி வேண்டும். அதுபோல் உள்ளத்தை ஒழுங்கு படுத்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும்'' என்று அவர் குறிப்பிடும் பகுதி என்னை ஆட்கொண்டது.

கல்லூரிப் பருவத்தில் எனக்கு முதல் நண்பராக வாய்த்த வரத.சுப்பிர மணியன் நாட்குறிப்பு எழுதும் பழக்கமுடையவர். அவர் ஃ கோ & கோ (Hoe & Co) நிறுவனத்தார் வெளியிட்ட நாட்குறிப்பு ஏட்டை வாங்கி எழுதுவது வழக்கம். அவ்வேடு ஏறத்தாழ எழுநூறு பக்கங்களைக் கொண்டதாக இருக்கும். முந்நூறு பக்கங்களுக்கு மேல் எல்லோர்க்கும் தெரிய வேண்டிய இன்றியமையாச் செய்திகள் அதில் இடம்பெற்றிருக்கும். எனக்கு மிகவும் பிடித்த அந்த ஏட்டை வாங்கி முதன்முதல் 1958இல் நாட்குறிப்பு எழுதத் தொடங்கினேன். எழுதிய பகுதிகளை இப்போது புரட்டிப் பார்க்கும்போது அவற்றில் தென்படும் மொழிப்பிழைகளுக்கு அப்பால் வேர்விட்டு நிற்கும் என் அடிப்படை உணர்வுகளைக் காண்கிறேன்.

ஒவ்வொரு நாளுக்கும் உரியவற்றை எழுதிமுடித்து இறுதியில் முத்தாய்ப்பாக ஒரு தொடரை அமைத்திருக்கிறேன். 'மனமே நிறைந்த கேள்வி விழை', 'உளமே கடமை உணர்த்து', 'தனித்த சிந்தனை வேண்டும்', 'முயன்றால் முடியாததொன்றுமில்லை', 'தமிழே என் உயிர்' இப்படிப் பற்பல தொடர்கள்! எடுத்துக்காட்டாக சில நாட்களில் எழுதியுள்ள பகுதிகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

*என்னே என் மனம்! என்ன அலட்சியம்! இன்றுதான் இறுதிநாள் கல்லூரிக்கட்டணம் செலுத்த; தந்தையிடம் கூறவில்லை. என் செய்வது? சக்கரைமண்டியில் கேட்டேன் தருவதாகச் சொன்னார்கள். (50.00) அரைநாள்தான் கல்லூரி வேலை செய்தது. எற்படு காலத்தே கடை சென்று*

*பணம்பெற்று திரும்பினேன். அந்நிலையில் இதுபோன்று ஓர் உதவி இல்லையெனில் எந்நிலை என்னாவது? அதுபோகட்டும். நண்பர்கட்கு பொங்கல் வாழ்த்து அனுப்பவேண்டுமே என்று இரவு பொங்கல் வாழ்த்துக்களை ஐந்துவிதமாக எழுதி வாழ்க்கை முன்னேற்றத்திற்கு காரணமான அனைவர்க்கும் அனுப்ப உன்னினேன். 'மனமே எதையும் அலட்சியம் செய்யாதே'.*

*(11.1.1958)*

*அன்பு நண்பர் கந்தசாமி மற்றொரு நண்பருடன் சென்னை சென்று மீண்டவுடன் காண வந்தார். களிப்பு மிகுதியிலே ஒருமணிநேரம் பேசியிருந்தோம். சென்னையிலே நடந்த நிகழ்ச்சி குறித்து இன்று சாதியொழிப்பு மாநாடு ஒன்று தேவர் மன்றத்திலே கூட்டப்பட்டது. அதில் நாவலர் சோமசுந்தர பாரதியார் புரட்சிக்கவி போன்ற அறிஞர் சிலர் கலந்தனராம். யான் செல்லவில்லை அறியாது இருந்தமையின். ஒரு திங்கள் பின்னர் பேசும்படக் காட்சிக்குச் செல்லலாம் என்று புறப்பட்டோம். சூழ்நிலை திரும்பச் செய்தது படம் பார்க்காது. என்னே மாணவர் வாழ்வு! பணம் இருந்தால் அது ஒரு நல்வாழ்வு. பணமில்லையேல் சுவையற்ற வாழ்வு.*

*(19.1.1958)*

*...கல்லூரியில் மொழிப்பற்றியும் நாடு பற்றியும் ஆசிரியர் மாணவர்க்கிடையே பல கருத்துக்கள் எழுந்தன. தமிழாசிரியர் தமிழ்நாடு வேண்டும் அது முடியாது என்றார். அரசியல் கட்சியை அலட்சியம் செய்தார். அதற்குத் தகுந்த முறையில் வினாக்களும் விளக்கங்களும் மாணவரிடையேயிருந்து எழுந்தன. இவ்வாறு இரண்டு மணிநேரம் கழிந்தது. அவ்விரண்டு மணியில் என்னுள்ளம் எவ்வளவோ தெரிந்தது போலவும் ஏதோ ஒரு புதுமை கொண்டதுபோலவும் இருந்தது. மாணவ நண்பரிற்சிலர் யான்ஆசிரியரிடம் சில கேள்விகள் கேட்டவை சிறந்தன என்றனர். மனமும் மகிழ்வு எய்தியது. ஒரு வினையை மேற்கொண்டால் 'அது முடியுமா முடியாதா என்பதைப் பற்றி நாம் முதலில் சிந்தித்து தயங்கல் கூடாது. அவ்வினை நன்மை உற்றதா அற்றதா என்பதை சிந்தித்துப் பின் நன்மையாயிருப்பின் முயலவேண்டும் முயற்சி திருவினையாக்கும் என்றேன் ஆசிரியரிடம்...*

*(22.1.1958)*

தொடக்கக்காலத்தில் எப்படி இருந்தேன் என்பதைப் புலப்படுத்தவே இவை காட்டப்பட்டன. பின்னர் ஆண்டுதோறும் நாட்குறிப்பு எழுதலானேன். நாள் தவறாமல் தொடர்ச்சியாக எழுத இயலவில்லை. பல நாட்கள் இடைவெளி விட்டு முன் நிகழ்ந்தவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து எழுதியிருக்கிறேன். எழுதாமல் விட்டுவிட்ட காலப்பகுதிகளும் உண்டு. திருவனந்தபுரத்தில் ஆய்வுமாணவனாகச் சேர்ந்த காலத்தில் (1965) நாட்குறிப்பை ஆங்கிலத்தில் எழுதினேன். நண்பர்கள் சிலரொடு மடல் தொடர்பும் ஆங்கிலத்திலேயே நிகழ்ந்தது. ஆங்கில மொழியில் ஆற்றல் பெறவேண்டும் என்னும் ஆர்வமே அவ்வாறு எழுதச் செய்தது. சிறிது காலத்திற்குள்ளேயே அம்மாயையிலிருந்து விடுபெற்றேன். 1985ஆம்

ஆண்டில் நடைபெற்ற, நாடுதழுவிய மாபெரும் ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்ட நான் தளைப்படுத்தப்பட்டுச் சென்னை நடுவண் சிறையில் இருபத்து நான்கு நாட்கள் இருந்தபொழுது எழுதிய நாட்குறிப்புச்சுவடி என்னிடம் உள்ளது. அது தனியே நூல்வடிவம் பெறும்.

உங்கள் கைகளில் உள்ள இந்த 'அலைகள்' திருவனந்தபுரத்தில் நான் ஆய்வுமாணவனாக இருந்தகாலத்தில் மூன்றாண்டுகால எல்லைக்குட்பட்ட உணர்வுகளை - நிகழ்வுகளைத் தாங்கியுள்ளது. அக்காலத்தில் எழுதப்பட்ட வற்றுள் சற்றொப்ப மூன்றில் ஒரு பகுதியே, மற்றவர்களும் தெரிந்துகொள்ள லாம் எனக் கருதப்பெற்றவையே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இதற்குமுன் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட ஆண்டுமலர் ஒன்றில் நாட்குறிப்பி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் 'அலைகள்' என்னும் இதே தலைப்பில் வெளியிடப்பெற்றன. அம்மலரில் நான் எழுதிய முன்னுரைக் குறிப்பில் பொதுவாக நாட்குறிப்புப் பற்றி ''நாட்குறிப்பு என்பது வெறும் நிகழ்ச்சிநிரலன்று; நெஞ்ச ஓவியம். அது இறந்த காலத்தைக் காட்டும். நிகழ்காலத்தைப் பேசும். எதிர்காலத்தைச் சுட்டும். உள்ளச்சுமையை ஏற்கும். எண்ணத் தூய்மையைத் தரும். அதில் பாலை வெளிகளைப் பார்க்கலாம். சோலைப் பொழில்களைக் காணலாம். அங்கே துளிர்க்குந் தளிர் ஒளிரும். உதிரும் சருகு தெரியும்.''

என்று குறிப்பிட்டுள்ளேன். இந்த மலரைக் கண்ணுற்ற முகமறியாத நண்பரொருவர் எனக்கு விரிவான மடல் ஒன்று வரைந்தார். அதிலிருந்து சில பகுதிகள் உங்கள் பார்வைக்கு அளிக்கப்பெறுகின்றன.

*என் மதிப்பிற்குரிய நண்பரே!*

*நான் உங்களுக்கு புதியவன். என்னைப் பற்றிய சில விபரங்களை குறிப்பிட்டால்தான் நல்லது. என் பெயர் சண்முகவேலு. அருப்புக்கோட்டை யில் (ராமநாதபுர மாவட்டம், தமிழகம்) கால்நடை மருத்துவமனையில் கால்நடை உதவியாளராக பணியாற்றி வருகின்றேன். என் அறையில்தான் உங்கள் நண்பரான தி.வே.திருமாறன் அவர்கள் தங்கியுள்ளார்கள். நான் சிறிது தமிழார்வம் மிக்கவன். நாட்குறிப்பு எழுதும் பழக்கம் எனக்கு ஐந்து ஆண்டுகள் உண்டு. தினம் இரவில் நாட்குறிப்பு எழுதுவேன். 17.2.68ம் தேதியன்று இரவு பத்து மணிக்கு வழக்கம்போல் நாட்குறிப்பு ஏடெடுத்து அன்று நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை எழுதிவைத்துவிட்டு படுத்தேன். படுக்கும் முன் ஏதாவது புத்தகங்களை திருப்புவதில் ஒரு இன்பம் ஏற்படும். ஆகவே தி.வே.திருமாறன் அவர்கள் கொண்டுவந்து போட்டிருந்த திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கத்தின் நான்காவது ஆண்டுமலரை எடுத்துப் புரட்டினேன். உங்களது புகைப்படத்தைக் கண்டு 'என்ன இது இவ்வளவு சிறு பையனாக இருப்பவர் என்ன எழுதியுள்ளார்' என சிந்தித்து உங்கள் தமிழ் நடையை அறிய கட்டுரையின் முன்பக்கத்தை புரட்டினேன். 'அலைகள்' என தலைப்பு இடப்பட்டிருந்தது. படிக்கத் துவங்கினேன். அதில் முதலிலே 'நாட்குறிப்பு என்பது வெறும் நிகழ்ச்சி நிரலன்று. நெஞ்ச ஓவியம்' என்ற*

வாக்கியத்தை படித்தேன். போதையேறிவிட்டது. அறிவு தூண்டப்பட்டு விட்டது. உங்கள் கட்டுரை முழுவதையும் படித்தேன். 'மகிழ்ச்சி நிறைவால் என் நெஞ்சம் விம்மியது' என்று முடித்தீர்களே அதுவரை படித்தேன்.

உண்மையிலே நாட்குறிப்பின் அழகு வடிவத்தை, நாட்குறிப்பின் சிறப்பை, நாட்குறிப்பின் இலக்கணத்தை உங்கள் 'அலைகள்' எனக்குக் காட்டியது. தமிழ்சுவை உங்கள் அலைகளில் கலந்து என்னைப்போன்ற தமிழ் பற்றுடையோனுக்கு விருந்தளிக்கின்றது. உங்கள் கற்பனைகளை, எண்ணங்களை உங்கள் அலைகள் எனக்குக் காட்டும்பொழுது என் நினைவு தாகூரை நோக்கி ஓடுகின்றது. அவர் பாடிய கீதாஞ்சலி போன்ற சிந்தனை ஓட்டத்தை உங்கள் கட்டுரையின் சில பத்திகள் காட்டுகின்றது. நான் ஏராளமான புத்தகங்களைப் படித்துள்ளேன். இருப்பினும்அது யாவும் பயனற்றது என்றே உணர வேண்டியதாகிவிட்டது. உங்கள் அலைகளில் 4வது பத்தியில் நீங்கள் படித்த 'பாரீசுக்குப் போ' என்ற நூல் அழகுததும்ப விளக்கியுள்ளீர்கள்.

வருந்துகின்றேன்! இதுநாள்வரையிலும் உங்கள் கட்டுரையை படிக்காமல் இருந்துவிட்டேனே என்று. ஆறுதலடைகின்றேன்! இன்றாவது உங்கள் கட்டுரையை காணமுடிந்ததே என்று. என் நன்றிகள் பல.

என் எண்ணத்தில் மறையாத இடத்தில் அமர்ந்துவிட்ட இளவரசு அவர்களே! உங்களைப் பற்றி அதிகம் அறிய இந்த எளியோன் விரும்புகின்றேன். உங்களது தமிழ் அறிவை கண்டு வியக்கின்றேன். தாங்கள் எடுத்துள்ள தமிழ் ஆராய்வுத்துறையில் பல வெற்றிகளைப் பெறவேண்டும். ''மலரில் வராத ஏராளமான கருத்துக்கள் உங்களிடம் இருக்கும். அவைகளை எனக்கு, வளர்ச்சியடைய எண்ணும், அறிவை கூராக்க எண்ணும் இந்த இருபது வயது இளைஞனுக்கு அளிப்பீர்களா, குறிப்பாக நாட்குறிப்பைப் பற்றிய மேலும் பல விபரங்களை, பல கருத்துக்களை எனக்கு மிக விரைவில் அளிக்கவேண்டும்.

ஐந்தாவது பத்தி அப்படியே என் உள்ளத்தை கலக்கிவிட்டது. எல்லா மனிதனுக்கும் ஏற்படுகின்ற உணர்ச்சிகளை எழுத்தால் வரைந்த விதம் கண்டு சிலையாகிவிட்டேன். உண்மை நிலைகளை, எண்ண அலைகளை அப்படியே திரைப்படமாக எழுத்தால் தீட்டி விட்டீர்கள். அந்த காதல் ஏக்கத்தை இறுதியில் ஒருவரியில் கூறினீர்களே 'துயரத்தீயில் பொசுங்கியே போவேன்...' என. சே! அந்த வரிக்கு உள்ள வலுவுக்கு ஈடே இல்லை.

பத்தாவது பத்தி பாராட்ட வேண்டிய பகுதி. நான்தான் உங்களை தெரியாமல் கேட்கின்றேன். இந்த இயற்கையான நடை பிற மனிதர்களை சிலிர்க்க செய்யும் நடை, தமிழ் கொஞ்சும் அழகு நடையை எங்குதான் கற்றீர்கள்? உலகத்தைப் பார்த்து நீங்கள் விடுத்துள்ள வினாக்கள் யாவும் புரட்சிமிகு வினாக்கள். நீங்கள் காண விரும்பும் அந்த புதுச்சமுதாயத்தைக் காணவேண்டும் என்ற வெறி என்னை பற்றியுள்ளது. ஒன்று கூறுகின்றேன் அந்தச் சமுதாயம் அமைந்தே தீரும்.

இளமையிலேயே மறைந்துபோன அந்த நண்பரின் மடல் எனக்கு எழுச்சியைத் தந்தது.

திருவனந்தபுர வாழ்க்கை பல நிலைகளில் என் வாழ்வின் செழுமை யான பகுதி. அங்குத்தான் ஆய்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டேன். எங்குச் சென்றாலும் நடந்துகொண்டிருக்கும் முன்னேற்றக் கழகஞ்சார் வினைப்பாடுகள், தனித்தமிழ்ப்பற்றை வளர்த்தெடுக்கும் செயற்பாடுகள் அங்கும் நிகழ்ந்தன. என் வாழ்க்கைத் துணையை வரித்துக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது. அந்தக்காலத்தில் எழுதப்பட்டவைகளி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சிலரைக் கடுமையாகத் தாக்கும் பகுதிகள் விலக்கப்பட்டன. கண்டனத்திற்கு ஆளான சிலரின் முழுமையான பெயர்கள் தவிர்க்கப்பட்டன. அதேநேரத்தில் என் கொள்கைப்புலங்களை, சிந்தனைக்களங்களை, வினைப்பாடுகளின் சார்புநிலைகளை, வன்மை மென்மையைப் புலப்படுத்தும் வகையில் நாட்குறிப்புப்பகுதிகள் தெரிவுசெய்யப்பெற்றன.

பெருங்கதையின் மொழியமைப்புப் பற்றி பேராசிரியர் வ.அய்.சுப்பிர மணியனாரின் மாணவனாக ஆய்வு மேற்கொண்டிருந்த நான் அவ்வாய்வு பற்றிய செய்திகளை நாட்குறிப்பில் அதிகமாகப் பதிவு செய்யவில்லை. படித்த நூல்கள், பார்த்த திரைப்படங்கள், ஆற்றிய சொற்பொழிவுகள், எதிர்கொண்ட மாந்தர்கள், தொடர்பு கொண்ட அமைப்புகள், எண்ண அசைவுகள், ஏற்ற இறக்கங்கள் இப்படிப் பற்பல பதிவுகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. நாள் வாரியாக குறிக்கப்பெற்ற இவற்றிற்குத் தலைப்புகளைத் தந்து படிப்பதற்கு எளிமையாக்கியவர் இனிய நண்பர் புலவர் வைகறைவாணன்.

குறிப்பேடுகளில் எழுதப்பெற்றிருந்த பதிவுகளைத் தனித்தாள்களில் படியெடுத்து உதவியவர்கள் என் துணைவியார் இரா.வேலம்மாள், ஆய்வு மாணவர் செல்வி செந்தமிழ்ச்செல்வி ஆகியோர். மெய்ப்புகளை ஒப்பிட்டுப் படித்துப்பார்த்துச் செப்பம் செய்ததில் பெரும்பங்கு நண்பர் க.சந்திரசேகரன், வைகறை, அவர் துணைவியார் திருவாட்டி இந்திராதேவி ஆகியோரைச் சேரும். பல நிலைகளிலும் பங்களிப்புச் செய்த அனைவர்க்கும் அகங்கனிந்த நன்றி.

பதிப்புலக வரலாற்றில் சாதனை நிகழ்த்திவரும் மொழிக்காவலர் கோ.இளவழகன், இனிய நண்பர் மதிவாணன், தம்பி அரங்கராசு இந்த நூலை வெளிக்கொணரும் தமிழ்மதி பதிப்பகத்தார் முதலிய அனைவர்க்கும் என் நன்றியை மகிழ்ச்சியோடு உரித்தாக்குகிறேன்.

நிறைந்த அன்புடன்
இரா.இளவரசு

1966

# சூன் - 1966

## தன்னுணர்வு

*பொன்விலங்கைப் படித்த நண்பர்கள் சிலர் சத்திய மூர்த்தியின் வாயிலாக என்னைக் கண்டதாகச் சொன்னார்கள். என்மேல் அவர்களின் மதிப்பும் அன்பும் நம்பிக்கையும் புலனாயின. நானும் என்னை வளர்த்துக்கொள்ள வேண்டுமென எண்ணினேன். எண்ணியாங்குச் செயல்படுகின்றேனா? பூச்சியும் புழுவும் நெளியும் குப்பை மேடாக நெஞ்சம் இருப்பதா? எண்ணத்தை இவ்வேட்டில் கொட்டித் தீர்த்துவிட வேண்டும்.*

*ஏடே! நீதான் என் துயர்துடைக்கும் நண்பன், நல்லாற்றில் உய்க்கும் ஆசிரியன், சுமைதாங்கியாக உன்னைக் கருதவில்லை, கலங்கரை விளக்கமாகக் கருதுகின்றேன். வானம் அழுது கொண்டிருக்கிறது. நானும் உன்னிடம் அழுது தீர்த்துவிடுகிறேன். கருமை மூடிய வானத்தில் மழையின்பின் எவ்வளவு தெளிவு! அழுகின்ற என் நெஞ்சமும் அதைப்போல் தெளிவடையாதா?...*

## அணையைக் கிழிக்கும் சிறுகசிவு

*தன்னைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாள் பராசக்தி என அறிவுத்தருக்கும், தனக்குப் போதிய வல்லமை தந்தால் இம்மாநிலத்தைப் பயனுற வாழச் செய்யமுடியும் எனப் புலமை நம்பிக்கையும் உடைய பாரதியைப் போல எனக்கும் என் அறிவிலும் ஆற்றலிலும் ஒரோவொருகால் நம்பிக்கையும் வளர்ச்சி நோக்கிய உழைப்பும் ஆர்வமும் எழுகின்றன. 'வேடிக்கை மனிதரைப்போல யானும் வீழ்வேன் என்று நினைத்தாயோ?' என அறக்கடவுளைக் கேட்க நெஞ்சம் அவாவுகின்றது. இறந்தபின்னும் இவ்வுலகம் என்னை எண்ணிப் போற்றுமாறு வாழ்ந்து காட்ட வேண்டும்.*

*முறையாகத் தேக்கிக்காத்து, வேண்டிய காலத்துக் கால்வாய்களில் விடவேண்டிய அணைநீர் - எங்கோ ஓர்மூலையில் அணையில் ஏற்பட்ட சிறுகசிவு நாளாக ஆக அணையைக் கிழிக்க - காத்த பயிர்களையெல்லாம் அழித்துவிடுவதைப் போல பலகால் எழுகின்ற சிற்றசைவுகள் ஆக்கங்கெடுத்து அழிவில் நிறுத்திவிடுமோ*

*என்ற அச்சம் எழுகிறது. என்ன உள்ளமோ இது? குற்றால அருவியில் குளித்து மகிழ்கிற உள்ளம், எப்படித்தான் கூவம் சாக்கடைச்சேற்றில் புரண்டு அசைகிறதோ? ஊசலாடும் நிலை நாளை வாழ்வைப் பாழ்படுத்தும். நினைவில் உறுதி, செயலில் தூய்மை, சொல்லில் வாய்மை காத்தல் இன்றியமையாதது...*

## படிப்பு

*நேற்று நண்பர் 'வீ' நம்நாடு ஏட்டின் குறை சுட்டினார். முன்பொருகாலும் இங்ஙனே! பிடிக்காத மருமகள் கைபட்டாலும் குற்றம்! பகைவர்களிடம் உள்ள நல்ல பண்புகளை அறிந்து போற்றும் மனப்பான்மை உள்ளத்தால் உயர இன்றியமையாதது. உட்ரோ-வில்சன் வரலாற்றை இன்று படித்தேன், மக்களுக்காக நாடு என்ற கொள்கையொடு உலகில் அமைதி தழைக்கப் பாடுபட்ட அத்தலைவனின் இறுதிநாட்கள் சுழலும் சூறையும் மிகுந்த அரசியற் காற்றால் அலைப்புண்டமை உருகத்தக்கது.*

*(28.6.66)*

◆

## கணவன் வீடு செல்லுதல்

*பிறந்தகத்து ஏதுமில்லையென்றாலும் இந்தப்பெண்களுக்கு எவ்வளவுப் பற்று! பிறந்து வளர்ந்து ஓடியாடி உண்டு, உறங்கி கண்டு பேசிக்களித்து விளையாடிய பிறந்தகத்தைக் கழுத்தில் தாலியேறிய உடனே எப்படித்தான் பிரிந்து எங்கிருந்தோ வந்த ஒருவனோடு இந்தப் பெண்களால் போக முடிகிறதோ? ஓரிருநாட் பழகிய நண்பரைப் பிரிவதற்கே உளம் வருந்துகிறதே! நுண்ணிதின் நோக்கின் பெண்கள் செய்கை பெரும் ஈகமே. தங்கை முந்திரியை வழியனுப்பும்போது இத்தனை நாள் பிறந்து வளர்ந்த வீட்டை, பழகி மகிழ்ந்த பெற்றோரை, தூக்கித் திரிந்த அண்ணன் குழந்தைகளை மறந்து நேற்றுக் கணவனாகிய ஒருவனொடு தனியாய்ச் சென்று முன்பின் பழக்கமில்லாச் சூழலில் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கப் போவதை நினைத்து நெஞ்சு இனைந்தது. உடன்பிறந்த குருதித் தொடர்பு என்னை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது...*

## படைவீரன் செத்தான்

*தம்பி மணி நாளை காலை ஊரின் கிளம்பிப் படைப் பாசறை நோக்கிப் போவதைக் குறித்து, பிரிவை நினைக்கையில் பெருந்துயர் விளைகிறதென்றெழுதியுள்ளான். ஆண்டுக்கொரு முறை, அதுவும் வாய்ப்புக் கிட்டினாலே வரமுடியுமென்ற சூழல்*

அவனுக்கு. நாமும் இறக்கப் போகிறவர்களே என்பதை மறந்து விட்டு ஊர்ப்புற மக்கள் படைஞனைச் சாவோடு இணைத்தே பார்க்கின்றனர். என்ன பேதைமை! கோழைமை! போகப்போகிற இந்த உயிரைப் பிடித்து நிறுத்தவா முடியும்? என்றோ அழியத்தான் போகிறது. என்றென்று தெரியாததாலேயே நாளை வாழ்வில் நம்பிக்கை வைத்து உயிரைப்பற்றிய நினைவுகூட இன்றி இவ்வுலகம் சுழன்று கொண்டிருக்கிறது. அழியப்போகிற இந்த மாந்தனின் உள்ளத்தில் எத்தனை கற்பனைக் கோயில்கள்? எண்ணத்திற்கு ஏது கட்டுப்பாடு? எங்கெங்கோ எண்ணச்சிறகால் பறக்கும் ஓர் இளைஞன் இறந்துவிட்டால்? மலர் கருகுவதா? பிஞ்சு வெம்புவதா? கருகிப்போன கற்பனைகளால் உலகிற்கு எவ்வளவு இழப்பு? இழப்பை ஒழிக்க எவரால் இயலும்!

## நீச்சல் குளச்சாவு

உறையூரைச் சேர்ந்த ஓரிளைஞன் பொறியியலில் சிறப்புப் பட்டம் பெற்று டாடா நகரில் பணியாற்றியவன் நண்பர்களோடு நீச்சல்குளத்திற்குச் சென்றவன், திரும்பவில்லை. உயிர் நீச்சல் குளத்திலேயே போனது. அவன் எத்தனை கற்பனை மாளிகைகள் எழுப்பியிருந்தானோ? அவன் படத்தைத் தாளில் போட்டு தங்கள் துயரில் பங்குகொண்டார்க்கு நன்றி தெரிவித்த அவன் பெற்றோர் கள், அவனை மையமாக வைத்து எதிர்காலத்தை எப்படி எப்படி யெல்லாம் உள்ளத்தில் உருவாக்கினார்களோ? இப்படிப்பட்ட இயற்கைக்கொடுமைக்கு என் செய்வது.

'ஆறில் சாகலாம் - உலகை அறியா நிலை.
அறுபதில் சாகலாம் - உலகை அறிந்த நிலை'

இருபதில் சாவதா? அப்பப்பா? எப்படித் தாங்குவது?

*(30.6.66)*

◆

## சூலை - 1966

### சங்கப்பாடல்கள்

கழக இலக்கியப் பாடல்கள் அலுப்பூட்டுவதாயுள்ளன வென்று பாலைப்பாடல்களைக் காட்டாகச் சுட்டிக் 'கு' சொன்ன தாக நண்பர் 'அ' சொன்னார். மாட்டிற்கும் வைக்கோலுக்கும் உள்ள தொடர்பா இலக்கியத்திற்கும் மாந்தனுக்கும் உள்ள தொடர்பு? பொருள் அடிப்படையில் அலுப்பூட்டுவது எனில் சுவைக்கும் நோக்கில் தவறுளது. இலக்கியம் எழுந்த காலச் சூழலும் பாடல்களைத் தொகுத்த கால நிலையும் உளங்கொண்டு அவைகளைத் திறனாய்தல் நன்று. பொருளை விளக்கும் முறையில் கழகப்பாடல்கள், பிற்காலப் பாடல்கள் எல்லாவற்றினும் நுண்மையும் ஒண்மையும் கொண்டொளிர்வன. அவர்கள் கையாண்ட உத்திகள் எதிர்கால இலக்கிய வளர்ச்சிக்கு வழி காட்டும் சிறப்புடையவை. இப்பொருட்டொடர்பாக விரிவாகச் சிந்தித்துக் குறிப்புகள் சேர்த்தல் வேண்டும்,

சுவை ஆட்கு ஆள், நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடியது. எனினும் ஆள் கால இடமாறுபாடுகளிலும் மாறாச்சுவை உடையன சில இருக்கத்தான் செய்கின்றன. சுவை அளவு காலத்திற்கேற்ப ஏறி இறங்கலாமன்றி சுவை ஒழிவதின்று. கழக இலக்கியங்களும் மாறாச்சுவையும் சிறப்புமுடையன...

### பெண்வேட்டை

இரவு உணாவிற்கு 'அ'வோடு உந்தில் செல்கையில் பொதுமகள் போலும் ஒரு பருவப்பெண்ணும் பயணம் செய்தாள். பதினேழு பதினெட்டு அகவை இருக்கும். ஓர் ஆடவனுடன் ஆயுர்வேதக் கல்லூரி நிறுத்தத்தில் இறங்கினாள். எங்கு கொண்டு சென்றானோ? எத்தனை ஆடவர் காத்திருக்கின்றாரோ? வேட்டை நடைபெறுகின்றது. மாந்தனும் மிருகந்தானே! எப்படி அந்தப்பெண் இப்படியானாளோ? இனி எங்கே மீளப் போகிறாள்? பரத்தை வழிபெறு இன்பம் கள் போன்றது என்பர் மு.வ. அவளும் பரத்தர் கள் வழிபெறும் இன்பம் கள் போன்றதுதானே! மயக்கம் தீரவா போகிறது? எனக்கும் கூட இறந்தகால நினைவுகள் படர்ந்தன.

சலனம் ஏற்பட்டது. இரவு ஏதேதோ நினைவு. எண்ணம் நெருப்பாக வேண்டும்.

*(1.7.66)*

◆

## இளம்பெண் தூக்கிய மகவு

காலையில் துறைக்கு வருகையில் பத்துப் பதினொரு அகவையுடைய இளம்பெண்ணொன்று பச்சிள மகவொன்றைத் தூக்கியபடி எதிரில் சென்றது. பலமுறை அப்பெண்ணைப் பார்த்திருக்கிறேன். இளம்பெண்ணிற்கு இருக்கவேண்டிய பொலிவோ, குறும்போ, வாழ்வுக்கவலை படரா வளமோ இல்லை. பத்துப் பிள்ளைகளைப் பெற்று அலுத்துப்போனவள் முகத்தில் வடியுமே ஒரு சோர்வு, பலருக்குப் பணிசெய்து பழகிய நிலையில் எழுமே ஒரு பொறுப்பு, பட்டறிவு பூசுமே ஒரு சாயம் அத்தனையும் அப்பெண்ணிடம் குடிகொண்டிருக்கின்றன. தாய்போலவே அக்குழந்தைக்கு ஊட்டியும் எடுத்தும் பேணும் முதுமைப்பண்பு கண்டேன். மக்கள் தொகை விரிந்து வளர்கின்ற இன்று இப்படி எத்தனையோ இளைஞைகளைக் காணலாம். வரிசையாகக் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுகின்ற குடும்பத்தில் முதற் குழந்தை பெண்ணாயிருப்பின் அதன்நிலை இதுவே. எத்தனை குழந்தை கட்கு அதன் தாயால் ஈடுகொடுக்க முடியும்! பெற்றுத் தள்ளுவது பெரும்பாலும் எளிதாகத்தான் தெரிகிறது. இன்று வளர்ப்பதோ? இளமை முதுமைக்கோலம் பூண்பதைக் கேட்கவாவேண்டும்?

## அசைக்கும் அழகு

பெண்ணின் கவ்வும் விழிகளில் சரிந்த கருங்குழலில் மதர்த்த எழில்மார்பில் அசையும் இளநடையில் எண்ண எண்ண இனிக்கும் எத்தனை எத்தனை நுட்ப நயங்கள் பொதிந்து கண்சிமிட்டு கின்றன! நுதலில் பொட்டும் குழலில் மலரும் கையில் வளையும் ஒளிர மணக்க குலுங்க ஒருபெண் நடக்கையில் எத்தனை உள்ளங் கள் அசைகின்றன. அந்த அசைக்கும் ஆற்றல் தானே காப்பியங் களின் ஊற்று. கலைகளின் கரு. உலக இயக்கியத்தின் விசை...

## மென்மையான உள்ளம்

மேடையிலே வீசுகின்ற மெல்லிய தண்காற்றில், எழிற்கனி யான இளமகவின் பூஞ்சிரிப்பில் தூய்மை துயிலும் மலர்களின் கவின் மலர்ச்சியில் உள்ளத்தை மென்மையாகவும் தூய்மையாகவும் ஆக்குகின்ற ஆற்றல் பிணைந்து கிடக்கின்றது. தண்காற்றை

மென்மலரை இளமகவைப் போற்றி மகிழும் மனம் மென்மை பெறும். தூய்மை உறும்.

தம்பி கலியன் தங்கம் முதலிய சிலர்க்கு இன்று எழுதினேன். சாலையில் நண்பரொருவருடன் 'குமுதம்' இதழ் பற்றி உரையாட நேர்ந்தது. இன்று தமிழகத்தில் அதிகம் விற்பனையாகின்ற இதழ்கள் மக்களுக்கு வேண்டியதையா தருகின்றன? மணிவண்ணனைப் போல 'திருவிக திலகர் காந்தி' போன்றோர் இதழ் நடத்திய உலகில் பொய்யைப் பூசி, மையை மெழுகி வாணிகம் நடத்துபவர்களை எண்ணி நைய வேண்டியதுதான்.

(2.7.66)

◆

## நெல்லை நகராட்சிக் கலைப்பு

நெல்லை நகராட்சியை அரசினர் கலைத்து விட்டதாக மாலைமுரசில் பார்த்தேன். அருப்புக்கோட்டையை முன்பே கலைத்து விட்டனர். மக்களாட்சிப் பண்பு எப்படிச் செயல் படுகின்றது! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிமன்றந்தான். மக்களின் மடமை மீது நம்பிக்கை வைத்திருக்கும் மாநில அரசு என்னதான் செய்யாது? அறுபத்தேழில் தேர்தலை நடத்துவார் களா? இத்தேர்தலின்பின் பேராயக் கட்சி தவிர பிற கட்சிகளைத் தடைப்படுத்தினும் வியப்பதற்கில்லை...

## மறதி

மறக்க முயலும் சிலவற்றை நம்மால் மறக்க முடியவில்லை. மறக்க விரும்பாத சிலவற்றை நாம் மறந்துவிடுகிறோம். நல்ல பயிரின் வளர்ச்சியை வேண்டா களைகள் கெடுத்து விடுவ தில்லையா? மறதி இல்லையென்றால் உலக வளர்ச்சி உண்டா என்பதே ஐயந்தான். வேண்டியவற்றை மறந்துவிடும்போது ஏற்படும் துன்பம், வேண்டாதவற்றை மறந்துவிடும்போது இன்பமாகிறது. என்றோ எங்கோ உள்ளத்தில்பட்ட ஒன்று, வேண்டிய காலத்தில் வந்து உதவும்போது எத்துணை மகிழ்ச்சி! உலகில் மறக்க வேண்டி யவையும் நினைக்க வேண்டியவையும் உள. அதை உணர்ந்து ஒழுகாமையே பூசற்குக் காரணம்.

துன்ப மிகுதியில் உடல் சுமையாகின்றது. தூக்கிச் செல்வது தொல்லை. நெஞ்சம் கனத்து விடுகின்றது. இன்பமிகுதியில் உடல் சிட்டுக் குருவியாகின்றது. பறந்து திரிகின்றது. நடப்பது தெரியாது. ஒருவனின் இன்பம் மற்றவனின் துன்பமாகவும் ஒருவனின் துன்பம் மற்றவனின் இன்பமாகவும் கருதப்படும் நிலை மன்பதையின் அடிப்படைக் கோளாறையே காட்டுவதாம்.

தாய், தந்தை, பிள்ளைகள் எல்லோரும் ஒரு குடும்பத்தில் உழைக்கிறார்கள்; வேறு குடும்பத்தில் தாய் தந்தை பிள்ளைகள் எல்லோரும் உழைப்பதில்லை. முன் குடும்பத்தில் காண்பதோ பசியேப்பம், ஒழுகும் குடிசை, உடைப்பஞ்சம். பின் குடும்பத்திலோ புளியேப்பம், மாடி வீடு, பட்டாடை வகை. முன்வகைக் குடும்பங்கள் கணக்கில, பின்வகைக் குடும்பங்கள் சில, சிலரின் வாழ்வே பலரின் தாழ்வா? காரணம் என்ன? எல்லோரும் உழைத்து வாழ்கின்ற நிலை என்று வரும்? உழைப்பவன் உதைப்பவனாக மாறத்தான் வேண்டுமா?

(3.7.66)

◆

## உள்ளத்தைப் பண்படுத்தும் கள்ளோ? காவியமோ?

கள்ளோ? காவியமோ? படித்தேன். எத்தனையாவது முறை என்பது நினைவில்லை. முவின் சில நூல்களை வாழ்நாள் முழுதும் படித்துக் கொண்டே இருக்கலாம். உள்ளத்தைப் பண் படுத்தும் நிலைபேறுடைய கருத்துப் பின்னணியுடைய நூல்கள் அவை. மங்கை, அருளப்பன் இருவரின் வாய்மொழி மூலமாகவே கதையை நடத்திச் செல்லும் பாங்கு சிறப்புடையது. உருவக முறை யில், புதிய கோணத்தில் சில சிக்கல்களை எழுப்பி உருவாக்கும் மாந்தரைப் படிப்பவரின் நெஞ்சில் நிறுத்திச் செல்கின்றார்...

## உழைப்புச் சுரண்டல்

மாக்சிம் கார்க்கியின் 'மனிதன் பிறந்துவிட்டான்', 'வாழ்க்கைப்படகு', 'தோழன்' ஆகிய முக்கதையிணைந்த தொகுப்பைப் படித்தேன். கதைப்பொருள்கள் மூன்று வகையானவை. முதல்கதை மகப்பேற்றையும், இரண்டாவது, கணவன் வலுவின்மையால் அவனறிய மாமனார் மருமகள் தொடர்பையும் மூன்றாவது தொழிலாளர் ஒற்றுமையையும் மையமாகக் கொண்டிலங்குகின்றன. கார்க்கியின் கைப்பட்ட சிறியபொருளும் அவன் எழுத்து வன்மையால் எப்படிச் சிறக்கின்றது என்பதை அறிய முடிந்தது. உருசிய மண்ணில் அவனுக்கிருக்கும் பற்றும் பொதுவுடைமைக் கொள்கையில் தணியாத ஆர்வமும் அங்கங்கே புலப்படுகின்றன. செக்காவ், புசுகின், சோலகோவ் முதலான பல உருசிய எழுத்தாளர்களின் படைப்புக்களும், நாட்டுப்பற்றும் அரசியல் ஈடுபாடும் வாழ்விலக்கியம் படைக்கின்ற எழுத்தாளனுக்கு இன்றியமையாதவை என்பதை வற்புறுத்துகின்றன. எழுத்தை ஆளுகின்றவன் மக்களின் நெஞ்சங்களையும் ஆளுகின்றான். நல்வழியிலும் அல்நெறியிலும் மக்களைத் திருப்புகின்ற

ஆற்றல் எழுத்திற்கு உண்டு. நல்ல வழியில் திருப்பும் எழுத்தே நாட்படவாழும். எழுதுகோல் தெய்வம் என்றானே பாரதி! இழிந்ததற்கெல்லாம் அதைப் பயன்படுத்துவதா?

(4.7.66)

◆

## கேரள அரசியல்

தீபம் இதழில் வானமாமலை பேட்டியும் வல்லிக் கண்ணனின் 'நானும் என் எழுத்தும்' நல்ல மாலையில் நண்பர் மாதவன், நீல பத்மனாபன், யான் மூவரும் சின்னேரம் உரையாடினோம். கதையுலகம் பற்றிப் பொதுவாகவும் செயகாந்தன், பெண் எழுத்தாளர்கள் பற்றிக் குறிப்பாகவும் பேசிப் பிரிந்தோம். பின் திரிவேதி (பா.2) கலந்துகொண்ட கூட்டத்தில் ஏ.கே.கோபாலனின் பேச்சைக் கேட்டேன். கேரளத் தலைநகரில் நடந்த இக்கூட்டத்தில் தமிழகச் சிற்றூர்க் கழகக் கூட்டத்தில் காணும் எழுச்சியைக் கூடக் காணோம்? கேரள அரசியல் என்று உருப்படுமோ? பல அரசியற் கட்சிகள்! ஒவ்வொரு பகுதியில் அவைகட்குச் செல்வாக்கு. கேரளப் பேராயக் கட்சிக்குக் கோட்டயப்பகுதியில், முசுலிம் கட்சிக்கு மலபார் பகுதி; சமநிலைக் கொள்கையர்க்குச் சில இடங்களில்; இப்படித் துண்டு துண்டாகச் சாதி சமயத்தை பின்புலமாகக் கொண்டும் கட்சிகள் இயங்குகின்றன. இந்நிலையில் தனிக்கட்சி ஒன்று ஆள்வதற்கும் ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்வதற்குமுரிய பெரும்பான்மை பெற முடியுமா என்பது ஐயமே. உதிரிக்கட்சிகளின் உதவி தேவைப்படுகிறது. உதிரிக்கட்சி களும் உயர்ந்த நோக்கோடு செயல்படாது காலத்திற்கொரு கோலம் பூணுகின்றன. நிலையான ஆட்சி அமையாமை வருந்தற் குரியதெனினும் எதிர்க்கட்சியின் வளர்ச்சி மகிழ்தற்குரியதே. பொதுவுடைமைக் கட்சிச் செல்வாக்குள்ள இப்பகுதியில் பொதுஉடைமைக் கொள்கை ஊன்றியுளதா எனின் இல்லை. கட்சி யின் கொள்கையை விளக்குவதினும் மக்களின் வறுமையொன்றே வலுவான கருவி எனப் பொதுவுடைமையர் கருதுகின்றனர் போலும்!...

## கடவுள் கருத்து

கடவுள் பற்றி இங்குள பொதுவுடைமையரோ தமிழகத் துள்ளாரோ பேசிக் கேட்டிலேன். சாதி சமய மூட நம்பிக்கையின் முன் ஊமையராக இருந்து விடுவதோடு கோயில் செல்வோரும் பட்டை தீட்டுவோரும் பொதுவுடைமையரென் கின்றனர். அண்மையில் பெரியார் குறிப்பிட்டதைப் போலத் திராவிட

இயக்கங்களே தமிழகத்துப் பொதுவுடைமைக் கருத்துக் களை வேரூன்றி முளைத்துக் கிளைத்துத் தழைக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. ஏன்தான் இந்தியப் பொது வுடைமைக் கட்சியினர் உருசியாவையும் சீனாவையும் இப்படிப் பின்பற்றிப் போற்றுகின்றாரோ? இவர்களுக்கென்று அறிவோ, கொள்கையோ, நாடோ, மொழியோ இருப்பதாகக் கருதிலரே!...

(5.7.66)

◆

## வையாபுரியார் கருத்து

வையாபுரியாரின் சொற்களின் சரிதத்தின் முதல் மூன்று கட்டுரைகளையும் (கழகம், களம், கண்வட்டம்) படித்தேன். வேரூன்றிப் போன அடிமைத்தனமும் வடமொழித் தொடர்களை வைத்துச் செய்யும் திகிடுதத்தமும் நடம்புரிகின்றன முக்கட்டுரை களிலும். நல்ல நடை நஞ்சுருண்டையின்மேல் இனிப்புப்பூச்சு. மாட்டிற்கும் நான்குகால், ஆட்டிற்கும் நான்குகால் ஆகவே மாடு ஈன்றதே ஆடு எனக் கூறும் ஆராய்ச்சி அவரது. எங்காவது மிகச் சிறிய அளவில் வடமொழிச் சொல்லுக்கும் தமிழ்ச் சொல்லுக்கும் ஓசை, பொருள் ஆகியவற்றில் ஒப்புமை கண்டுவிட்டால் போதும். உடனே வடமொழியிலிருந்துதான் தமிழ் பெற்றது என்ற உணர்வு வெளிவருகின்றது. இன்னும் சிலரிடை அவ்வுணர்வு இருக்கின்றது. வையாபுரியின் கருத்துக்களையே வைத்துக்கொண்டு அவர் வடமொழியிலிருந்து தமிழ்பெற்றது என்பதை அப்படியே மாற்றித் தமிழிலிருந்து வடமொழி பெற்றதெனச் சொல்லிவிடலாம். 'வடமொழி கொடுக்கும் உயர்ந்தமொழி; தமிழ் வாங்கும் கடன்மொழி. தமிழிலிருந்து வடமொழி கடன் வாங்க முடியாது' என்ற அடிப்படை மடைமையும் திமிருமே காரணம்...

## மயிலாப்பூர் வள்ளுவர் சிலை

சென்னையில் வள்ளுவர் சிலையை மயிலாப்பூர் வடமொழிக் கல்லூரிக்குப் பக்கத்தில் திறந்தமை தமிழர்கள் வடமொழியை வெறுக்காது கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது போல ஆனந்தவிகட ஆரியனுக்குப் படுகிறதாம். ஏன்தான் அவனுக்கு 'வடமொழி படிப்பவர்களே! தாய்மொழி யான தமிழையும் படியுங்கள் போற்றுங்கள்' என்று சிலை சொல்வ தாகப் படவில்லையோ? தமிழ்நாட்டில், தமிழில் தமிழர்களுக்குத் தாளிகை நடத்துகின்ற ஒருவன் பேச்சற்ற சமற்கிருதத்திற்கு மூச்சறக் கத்துகிறானே! ஓடப்பராயிருக்கும் தமிழர்களெல்லாம் உதை யப்பராக வேண்டும். அங்குலம் அங்குலமாக, கணு கணுவாக,

மூட்டு மூட்டாகத் துண்டு துண்டாக உடலைக் கூறுபோடும் கொலைப்படை ஒன்று உருவாதல் வேண்டும்.

(6.7.66)

◆

## நாகர்கோயில் பயணம்

நண்பகல் 1.30. பேருந்தில் நண்பர் தங்கப்பன் மணவிழா காணச் சென்றேன். நாகர்கோயில் அடையும் முன் சிதம்பர சுப்பிரமணியன் எழுதிய 'நாகமணி' என்ற பூம்புகாரைக் களமாகக் கொண்டமைக்கப் பெற்ற ஒரு சிறுபுதினத்தைப் படித்து முடித்தேன். பண்டைத் தமிழர்தம் கலைவளத்தையும் வாணிகச் செழிப்பையும் மையமிட்டு விழுமிய கருத்துக்கள் செறிய இயங்குகின்றது. அன்பையும் பண்பையும் வலியுறுத்தும் இப்புதினம் கதை நிகழ்காலத்திற்கேற்ற நடையைப் பெற்றில்லை. பல வடசொற்கள் 'லாயக்கு'ப் போன்ற வரக்கூடாத சொற்கள் உள. சாத்தன், கலைச்செல்வி, கூலவாணிகனார் முதலிய பெரும் உறுப்பினர் களினும் மாறனார், மருதனார் ஆகிய சிறு உறுப்பினர்களின் படைப்பு நன்று. சாத்தனின் அத்தை, அவள் மகள் குணமாலை படைப்பு செயற்கையாக ஒருமைப்பாடின்றி இயல்கின்றது. முடிவு ஓரளவு செயற்கை. கலைச்செல்வியை நாடிக் காசியிலிருந்து வந்த சாத்தனுக்கு அவள் கூலவாணிகனாரின் மனைவி என்று அறிவிக்கும் கட்டம் நல்ல திருப்பு மையம். சிலப்பதிகாரத்தின்பால் தனக்குள்ள ஈடுபாட்டை முன்னுரையில் சுட்டுவதுபோல ஆசிரியர் சில இடங்களில் நன்கு புலப்படுத்துகின்றார்.

## அரும்பும் இளநகை

மாலை 5 மணிக்குக் கேசவன்புத்தன்துறை உந்தில் ஏறினேன். நெடுந்தொலைவு இருக்குமென எதிர்பார்த்த புதூர் 5 அல்லது 6 கல்லே இருக்குமென 22 காசுக்குச் சீட்டு வாங்கி அறிந்தேன். பள்ளியும் கல்லூரியும் விட்டு வந்த மாணவ மாணவியர் ஆடுமாடு போல் அடைக்கப்பட்டனர். மாணவியர் பகுதியில் ஒரே நெரிபாடு. நான் அமர்ந்திருந்த இருக்கைக்கும் எதிர்த்த இருக்கைக்கும் பின்னுள்ள எதிர்த்த இருக்கையில் மாணவியர் நெரிந்திருந்தனர். அவர்களில் இருவர் பருவம் எய்தியிருக்கலாம். மற்றவர்கள் இளையோரே! இருவரும் வந்தமர்ந்த உடனே பக்கத்து நெடிய ஒரேவரிசையில் அமர்ந்திருந்த கல்லூரி மாணவர்கள் உள்ளம் என்ன பாடுபட்டதோ? விழியை சுழற்றுவதும் வேறெங்கோ பார்ப்பதும் இளநகை அரும்புவதும் இதழை நாக்கால் தடவிக் கொள்வதுமாக எத்தனை வகையில் உள்ளம் நெகிழ்கிறது!

அவர்களைச் சொல்வானேன்! நானும்தான் பார்த்தேன். மாநிறமாய ஒருபெண் ஓரவிழியைச் சிலநேரங்களே பாய்ச்சியது. அந்தச் சிவப்புப் பெண், உருண்டு திரண்ட கன்னங்களும் ஓடிச்சாடி மீளும் விழிகளும் உழுத புலம்போலக் காலை மலர் போலப் பருவ உணர்வுகள் விரிந்த உள்ளத்தவள் என்பதைக் காட்டின. எத்தனை முறை பார்த்தாள்! ஏதிலார் போலப் பொது நோக்குவேறு, இதழ் விரியப் புன்முறுவல்; கையிலே திண்சிவப்புத் தூவலை எடுத்து அதை வாயில் வைப்பதும் புன்னகை அவிழ்ப்பதும் விழி ஓச்சுவதுமாக உள்ளத்தைத் திருகி எடுத்துவிடும் செயல்கள்! என் மனத்தில்தான் எத்தனைக் குறுகுறுப்பு, தவிதவிப்பு, இன்பக் கிலுகிலுப்பு. எங்கேயோ பார்ப்பதுபோல் ஏதிலார் பொதுநோக்கு; ஓர் அழகிய பெண் தன்னை நோக்கு கிறாள், விரும்புகிறாள் என்றறியும்போது ஓர் ஆடவனுக்குத்தான் எத்துணை இன்பக் கிளர்ச்சி! பெருமித உணர்வு!

> உன்மன மேடை மன்னவனாக
> உலவுதல் நினைத்தலவோ
> என்மனந் துள்ளி எகிறிக்குதிக்கவோர்
> எழுச்சி பிறக்குதடி.

என்ற என் பாடல்வரிகள் பட்டறிவின் குழந்தை அல்லவா? ஏன் பிற பெண்களைப் பார்த்து உளம் அசையவேண்டும் என்ற நினைப்பு யானையின் காலில் அகப்பட்ட சிறுமுளை ஆகிவிடு கிறது இச்சூழலில். இயற்கையைக் கட்டுப்படுத்துவதிலே தானே முன்னேற்றம் அடங்கிக் கிடக்கிறது.

(7.7.66)

◆

## தங்கப்பன் திருமணம்

காலையில் தங்கப்பன் வீட்டிற்குப் பின்புறத்துள்ள செயற்கைச் சிற்றோடையில் குளித்தோம். மணவிழாவிற்குத் தலைமையேற்க இருந்த மணி என்பவர் கழக மாப்பிள்ளையாத லால் கலந்துகொள்ள முடியாது என்று சொன்னாராம். கல்லூரி யில் பேராசிரியராக இருக்கின்றவனின் அறிவை என்னென்பது? அவன் பேராயத்தானாம்! மாற்றுக் கருத்துடையவர்களை மாற்றாராகக் கருதும் மடமை என்று ஒழியுமோ?

காலை உணவாக அவல் உண்டோம். ஏழரை மணி அளவில் பெண்வீடு வந்தேன். பந்தலில் பெரியார் படம் இருந்தமை கண்டு உவந்தேன். பெண்ணின் தந்தை பெரியார் பற்றர். சுப்பிரமணியம் என்ற பள்ளியாசிரியர் தலைமையேற்று நல்லமுறையில் மணம்

நடத்துவித்தார். யான் ஒருவனே வாழ்த்துரை வழங்கினேன். மூடநம்பிக்கை, பெண்மை பற்றிச் சில சொன்னேன். சிறப்பாக இருந்தது என்றனர். பெண்ணின் தந்தை பேச்சை விரும்பிக் கேட்டதாகத் தங்கப்பன் சொன்னார்.

பெண் சிவப்பும் பொலிவும் உடையது. முக அமைதி அடக்கமும் பண்பும் உடைய பெண்ணாகக் காட்டியது. பள்ளியிறுதி வகுப்பு வரை படித்த அப்பெண் பிறர் பாராட்டும் முறையில் வாழ்க்கை நடத்தும் என நம்புகின்றேன். பெண்ணின் தந்தையும் உலகியலறிவும் அமைதியும் பண்பும் உடையவராகத் தோன்றினார். மணவினை நிகழ்ச்சிகள் எதிர்காலம் பற்றிய கற்பனைகட்கு எருவிட்டன. மணவிழாவிற்கு நண்பர்கள் வருவதும் வரவேற்பதும் உரையாடுவதும் நெஞ்சக்கிழியில் படிந்தன. உறவினர்கள் திரளும், அன்பளிப்பும், ஊர்ப்புற எளிய மக்களின் அன்பும் எப்படியெப்படி மணத்தை நடத்தவேண்டும் என்ற நினைவுகளும் படர்ந்தன. எப்படியாகுமோ? பார்ப்போம்.

(8.7.66)

◆

## வயிற்றுக்குத் தமிழைப் படித்தவர்கள்

இராசவும் யானும் செல்வி கா வீட்டிற்குச் சென்றோம். திருச்சி வேலை குறுக்கு வழியில்தான் பெற்றதாக உணரமுடிந்தது. அப்பெண்ணின் தந்தை துறைத் தொடர்பாகச் சில சொன்னார். தமிழ்த்துறை தரங்கெட்ட துறையெனவும் ஒருவர்மேல் ஒருவர் பொறாமையும் குழிதோண்டும் மனமும் கொண்டு மொட்டைப் புகார்கள் எழுதுகிறார்கள் எனவும் பிறர்வழி அறிந்ததைச் சொன்னார். முதுகலை படித்து எதிர்கால ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரியர்களா இவர்கள்? கல்லூரியில் என்னதான் படித்தார்களோ? மழைக்குக் குடையைப் போல வயிற்றுக்குத் தமிழைப் படித்தவர்கள். தமிழைத் தமிழாகப் படித்திருப்பின் தமிழ் இவர்கள் உள்ளத்தைப் பண்படுத்தியிருக்கும். வட்டிக்கடை வைத்து நடத்த வேண்டியவர்கள் எல்லாம் ஆசிரியர்களாக வந்துவிடுகிறார்கள். என்ன செய்வது?...

## ஊமைக் காதல்கள்

கன்னியின் விழியசைவில் காளையின் நெஞ்சம் திருகப்படுவதைப் பற்றிப் பேசினேன். உலகில், புறஉலக அறிவும் உணர்வும் உடைய மணமாகாத ஆணோ பெண்ணோ மற்ற மகளையோ மகனையோ நினையாதிருத்தல் இயலாது. ஒரே ஆடவனையே நினைத்து விரும்பி மணந்து வாழ்கின்ற பெண்ணையோ ஒரே

பெண்ணையே நினைத்து விரும்பி மணந்து வாழ்கின்ற ஆணையோ உலக முழுதும் காண்டல் இயலாது. ஒரே நேரத்து நான்கு மகளிரையும் ஒருவன் விரும்பலாம். காரணமின்றி ஒரு பெண்ணை ஒரு ஆணோ ஓர் ஆணை ஒரு பெண்ணோ விரும்புவ தின்று. உருவம், செயல், சுற்றுச்சூழல் ஆகியவற்றின் கவரப்படு தன்மை காதற்குக் காரணமாம். ஒருவனோ ஒருத்தியோ தன் இளமைப்பருவத்தினின்று இறக்கும் வரை எழுப்புகின்ற எண்ணக் கோட்டைகள் எத்தனை! பிறப்பிடம் உறைவிடம் கல்லறை ஆகிய அனைத்தும் உள்ளமாகத் தோன்றி ஒருவர்க்கும் தெரியாமல் அழிந்துவிடுகின்ற காதல் மாளிகைகள் எத்தனை!

ஊமைக் காதல்கள் எத்தனை? உள்ளம் ஒன்றினும் உறவேற்படாமல் போகின்றதே! இருவரின் வாழ்வை அசைக்கும் நிகழ்ச்சிகள் ஏதோ காற்றைப்போல இயல்பாகக் கவனிப்பாரற்றுப் போகின்றனவே!...

## எழுதாத காப்பியங்கள் எத்தனையெத்தனை?

இனியதென்றல், எரியும் மலை, ஓலமிடும் கடல், உயர்ந்து நிற்கும் மலை, அப்பும் சந்தனம், அழுகிய சாய்க்கடை இப்படி எத்தனையோ வகை எண்ணங்கள்! முளையிலேயே கருகிவிடு கின்றன. நெருப்புச்சு[illegible] [illegible]ால் உ[illegible]டம்பில் தழும்பாகவில்லையா? மனச்சூடும் மாறா. நினைவாக அழுந்திவிடுகிறது. எண்ணத் தழும்பு கள் கலைஞன் கைப்படின் காப்பியமாகும், ஓவியமாகும். நெஞ்சக் களத்தில் உறைந்து கிடக்கின்ற, தோன்றி மறைகின்ற எழுதாத காப்பியங்கள் எத்தனை! எத்தனை! எல்லா எண்ணங் களும் எழுத்துரு பெற்று காப்பிய வடிவிலோ கலை வடிவிலோ உலவின் உலகம் செழிக்காதா? இருக்கின்ற உலகம் எவ்வளவு வறியது?

(9.7.66)

◆

## அசுரகணம்

க.நா.சு.வின் 'அசுரகணம்' என்ற நூலைப் படித்தேன். சிக்மண்ட் பிராய்டின் உளவியல் கருத்துக்கள் நன்கு ஆளப்பட் டிருக்கின்றன. கதை சிறிது. நடை நன்று. பொருள் பொதிந்தது. இராமனின் பாத்திரப்படைப்பும் விளக்குமுறையும் சிறப்பு.

## தேநீர் விருந்து

கற்றறிந்த மாந்தர்கள் பேச்சில் கால்பங்குக் கூட பயனுடைய தாக இல்லையே! எதையோ பேசி எப்படியோ பொழுதைப் போக்குகின்றனர். உள்ளம் உயர்ந்தாலல்லவா உரையில் ஒண்மை

வரும். தேநீர் விருந்தின்பின் துறைநிலை தொடர்பாக ச.வே.சுடன் பேசுங்கால் கனன்ற நெஞ்சத்துப் பொறிந்த நினைவுகளைக் கொட்டினேன். ஓரளவு வருந்தினார். ஊரைவிட்டே போய்விடின் நலமென நினைப்பதாய் நவின்றார். உரிமைகளைப் பெறுவதற் காகப் போராட வேண்டிய இப்பகுதியில் தமிழாசிரியர்கள் உரிமைகளை இழப்பதற்காகப் போராடிக் கொண்டும் புறந்தாக்கிக் கொண்டும் இருப்பதை நினைக்கின் நெஞ்சு பொறுக்குதில்லை. தமிழ்ப்பற்றோ, அறிவோ, பண்போ இன்றி தன்னல வேட்கை வெறியே அனைத்திற்கும் காரணம்.

நல்ல களைப்பு. அறையில் மழலைப் பித்தனின் 'துறவி' என்னும் பாவியத்தைப் படித்தேன். கதையமைப்பு நன்று. பாவளம் போதாது. பெரியார் திருமணத்தை உருவக வாயில் அமைத் துள்ளமை சிறப்பு.

(11.7.66)

◆

## நெஞ்சம் புகைகின்றது

மாலையில் துறைக்கு வரும்போது ஏறத்தாழ பத்து அகவையுடைய இளைஞர்கள் புகைத்துச் செல்வதைக் கண்டேன். இளமை எப்படிப் பாழாகின்றது. பொதுவாகத் தமிழகத்திலும் இங்கு நிறைய பேர் புகைக்கின்றனர். அதிலும் இளஞ்சிறுவர்கள் புகைப்பதைக் காணுங்கால் நெஞ்சம் புகைகின்றது. எதிர்காலம் எப்படி இருக்குமோ!

(13.7.66)

◆

## மாதவனுடன்...

மாலையில் மாதவனோடு உரையாடினேன். நிறைய பேசினோம். 'நாலுபேர்' என்று அவர் அண்மையில் முத்தாரத்தில் எழுதிய கதையைச் சொல்லி அதன் த்லைவன் நண்பர் பிரகாசே என்றார். நடந்த சில நிகழ்ச்சிகளை வைத்து வேறுசில கதைகளும் எழுதி வருவதாகச் சொன்னார். பள்ளி இறுதிவகுப்பு படித்த பக்கத்து வீட்டுப் பெண் ஒரு முகமதியனோடு தொடர்பு கொண் டிருப்பதையும் புரட்சிநடிகர் படத்தை வெறிகொண்ட நிலையில் காணச் செல்வதையும் அன்பே வா பார்க்கும்போது நெரிசலில் கைவளை நொறுங்கி கையைக் கிழிக்க, திரைப்பட அரங்குப் பணியாள் ஒருவன் கட்டுப்போட்டதையும் தன் துணைவியாரோடு அப்பெண் நெருங்கிப் பழகியதையும் தான் கண்டித்ததையும் கூறினார். நானும் சில நிகழ்ச்சிகளைச் சொன்னேன். சுந்தர

ராமசாமியின் 'தற்கொலை'க் கதைத்தலைவி நாகர்கோவிலில் உள்ள சவுராட்டிரப் பெண் ஒருத்தியே என்பதையும் அறிய முடிந்தது.

## நடிகையரின் படங்கள்

சில நடிகையரின் படங்களைக் காணுங்கால் ஏனோ நெஞ்சம் அலைகிறது; குலைகிறது. எளிய மாந்தனின் நெஞ்சைக் கலக்கி மயக்கிக் காசைப் பறிக்கும் நோக்குடன் வெளியாகும் அப்படங்களில் சுழல்கிற யானும் எளிய மாந்தனா? வேடிக்கை மனிதர்களைப் போல வீழ்ந்து படுவேனோ? புலால் தின்னும் வெறி ஆட்டுவித்தது. ஒரு இளைஞனை அழைத்து வாங்கிவரச் சொல்லி உண்டேன். பிற்பகலில் சிறுபாணாற்றுப்படையில் நண்டு, மான் முதலிய கறிகளைத் தின்று செல்வத்தில் திளைத்த அற்றை வாழ்வறிந்து புலால் உண்ணுதலெண்ணி அமைதியடைந்தேன்...

## பாரீசுக்குப் போ

மாலை செயகாந்தனின் 'பாரீசுக்குப் போ'வைப் படிக்கத் தொடங்கி இரவு 12 மணிக்கு முடித்தேன். நின்று நிறுத்திப் படிக்கச் செய்யும் கருத்துவளம்; நடையும் திண்ணியது. சாரங்கன், லலிதா பாத்திரப் படைப்புக்களில் ஒரு தெளிவில்லாத் தன்மை தெரியினும் சிறந்த, எளிதில் படைக்க இயலாப் பாத்திரங்களே அவர்கள். சேசைய்யா, மகாலிங்கம், முரளி, நரசய்யா, கங்கா, பாலம்மாள், லீலா முதலிய மாந்தர்களும் மேனன், மாதவி, நரசிம்மன், வீட்டுப் பணியாட்கள் முதலிய மாந்தர்களும் நினைவில் நடமிடுகின்றனர். வாழ்க்கைதான் இன்றியமையாதது. வாழ்விற்குதவவே எல்லாம், 'இசையில் எம்மாற்றமுஞ் செய்யாது இறையாக வழிபடுவது மூடநம்பிக்கை', 'நாட்டுப்புற மக்கள் இசையை நோக்கியும் மேலை உலகிசையைக் கூர்ந்தும் இசை முன்னேற வேண்டும்' போன்ற கருத்துக்கள் கதையில் ஊடுருவி நிற்கின்றன. மற்றவர் மனைவியான லலிதாவொடு சாரங்கன் உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து மணவிலக்குச் செய்து வந்து விடுமாறு வேண்டுவது, தெய்வம் போன்று தன் கணவனைப் போற்றும் அவள் உடலையும் உள்ளத்தையும் சாரங்கனிடம் கொடுத்து 'முதல்முறையாகக் காதலென்பதை உணர்ந்தது சாரங்கன் தொடர்பால்' எனல், முரளியின் தந்தையான நரசய்யா கலைக்காக கங்காவொடு இணைந்தாலும் தன்னைப் புறக்கணித்து விட்ட பாலம்மாளொருத்தியையே இறுதிவரை காதலிப்பதாகக் கூறல் முதலிய கூறுகள் புதுமையும் புதிரும் புரட்சியும் கொண்டவையாக அமைகின்றன. முரளியின் பேச்சும் போக்கும் சில இடங்களில் மிகையாகத் தோன்றுகின்றன. கதையில் மாந்தர்கள் வாதிடும்

*பகுதிகள் சிறப்பாக அமைந்துள்ளன. சாரங்கனின் தந்தையான சேசையாவின் பாத்திரப்படைப்பு செம்மையாகப் பழமைச் சிறப்பை வெளியிடுவதாக அமைந் துள்ளது. இலக்குமி என்ற விதவை கதையில் அதிகம் நடமாடா விடினும் நம் நெஞ்சில் நடமாடுகிறாள். புதுமையும் புரட்சியு முடைய புதினம்.*

*(17.7.66)*

◆

## நாக்கில் நரம்பின்றிப் பேசும் இலக்கிய வட்டம்

*மாலையில் பேரா. சே.தா. அறையில் தாமரை சிறுகதை மலரின் கதைகள் பற்றி எழுந்த பேச்சு மிகச்சூடும் சுவையுமா யிருந்தது. சே.தா, அசொ, இராசகோ, பகவதி, திருமாறன் எல்லோரும் இருந்தனர். மு.வ. பற்றித் தொடங்கிய பேச்சில் யான் அ.சொ, சே.தா. கலந்து கொண்டோம். இடையில் 'நகுலன்' வந்தார். பேச்சு மு.வ.விலிருந்து தற்காலப் புதின இலக்கியத்திற்குத் தாவியது. நான் படித்த புதினங்களையெல்லாம் 'நகு' கேட்டார்; சொன்னேன். அவரின் நிழல்களை அக்குவேறு ஆணி வேறாக்கி நிறைகுறை சுட்டினேன். உறுதியாக எல்லாவற்றையும் படித்தவன், புதினத்தைப் பற்றி அறிந்தவன் ஒருவன் இருக்கிறான் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கும். என்னைப் பற்றி அவர்கள் அறிவதற்கு இந்த வாய்ப்பு பயன்பட்டது. அவர்கள் வாயிலாகப் புதுவது அறியும் நிலையில் அவர்கள் பேச்சு அமையவில்லை. இலக்கிய வட்டம் எழுத்தில் எழுதுவது போலவே குழு மனப்பான்மையோடு பிறர் நூல்களைப் படிக்காமலேயே அவர்களை நாக்கில் நரம்பின்றிப் பேசுவது புலப்பட்டது. இறுதியில் அடிப்படையி லேயே கருத்துக்கள் மாறுபடும்போது பேசிப் பயனில்லை என்ற நிலையில் பேச்சு முடிந்தது. புத்திலக்கியத் தொடர்பாக உரையாடியதில், கண்மூடி கண்விழிக்கும் வகையில் மாற்றுக் கருத்துக்களை உணர்த்தியதில் எனக்கு மகிழ்ச்சி.*

*(21.7.66)*

◆

## அரசாண்ட ஆண்டி

*இரவு அண்ணாவின் 'அரசாண்ட ஆண்டி'யைப் படித்து முடித்தேன். பிரான்சின் பதின்மூன்றாம் லூயியின் கால 'ரிஷ்லு' வைப் பற்றிய புத்தகம். எண்ணியதை முடிப்பதில் உள்ள திண்ணிய நெஞ்சுடை 'ரிஷ்லு'வின் வாழ்க்கை ஓர் அரிய கருத்து விளக்கம்.*

*(24.7.66)*

◆

## ஆறிரண்டும் காவேரி

நண்பர் சு.வின் பதிவான சில நாட்டுப் பாடல் களைக் கேட்டேன். என்னே கற்பனை! என்னே உவமைநயம்! உள்ளம் நைந்து ஓர் அம்மா பாடிய ஒப்பாரியையும் கேட்டேன். எழுதா இலக்கியத்தில்தான் எத்துணை அழகு புதைந்து கிடக்கின்றது. யார் இந்தப் பாடல்களின் மூலவர்? எப்படி இப்பாடல்கள் நாடு முழுதும் பரவின? எண்ணிப் பார்க்க இனிமை பிறக்கும். 'ஆறிரண்டும் காவேரி அதன் நடுவே சீரங்கம்', 'பாசிபடர்ந்த மலை பங்குனித்தேர் ஓடும் மலை' முதலிய தொடர்களைப் பாட்டில் கேட்டேன். என் மாவட்டத்தும் இத்தொடர்கள் பாட்டின் ஊடே வருகின்றன. நுணுகி நோக்கில் நாட்டுப் பாடல்களில் நாடு முழுமைக்கும் பொதுமையான சில பண்புகள் காணப்படும் என உணர்கிறேன்.

(25.7.66)

◆

## உள்ளத்தின் அசைவு

பசிய உணர்வுகள் தழைக்கும் பூம்பொழிலாக உள்ளத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடந்த காலம் பல வகைகளில் எண்ணுங்கால் எழுச்சியும் பெருமையும் தருவதாகவும் சில வகைகளில் ஏமாற்றமும் நெஞ்சிளைப்பும் துயரும் தருவதாகவும் அமைந்துவிட்டது. மாந்தன் ஒவ்வொருவனும் குறையுடையவனே என எனக்கே யான் அமைதி கூறவா? இருக்கும் சில குறைகள்தாம் கிடைத்த பெருமைக்குக் காரணமோ? இருக்கும் சிறப்பையும் எங்கே இப்புல்லுணர்வு ஒழித்துவிடுமோ என்ற ஏக்கமும் அச்சமும் எழுகின்றன. சின்னேர மின்வெட்டு கண்ணைப் பறிப்பது போல ஆட்டிப்படைத்து அமுக்கிவிடுகிற நசையை என்னென்பேன்! எதிர்காலக் கால்வழியைப் பன்மணிப் பொழுது நினைத்து நினைத்துக் கவல்கின்ற நெஞ்சம் நிகழ்காலக் கீழ்ச்சுவையில் சின்மணித் துளிகளில் இன்பங்காண்கின்றதே! உடல் புழுத்து அழுகி நாறிச் சீழ்வடிய... எண்ணவே கூசுகின்றது.

## அகத்தியர் காப்பியர்கள்

வகுப்பிறுதியில் வேலம்மாள் அழகின்சிரிப்பில் அகத்தியரும் காப்பியரும் தமிழைக் கெடுத்ததாகப் பாவேந்தர் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டி அது எங்ஙன் பொருந்தும் என வினவியது. எண்ணிப் பார்த்து விடையிறுப்பதாகச் சொல்லி வந்தேன். அருமையான வினா. உணர்வுகொழிக்கும் உள்ளமுடைய அப்பெண் வினா எழுப்பும் துணிவு பெற்றமையறிந்து மகிழ்ந்தேன்.

பின் பாவேந்தரின் மூன்றாந் தொகுதியில் உள்ள 'அகத்தியன் விட்ட புதுக்கரடி'யைப் பார்த்தேன். 'செல்வம்' முற்பிறப்பின் நல்வினைப் பயன்' என்றும் வறுமை முன் செய்த தீவினைப்பயன் என்றும் அகத்தியன் கூறியதைக் கண்டித்துள்ளார். ஆன்மா, காதல் பற்றியும் அகத்தியன் ஆரியக் கருத்துக்களைப் புகுத்தினான் எனவும் சாடியுள்ளார். 'காப்பியர்' என்பதற்குச் சரியான விளக்கம் கிடைத்திலது. இராசவைக் கேட்டேன். அவர் முன்பொரு முறை இத்தொடர்பாக என்னையே கேட்டதாகவும் யான் விளங்க வில்லை எனச் சொன்னதாகவும் கூறினார்.

## இசை கேட்கும் வேட்கை

இசை கேட்கும் வேட்கை இரண்டு மூன்று நாட்களாகப் பெருகுகின்றது. உறங்குமுன் இசைகேட்டுப் படுப்பின் உள்ளம் கனியும், தெளியும் திருந்துமென நினைப்பு. வானொலிப் பெட்டி வாங்கலாமா? எண்ணம். வீட்டிற்கெழுத விருப்பமில்லை. என் செய்வது? உறக்கத்தில் ஓரிரு கனவுகள். தெளிந்தும் தெளியாதும் கலைந்து போயின. வானஊர்திகளிலிருந்து குடைமூலமாகப் படைஞர்கள் இறங்குவது போல் ஒரு காட்சி. செத்த மறவர்களைத் தான் அமெரிக்கர் கடலில் தள்ளுகின்றனரோ எனக் கனவு நினைவு வேறு. படை மறவரின் பாசறையூடு நடந்து சென்றேன். நந்தன்கோடு எனும் பகுதியில் மறவர் எழுச்சி. சற்றுத் தொலைவில் கட்டப்படும் நிலையில் ஓர் உயர்ந்த கோபுரம். அச்சம் மேவிய நெஞ்சோடு யான் கனவில் அங்கெல்லாம் நடந்து திரிந்தேன். கனவுக்குப் பொருள் உண்டோ இல்லையோ! என் அடிமனத்தும் எழுந்திரா, கற்பனையில் தோன்றியிராவொன்று எப்படித்தான் கனவில் வந்ததோ? காரணம் தெரியவில்லை.

(26.7.66)

◆

## மாதுளமலரே

மாலையில் அப்பனொடு நூற்றாண்டு விழாவில் பழைய மாணவர் கலை நிகழ்ச்சியைக் காணச் சென்றேன். வாயிலில் மறித்து நிறுத்தினர். ஊடே ஊடே மகிழுந்துகளில் வந்தாரும் மகளிரும் உள்ளே விடப்பட்டனர். வருத்தமும் சினமும் எழுந்தன. ஒரு வரையறை வைத்து அவர்கள் செயல்பட்டனர். நல்லமுறையில் செயல்பட வேண்டுதல் அவர்கள் பொறுப்பு. முன்னே போக வேண்டும் என்ற தன்விருப்பு நமக்குச் சினமூட்டுகிறது. தன்னைப் பற்றியே அதிகமாக ஒருவன் கவலைப்படுவதும் எண்ணுவதுமாய் இருக்கையில் மற்றவர் எங்ஙன் நன்முறை வாழல் இயலும்?

அரங்குள் நுழைந்து இடம்பிடிப்பது பெரும்பாடாய் விட்டது. எங்கட்கு வலப்புறத்தில் இராதா அமர்ந்திருந்தது. அப்பன் பார்த்துச் சொன்னார். இடை இடையே இங்கேயே பார்த்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். என்னை நன்கு அறிந்து கொண்டமை கண்கூடு. இன்னிசை, நாடகம், நடன நாடகம் மூன்றுமே நன்றாக இருந்தன. 'மாதுள மலரே' என்ற பாடலை உள்ளங்கவிய உணர்ந்து பாடினார் கமுகரை புருசோத்தமன். நாடகத்தின் அனைவருமே நன்கு நடித்தனர். பெரும் காட்சி யமைப்புகளின்றி வெறும் திரையைக் கொண்ட இயற்கையான உரையாடல், நடிப்பு மூலம் நாடகஞ்சிறந்தது. நாட்டிய நாடகம் மிகச் சிறப்பாயில்லாவிடினும் முடிவு நன்று. நாடகம் முடிந்த உடனேயே நாட்டிய நாடகம் பார்க்காமல் இராதா வெளியேறியது. செல்லுங்கால் 'உன்னை அறிந்துகொண்டேன்' என்பதுபோல் ஒரு பார்வை. நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தபோது இந்தி விரிவுரை யாளர் ஒருவரும் இங்கேயே பார்த்துக் கொண்டிருந்த தாகப் பகவதி சொன்னார். ஏதோ ஓர் ஈடுபாடு அங்கே இருப்பதாக என்னால் உணர முடிந்தது. 'மாதுள மலரே' முதலிய பாடல்களைக் கேட்டபோது நானும் மேடையேறி உள்ளங்கவிய உணர்வொன்றிப் பாடிக் கேட்போரை எல்லாம் உளமுருகச் செய்யவேண்டும் என்றெண்ணினேன். எண்ணம் செயலாவ தென்றோ? ஏட்டுச்சுவடி நூலகஞ் சார்ந்த கருத்த குடுமியுடைய தாத்தா ஒருவர் நிகழ்ச்சியின் இடையில் எழுந்து சென்றதைக் கண்டு எள்ளி நகைத்துக் கை கொட்டினர் சில புல்லியர். இழிந்தவர்களை ஏன் பார்க்கவேண்டும் என்றெண்ணியவரைப் போல எதையும் பொருட்படுத்தாது தளர்ந்த நடையும் தளரா உளமுமாய் அவர் வெளியேறினார். நிகழ்ந்ததெண்ணி நெஞ்சம் வருந்தியது. ஆழ்ந்து அமைந்த பழைமையும் ஆரவாரிக்கும் புதுமையும் புலப்பட்டன. இரவு பதினொன்றரை மணிக்கு நிகழ்ச்சி முடிந்தது.

(27.7.66)

◆

## கல்லெறிபட்ட கனி

பெண்கள் பார்வையில்தான் எத்தனை பொருள் புதைந்து கிடக்கின்றது. விழி உள்ளத்தின் விளைவை, விழைவை எப்படிக் காட்டி விடுகின்றது! பார்வையின் பொருளை உன்ன உன்ன உள்ளம் கல்லெறிபட்ட கனியைப் போல சிதறிக் குலைந்து நிலைதளர்ந்துபோய் விடுகிறதே! உயிரே போய்விட்டது போன்ற ஓர் உணர்வு ஏன்தான் ஏற்படுகின்றதோ? எதிர்கால வாழ்வின் அடித்தளத்தை அமைப்பதாக இப்பார்வை அமைந்துவிடுமோ? பெரும்பாலும் அமையாதென்றே எண்ண வேண்டியிருக்கிறது.

சமுதாயம் என்று ஒன்று இருக்கின்றதே! அதற்கெனச் சில சட்டதிட்டங்களையும் வகுத்து வைத்திருக்கின்றார்களே! உள்ளம் ஒன்றினால் போதுமா? சாதி என்னாவது? சமுதாயம் ஒத்துக் கொள்ளுமா? உள்ளம் விரும்பிய ஆடவனை ஒரு மகளோ, ஒரு பெண்ணை ஓர் ஆடவனோ மணந்துகொள்ளும் நிலையிலா சமுதாயம் இருக்கிறது? பேபி! அந்த மணிப்பையன் இருவரும் என்னை விரும்பினார்களே, பார்வையும் செயலும் நெஞ்சில் காதற் பதியம் போட்டனவே! ஒருசொல் கூட வாயால் பேசியதில்லை. கண்கள் சொன்ன கதைகள் ஒன்றா? இரண்டா? இறக்கும்வரை அந்த ஊமைக்காதல் நினைவுகளை மறக்க முடியுமா? வாழ்க்கை யில் ஒருவரோடாவது ஒன்ற வாய்ப்பில்லாமல் போய்விட்டதே; உள்ளவிழைவும் வாழ்க்கைச் செயலும் எதிர்த்திசைகளில் ஓடும்போது என்ன செய்ய முடியும்? ஏ பெண்ணே! ஏன் இப்படி நோக்குகின்றாய்? உன் நெஞ்சைக் கவரும் சில பண்புகள் என்னிடம் இருக்கலாம். உன் மலரிளநகையும் சுழல் இருவிழியும் சிவந்த முகத்தில் படர்எழில் நாணமும் என்பாற்சாயும் நின் நெஞ்சை எனக்குக் காட்டுவதை அறியாயோ? உணர்வாலும் பண்பாலும் நெருங்கிய நாம் மணமுடித்து வாழமுடியும் என்று கருதுகிறாயா? சமுதாயத்தில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் பெண்ணினத்தைச் சார்ந்த நீ அதன் தடைக்கற்களைத் தகர்த் தெறியும் துணிவை எங்கே பெறப் போகிறாய்! காதலை ஒரு பொழுதுபோக்கு என்று கருதுகின்றாயா? நான் கருதவில்லை, நீயும் கருதமாட்டாய். ஆனால் சமுதாய நடைமுறை அப்படித்தான் கருதுகின்றது. என் உள்ளத்தைப் புண்ணாக்கி நின் உள்ளத்தையும் புண்ணாக்கிக் கொள்ளாதே; நான் எளியவன். நின் பார்வை என்னை எப்படி ஆட்டிப்படைக் கின்றது தெரியுமா? குருத்து வாழையைப் போல் மென்மையான என் நெஞ்சைக் குலைத்து விடாதே. ஏற்கெனவே புண்பட்ட நெஞ்சை ஒருவாறு தேற்றிக் கொண்டவன் நான், வாழ்வில் நாம் ஒன்ற முடியாதென யான் கருதுகின்றேன். பேதைப் பெண்ணாகிய நீ அதைப்பற்றி நினைத்துப் பார்த்தாயோ என்னவோ? ஒன்ற முடியாத நமக்கேன் உள்ளக் கலப்பு? வேண்டாம். என்னை விட்டுவிடு! இன்று ஏற்படும் சிறு மகிழ்ச்சி நாளை பேரவலத்தில் விட்டுவிடுமல்லவா? நாளைத் துயரைப் பத்தோடு பதினொன்றாக நீ கருதினாலும் கருதுவாய் என்னால் இயலாது. துயரத் தீயில் பொசுங்கியே போவேன், ஐந்நூறு ஆசிரியர்களில் இவனும் ஒருவன் என்று என்னைக் கருது. ஏழெட்டு மாணவர்களில் நீயும் ஒருத்தி என உன்னைக் கருதும் உள்ளத்தை யான் வளர்த்துக்கொள்கிறேன்.

(28.7.66)

◆

## அழுகையும் காப்பியங்களும்

உள்ளத்தை அளந்துகாண ஆரால் இயலும்? அங்கேயே தோன்றி மலர்ந்து கோடிகோடியான நினைவுகள் வாடிவதங்கி மறைந்து போகின்றனவே! உலகத்திற்குத் தெரியாமல் உள்ளமாம் ஏட்டில் எண்ணக்கோல் தீட்டிய காப்பியங்கள் எத்தனை! எத்தனை! உலகத்தின் ஒவ்வொரு நெஞ்சும் எத்தனைத் தனித்தனிக் காப்பியங்களைப் படித்துப் படித்து மகிழ்ந்து ஆடியும், வருந்தி அழுதும் இருக்கும்? கணக்கிடவா முடியும்? யாருக்குந்தெரியாமல் உள்ளத்தேயே அரும்பி மலர்ந்து வாடி வதங்கிவிடும் அக்காப்பியங்கள் எல்லாம் எழுத்து உருப்பெற்றால்! உலகம் மிகவும் செழிப்பானதாகிவிடுமே! சிற்பியின்கை கல்போல ஏதோ ஓரிரு புலவர்களின் நெஞ்ச அழுகைதான் உள்ளம் வடிக்கும் உணர்வுக் கண்ணீர்தான் காப்பியங்களாக உருவெடுத்திருக்கின்றன.

*(29.7.66)*

◆

## நாய்க் குரைக்கிறது, கதிரவன் கவலையா படுகிறது?

எண்ணெய்க்குளியல் வழக்கமாக நான் குளிக்கச் சிறிது அதிக நேரமாகும். இன்று குளித்துக் கொண்டிருக்கும்போதே வெளியிலிருந்து அந்தப் 'பார்ப்பனன்' மலையாளத்தில் மறைமுகமாக என்னைச் சுட்டியே மலையாளர்களிடம் பேசிக் கொண்டிருந்ததை உணரமுடிந்தது. குளித்து வெளிவரும்போது கழிப்பறையிலிருந்த அவன் யான் கதவு திறந்த ஒலிகேட்டு 'சனகனமன' பாடினான். இவனொருவனே இதுபோல் வழக்கமாக மறைமுகமாய்க் கிண்டல் செய்வதாக அருணாசலமும் கூறினார். சிலநேரம் என்னாலும் உணரமுடிந்தது. 'ஒழுங்காக இருக்கிறாயா? செருப்படி கொடுக்கவா' என்று கூட கேட்க எண்ணினேன், நேருக்கு நேர் எதையும் சொல்ல இயலாது தலைமறைவில் மலையாளத்தில் பேசித்திரியும் அப்பண்பற்ற கோழைப்பயலிடம் என்ன பேச்சு என்று அமைந்தேன். நாய் குரைக்கிறது. கதிரவன் கவலையா படுகிறது. நாம் ஏன் கவலைப்படவேண்டும்.

*(30.7.66)*

◆

# ஆகஸ்டு - 1966

## தொழுநோய் அறிகுறி

திருச்சியிலிருந்து வந்த முதலாண்டு முதுகலை மாணவர் கணேசனையும் அவர் சிற்றப்பாவையும் பேராசிரியர் என்னிடம் அனுப்பியிருந்தார். சிறிதுநேரம் உரையாடியபின் மாணவரை வகுப்பில் சேர்த்தேன். நண்பகல் உணவின்போது அம்மாணவரை நன்றாகப் பார்த்தேன். முகம், மேனியெங்கும் உடலில் ஒருவகைத் தடிப்பு தெரிகிறது. பெருநோய்க்குரிய அறிகுறியாய் இருக்கலாமோ என்ற ஐயம். இடையிடையே நல்ல இளைப்பு வாங்குவதும் அவர் விட்ட பெருமூச்சினின்றும் தெரிந்தது. ஓரளவு நோயின் அறிகுறிகள் நன்கு புலப்படுகின்றன. இனி எடுக்கும் முயற்சி பயன் தருமோ என்னவோ? எனக்கு நம்பிக்கை குறைவே.

(1.8.66)

◆

## மழைவரின் உடன்வரும் குடை

ஏ உள்ளமே! சிறு குழந்தையின் மெல்லிதழினும், துளிர்த்த இளவளமென் தளிரினும் மென்மையாக விருக்கின்றாய் நீ! தளிர்க் கொடியாரின் இளநகையில், வளர்குழலில், நுதற்பொட்டில் விழிக்கடையில் துயில்வதில்தான் நினக்கு எத்துணை ஆர்வம்! செவிவழி வளையொலியைக் கேட்டு கண்வழி உடல் எழிலை நுகர்ந்து சிறுமகவு எழுந்தும் விழுந்தும் தளர்நடையிட்டுத் தடுமாறுவதைப் போல் நீ தடுமாறுவதை என்னென்பேன். பூந்தென்றலொடு புடவிமிசை நீந்தி மென்மலர்களைத் தழுவி நன்மணமுண்டு மகிழ்ந்து திரிய விழையும் நீ உலகை அறியாப் பச்சிளங்குழந்தைகளின் கள்ளமில்லாப் பூஞ்சிரிப்பில் கள்ளவிழும் தேன்மழலையில் கட்டுண்டு கிடக்கின்றாயே! அழகுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதில் உனக்குப் பெருமிதமோ! உழைப்பவர் ஓடப்பராயிருப்பதைக் கண்டு ஏன் நீ பொருமுகின்றாய்? சிறு குழந்தையிடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற நீ அறம் பிறழ்ந்த செயல்களை உணரும்போது எப்படி ஆர்த்தெழுகின்றாய்? அமைதியில் துயில்கின்ற ஆற்றல்தான் என்னே! தக்கென்று ஒரு

*வழியைச் சிலவகைகளில் அமைத்துக்கொண்ட நீ பெண்களைப் பற்றிய நினைவில் ஏன் தத்தளிக்கிறாய்? ஒரு பெண்மாட்டும் உறுதியாக நில்லாது ஏன் ஊசலாடுகின்றாய்?*

*குன்றனைய குலையா உறுதியோடிருக்கும் நீ சிறுகாற்றிற்கும் ஆற்றாது அலைந்து பறக்கும் தூசாகப் பலநேரம் மாறிவிடுகிறாயே! உன் ஊசலாட்டம் உருக்குலைப்பதை அறியாயோ! அலையா திருக்க உனக்கு ஒரு நங்கூரம் போடவேண்டும் என்ற நினைவு மழை வரின் உடன்வரும் குடை நினைவுபோல் சின்னேரம் தலைதூக்கிக் காளான்போல் மறைந்து விடுகின்றதே. வெயில் முன் பனிபோல் விளக்குமுன் இருள்போல் நின்முன் அறிவு மங்கி மழுங்கி அடிமையாகி விடுகின்றது. எனக்கு வரும் இல்வாழ்க்கைத் துணைவிதான் உன்னை அடக்கி மடக்கப் போகிறாள். எங்கோ பிறந்த அவளுக்கு நீ அடிமையாவதா? எனக்கும் உனக்கும் எவ்வளவு நெருக்கம். இதுவரை நான் உன் அடிமையாயிருந்தது போதாதா? ஆண்டான் அடிமை நிலைவிட்டு அருமை நண்பர் களாக நாம் வாழ்வோமே. என்ன சொல்கிறாய்? சரிதானே!*

*(4.8.66)*

◆

## அந்தணர், பார்ப்பார்

*பாலு என் மடல் நடையைப் பன்முறை படித்து மகிழ்ந்ததாக எழுதியிருந்தார். மேலும் அங்குப் பயிற்சிபெறும் மகளிர் குடிக் கின்றனரென்றும் குறிப்பிட்டிருந்தார். கலியன் சட்ட நூல்களைக் குறிப்பிட்டு வாங்கவேண்டுமென்று எழுதியிருந்தான். இராகோ என்னை விரைவில் மணம் முடித்தல் நன்றெனக் கேட்டும் தான் மதுரை சார்ந்த புகுமுக வகுப்பு படித்த ஓர் சக்கிலியப் பெண்ணை மணமுடிக்க எண்ணியுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தான். தென்மொழி ஆசிரியர் போக்கையும் சுட்டிக்காட்டியிருந்தான். மொழியியல் துறையில் எடுத்துவந்த நூல்களில் மூன்றைத் திருப்பிக் கொடுத்தேன். மாலையில் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு தொடங்கியது. அறம் 'தொல்காப்பியத்தில் வழக்கு' படித்தார். யான் நேற்றே படித்து சில கருத்துக்களைச் சொன்னேன். உழைத்து உருவாக்கிய நல்ல கட்டுரை. புரியாப் பகுதிகள் சில உள. வினாக்கள் எழுப்பவும் அங்கே இடம் இருந்தது. யான் எதிர்பார்த்த வினாக்கள் எழுப்பப் படவில்லை. வீ சில கேட்டார். வினாக்கள் நன்முறை அமையவில்லை. பேராவும் ஏதோ கேட்டார். எதிர்பார்த்த அளவு நுணுக்க வினாக்கள் இல. 'அந்தணர் பார்ப்பார்' பற்றிய தொல்காப்பியர் கருத்தை யான் கேட்டேன். பேராவின் சில கருத்துக்களை அவர் மருங்கில் அமர்ந்திருந்த யான்*

மறுத்தேன். சிலர்க்கு என் மறுப்பு வியப்பாயிருந்திருக்குமென உணர முடிந்தது. ஆசிரியர்கள் வழி ஐயந்தீர்க்க வேண்டிய பகுதிகளை யான் குறித்திருந்தேன். மணி 5.15 ஆனதால் ஐயங் களைய வாய்ப்பின்றியே அரங்கு கலைந்தது...

## இரவு உறக்கமில்லை, மூளையில் ஒருவித அரிப்பு

பின் இராசவும் யானும் தமிழ்ச்சங்கச் செயற்குழுக் கூட்டத் திற்குச் சென்றோம். 'தமிழில் பட்டம் பெற்ற பிற மொழியினரையும் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்க்கலாம்' என்ற திருத்தத் தீர்மானம் என் முன்மொழிவொடு ஏற்றுக்கொள்ளப் பட்டது. கூட்ட முடிவில் சங்க ஆண்டுமலர் பத்தை வாங்கி வந்தேன். புது உறுப்பினராய்ச் சேர்வார் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு மலர் கொடுப்பதென்னும் முடிவின்படி எடுத்து வந்தேன். உணவு விடுதிப் பாசுகரன் யான் கேட்டதற்கிணங்கி உடன் உறுப்பினர்ப் படிவத்தை நிறைவு செய்து உரூபா 3 கொடுத்தார். இரவு உறக்கமில்லை. மூளையில் ஒருவகை அரிப்பு. ஒழியா நமைச்சல். நீண்ட இடைவெளியின் பின் இப்படி உடலுணர்வு மதர்த்து விட்டதால் உறக்கம் வரவில்லையோ என்றொரு ஐயம்.

(9.8.66)

◆

## தமிழ்ச்சங்க விண்ணப்பம்

இரவு உறக்கமின்மையால் பிற்பகலில் உறங்கலாமென அறைக்குச் சென்றேன். உறக்கமில்லை. கோகு சங்க உறுப்பினர்க் கட்டணம் உரூபா 3 கொடுத்தார். அறம் வழி மதி, தாணம்மாள், வேலம்மாள் ஆகியோர்க்குச் சங்க விண்ணப்பத் தாள் கொடுத் துள்ளேன்.

(10.8.66)

◆

## கரிய விழிகளே

என் உள்ளத்தோடு அதிகமாக உறவாடுகின்ற இரண்டு கரிய விழிகளே! தேனில் மொய்க்கும் வண்டெனப் பச்சைப் பசுஞ்சோலையில், வளவிய குழைவு உடைய பிஞ்சுத் தளிரில், துயில்கின்ற செவ்விளங்கனிகளாகிய மதலைகளின் மூடியவாய் மெல்ல விரிவதைப்போல் புலரும் வைகறைப் பொழுதில், கட்டை மெதுவாய் அவிழ்த்து தூய மென்னகை செய்தாமரை மலரில், பகட்டுடை இன்றிப் பண்புடை பூண்ட ஏழைவீட்டு எழில்

மங்கையைப் போல் கண்ணைக்கவரும் வண்ணமின்றி அமைதி துயிலும் வெண்மைக்குள் அளவிடற்கரிய மணத்தைப் பொதிந்து கொண்டிருக்கும் நறுமல்லிகையில், நீண்டு சரிந்து சுருண்டு அடர்ந்த கோதையர் தம் நீள்குழலில், முகிற்கறையில்லாத நீலவானில் வியப்பால் விண்மீன்கள் விழிவிரியப் பார்த்துக் கொண்டிருக்க, மென்காற்றில் தவழ்மணமாய் உலாவந்து கொண் டிருக்கும் வெண்திங்களில், மாலைப் பொழுதில் மேலைவானில் செவ்வோடைகளை, பசியமலைகளை, கரிய வெண்மணற் பரப்பை, மஞ்சள் தேர்களை எழுத இயலா எண்ணற்ற வண்ண ஓவியங்களைத் தீட்டிக் காட்டும் தங்கக்குழம்பாய செங்கதிரில், எழில் மாதரின் ஏறிய நெற்றியில் ஏறியிருக்கும் குங்குமப் பொட்டில் மொய்த்துக் கிடப்பதில்தான் எத்துணை மகிழ்ச்சி உனக்கு! அழகில் நீ துயின்று கிடப்பதில் எனக்குத் தடையில்லை. ஆனால் இந்த நெஞ்சத்தை என்ன பாடுபடுத்தி விடுகிறாய்? நீ ஒரு மணித்துளி அடையும் இன்பம் மணிக்கணக்கில் நெஞ்சை வாட்டி வதைப்பதை என்னென்பேன்? என்னை அடிமையாக்கப் பார்க்கின்ற இந்நெஞ்சம் உனக்கு அடிமையாகிக் கிடக்கின்றதே! சுழல் இரு கண்களே! பாரி பறம்பின் தண்சுனையென மென்மையாயிருக்கும் நீ கட்டறுத்த காட்டாற்றின் வன்மையை எங்கிருந்து பெறுகின்றாய்? கள்ளமில்லா மழலைப் பிஞ்சுகள் உன் மென்நோக்கில் மகிழ்வதில், நஞ்சு நெஞ்சர்கள் நின் வெஞ்சின நோக்கில் தளர்வதில் யான் அதைத்தானே உணர்கின்றேன். கொடிய வல் ஈட்டிநீ! நெகிழ்ந்து தவழும் மணஞ்சுமந்த மென்காற்று நீ! எனக்கு நீ கொடுத்த நோய்களோ பல, மருந்து மிகக் குறைவே. பரிசைக் குறைத்துத் தண்டனையை மிகுவித்து விட்டாய் என்பதை உனக்கு யான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை; காற்றின் திசைக்கேற்ப ஓடிப்பறக்கும் பட்டமா நீ? நிலத்தின் தன்மையேற்றுத் திரியும் நீரா? குழைந்த வெண்தயிர்ச் சோற்றிலும் நாறிய புன்மலத்திலும் மொய்த்துக் கிடக்கும் ஈயா?' சாய்க்கடையிற் கிடக்கும் பன்றியாக இராதே. நிலைகுலையா மலையின் முகட்டை நிமிர்ந்து பார். வான் முகட்டைத் துளைக்கும் நிலையில் நின் நோக்கு அமைக...

## சாம்பிய நெஞ்சு

பொங்கி எழும்பி ஆர்ப்பரிக்கும் அலைகளில் அகப்பட்ட சிறுதுரும்பாய்த் தத்தளித்து நிற்கும் சாம்பியநெஞ்சே! உன்னை அடிமையாக்க இயலாதோ? விழிகளை ஆட்டிவைக்குந் திறன் உனக்கு இல்லையா? என்னை ஆட்டிப் படைப்பதைக் குறைத்துக் கொண்டால் புதுமுறுக்கோடு விழிகளை அடிமையாக்கல் இயலும். விழிகட்கு ஏவலனாக இராதே, நின் பணிக்கும் கட்டுப்படுவன

வாகுக கண்கள்; மண்ணில் எச்சிலைத் தேடி அலையும் நாயாக இராதே! விண்ணில் மென் சிறகுகளை விரித்துப் பாடிப் பறக்கும் வானம்பாடியாய் இரு. ஞாயிற்றோடு போர்செய்; நிலவோடு காதல் கொள், விண்மீன்களோடு விடிய விடியக்கதை பேசு. கடலே! ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கின்றாய் ஓய்வின்றி ஒழிவின்றி! என அதன் துயர்க்காரணத்தை வினவு; மலர்க்கு எங்கிருந்து மணம் கிடைத்தது? தென்றல் தண்மையை யார்வழி பெற்றது? தளிரில் குடிகொண்டுள்ள மென்மை இதற்குமுன் எங்கிருந்தது? என்பன போன்ற ஆய்வுகளில் ஈடுபடு. எங்கோ இறைவன் ஒருவன் இருக்கின்றானாமே! அவனைத் தேடிப்பிடி; மண்ணுலக மாட்சியைக் காணடா எனக் கட்டளையிடு! ஒருவேளை காட்சிதரின் மக்கள் காவுகொள்வார்களே என்றஞ்சித்தான் அவன் கரந்து திரிகிறான் போலும்! இலக்கியப் பூங்காவில் கமழ்கின்ற மணமெல்லாம் நின் இடம் வருக, இலக்கணக் கோட்டையில் நின் காலடி படாத இடங்களே இருக்கக்கூடாது. செண்பக மலரைப் போல் மனோரஞ்சிதத்தைப் போல் எப்போதும் மணந்து கொண்டே யிருக்கவேண்டும். என்னுடைய தோற்றப்பொலிவு, ஏறுநிகர்த்த வீறுநடை, ஒளியுமிழ் பார்வை எல்லாம் உன்கையில் தானே உள, எனக்கு வரும் புகழ். புழுத்துப்போகும் தசைபொதி இவ் வுடலுக்கோ? அன்றே! நினக்கல்லவா? யான் நல்லதோர் வீணையாக விரும்புகின்றேன். ஆக்கநிலையிலேயே நலங்கெடப் புழுதியில் எறிந்து விடாதே! என் சுடர்மிகும் அறிவொளியில் அறியாமை இருள் பறந்துபோகவேண்டும். மறந்துவிடாதே...

## அமெரிக்கர் மோக் வீடு

மாலையில் நண்பர் பணிக்கருடன் மோக் (அமெரிக்கா) என்பவரைக் கருத்தரங்குத் தொடர்பாய்க் காணச் சென்றேன். சனியன்று காலை 'அமெரிக்கர்க்கு மலையாளம் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள்' என்பது பற்றி உரை நிகழ்த்த ஒப்புக்கொண்டார். குருடரான அவர் கூர்மையான செவிப்புலன் மூலமே மொழி ஆய்வு நிகழ்த்துகிறார். அவரின் கண்ணாக இருப்பவர் அவர் துணைவியாரே. குருடருக்குள்ள சில போக்குகள் மோக்கிடம் உள. திருவாட்டி மோக்கின் முகத்தில் ஏதோவொரு தெளிவின்மை ஞாயிற்றொளியை மூடிச்செல்லும் முகிலைப்போல. அவர்கட்கு ஓராண்டு அகவையாகும் ஓர் மகன், நல்ல பயல். உளம் மலர அவனோடு விளையாடினேன். தூக்கி மகிழ்ந்தேன். ஒட்டிக் கொண்டான். விடைபெறும்போது விடமாட்டேன் என்றான். தூக்கிச் சென்று மோக்கிடம் கொடுத்து மீண்டேன்...

## தமிழில்தான் நிரப்பவேண்டுமா?

மதியைக் கண்டு சங்கத் தொடர்பாகப் பேசினேன். வீட்டில் தான் ஒரேபிள்ளை என்றும் செந்திட்டைப் பள்ளியில் படித்த தாகவும் கூறியது. விண்ணப்பத்தாளைத் தமிழில்தான் நிரப்ப வேண்டுமா என வேடிக்கையாக வினவியதற்கு தாள் தமிழில் தானே உள்ளது எனக் குறிப்புப் பொருளோடு சொன்னேன். உணர்ந்துகொண்டது.

நண்பர் அரங்கமணியை அலுவலகத்தில் பிற்பகலில் கண்டேன். 'தீபம்' இதழ்களைத் திருப்பிக் கொடுத்தார். சங்க உறுப்பினர் விண்ணப்பத்தாளைக் கொடுத்தேன். ஏற்றுக் கொண்டார். மாலையில் மதி இரண்டு பிளாரென்சுகட்கும் இரு விண்ணப்பத்தாள்கள் வேண்டுமெனக் கேட்டது. எனக்கு நிறைமகிழ்ச்சி. கொடுத்தனுப்பினேன். நல்ல பெண்டிரின் உருவாக்கமே நாட்டின் முன்னேற்றம். குறிக்கோள் மகளாக ஒருத்தி யையாவது உருவாக்க முடியுமா எனப் பார்ப்போம். ஐந்து மகளிர் சங்க உறுப்பினராவது இதுதான் முதன் முறையாக விருக்கும் எனக் கருதுகிறேன்.

*(11.8.66)*

◆

## யாருக்காக அழுதான்

அறை வந்து ஓய்வெடுத்தபின் மாலையில் அறத்தொடு 'யாருக்காக அழுதான்' படத்திற்கு அவரழைக்கவே சென்றேன். இயற்கையாக உள்ளதை நெஞ்சில் பதியும் வகையில் உணர்த்தும் நல்ல படம். செயகாந்தனின் தொடக்கப் பேச்சு ஓரளவு நல்ல தமிழில் அமைந்திருந்தது. இயக்குநர்த் திறமும் சில இடங்களில் பளிச்சிடுகின்றது. பாலையா, நாகேசு பாத்திரப் படைப்பு அருமை. மற்ற பாத்திரங்களிலும் குறை அதிகமில்லை. தமிழ்த்திரையில் நம்பிக்கை விண்மீன் எழுந்துள்ளதெனலாம். படம் முடிந்து எட்டேமுக்காலுக்குத் திரும்புகையில் (2 மணி நேரமே படம்) சங்கத்தில் முருகேசன், அப்பன் முதலியவர்களைக் கண்டோம். மூவரே வந்திருந்தமையால் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் நடை பெறவில்லையென்றும் இராச விலகல் மடல் கொடுத்துள்ளா ரென்றும் அறிந்தோம்.

*(14.8.66)*

◆

## தூய்மையின் துயில்

உணவின் பின் அறையில் ஓய்வு. 6 மணி அளவில் துறை திரும்பல். மரத்திலேறி செண்பகப்பூ பறித்தேன். செண்பகத்தில் தான் என்ன மணம்! மெல்லிதழ்க்குள் எப்படித்தான் அம் மணம் ஒன்றித்துயில்கின்றதோ? இயற்கைப் படைப்பில் எத்தனை விந்தை! காட்சி அழகும் கருத்தழகும் எதில்தான் இல்லை? எல்லாப் பொருள்களிலும் அழகு கிடக்கின்றது. காணும் கண்ணில் நுண்ணொளியிருப்பின், எண்ணும் நெஞ்சில் தூய்மை துயிலின் மண்ணிலும் நீண்ட மரத்திலும் பொலியும் எழில் புலனாகும். 'உரிச்சொல்' பற்றிய இலங்கைச் சிவப்பிரகாசத்தின் கட்டுரையின் முதற்பகுதியைப் படித்தேன். எழுத்தெண்ணிப் படித்ததால் மூன்றுமணி நேரம் கழிந்தது. முன்னிரவு நற்றுயில்.

(15.8.66)

◆

## மணித்துளிதோறும்

காலையில் துறைக்கு வருகையில் அசொ எதிர்ப்பட்டார். என்னொடு துறைக்கே வந்தார். அண்மையில் ஊர் சென்று மீள்கையில் சங்கரன்கோவிலிருந்து தென்காசிவரை புகைவண்டி யில் கி.ஆ.பெ.யோடு உரையாடிப் பயணம் செய்ததாகக் கூறினார். பேராவைப் புலவர் குழுவில் சேர்க்க வேண்டுமெனச் சிலர் பரிந்துரைத்ததாகவும் சிலர் அவரின் தமிழ்ப் பற்றில் ஐயங் கொள்ளவே இரண்டு திங்கள் பேராவின் நடவடிக்கைகளைக் கவனித்துத் தாங்களே அம்முடிவிற்கு வந்து புலவர் குழுவில் சேர்க்கவில்லையென்றும் கி.ஆ.பெ. சொன்னதாக அசொ கூறினார். உலகில் மணித்துளி தோறும் எத்தனை எத்தனைப் புதிய வகைவகையான நிகழ்ச்சிகள் நேர்முகமாயும் மறைமுகமாயும் நடைபெறுகின்றன. ஒருவனின் சுற்றுப்புறத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் பத்தில் ஒரு பங்காவது அவனுக்குத் தெரியுமா என்பது ஐயமே! ஆனால் எல்லாம் தெரிந்து கொண்டதாக இந்த மாந்த மனம் எவ்வளவு தருக்குகின்றது! கற்றது கடுகளவே, கல்லாதது மலையளவல்லவா!...

## 'யாருக்காக அழுதான்' பற்றி திறனாய்வு

நண்பகல் உணவின்போது செயகாந்தன் படம் குறித்துத் திறனாய்வு நடந்தது. கழிப்பறைக் காட்சியைத் திரைப்படத்தில் காட்டவேண்டியதில்லை என்றார் அறம். அக்காட்சியின் வாயிலாக இயக்குநர்த்திறன், இடத்தின் இயற்கை, பாத்திரப் படைப்பின் நிறைவு முதலியன புலப்படுகின்றன. இலக்கியத்திற்கு

'இதுதான் பொருள்' என்பது தவறு. எப்பொருளையும் ஆசிரியன் கையாளும் திறத்தையே கருதல் வேண்டும். செயகாந்தன் நல்லமுறையில் கையாண்டுள்ளார் என்பது என் பேச்சின் மையம். யான் மாற்றுக்கருத்தை எப்போதுமே ஏற்றுக்கொள்ளாதவன் என்றார் அறம். எண்ணுவதை மறைக்காமல் சொன்னார். மாற்றுக் கருத்து என் கருத்தினும் மாற்று உயர்ந்தது என்று கருதின் யான் எப்போதும் ஏற்றுக்கொள்ளத் தயங்கியதாக நினைவில்லை. என் கருத்து உயர்ந்தது என்று யான் கருதும்போது அதற்காக இவ்வையகம் முழுமையும் ஒருங்குதிரண்டு எதிர்ப்பினும் வாதிடும் வலிமையுள்ளவன் நான். அவ்வாற்றலை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற விழைவும் எனக்குண்டு. என்பால் குறைகளிருப்பதாக உணரின் அவற்றைத் திருத்திக்கொள்ளத் தயங்கியதில்லை. எல்லா மாந்தர்களுமே குறையுடையவர்கள். ஆனால் குறையைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்ற விழைவோடு முயல்பவனே உயர்வெய்தல் இயலும்...

## அன்பே ஆரமுதே

க.நா.சு.வின் 'அசுரகணம்', தி.சா.வின் 'அன்பே ஆரமுதே' முதலியவற்றில் குறிப்பெடுத்தேன். இரண்டுமே இருவகையில் இயலும் நல்ல படைப்புகள். 'அன்பே ஆரமுதே'யில் வருகின்ற அனந்தசாமி, உருக்குமணி, சந்திரா, டொக்கி, அருண்குமார், ரங்கன் முதலிய பாத்திரங்கள் நெஞ்சில் இடம்பெறுகின்றன. முதல் இருபாத்திரங்கட்கும் முதன்மை கொடுக்கலாம். கதை பலமுனை களில் இழுத்து வளர்க்கப்பட்ட போதிலும் இறுதிவரை விறுவிறுப் போடு ஓடுகின்றது. 'அரங்கனைச் சாகடித்து சந்திரா டொக்கி வாழ்வைச் சூறையாடுவதான கதை முடிவு அவ்வளவு இயற்கையும் சிறப்பும் உடையதின்று. எல்லாச் சிறப்பினும் கதையின் நடை இருக்கின்றதே அதுதான் மிக அருமை. மலர்ப் பாதையில் மென்தென்றலில் தண்ணிலவில் இன்னிசைத் தீங்குயிலின் பாடல் நுகர்ந்து நடை பயில்வதைப் போன்ற இனிமை ஆசிரியன் மொழியில் அமைந்து கிடக்கின்றது. எழுதிப் பழகிப்பழகித் தட்டுத்தடையின்றி அசைந்தும் குலுங்கியும் ஆடியும் பாடியும் குதித்தோடுகின்ற எழில்மொழி...

## மகாநகர்

வீயொடு சத்தியசித்ரேயின் 'மகாநகர்' படம் பார்த்தேன். ஒரு சிறுவீட்டையும் இரு அலுவலக அறைகளையும் வைத்து இயற்கை யாகப் படம் எடுக்கப்பட்டுள்ளது. பிறமொழியாளர்கள் எளிதில் கதையை முன் விளக்கமின்றி உணர்ந்து கொள்ளல் கடினம். யான் முன்பு பார்த்த ரேயின் 'தாகுரின் அஞ்சலகத் தலைவர்',

'தீன்சன்யா' முதலிய படங்களைப் போல கதை அவ்வளவு தெளிவாகப் புரியவில்லை.

(16.8.66)

◆

## சுந்தரராமசாமி எழுதிய மடல்கள்

மாதவனைப் பார்த்து அவரிடமிருந்து எடுத்துவந்த நூல்களில் ஆறைத் திருப்பிக் கொடுத்தேன். அவர் வீட்டில் சிறிது நேரம் உரையாடி அவரின் கதைகளைப் பற்றி சுந்தர ராமசாமி எழுதிய மடல்களைப் படித்தேன். தமிழ்க் கருத்தரங்கில் சிறுகதை தொடர்பாக மாதவன் பேச வேண்டுமென்ற நண்பர் அறத்தின் கருத்தை அறிவித்தேன். பேச ஒப்புக்கொண்டார். அவர் அண்மை யில் எழுதியுள்ள 'எட்டாவது நாள்' என்ற முதற்புதினத்தையும் (குறிப்பேடு) தி.சானகியின் 'அம்மா வந்தா'ளையும் வாங்கி வந்தேன். படுக்கப் பதினோரு மணியாகியது.

(17.8.66)

◆

## அழியாக் கோலம்

ஆர்.சண்முக சுந்தரத்தின் 'அழியாக் கோலம்' முத்தாயாள் எனது உணர்வின் ஏதோ ஓர் ஒடுக்கத்தில் இடம்பிடித்துக் கொண்டு என்னைப் பற்றி எழுதமாட்டாயா எழுதமாட்டாயா என்று கேட்டுக்கொண்டே இருக்கின்றாள், அடீ! பேதைப் பெண்ணே! விண்ணில் இழியும் மழைநீரைப்போல் மாசறு நெஞ்சோடு சிட்டுக்குருவியாய்ப் பாடிப் பறந்த நீ! என் நெஞ்சவானில் உலவித்திரிவதை மறக்க இயலுமா? உன்னைப் பற்றி ஒரு பாவியமே பாடவேண்டுமென்ற பேராசை. காலமும் சூழலும் இடங்கொடுக்கவில்லையே! என் செய்ய? எதைப்பற்றியும் கவலைப்படாது குழந்தை நெஞ்சோடு கூவித்திரிந்த குயில் நீ! முதலும் முடிவுமாகிய துரைசாமியின் ஒரே நினைவு உழுத புலமாக நின்நெஞ்சை மலர்த்தியது. மழைத்துளி நோக்கி வாயைத் திறந்து பறந்து திரிந்த வானம்பாடியின் தலையில் இடி விழுந்தால்... பெருந்துயர்தான்' நின்வாழ்வும் அப்படித்தான் போனது! அந்த துரைசாமி! நிர்மலாவை நெஞ்சிலிருந்து அகற்ற முடியாமல் அவன் படும்பாடு... உன்னைப்பற்றிய நினைவில் அவன் சுழலும் சுழற்சி. ஒருத்தியை கைப்பிடிக்க முடியாமல் ஊரை விட்டே ஓடிவிடுகின்ற பேரவலம்! அந்த நிர்மலா! இளமை முதலே இணைந்து விளையாடிய துரைசாமியொடு வாழ்வின் எதிர்காலக் கற்பனைக் கோட்டைகளை எழுப்பிக் கொண்டிருந்தவளல்லவா! தன்

தந்தையிடம் துரைசாமியை வரச்சொல்லி 'நிர்மலா எனக்கு உரியவள்' எனக் கேட்க வேண்டும் எனத் துரைசாமியிடம் அவள் கேட்கும் வேட்கை மீதூர்ந்த ஏக்கம் உள்ளம் இணைந்தவனை மணக்க இயலாது ஊரான் எவனுக்கோ கழுத்தை நீட்டப்போகும் கழிபெருந்துயர் என்னென்பது? எல்லா நிகழ்ச்சிகளும் உலகத்தைத் துன்பக் கேணியாக வல்லவோ காட்டுகின்றன! ஆசிரியரின் நடை ஏழை வீட்டுப் பெண்ணின் எழில்போல் எளிமையில் மினுக்கொடு இயங்குகின்றது.

இந்தக் கார்முகிலில்தான் பொதிந்து கிடக்கின்ற ஆற்றல் என்னே! உலகைப்புரக்கும் மழையைத் தருகின்றதே! ஓரிரு இமைப்பளவே ஆயினும் ஒளிவீச்சைப் பொழிந்து வெட்டுகின்ற மின்னல் ஒளிந்துகிடக்கின்றதே! கருமைக்குள் இவ்வளவு பொன்மையா? இயற்கையின் கண்ணா மூச்சி விளையாட்டில் எத்தனை எத்தனை முகங்கள்! மூன்றாம் பிறை மேலைவானின் கீழ்ப்பகுதியில் கருக்கிட்டு நின்றது. பேரிருள் வட்டத்தின் ஓரக்கசிவில் ஓர் ஒளிக்கீறல் நெஞ்செல்லாம் நஞ்சாய ஒருவனின் உதட்டில் இருக்குமே ஓர் இளநகை அப்படி.

*(18.8.66)*

◆

## நரகத்தின் வாயில்

தமிழ்ச்சிட்டுக் கட்டு வந்தது. இதழ் தரமாயுள்ளது. பக்கங்களைக் கூட்டவேண்டும். இதழ்த் தொடர்பாய் ஆசிரியர்க்கு எழுதவேண்டும். காசோலை வந்தது. வேலவன் நிதிக்கு உரு. 15 கொடுத்தேன். கலியனுக்கு 25 உரூபா விடுத்தேன். பிற்பகல் முதல் மணி பன்னீர் வகுப்பை எடுத்தேன். வகுப்பில் பெரும்பகுதி பொதுச்செய்திகள் பற்றியே போனது. எக்கருத்தையும் தொகுத்து வகுத்து அளாவகப் பேசுகின்ற நிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும். பின் ச.வே.சு., அ.சொ. முதலியோரை 'வீ'யுடன் கண்டேன். இரவு 'நரகத்தின் வாயில்' 'Gateway of Hell' என்ற படத்தைப் பார்த்தோம். சப்பானியப் படம். அவர்களின் நடை உடை செயற்பாடுகளை அறிய முடிந்தது. கீழை உலகு கற்பை உயிராய்க் கருதும் போக்கு கதையின் கரு. கவினிய தங்கச் சிமிழ்போல் சிறிய அழகிய உளங்கவர் படம்...

## அம்மா வந்தாள்

தி.சா.வின் 'அம்மா வந்தாள்'ஐப் படித்தேன். தலைசிறந்த ஓவியன் கண்ணில் படுகின்ற எளிய அழகுகூட அவன் கைவண்ணத்தால் கூத்தாடும் பேரழகாகி விடுவதைப் போல்

இழுமெனும் ஒழுகுநடையால் சூழலை உருவாக்கி வடிவம் கொடுக்கும் முறையால் நெஞ்சத்துணர்வைக் கவ்வி இழுத்துப் படிப்போர் நெஞ்சிற் பதிய வைக்கும் ஆற்றலால் 'அம்மா வந்தாளின் மூலம் தி.சா.வால் பெருமித நடைபோட இயல்கின்றது. ஆங்காங்கே காற்றில் தளிர் அசைவதுபோல் இயற்கையான, சில சொற்களில் உள்ளத்தைச் சிக்கெனப் பிடிக்கும் உரையாடல்; அந்த அப்பு! அவன் இளமைக்கால வாழ்வையமைத்துக் கொண்ட வேதப்பாடசாலைப் பவானியம்மாள். அவளின் தம்பி மகளான இளமை விதவை இந்து, அப்புவின் தந்தை தண்டபாணி, கணவனிருக்கவும் பிள்ளைகள் உறவினர் எல்லாரும் அறிய வேறொருவனோடு மூன்று பிள்ளைகள் பெற்றுக்கொண்டு கணவனோடு வாழும் அலங்காரம்மாள். தன் நிலையை எண்ணிக் கசிந்து மகனான அப்புவிடமே மாற்றானொடு கொண்ட தொடர்பைச் சொல்லி குருதிக் கண்ணீர் வடிக்கும அவளின் இளகிய நெஞ்சு, இறுதியில் பாவக்கறை கழுவ இறையடிநாடி அவள் காசிக்குப் போகின்ற காட்சி, இளம் விதவையான இந்து 'நான் உளம் கனிய காதலித்த ஒருவன் நீதான்' என்று அப்புவிடம் மன்றாடிக் குழைந்து கொஞ்சிக் கெஞ்சுகின்ற காட்சிகள், அவள் செயல்கண்டு நிலைதளர்ந்து அஞ்சியொடுங்கிய அப்புவே இறுதியில் பவானியம்மாளின் குறிப்புணர்த்தலோடு இந்துவோடு வாழ ஒப்புக்கொள்ளுதல், தன் மகன் 'அம்மாப் பிள்ளையாக ஆகிவிட்டானென அவனை அழைக்க வந்த அலங்காரம் எல்லாம் துறந்து இறுதியில் காசிக்குப் போதல் முதலிய பல இடங்கள் நெஞ்சில் தழும்பாகிவிடுகின்றன. உடலால் வாழ்கின்ற உலகு ஒன்று. எண்ணத்தால் விழைகின்ற உலகு ஒன்று. இரண்டு உலகங்கட்கும் இருக்கின்ற தொலைவை வைத்தே கதைகள் நடக்கின்றன. உடலால் தவறியவர்கள் உயர்ந்த வாழ்க்கையை எண்ணத்தால் நாடுகின்றபோது நம்முள்ளம் இரங்கத்தான் செய்கின்றது. தாய்மையும் கம்பீரப் பொலிவுமுடைய அலங்காரத் தம்மாள் சில நேரங்களில் நெஞ்சு நெகிழ்ந்து பிழையுணர்ந்து வடிக்கின்ற குருதிக்கண்ணீர் உள்ளத்தைச் சுடத்தான் செய்கின்றது...

*(19.8.66)*

◆

## நினைவுகள் உணர்வுகள்

எங்காயினும் அமைதி தவழும் தனியிடத்தை நாடி கடந்த காலக் கறைபட்ட நினைவுகள் செயல்கள் எல்லாவற்றிற்கும் கண்ணீர்விட்டு அழவேண்டும் போலிருக்கிறது. அசைந்து திரிந்து கண்டதை மேய்ந்து என்னை ஆட்டிச் சுழற்றி அலைக்கழிக்கின்ற

இந்த நெஞ்சு கண்ணீராலாவது கழுவப் பெறாதா? மெய்ம்மை வேட்கைத் தீயில் புன்மை நினைவுகள் பொசுங்கிப் போக வேண்டும். உள்ளத்தில் எந்நேரமும் அத்தீ கனன்று பற்றி கொழுந்து விட்டு எரிந்து கொண்டே இருக்கவேண்டும். உள்ளத்தில் எரியும் தீயின் செம்மை ஒளிப்பிழம்பு உடலில், முகத்தில் காலப்போக்கில் படரவேண்டும். கோயில் கட்டி அதன் வானுயர் கோபுர உச்சியில் கலசமாக வீற்றிருக்கவேண்டியவன் அல்லவா நான்? குப்பை மேட்டில் குடியிருக்கும் சிறு புழுவாக இருக்கலாமா? எவளோ ஒருத்தி எப்படியோ பார்த்தாள். அதன் உள்ளே ஏதோ பொருள் பொதிந்து கிடக்கிறதே என அதைத் தேடிப் பார்த்து அலைவதற்கா இந்நெஞ்சு? நடையை, உடையை, குறுநகையைக் கண்டு, மாட்டுச் சாணத்தைப் போல் குழைந்து கிடக்கும் நெஞ்சைக் கலக்குவதற்கா இக்கண்கள்? ஏ திருட்டுக் கண்களே! உன் பார்வை உயர்ந்த வானத்தில் உலவித்திரியும் மழை முகிலை, நிலை குலையாது நிமிர்ந்து நிற்கும் மலை முகட்டை, நெஞ்சை உயர்த்தும் கருத்துச் சோலைகளாகிய சிறந்த நூல்களை, உலகைத் திருத்திய உத்தமர் களின் ஒளிப்படத்தைத் தழுவுமாக! மெலிந்து நலிந்துபோன பூஞ்சை நெஞ்சே! நெருப்பினின்று எழுந்து பரவும் ஒளி அலையைப் போல் வெம்மையும் தூய்மையும் நின்பால் துயில் வதாகுக; கெட்டவை பொசுங்கிப் போகும் வெம்மை; நல்லவை தழைத்து வளரும் தூய்மை, பசுமை, தண்மை இவற்றில் குடியிரு. எவனோ ஒருவன் ஏதோ சொன்னான் என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்காதே. செங்கதிரோடு போராட வேண்டிய நீ சிறுபூச்சிப் புழுக்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டா இருப்பது? தலை நரைத்து விட்டதே என்று தளர்ந்தா போவது?

*(19.8.66)*

◆

## தாலாட்டுப் பாடல்

சு. நாட்டுத் தாலாட்டுப் பாடல்கள் பற்றி ஒரு கட்டுரை படித்தார். உழைத்து உருவாக்கிய கட்டுரை. கண்ணை மூடி மேலை நாட்டினரைப் பின்பற்றும் போக்கு, இலக்கிய ஆய்வைக் காய்கறி நறுக்குவதைப் போல் கணக்குப் போடுவதைப் போல் நடத்தும் முறை, தனித்த சிந்தனையாற்றலுக்கு அதிக இடமில்லாமை முதலிய புலப்பட்டன. வேடிக்கையொடு வேதனையாகவும் இருந்தது. உழைத்து உருக்குலைந்து உணவுக்குப் போராடும் மக்களின் வரிப்பணம் வாழ்க்கைக்கு, அறிவு வளர்ச்சிக்கு, உள்ள எழுச்சிக்கு இம்மியளவும் பயன்படாத ஆராய்ச்சிகளில் பாழ்படுகின்றதே என்பதை எண்ணுங்கால் நெஞ்சு இனைகிறது. நாளடைவில் வெள்ளைக்காரன் தரும் செருப்பிற் கேற்பத் தங்கள்

காலகளை இவர்கள் வெட்டிக்கொண்டாலும் வியப்பதற்கில்லை. ஆண்டவன் தரும் அறிவுத்திருவை அடிமை ஏற்காமலிருப்பானா? உள்ளம் எந்த அளவிற்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது.

(20.8.66)

◆

## தப்புகை என்ற உருசியப் படம்

'தமிழ்ச்சிட்டு' ஈரிதழ்களைச் சாலையில் மூலைக் கடையில் கொடுத்து வந்தேன். உருசியாவிலிருந்து தப்புகை என்ற ஓர் ஆங்கிலப்படம் பார்த்தேன். இட்லரின் கொடுமையை மையமாக வைத்து அன்பிற்கு விளக்கமாகப் படம் அமைந்துள்ளது. சிறுமியும் சிறுவனும் முதியவர்களைப் போல் முதிர்ந்து நடித்துள்ளனர்.

(21.8.66)

◆

## உரிச்சொல் ஆய்வு

'உருஉட்காகும் புரை உயர்வாகும்' எனவரும் நூற்பாவின் உட்கு என்பதற்கு மதிப்பு என்ற பொருளைத் தரின் பொருந்துமா எனப் பார்த்தேன். பொருத்தமாயுள்ளது. ஆனால் உரு என்பது மிடுக்கு மதிப்பு எனும் பொருளில் வருவதாகத் தெரியவில்லை. வருகின்றதா எனப் பார்க்கவேண்டும். உட்கு என்ற சொல் மிடுக்கு மதிப்பு எனும் பொருளில் திருவாய்மொழி, இனியவை நாற்பது முதலியவற்றில் வருகின்றது. ஒருபொருள் படுகின்ற உரிச்சொற் களை இணைத்துச் சொல்லும் தொல்காப்பியரின் முறையால் 'புரை உயர்வாகும்' என்பதோடு வருவதால் உட்கு என்பதற்கு மதிப்பு எனப்பொருள் கொளல் நன்று. அடுத்து உரும் என்பதையே நாம் உருமென... வேறொரு இடத்தில் பயன்படுத்தியுள்ளார். அச்சப்பொருளில் வடிவ ஒப்புமையுடைய இவ்விரு சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பின் அவர் இருவேறிடங்களில் இவைகளைக் குறிப்பிடுவானேன்? 'உரியியலை' நன்கு படிக்க வேண்டும்.

(22.8.66)

◆

## பெண் நெருப்பு

இந்தப் பெண்கள் தாம் எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. கனி குலுங்கும் மரம் நோக்கிக் கல் பறப்பதைப் போல் பருவக் கோயிலுள் பள்ளிகொண்டிருக்கும் பாவையர்பால்

எத்தனைக் கண் வீச்சுக்கள்; காளையரின் கண் வீச்சு மட்டுமா? பெற்றோரே எந்நேரமும் அவர்களைப் பற்றியல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப் பதைப் போல மலர்ந்த பெண்ணை வைத்துக் கொண்டிருப்பது என்ற வழக்கே உலவுகின்றதே! நெருப்பல்லவா அவள்? சோறாக்கப் பயன்படும் நெருப்பே வீட்டையே சுட்டுப் பொசுக்கிச் சூறையாடிவிட்டால்...? என்ற அச்சந்தான். தன்னளவில் வெப்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெண் நெருப்பு சார்வாரையும் சுட்டுப் பொசுக்கி விடுகின்றது. மாறாத் தழும்புகளை மனதில் ஏற்படுத்தி 'என்னை நினைத்துக் கொண்டே இரு' எனத் தன் உள்ள ஒளிப்பிழம்பால் ஏவிக் கொண்டிருக் கின்றதே.

(23.8.66)

◆

## நவில்தொறும் நயம்பிலிற்றும் பாவேந்தர் பாடல்கள்

நண்பகல் உணவின்பின் அழகின் சிரிப்பைப் புரட்டினேன். பாடல்களைப் பிழைபட உணர்ந்து (ஆசிரியரோ மாணவியோ) திருத்தியிருந்த சில பகுதிகள் தென்பட்டன. வேலிடம் நூலைக் கொடுக்குங்கால் தெளிவுபடுத்தல் வேண்டும். ஓர் அரைமணி அளவு முகப்புப் பாடலாய அழகைப்படித்தேன். உணர்வைப் பிணித்து உள்ளத்தை வானோடும் முகிலோடு, மணஞ்சுமந்த காற்றோடு தவழவைக்கின்ற பாடல் அது. நெஞ்சம் நெகிழ்ந்து இனிய உலகில் சற்று இளைப்பாறிக் கொண்டிருந்ததைப் போல் இருந்தது. பாவேந்தர் பாடலைப் படிப்பதில் துய்ப்பதில் தான் எத்துணை இன்பம்!. பாக்கடலில் மூழ்கிவிட்டால் துன்பம் படருமா? தொல்லை தெரியுமா? தொலையாத இன்பஞ் சுரக்கின்ற நல்லூற்றல்லவா பாடல்! பாடலைச் சுவைக்கப் பக்குவ மான மழலை உள்ளம் வேண்டும். உடலை மறந்து பாட்டோடு ஆடிப்பாடிப் பறந்து திரியவேண்டும் நெஞ்சம். 'அழகு' மனதில் தங்கியது. அமைதியாக ஆழ்ந்து பன்முறை படிக்கப் படிக்கப் புதுகருத்துக்கள், உறைந்து கிடக்கும் கவின் நயங்கள் புலப்படும். நவில்தொறும் நயம் பிலிற்றும் பாவேந்தர் பாடல்களை முறையாகப் படித்துத் திறனாயவேண்டும். 'அழகு'ப் பாடல் சென்று தேய்ந்து இறுவதுபோல் மூன்றாம் விருத்தத்தில் பொலிவு குன்றியுள்ளது. முதல் விருத்தத்தில் 'அந்தச் சோலையிலே' கண்ணில் தட்டுப்பட்டாள்' முதலிய இடங்களில் பொருள் நயங்காட்டும் சொல்லாட்சிகள் இரண்டாம் விருத்தம் மிக இனிமையானது; 'சிறுகுழந்தை விழி', 'திருவிளக்கு' நின்றாள், சிரிக்கின்றாள், நாடகத்தைச் செய்கின்றாள், பூரித்தாள் முதலிய

கருத்து வளர்ச்சி காட்டும் சொல்லாட்சிகள் உள. 'மகிழ்ச்சி செய்தாள்' என்பதைப் போன்ற புதுவகைச் சொற்கூட்டு வேறெங்கும் வருகின்றதா எனப் பார்த்தல் வேண்டும். மூன்றாம் விருத்தத்தில் 'அசைவனவும் நின்றனவும்' எனக் கால மாறுபாடும் மற்றும் அழகுதனை அழகொன்றையே பாடிவருபவர் பத்தொடு பதினொன்றாக அழகைக் கருதுவதைப் போல் குறிப்பிடுவதும் நுண்ணோக்கில் பிழையாம். இறுதி நான்கு வரிகளும் பொருட் பொலிவோடு அழகின் இலக்கணங்காட்டி நிமிர்ந்து நடக்கின்றன.

(24.8.66)

◆

## அகச்செம்மை

வேல் முதுகலை படிக்க வந்தது முதலே சுறுசுறுப்போடும் மலர்ச்சியோடும் காணப்படுவதாக இகோ சொன்னார், ஒரு பேதை என்றேன்யான். பேதையொடு என்னை இணைத்து, உள்ளுக்குள் இகோ ஏதோ நினைக்கின்றார் என்பதை உய்த்துணர முடிந்தது. எதிர்காலம் என்ன செய்யுமோ? கள்ளவிழி சொல்லும் உள்ளத்துக் காவியம் எப்படி வளர்ந்து எப்படி முடியப்போகின்றதோ! நெஞ்சிற்குள்ளேயே கருகி நீறாகப் போகுமோ! யார் கண்டது? என்னளவில் ஓர் எஃகுறுதி வளர்ந்து வருகின்றது. முன்னைப்போல் ஊசலாட்டம் இல்லை. உள்ளத்தில் ஓர் இனிய அமைதி குடியிருக்கின்றது. அமைதியில் விளைகின்ற மகிழ்ச்சி நிறைவை என்னென்பேன்! நெருப்பில் காய்கின்ற பொன்போல நெஞ்சம் காய்கிறது. காயக்காய ஒரு வகை ஒளி ஏறுவதை உணரமுடிகிறது. நல்ல உழைப்பும் புல்லிய நினைவுகளைப் பொசுக்கிவிடுகின்றது. அகச்செம்மை உடற்கு ஒரு கவர்ச்சியூட்டுமென்பது உண்மையே! நெஞ்சம் அழுகி நாறிப் புழுத்துக் கிடக்கும்போது விழியில் ஒளி ஏறுமா? மலர மலரப் பூ பரப்புமே ஒருமணம், அதைப்போல் நெஞ்சம் முகத்தில் ஒளியூட்டுகின்றது.

## உடைப்பொலிவு

மொழியியல் துறையினின்று திரும்புங்கால் இராமகிருட்டிணனைப் பார்த்தேன். வட்டக்கழுத்து மெய்ப்பை, வேட்டி உடை எனக்கு நன்றாக இருப்பதாகக் கூறினார். என் முகத்தெதிரே உடைப்பொலிவைக் குறிப்பிட்டபோது இந்த உள்ளத்தில் பொங்கிவழிந்த உவகைதான் என்னே! உண்மையிலேயே வட்டக்கழுத்து மெய்ப்பையும் வேட்டியும் புறத்தூய்மையன்றி அகத்திலும் ஒரு எழுச்சியை, செம்மை விழைவை ஏற்படுத்தத்தான் செய்கின்றன. உள்ள வளர்ச்சிக்கு ஓரளவு உடைத்தூய்மை

பயன்படுமல்லவா? காந்திக் கிழவனின் விரிந்து பரந்த அன்பு சுரந்து வழியும் நெஞ்சத்தை நான்கு முழ இடைவேட்டியும் சிறுதுண்டும் என்றும் காட்டிக் கொண்டிருக்கின்றனவே! மாலையில் வீயொடு பல்கலைக்கழக அலுவலகம் சென்று வருங்கால் கருத்தரங்கில் நானே நேரத்தை எடுத்துக்கொள்வ தாகவும் கேள்விகளைச் சுருக்கிக் கேட்க வேண்டும் என்றும் சொன்னார். எனக்கு ஒரே வியப்பு. மற்றவர் நேரத்தை யான் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? அந்த எண்ணம் என்றும் ஏற்பட்டது கிடையாது. எனக்கு ஏற்படும் ஐயங்களை யான் அகற்றிக் கொண் டாக வேண்டுமே! கேள்வி கேட்கும் பிறரை வேண்டாமென யான் தடுத்தேனா? ஓரளவு வேதனை தருவதாயமைந்தது அவர் பேச்சு.

*(25.8.66)*

◆

## பொன்விலங்கு

வீயுடன் சிற்றுண்டி முடித்து அறைக்குச் சென்றேன். தா பொன்விலங்கைக் கொண்டுவந்து கொடுத்ததாகவும் இது என்ன புதினம் என்று இகழ்ந்து 'எந்தத் தமிழாசிரியனுக்காவது ஆங்கிலத்தில் விடுமுறைக் கடிதமேனும் எழுதத் தெரியுமா? அப்படி இருக்கையில் சத்தியமூர்த்தி ஆங்கில வகுப்பை நடத்துவதாக எழுதியிருப்பது பொருந்துமா? இயல்பாக (Realism) இல்லை. இதுபற்றி ஒரு கட்டுரை எழுதி நீங்களாவது பிச்சையாவது படியுங்களேன். பிச்சை தான் பலமுறை இதைப் படிப்பார் போல் தெரிகிறதே!' என்றாராம். அறம் இதைச் சொன்னார். மெ. சுந்தரம் தமிழ் படித்துக் கொண்டே ஆங்கிலப் பேரவையின் செயலராக இருந்தார் என்ற செய்தியை என்னிடம் சொன்னவர் இதே தாதான், இங்கிருக்கின்ற பேரா எது படித்தவர்? இன்று மொழியியல் மாணவர்க்குப் பாடம் நடத்துவதாகச் சொன்ன இந்த நண்பர்தான் எது படித்தார்? சாக்கடைச் சேற்றில் சந்தன மணத்தை எதிர்பார்ப்பது நம் குற்றமே. சத்தியமூர்த்தி மெய்ம்மை வேட்கையும் தன்மான உணர்வுமில்லா இத்தகைய நண்பர்களைப் புண்படுத்தியிருப்பான் என்பதைப் புரிந்துகொண்டேன்...

## தூது, பொற்காலம்...

முதுகலை வகுப்பில், தமிழில் தூதுபற்றிச் சூன்யமே உளது வடமொழியில் நிறைய உளது என்று ஆரியம் என்னும் பாயிரும் பௌவத்தைக் கடந்தவர்போல தா குறிப்பிட்டது பற்றியும் 'சங்ககாலம் பொற்காலம்' என்கிறார்கள், பொன் சொல்லில்தான் இருக்கிறது என்று கேலி செய்தது பற்றியும் அறம் வழி அறிந்தேன்.

ஏன்தான் இத்தகையோரெல்லாம் இன்னும் தமிழ்த்துறையில் இருக்கின்றாரோ? மனைவி மக்களிடம் தமிழில் பேசுகின்றாரோ தெரியவில்லை. எரிமலையென வெடித்துச் சிதறியது நெஞ்சம். அறத்திடம் நெஞ்சைத் திறந்து கொட்டினேன். கோகுவும் கேட்டுக் கொண்டிருந்தார். அறைக்குப் போகும்போது என்னிடத்திற்கு வந்தார். 'பாதகம் செய்பவரைக் கண்டால்... என்ற பாடலைச் சொன்னேன். எல்லோரும் இப்படி எழுந்தால் என்னாகும் என்றார். 'அடிதடிதான். இறுதியில் நிலைப்பது நிலைக்கட்டுமே' என்றேன். வாழ்க்கைப் போராட்டத்தில் எது நிலைக்குமெனப் பார்த்துவிடலாம். புல்லியர் தம் கீழுரை பற்றி நினைத்து நினைத்து ஏன்தான் இந்நெஞ்சு இனைகிறதோ? அடிக்கின்ற பேய்க் காற்றிற்கும் பொழிகின்ற பெருமழைக்கும் அசையாது நிலைகுலையாது நிமிர்ந்து நிற்கின்றதே குன்று அதைப்போல் திண்மையும் வன்மையும் உடையதாக இந்நெஞ்சைப் பண்படுத்திக் கொள்ளல் வேண்டும். திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல் அறிவு வேண்டும்.

*(26.8.66)*

◆

## சிறுகதைச் செல்வம்

சாலை இளந்திரையன் சிறுகதைச் செல்வம் பற்றிச் சேதா குறிப்பிட்டு 'தமிழ்க்கதைக்கு ஒரு வடிவமுள்ளதாகக் கூறுவது உண்மையா? பரந்த நிலையில் உலகக்கலை (Universal Art) எனப் பார்க்கவேண்டும் என்றார். யான் உடனே உலகக்கலை என்பதே முரண்பட்ட சொற்கூட்டு என்றேன். முழுமனதோடு ஒத்துக் கொண்டார். அப்பாத்துரையார் முப்பாலொளியின் முன்னுரை யில் 'உலகம் ஒன்றானால் அன்றோ இறைவன் ஒருவன் என்ற கருத்து உண்மையாகும் என்று குறிப்பிட்டுள்ளதைச் சுட்டி உலகம் பலநிலையில் பிரிந்து வேறுபட்டு நிற்குங்கால் 'உலகக்கலை' பற்றிப் பேசுதல் பொருள் பொருந்தியதா என்றேன். இலக்கியத் திறன் இலக்கியச்சுவையின் அடிப்படையில் அமைந்தது. தன் சூழல், பட்டறிவு, விருப்பு வெறுப்பிற்கேற்ப இலக்கியத்தை மாந்தன் சுவைக்கிறான். போற்றுகிறான். தன்னளவில் எழுந்த அப்போற்றுதற்குச் சில காரணங்களைக் காட்டிச் சுவையைப் பொதுவுடைமையாக்க முயல்கிறான். அப்போதே இலக்கியத்திறன் உருப்பெறுகிறது. ஒரு நூலைப் புகழ்தற்கும் இகழ்தற்கும் தன் உள்ளத்தெழுந்த உணர்ச்சிகளை மையமாக வைத்துள்ள மாந்தன் அவ்வுணர்ச்சிகட்குச் சில காரணப் பூச்சுகளைப் பூசிப் பொது மேடையில் வைப்பதே திறனாய்வு...

## பொன்குஞ்சு

நண்பகல் உண்டபோது வீ வாடிய முகத்தொடு வந்தார். பேரா, வீ சரியாக வேலை செய்வதில்லையென்றும், கருத்தரங்கில் கேள்வி கேட்பது சினநோக்கில் உள்ளதென்றும், வேலை கிடைக்காது உள்ளந்தளர்ந்து போயிருக்கிறீரென்றும் கூறியதாகச் சொன்னார். சில வகைகளில் குழந்தை நெஞ்சுடையவர் வீ. என்னைப் போல் சின்னேரங்களில் எளிதில் உணர்ச்சிவயப் படுபவர். பூப்போன்ற அவர் நெஞ்சு பொசுங்கியிருப்பது தெரிந்தது. மறுமுறை பேராவிடம் சென்று அவர் கூற்றிற்கு விளக்கம் கேட்டு வந்தார். என்னையும் உடன் வீட்டிற்கழைத்தார். செய்யவேண்டிய வேலைகளையும் விட்டு நெஞ்சம் தளர்ந்திருந்த அவரோடு வீட்டிற்குச் சென்றேன். அவரின் 'பொன்குஞ்சு' ஓருறுப்பு நாடகத்தைப் படித்தேன். முடிவு நன்றாக இருந்தது. அவர் வீட்டின் முன் கூடத்தில் படுத்துக்கொண்டு ஆனந்தவிகடனைப் படித்துக் கொண்டிருந்தேன். பக்கத்துவீட்டுச் சிறிய பெண் - வேளாண்மைக் கல்லூரியில் படிப்பதென்று நினைக்கிறேன் - என்னை அது பார்ப்பதற்கேற்றவாறும் அதை நான் பார்ப்பதற்கேற்றவாறும் வீட்டில் முன்வாயிற் கதவண்டை நின்றுகொண்டு ஓரவிழி பாய்ச்சியதோடு இங்குமங்கும் நடந்து தன் தங்கைகளோடு இனிய குரலில் பேசி விளையாடிக் கொண்டிருந்தது. பூத்துக் குலுங்குகின்ற நிலையிலுள்ள கொடி. கொம்பைப் பற்றிக்கொள்ளும் நெஞ்சக் குறுகுறுப்பு. பாவம். ஒழுங்காகப் படித்து உருப்படுமோ என்னவோ? ஓரளவு ஏழைக்குடும்பம். போகப் போக உள்ளத்தைப் பண்படுத்தா விட்டால் எவன் கையிலாவது அம்மலர் கசங்கினாலும் வியப்பதற் கில்லை...

## நெகிழ்கின்ற நெஞ்சு

அறம், வேல் விடுமுறையில் ஊர்க்குச் செல்வதாகச் சொன்னார். வாடகை வீட்டில் தான் குடியிருப்பதாக அறிந்தேன். திருச்சியில் இரண்டாம் ஆண்டு தேர்வின்போது ஏழெட்டு நாட்கள் மணிப்பையனைக் காணாது மனம் மறுகினேனே, ஒரு துயரச் சூழலில் துடித்துக் கிடந்தேனே அதன் சிறுசாயல் போல நெஞ்சம் துணுக்குற்றது. உடலின் வலுவில் ஒரு பெரும்பங்கு எங்கோ ஓடிவிட்டது போல் ஓர் தளர்ச்சி. நெகிழ்கின்ற நெஞ்சே! அனல் பட்ட வெண்ணெயாய் உருகிவிடாதே. எதையெதையோ எண்ணி ஏன் இளைத்துப் போகிறாய். அவள் நெஞ்சில் உனக்கொரு இடம் இருக்கின்றதென்பதை உணர்வதில் தான் நினக்கு எத்துணைத் திருட்டு இன்பம்! அந்த இடம் என்றும் அமரக்கூடிய இடமாக அமையுமா என்று ஏன் மயங்குகின்றாய். இடையிலுள்ள

தடைச்சுவர்களை எண்ணிப் பார்த்து இப்போதே ஒருநிலையில் நில். ஊசலாடிக் குமைவதால் பயனில்லை. இழப்புண்டு.

(27.8.66)

◆

## ஆங்கில மோகம்

எழும்போது மணி எட்டேகால். குளித்து முடித்தேன். கோகியோடு இராமதாசு என்னும் இன்னொரு கும்பகோணம் பகுதி நண்பர் வந்தார். ஆங்கிலத்தில் இடையிடையே பொழிந்தார். 'நீர் ஒரு தமிழர் நான் ஒரு தமிழன். நம்மிடை என்ன ஆங்கிலம் வேண்டிக் கிடக்கிறது?' என்றேன். இயல்பாக அறியாமல் வந்துவிடுகிறது என அமைதி கூறிப் பிழையுணர்ந்தார். காலை உணவு அருணாவில். நண்பகலில் அரிகரசுப்பிரமணி துறைக்கு வந்திருந்தார். ஏறத்தாழ மூன்று மணிநேரம் பேசிக் கொண்டிருந்தார். மற்றவர்களை அழுத்தும் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தன்னை வளர்த்துக் கொள்ளும் போக்குடையவர் பேரா என்றார். தமிழ்ச்சங்க உறுப்பினர் விண்ணப்பத்தாளை நிறைவு செய்து அடியில் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டார். 'தமிழ் விரிவுரையாளராகிய நீர் தமிழில் எழுதப்பட்ட ஓர் அறிக்கையில் தமிழில் கையெழுத்துப் போடவில்லை என்றால் வேறு எங்கே தமிழில் போடப் போகிறீர்' ஓர் ஆங்கில அறிக்கையில் தமிழில் கையெழுத்து போடுவீரா என்று ஒரு போடு போட்டேன். பிழையுணர்ந்து போட்ட கையொப்பத்தை அடித்துத் தமிழில் போட்டார். இருவரும் இணைந்துண்டோம். பின் பிரிந்தார்.

(28.8.66)

◆

## துறைச்சூழல்

காலையில் அப்பன் அறைக்கு வந்திருந்தார். யான் மாலையில் அவர் வீட்டிற்குச் சென்றேன். இருவரும் மாதவனைக் காணப் புறப்பட்டோம். சாலை மூலைக்கடையில் போட்ட இரண்டு தமிழ்ச்சிட்டு இதழ்களும் விற்பனையானதையறிந்து மிக மகிழ்ந்தேன். அடுத்தமுறை ஐந்து இதழ்கள் போடவேண்டும். மாதவனோடு கடையில் பேசிக்கொண்டிருக்கும்போது நாறும்பூ வந்தார். மாதவனின் மைத்துனர் பாசுகரன் என்பாரும் பின் வந்தார். முன்பே அவரிடம் என்னைப் பற்றி மாதவன் சொல்லியுள்ளதாக அறிந்தேன். பல செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பாசுகரன் என் ஆய்வுத் தொடர்பாகக்

கேட்டார். பயனின்மை துறைச்சூழல் பற்றி வெளிப்படையாய்ச் சொன்னேன். என் கதையையும் வேறிரு நூல்களையும் மாதவ னிடம் கொடுத்து விடைபெற்று நாறும்பூ வீட்டிற்கு வந்தோம். தாகூரின் கீதாஞ்சலிப் பாக்களை மொழிபெயர்த்து வைத்திருந் தமையை என்னிடம் காட்டினார். இரண்டு மூன்று பாக்கள் நன்றாயிருந்தன. அவரிடமிருந்து இருநூல்களும், ஒரு கதை கட்டுரைகளும் எடுத்துக்கொண்டு விடைபெற்றோம். அப்பனும் யானும் புகைவண்டி நிலையத்தின் பின் உள்ள ஒரு கடையில் 11 மணி அளவில் உணவை முடித்துப் பிரிந்தோம்.

*(30.8.66)*

◆

## செம்மீன்

பிற்பகலில் செம்மீனை இரண்டாம் முறையாகப் படித்தேன். ஏறத்தாழ ஏழரைமணி அளவில் முடிந்தது. அருமையான தங்குதடையற்ற மொழிபெயர்ப்பு. பாவம் கறுத்தம்மா! பரீக்குட்டியோடு இளமை முதலே ஓடித்திரிந்ததுதான் அவள் செய்த குற்றம். இந்தக் கொடிய உலகு அவளை அவள் குடும்பத்தை அதை வைத்துக்கொண்டே எப்படிப் பழிவாங்கு கிறது! பழனியின் படைப்பில் ஓரியற்கை! பழைய தேவதாசைப் பல பகுதிகளில் பரீக்குட்டி நினைவுபடுத்துகிறான். இறுதியாகப் பரீக்குட்டியிடம் கறுத்தம்மா விடைபெறுகிறாளே அந்தப் பகுதி மிக அருமை! நீர்க்குன்றப் புழை கடற்கரையில் பரீக்குட்டி பாடுவதைத் திருக்குன்றப் புழையிலிருந்து கறுத்தம்மா கேட்டுக் கொண்டிருப் பாளாம். என்னே காதல் பேதைமை! பழனி கடலில் மூழ்கின்ற (சுழற்காற்றடிக்கும்) பகுதி கெமிங்வேயின் 'கடலும் கிழவனும்' என்ற புதினத்தின் சாயலைக் கொண்டது என்றனர் நண்பர். அது சரியா எனப் பார்க்கவேண்டும்.

*(31.8.66)*

◆

# செப்டம்பர் - 1966

## பாலை வெளிகளும் சோலைப் பொழில்களும்

எழுதுவதில் ஓர் உள்ள நிறைவு வாய்க்கிறது. உள்ளச்சுமை இறங்குகின்றது. எண்ண ஊற்று வளமாகப் பெருக்கெடுக்கின்றது.

உள்ளச்சோர்வை ஓட்டி உவகை மலர்கின்றது. எண்ணங் களை எழுத்தில் உருவாக்கும்போது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளும் இனிமையான உருவம் அமைந்துவிடுங்கால் ஏற்படும் பூரிப்பும் வருங்காலத்தை வளமாக்கவல்லன. தென்றலாய் உலவும் நெஞ்சம் சூறைக்காற்றாய் சீறியெழுவதில்லையா? மல்லிகையாய் மணக்கும் உள்ளம் மலத்தினும் கீழாய் நாறுவதில்லையா? உயர்வு, தாழ்வு, பெருமை சிறுமை எல்லாம் உள்ளத்தில்தானே பிறக்கின்றன! அவ்வுள்ளத்தை ஓரளவு பிழிந்து வைத்திருக்கின்ற இந்நாட் குறிப்பிலும் பாலைவெளிகளும் சோலைப்பொழில்களும், நீரும் நெருப்பும், துளிர்க்கும் தளிரும், உதிரும் சருகும் தென்படலாம். வாழ்க்கையே அப்படிப்பட்டதுதானே? உலக இயக்கமே அப்பண்பில்தானே அடங்கிக் கிடக்கின்றது!...

## ஆன்டன் செக்காவ் கதைத்தொகுதி

அப்பாசின் சேகரும் சப்னாவும் (Sekhar Aur Sapna) குடியரசுத் தலைவர்ப் பரிசுபெற்ற ஒருபடம். சென்ட்ரலில் ஓடுமென்று கருதிப் பார்க்கப் போனேன். இரண்டே நாட்களில் ஓடியே போய்விட்டதால் பார்க்க இயலவில்லை.

பழவங்காடிப் பழைய புத்தகக்கடைகளைப் பார்வை யிட்டேன். ஆன்டன் செக்காவ்வின் கதைத்தொகுதி (தமிழ்) ஒன்றும் கே.எம்.பணிக்கரின் சிறு ஆங்கில நூலொன்றும் வாங்கினேன். செக்காவ் கதைகளில் இரண்டைப் படித்தேன். இனிய கதைகள். ஒரு பணக்கார வீட்டில் செருப்புத் தைக்கக் கற்றுக்கொள்ள வந்த ஏழைச்சிறுவன் அங்குப்படும் தொல்லைகளைத் தனக்கு ஆதரவாயுள்ள ஒரே உயிரான ஏழைத் தாத்தாவிற்கு மடல்வழி தெரிவித்துத் தன்னை அழைத்துப் போகச் செய்ய விரும்புகிறான். முகவரி தெரியாமல் பேதை உள்ளம் ஏதோ எழுதி அஞ்சலில் சேர்க்கிறது. மடல் போய் சேரவாபோகிறது? ஏழைச்சிறுவன்

படுந்தொல்லைகளால் நம் நெஞ்சை இளக்கும் ஆசிரியன் சரியான முகவரி இன்றி அஞ்சல் செய்வதாக முடிப்பதன் வாயிலாக 'அய்யோ இப்படியாகி விட்டதே' என நெஞ்சை அழ வைக்கிறான். அதுதான் அருமை! 'கடிதம்' என்பது கதையின் பெயர்.

(1.9.66)

◆

## பாடநூற்குழுக் கூட்டம்

ச.வே.சு. அழைத்திருந்தார். பாடநூற்குழு கூடப் போவதால் எம்.ஏ. வகுப்பிற்கு என்னென்ன மாற்றஞ் செய்யலா மெனப் பேரா கேட்டாராம். அதன் தொடர்பாய் என் கருத்தையும் படித்த பாடல்களையும் (எம்.ஏ.) கேட்டார். சொன்னேன். மொழியியல், திறனாய்வு ஆகியவற்றில் நடத்துவதற்கும் தேர்வில் கேட்பதற்கும் தொடர்பு அதிகமில்லை என்ற பழைய மாணவர் களின் கருத்தையும் திரு.வி.க. மறைமலையடிகள், பாவேந்தர் நூற்களைச் சேர்க்கலாம் என்ற எண்ணத்தையும் பிறவற்றையும் வெளி யிட்டேன். குறித்துக் கொண்டார். பயன் விளையுமா என்பதில் அவர்க்கும் ஐயமே! மழை ஒருபாட்டம் பிடித்தடித்தது...

## சண்பகம் இதழ்

'சண்பகம்' இதழை மாதவனிடம் பெற்று இ.கோ. வீட்டிற்குச் சென்றோம். வீட்டில் ஆள் இல்லை. 'தீபம்' வாங்கிப் புகைவண்டி நிலையம் வந்து பத்தரை வரை பேசிக் கொண் டிருந்தோம். மாதவன் கேசவதேவைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையைப் படித்தோம். தெளிவில்லை. தொடர்ப் பிழைகள் இருந்தன. 'கவியின் கனவு' என்று நாறும்பூ தலைப்பிட்டனுப்பிய கதையை 'மதுர சொப்பனம்' என்ற தலைப்பில் தீபத்தில் வெளியிட்டிருந்தனர். ஓரளவு நல்ல கதை. பிறமொழிச் சொற்கள் மிகுதி. சண்பகம் இதழ் ஓரளவு தரமாக உள்ளது. பக்கங்களைக் கூட்டல் வேண்டும். விரைவில் இதழ்க்கு ஆண்டுக்கட்டணம் விடுத்தல் வேண்டும். அன்பழகன், வாணிதாசன் போன்றோரின் நற்றுணை சண்பகத் திற்கு இருக்கும் போலும்! தென்றலுக்குப் பின் தரக்குறைவின்றி வெண்பாப் போட்டி சண்பகத்தால் நடத்தப்படுகின்றது.

(2.9.66)

◆

## பார்ப்பன விதவை

இகோவொடு பேசிக்கொண்டிருக்கும்போது இப்பக்கச் சாலையில் ஏட்டுச்சுவடி நூலகத்தில் பணியாற்றும் விதவை

சென்றாள். இங்கு வந்தது முதலே இவளைப் பார்த்து வருகின்றேன். முதலில் மணமாகாத பார்ப்பனத்தியாயிருப்பாளென் றெண்ணினேன். பின்னரே ஓர் ஆண்மகவுடைய விதவை, மலையாள நாயரென்றும் அறிந்தேன். விதவையான அவள் வகைவகையான வண்ண ஆடைகளைப் பொருத்தம் பார்த்து அணிந்து வருகின்றாள். அழகுபடுத்திக் கொள்ளும் எண்ணத்தின் அடிப்படையில் ஆசை கிளைக்கத்தானே செய்யும்! அதோடு மட்டுமா? பழம்போல் சிவந்த அடிவயிறு பளிச்சிட உருண்டு திரண்ட முலைகள் நிமிர்ந்து 'என்னைப்பார்' என்று சொல்ல அவள் ஆடையணிந்து வருவதை என்னென்பது? வெறியூட்டும் எழில்காட்டும் ஒப்பனை! ஆனால் அவள் நடையும் பார்வையும் பேதைமை, ஏமாற்றம், ஏக்கம் காட்டுவதாகவே உள. வெறியூட்டு வதாய் இல்லை. இந்த முரண்பாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும். தன்னை இளமையிலேயே பழிவாங்கிய இறைவனை, உலகை இப்படி ஒப்பனை செய்வதன்மூலம் பழிவாங்குகின்றாளா? எல்லோரும் தன் உடல்மதர்ப்பைக் கண்டு, ஏங்கிச் சாதலைக்கண்டு மகிழவேண்டும் என்ற ஏமாற்றங் காரணமாய் எழுந்த எண்ண மோ? இவளை மையமாக வைத்து ஒரு கதை எழுதல் வேண்டும்.

(3.9.66)

◆

## புதுசேரி அடங்கினார்

நண்பகல் உணவின்பின் வேலைசெய்து கொண்டிருக்கும் போது புதுசேரி வந்தார். மொழியியல் புத்தகத்தை எடுத்துப் பார்த்தார். 'ஒலியன்', 'பொருளசை' முதலியவற்றிற்கு விளக்கம் கேட்டார். சொன்னேன். அப்படியே Phoneme, morphome எனும் ஆங்கிலச் சொற்களையே எடுத்துக்கொள்ளலாம் என்றார். நாங்கள் தமிழர்கள். எடுத்துக் கொள்ளமாட்டோம் என்றேன். சின்னேரங் கழித்து இச்சொற்கட்கு இயைபான வடமொழிச் சொற்களை எடுத்துக்கொள்ளலாம் என்றார். தமிழ்நாடு அவற்றை ஏற்காது என்றேன். உடனே 'தமிழ் இலக்கியங்கள் வடமொழிச் சார்புடையவை. சங்க இலக்கியங்களும் அப்படியே' என்றார். எனக்குச் சினம் பொங்கியது. 'சங்க இலக்கியத்தைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? எதைப் படித்திருக்கிறீர் என்றேன். யான் பொங்கி எழுந்தமை கண்டு அடங்கிப் போனார். பின்னர் 'இதுபோல பேசுகின்ற முறையை என்னிடம் வைத்துக்கொள்ளாதீர். என்னால் இதை அனுமதிக்க முடியாது' என்று கண்டிப்புடன் சொன்னேன். "ஏன் சினமடைகிறீர் அமைதியாகப் பேசும்" என்றார். திராவிட மொழிக்கூறுகள் வடமொழியில் கலந்திருப்பதைப் பற்றித் தெரியுமா? அங்கேயும் இந்த நிலை உண்டு என்பதை அறிந்து

கொண்டு பேசும்" அதோடு உம்முடைய மொழியைப் பற்றி நீர் எதுவேண்டுமானாலும் பேசும்" அறியாத என்மொழியைப் பற்றிப் பேசாதீர்' என்றேன். நிலை தாழ்ந்து 'தமிழ் என்மொழிதான், நாம்தான் வடமொழியாளரைவிடத் தொன்மையானவர்கள்' என்றார். கடந்த ஆண்டு மொழியியல் வகுப்புகளிலேயே என்னை ஓரளவு புரிந்துகொண்ட புதுசேரி இன்று நல்லமுறையில் அறிந்து கொண்டு அடங்கினார். வடமொழிக்கு வால் பிடிப்பதிலே இப்படிப்பட்டவர்களுக்கு எத்துணை ஈடுபாடு! என்றுதான் உருப்படுவார்களோ? திராவிடமொழிகளில் வடமொழிக் கூறுகள் உள உள என்று திராவிடர்களே பேசித் திரிவதை என்னென்பது! யான் அறிந்தவரையில் எந்த வடமொழியாளனும் வடமொழியி லுள்ள திராவிடக் கூறுகளைப் பற்றி இவ்அடிமைத் திராவிடரைப் போல எழுதியோ பேசியோ திரிவதாகத் தெரியவில்லை. மாலை அறையில் தீபத்தில் இளம்பாரதி எழுதிய சரத்சந்திரரின் வாழ்க்கை வரலாற்றுத் தொடரைப் படித்தேன். இளமைக்குறும்பும் வறுமை வாழ்வும், மொழி இனப்பற்றும் அரசியல் விடுதலை வேட்கையும் நன்கு விளக்கப்படுகின்றன. பர்மா சென்று அங்குள்ள ஒரு பெண்ணை மணந்து ஆண்மகவிற்குத் தந்தையானமை. பின் வங்காளத்தில் (முதல் மனைவி இறக்க) வேறொரு மாதை மணத்தல், சாதி சமயச் சடங்குகளை எதிர்த்தல், பர்மாவில் புத்தபிக்குவாயிருத்தல், மாதர் நலத்திற்காகப் போராடல், வங்க மண்ணில் வேரூன்றிய வளமார் கதைகளைப் படைத்தல், தாகுரைப்போல எழுதவேண்டுமென இளமையிலெழுந்து வளர்ந்த வேட்கை முதலியன தெளிவாயுள. குடிப்பழக்கம் அவர்க்கிருந்தது. தன்னையும் தன் வாழ்வோடு தொடர்புடைய நண்பர்களையும் நிகழ்ச்சிகளையும் பெரும்பாலும் எல்லாக் கதைகளிலும் இணைத்துச் சரத்சந்திரர் எழுதியுள்ளாரென்பதும் சான்றுகளோடு கூறப்பட் டுள்ளது.

*(4.9.66)*

◆

## இளையபெருமாள் கட்டுரை

மாலைக் கருத்தரங்கில் ஆசிரியர் இளையபெருமாள் 'கலித்தொகை பரிபாடல் வினை வடிவ வேறுபாடுகள்' என்ற கட்டுரையைப் படித்தார். கருத்துச் செறிவிருந்த அளவு தெளிவு இல்லை. அறிவுத்திறன் வாய்ந்த அவரின் எழுத்திலும் பேச்சிலும் ஏனோ எல்லோர்க்கும் இனிது புலப்படுத்தும் தெளிவு இல்லை! யான் சில கேள்விகளைக் கேட்டேன். அவர் உரையாசிரியர்களின் கருத்தை உரைத்துப் பார்க்காமலே ஏற்றுக்கொண்டுள்ளார்.

கலிவெண்பாவில் வெண்டளையன்றி பிறதளையும் வருமென்று தவறாகச் சொன்னார். வெண்கலிப்பாவில்தான் பிறதளை வரும் கலிவெண்பாவில் வராது என்றேன். கழக அகவற்பாடல்களில் ஆசிரியத்தளைகளுக்கடுத்த நிலையில் இயற்சீர் வெண்டளை மிகுந்து வருகின்றதென்றும் காய்ச்சீர் வெண்டளையும் அங்கங்கே வருகின்றதென்றும் ஆனால் அங்ஙனம் வெண்பாவில் பிறதளைகள் விரவாவென்றும் சொன்னேன். கழகப் பாடல்களில் முழுவதும் ஆசிரியத்தளைகளால் ஆன பாடல்கள் இருக்குமா என்பது ஐயத்திற்குரியதே. இருந்தாலும் பத்திற்கு மேல் பார்க்கமுடியாது என நினைக்கிறேன். ஆனால் வெண்பா யாப்பில் அமைந்துள்ள கீழ்க்கணக்கு நூல்கள் நளவெண்பா முதலிய பிறநூல்களில் வெண்டளை யொழிந்த பிற தளைகளைக் காண இயலுமா என்பது ஐயமே. இருப்பின் மிகமிகச் சிறுபான்மை இருக்கலாம். பாவகைகளில் தூயது வெண்பாவே. யாப்பு அடிப்படையில் வாய்ப்பு நேருங்கால் கழகப் பாடல்களைக் காணவேண்டும். கட்டுரையில் 'மற்ற கழகப் பாடல்களினும் மூவகைச் சொற்கள், வழக்குச் சொற்கள் கலித்தொகை பரிபாடல்களில் மிகுதியாகக் காணப் படுகின்றன. அதற்கு ஆசிரியர்கள் மேற்கொண்ட கலியாப்பும் இடைவிரவும் வெண்பா யாப்பும் காரணமாகலாம்' என்ற கருத்து கருவாய் அமைந்தது.

*(5.9.66)*

◆

## 'செம்மீன் இல்ல'

துறைக்கு வரும்போது சாலையில் நின்ற ஒரு குழந்தையை நோக்கினேன். பார்த்துச் சிரித்தது. கையில் 'செம்மீன்' திரைப்பாடல் புத்தகம் வைத்திருந்தது. நான் 'செம்மீன்' புத்தகம் என்றேன். 'செம்மீன் இல்ல' என்று சிரித்து நெளித்து என்னோடு பேசியது. கள்ளமில்லா நெஞ்சைக் காட்டும் களங்கமில்லா முகத்தில் ஒளிர்ந்த மலர்ச்சியும் பூவிதழ்களை அவிழ்த்துப் பொன் வண்டெனப் பேசிய பேச்சும் என் நெஞ்சை நிறைத்து மலர்த்தின. இளஞ்சிட்டுகளோடு ஆடிப்பாடிப் பேசி மகிழ்வதில்தான் எத்துணை இன்பம்! துன்பம் நிறைந்த உலகில் நிலைத்து நிற்கும் ஓர் இன்பஊற்று இளம் மகவுகள் தாமே! குழந்தையோடு நாமும் ஓர் குழந்தையாகிவிட்டால்... துறக்க உலகம் வேறு இருக்கின்றதா?...

## உலகமே புகைவண்டி நிலையத்தில்...

நிலையத்தில் வண்டி புறப்பட்டவுடன் வண்டிக் குள்ளிருந்து சில கைகளும் வெளியில் நின்று பல கைகளும் அசைகின்ற

காட்சிதான் என்னே! அசைவுகளில் தான் எத்தனை வகை. முகம் மலர விடைதருபவர்கள் மட்டுமா? கண்ணீர் சோரப் பிரிபவர்களையும் காணமுடிகிறது. பயணம் செய்பவர்களின் நெஞ்சில் காத்துக் கிடக்கின்ற நினைவுகள் எத்தனையோ? மகிழ்ச்சி அலையில் மிதப்பவர்கள் இருப்பார்கள். துன்பச்சுழலில் உழல்பவரும் இருக்கலாம். ஆக உலகமே புகைவண்டி நிலையத்தில் காட்சி தருகின்றது...

## வாய்ப்பு நேருங்கால் வாருங்கள்

நீல பத்மனாபனைப் பார்த்து அவர் வீட்டிற்குச் சென்று 'புளியமரத்தின் கதை'யைப் படிக்க வாங்கினோம். வெளியே சிறுமழை, வீட்டுக் கூடத்திலேயே அமர்ந்து பத்தேமுக்கால் வரை நேரம் போனதறியாமல் இன்றைய இலக்கிய, திறனாய்வுப் போக்குகளைப் பற்றிப் பேசினோம். நான் சில கருத்துகளை வலியுறுத்தினேன். பெரும்பாலும் ஏற்றுக்கொண்டார். நாறும்பூ யான் பாட்டெழுதுவதைப் பற்றிச் சொல்லியிருப்பார் போலும்! அதுபற்றியும் வினவினார். 'புதுமை இலக்கிய ஆசிரியர்களில் பெரும்பாலோர் பழமையை அறியாதிருப்பதோடு அதை இகழ்வதையும், புரியாத வடமொழி, வட்டாரச் சொற்களைப் பயன்படுத்தும் எழுத்தாளர்களே மு.வ. போன்றோரின் நடையில் உள்ள தமிழ்ச் சொற்களைப் புரியாவெனக்குறை சொல்வதையும், திறனாய்வாளர்களெனச் சொல்லிக் கொள்பவர்கள் நடுநிலைப் போக்கின்றி தம்குழுவைச் சார்ந்தவர்களே எழுத்தாளர்கள் என்பதோடு மற்ற சில எழுத்தாளர்களை அவர்களின் படைப்புக் களைப் பார்க்காமலே 'என்ன தெரியும்' என்று எடுத்தெறிந்து பேசுவதையும், இலக்கியத்தின் இலக்கணம் இதுதான் என்ற வரையறுத்துக் கூறமுடியாநிலை உலகெங்கும் நிலவும்போது இலக்கியக் கோணங்கள், நோக்குகள் பலவகையாய்க் கிளைத்து வளரும் நிலையில் 'முழு மெய்ம்மை' (Realism) உடையவை தாம் இலக்கியமென்றோ பேச்சுவழக்கு அப்படியே பின்பற்றப்படுவது தான் சிறந்த இலக்கியமென்றோ கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்பதைப் பற்றியும், ஆசிரியரின் திறமைதான் மெய்ம்மைக் கொள்கைக்கு அடிப்படை; திறமைக்கேற்ப மாறக்கூடியது மெய்ம்மை. ஆசிரியனின் உள்ளந்தான் இலக்கியத்தைப் பெற்றெடுக் கின்றது. இதுதான் மெய்ம்மை நிலை என்று ஆசிரியனின் உள்ளத்தினின்று நம்மால் பொதுப்படப் பிரித்துக்காட்ட இயலாது என்பதைப் பற்றியும் பேசினேன். நடைமுறையில் உண்மை வாழ்வில் இல்லாதவர்களைக் கதையில் இருக்கமுடியாதவர்களை மணிவண்ணன் மு.வ. முதலியோர் காட்டுகின்றனர் என்றார். யான், குறிஞ்சி மலரைப் படித்த 9ஆம் வகுப்புப் பெண்

பூரணிபோல் வாழ்வேன்' என்று எனக்கு எழுதியதைக் குறிப்பிட்டு 9ஆம் வகுப்புப் ·படிக்கும் பெண்ணே பூரணிபோல் வாழமுடியும் என்ற நம்பிக்கையும், வாழவேண்டும் என்ற வேட்கையும் கொள்ளக் காரணமாக அமைந்துள்ள பூரணிப்படைப்பை உலகில் இல்லாத, இருக்கமுடியாத ஒன்றாக ஏன் கருதுகின்றீர்கள் என்று கேட்டேன். மு.வ.வின் சில பாத்திரங்களும் மணிவண்ணனின் சில பாத்திரங்களும் இப்படி எத்தனை உள்ளங்களில் கிளர்ச்சி ஏற்படுத்திச் செம்மை நெறியில் நடையிடச் செய்துள்ளன என்பதை இத்தகையோர் அறியார். 'முழுதும் குறையே இல்லா மாந்தர்கள் உலகில் உளரா? அப்படிப்பட்ட பாத்திரங்களைப் படைக்கலாமா?' என்றார். நம் நாட்டு மக்கள் பல சிறந்த பண்புகள் கொண்டுள்ள ஒருவர் ஒரு சிறு தவறு எப்போதோ எங்கோ செய்திருப்பினும் பண்புகட்காகப் பாராட்டாது சிறுகுறையையே பெரிதுபடுத்திப் பேசித் திரியும் போக்கு உடையவர்கள். ஆதலால் மக்கட்காக இலக்கியம் படைக்கும் எழுத்தாளன் அவர்களின் மனநிலையை நெஞ்சிறுத்தி, தான் படைக்கும் குறிக்கோள் பாத்திரத்தை உருவாக்கும்போது சில களைகளை வளர்த்தால் பயிரின் விளைச்சல் பாழ்படுமோ என்றெண்ணிக் களைகளைக் களைந் தெறிகிறான். பயிரின் விளைச்சலும் செழுமையாக உள்ளது' என்றேன். 'வாய்ப்பு நேருங்கால் வாருங்கள்' என்றார். பிரிந்தோம்.

## தென்மொழிக்கு மடல்

இதழ்கள் கேட்டு தென்மொழிக்கு உருபா 5 காலையில் அறம் வழிவிடுத்தேன். மாலையில் படைவேண்டும் என்ற 30.8இல் எழுதிய பாடலை ஒரு மடலோடிணைத்து ஆசிரியர்க்கு விடுத்தேன். அழகின் சிரிப்புக் 'காப்பியர்கள்' ஐயம் கேட்டுள்ளேன்.

(7.9.66)

◆

## முடி நரைத்தல்

முகமழிப்பு - இந்த மீசையைத்தான் எப்படி எப்படிப் பார்த்து வைக்க வேண்டி இருக்கிறது! இந்த இளமை எழுப்புகின்ற நினைவுகள் என்ன என்ன செய்ய வைக்கின்றன! எவளோ ஓர் உளங்கவர் கன்னி அருகமர்ந்து மீசையின் ஒவ்வொரு முடியையும் உற்றுப்பார்ப்பது போல் ஓர் நெஞ்சக்கசிவு! உடை அணிவதில், முடி வாருவதில், முகத்தில் பூசுவதில் எல்லாம் ஊடுருவி நிற்கும் எண்ணந்தான் என்ன? எவளோ ஒருத்தி பார்க்கவேண்டும் என்பதா? எவளாவது பார்த்தால்... என்பதா? காளை ஒருவனுக்கு எழும் இத்தகு நினைவுகளை மலர்ந்தாடும் கன்னி ஒருத்திக்கும்

எழத்தானே செய்யும்? இல்லாவிடின் ஏன் நாளுக்கொரு ஆடை அணிந்து நடம் பயில்வதுபோல் நடைபயில்கின்றாள்? தான் விரும் பும் நெஞ்சம் தன்னை விரும்பச் செய்வதற்கு இந்த இளமை வீசும் வலைகள்தாம் எத்தனை! வலைகளில் வீழ்வதில் தான் எத்துணை ஆர்வம், துடிப்பு, வேட்கை. உலகமே அவ்வலைகட் குள்ளே அடங்கிக் கிடப்பதைப்போல் நினைவு மயக்கம்! ஊராவது? உறவாவது? உலகாவது? எதுவுமே அவ்வேட்கைமுன் துரும்பு தானே! மீசையில் ஒரு முடி வெளுத்துள்ளது. வேலவன் தான் முன்பு முதலில் பார்த்துச் சொன்னார். இப்படியாய் விட்டதே என்ற ஓர் இரக்கம், முகத்து முடிகளிலும் நரை, மார்பிலும் உளது, தந்தை வழி யான்பெற்ற சொத்தாயிருக்குமோ? குருதியின் குறையோ என்னவோ? எப்படி இருந்தால் என்ன? நரைப்பது நரைக்கட்டும். இதற்காகவா கவலைப்படுவது? அதிகமாக நரைத்த மற்றவர்களைக் கண்டு ஆறுதல் கொள்ளவேண்டியது தான்...

## ஊசலாடும் என் நெஞ்சம்

பேதையே! மலர்ந்த வாயில் நகையரும்ப ஏன்தான் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாயோ? ஊசலாடும் நின் நெஞ்சை அறிந்ததால் என் நெஞ்சும் ஊசலாடுகின்றது. சோர்ந்து தளர்கின்றது. உனக்கோ ஒருவகை அச்சம். புள்ளிமான் குட்டியாய்த் துள்ளித்திரியும் கிளர்நெஞ்சுடைய நின் அன்பு அவ்வச்சத்தின் முன் அடிமையாகி விடுகின்றதோ? ஒருசொல் பேசுமளவிற்காவது உனக்குத் துணிவிருக்கிறதா? என்று பேசுவாய் என்றெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்...

## தாமரை இதழுக்கு மடல்

'தாமரை' மடலில் ஒரே தமிழ்க்கொலை. தபால், பிரதி, துகை, வாபஸ் போன்றவையன்றி யான் தமிழில் எழுதிய முகவரியையும் தமிழில் எழுதாது தவறாக ஆங்கிலத்தில் எழுதியிருந்தனர். உலகிற்காக அவர்கள் நடிக்கின்றார்கள் போலும்! என்னே அவர்தம் மொழிப்பற்று இருந்தவாறு! என்மடல் அவர்கட்குக் கிடைத்ததில் ஓர் மகிழ்ச்சி. யான் 'பிராட்வே' என்றெழுதாது 'பெருவழி' என்றே எழுதினேன். 'பெருவழி' என்றெழுதினால் போதும் என்ற நிலை உருவாகியுள்ளதை அவர்கள் உணர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு! அவர்கள் உணரா விட்டாலும் நம் கொள்கை வலிவைக் காட்ட ஒரு சான்று. வாளா இராது மடல் எழுதினார்களே என்றெண்ணி மகிழத்தான் வேண்டும். விரைவில் பணம் விடுத்துப் பழைய தாமரை இதழ்களைப் பெறவேண்டும்.

*(8.9.66)*

◆

## இனிமையான தமிழில் அப்படிப் பேசலாமா?

இகோவொடு துறைமுன் உள்ள புல்தரையில் ஏறத்தாழ இரண்டுமணிநேரம் பேசிக் கொண்டிருந்தேன். உள்ள நெகிழ்ச்சியைக் குறிப்பின் உணர்த்தினேன். முழுமையாக உணர்த்தும் காலம் வருமல்லவா? பேரா தொலைபேசியைத் தூய்மை செய்யும் பொருட்டுத் தொலைபேசியகத்துள்ள ஒரு நண்பரைத் தொலைபேசியில் அழைத்து 'அடா' என்று மதிப்பின்றிப் பேசியதாகவும் அந்நண்பர் 'தமிழ் இனிமையான மொழியாயிற்றே அதை இப்படிப் பேசலாமா?' என்று கேட்டதாக வும் அந்நண்பரே இகோவிடம் சொன்னதாக இகோ சொன்னார். அந்நண்பரைப் பார்க்கவேண்டும். இன்றுதான் முதன்முறையாகப் பப்பாளிப் பழம் தின்றேன். உடற்கு உரமூட்டக் கூடியது என்றார் வீ. ஓரளவு சுவையாயிருந்தது. அதன் மணம் நன்றாக இல்லை.

*(9.9.66)*

◆

## மோகமுள்

ச.வே.சு. புளியமரத்தின் கதையில் சில பக்கங்களைப் படித்துள்ளதாகவும் அம்மணமாயிருப்பதைப் பற்றியே இரண்டு மூன்றுமுறை அதற்குள் வந்துள்ளதாகவும் கல்லூரி மாணவரின் மனத்தைக் கெடுக்க வழிவகுக்கலாம் இப்புதினம் என்றும் சொன்னார். மோகமுள்ளில் மாடிதாண்டி வலியவந்து மற்றவன் மனைவி கதைத்தலைவனைப் புணர்வது பற்றி வருவதை யான் குறிப்பிட்டேன். இளங்கலைக்குப் புளியமரத்தின் கதையையும் முதுகலைக்கு மோகமுள்ளையும் பாடமாக வைத்தமை சேதாவின் முயற்சி. உள்ளதை அப்படியே காட்டுவனவாய்க் கருதப்படும் இப்புதினங்களால் மெலிந்த மாணவ உள்ளங்கள் நலிந்து போகலாம். குறிஞ்சிமலரைப் பாடமாக வைக்கலாம் என ச.வே.சு. வழிசென்ற என் கருத்துப் பயனற்றுப் போனது. பல்கலைக் கழகங்களில் பாடப்புத்தகம் வைப்பதில் எத்துணைப் பரிந்துரை! தகுதியைப் பாராது வேண்டியவர்களின் நூல்களை வைக்க ஒவ்வொருவரிடை எழுகின்ற போட்டி, பொறாமை! கல்வித் தரத்தைக் கருதாது காசைக் கருதுவதால் ஏற்படும் மாசு! அங்காடி யில் மளிகைக்கடை நடத்தி ஊதிய இழப்புக்கணக்குப் பார்க்க வேண்டியவனெல்லாம் ஆசிரியத் தொழிலில்! தொழிலைப் பற்றிய கீழெண்ணத்தோடு தூய உள்ளமின்றிப் பணியாற்றும் இந்த ஆசிரியர்கள் உருவாக்கும் மாணவர்கள் எப்படி இருப்பார்கள்? மன்பதையின் ஆணிவேராக அமைந்துள்ள உழவு, ஆசிரியத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களிடைத் தம் தொழிலைப் பற்றிய

தன் மதிப்புணர்வே இல்லை. தரங்குறைந்ததென்ற நினைப்பு வேறு. எங்கே நாடு உருப்படப் போகிறது?...

## நீண்ட பயணம்

இலங்கை கணேசலிங்கத்தின் முதற்புதினமாய 'நீண்ட பயணத்தை'ப் படித்து முடித்தேன். மிகவும் பிடித்திருந்தது. தங்குதடையின்றி எளிய இனிய முறையில் கதை நடக்கின்றது. வழக்குத்தமிழ் சில இடங்களில் தடையாய் நிற்பதுபோல் தோன்றினும் நற்றமிழ் நடை மெருகூட்டுகின்றது. செல்லத்துரையன் கண்முன்னே நடமாடிக் கொண்டிருக்கிறான். மாதவன் படைப்பும் நன்று. சரசுவதி, வள்ளி, கற்பகம் முதலிய பெண் பாத்திரங்கள் கதையில் சில இடங்களில் வந்தாலும் நம் நெஞ்சில் நிறைந்து விடுகிறார்கள். நடையழகும் பாத்திரப்படைப்புச் சிறப்பும், தமிழர் களிடையுள்ள சாதிப் போராட்டத்தை மையமாய்க் கொண்ட கதைக்கருவும் செயற்கைத் தன்மையின்றி இயற்கையாக நம்கண் முன்னே கதையை நடத்திக்காட்டுகின்ற இயல்புப்போக்கும் புதினத்தின் தரத்தை உயர்த்துகின்றன. மாதவன் மேலதிகாரிகள் மூலம் எடுக்கும் நடவடிக்கைகளை இறுதிவரை ஊரார் புரிந்து கொள்ளாதது போலக் காட்டுவது அவ்வளவுப் பொருத்த மாகப் படவில்லை. இலங்கைத்தமிழ் வழக்கும் சில இடங்களில் சுவைப் பைக் குறைக்கின்றது. மொத்தத்தில் முழு நிறைவு கிடைக்கின்றது.

(10.9.66)

◆

## காற்றில் ஓர் இயக்கம்

காற்றில் ஓர் இயக்கம் மிடைந்து கிடப்பதைப் போல் நெஞ்சில் எப்போதும் இனியமணமாக அவள் நினைவு. பெருங்குளத்தில் விழுந்த ஒரு சில்கல் எழுப்பும் அலை நிறைகுளம் முழுவதும் பரவி அசைப்பதைப் போல் அந்த ஒரு நினைவே, சிறுநினைவே எண்ணங்கள் அனைத்திலும் ஊடுருவிப் பளிச்சிடுகின்றது. சில நாட்களாக உள்ள இந்நெகிழ்ச்சித் தவிப்பின் முடிவு தான் யாது?

(11.9.66)

◆

## பாரதி மலராக வந்த தாமரை இதழ்

சென்னையிலிருந்து சுற்றுலா வந்த நண்பர் இருவர் அறத்தைத் தேடி அறை வந்தனர். கழக நிலை பற்றிப் பேசினோம்.

தென்மொழியில் அண்ணாவைக் குறித்து வெளியான ஆசிரிய உரையை வன்மையாகக் கண்டித்து 'சண்பகம்' இதழில் அறிவுடைநம்பி எழுதியிருந்ததாக ஒருவர் சொன்னார். அதைப்பார்க்க வேண்டும். குலோத்துங்கன் பதிப்பக உரிமையாள ராய இன்னொருவர் தான் வெளியிட்ட கதைப்பாடல்களாய கருணானந்தத்தின் பூக்காடு எனும் பாத்தொகுப்பொன்றை அன்பளிப்பாகத் தந்தார். அதில் அண்ணா, கலைஞர் அணிந்துரை இடம்பெற்றிருந்தது. நூலுள் புகுந்து நடுநிலையில் திறன் தேர்வதாக அண்ணாவின் அணிந்துரை அமையவில்லை. நூலின் வெளி அமைப்பு நன்றாக இருந்தது. உள்ளீட்டில் கருத்துவளம் உள்ள அளவிற்குப் பாவளம் இல்லை. புகைவண்டி நிலையம் சென்றேன். தாமரையைக் கடையன்பர்தந்தார். கையில் காசில்லை. பின்னர் தர ஒப்புக்கொண்டார். பாரதிமலராக வந்துள்ள இவ்விதழ் கருத்துச் சோலையாயுள்ளது. இரகுநாதன், பேரா.இராமநாதன் முதலியோர் கட்டுரைகள் தரமுயர்ந்து நிற்கின்றன. பிறவும் தாழ்வில்லை. முயற்சியைப் பாராட்டி மடல்விடவேண்டும். ஏழறை மணிக்குச் சங்கச் செயற்குழு கூடியது. இகோ வரவில்லை. எங்கள் முன்னிலையில் பதவி விலகலைப் பற்றிப் பேசத் தெம்பில்லை போலும்! வாக்கினிலே ஒளியுண்டாக உள்ளத்தில் உண்மையொளி இருக்கவேண்டுமே! உறுப்பினர் சேர்க்கை பற்றிப் பிறர் அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. முதலில் உறுப்பினர் சேர்த்தலை ஒழுங்காக முடிக்க வேண்டும் எனக் கண்டிப்பாக எல்லோரிடமும் சொன்னேன். எண்ணுவதை எடுத்துச் சொல் வதற்குக் கூட இந்த மாந்தனுக்குத் துணிவில்லாமல் போய் விட்டதே! அழகிரிசாமியின் 'தேவஜனனம்' மாந்தன் விலங்கினும் கீழாக அஞ்சி வாழும் இத்தகு போக்கினை அருமையாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. செயற்குழுவிற்குத் திவேதி வரவில்லை. வந்திருந்தால் ஒரு போடு போட்டிருப்பேன்.

*(12.9.66)*

◆

## கூட்டிக் கழித்தால் எஞ்சுவது குறையே

சுந்தரராமசாமியின் 'புளியமரத்தின் கதை'யை முடித்தேன். புளியமரத்தின் சுற்றுச்சூழலையும் பிறபகுதிகளையும் அருமையாகச் சில இடங்களில் படம்பிடித்துள்ள ஆசிரியன் சில இடங்களில் மிகையாக வண்ணிப்பதின் மூலம் நினைவில் அச்சூழலைப் பதிக்க முடியாக்குறைக்கு ஆளாகிறான். கதையமைப்பில் ஒரு ஒருமைப்பாடு, களம் இல்லை. முற்பகுதியும் பிற்பகுதியும் ஓரளவு தாழ்வில்லை. நெஞ்சில்நிலைக்கும் வகையில் எப்பாத்திரப்

படைப்பும் அமையவில்லை. தாமோதர ஆசான் ஓரளவு நிமிர்ந்து நிற்கிறார். நல்ல உவமைகள் சில விழுந்துள்ளன. கூட்டிக் கழித்துப் பார்த்தால் எஞ்சுவது குறைவே.

## கல்கியின் பரிசுபெற்ற கதைகள்

கல்கியின் பரிசுபெற்ற 'சவிதா', 'பிரமை', 'புதுவெய்யில்', 'பயணம் முடிவதில்லை', 'மனச்சந்நிதி', 'கனவு' முதலிய கதைகளைப் படித்தேன். சவிதாவை இலட்சிய நோக்கில் உளவியல் அடிப்படையில் கண்டால் பொருள் நன்கு புலப்படும் போலும்! பிரமை மிகவும் பிடித்தது. பார்த்தசாரதி நடையைப் பல இடங்கள் நினைவூட்டுகின்றன. குருமூர்த்தியின் நெஞ்ச அலைகள் என் நினைவலைகளாக ஒலிக்கின்றன சில இடங்களில். அருமையான முடிவு. மருட்சியைத் (பிரமையைத்) தருவதாக உள்ளது. 'பதில் இல்லை' என்பதை மட்டும் இறுதியில் கூறும் ஆசிரியன் குருமூர்த்தி யின் மறைவைச் சொல்லாமல் சொல்லுகிறான். புதுவெய்யில் நல்லகதை. கதைக்கரு புதுமையும் புரட்சியுமுடையது. மலையாளச் சாயல் படிந்த கதை. நடையும் நன்று. கதைத்தலைவி இரண்டு மாதமாக முழுகவில்லை என்ற முத்தாய்ப்போடு கதை முடிகிறது. பயணம் முடிவதில்லையின் நடை நன்று. மனச்சந்நிதியில் கோயில் படைப்போரும் பிறரும் பேசும் உரையாடல்கள் நன்று.

*(13.9.66)*

◆

## சொல்லிற்கு அகப்படா ஓர் எழில்

உள்ளத்தில் புகுந்துகொண்ட கள்ளவுணர்வு எப்படி எப்படி வெளிப்படுகின்றது! விழியசைவில் ஓர் தனிவீச்சு. இதழ்க்கடையில் அவிழ்ந்தும் அவிழா இளநகை. நெஞ்சக்குழைவும் நினைவுக்கனிவும் எழுதிய புதிய கவர்ச்சி மெய்ப்பாடுகள் கவிந்த முகம். நடையில் புகுந்துகொண்ட நாணக்கோணல்! விடைத் தாளைக் கொடுக்கும் போது வளைந்து நெளிந்த ஒயில். திருடிக் கொண்டிருப்பதும் திருடப்பட்டுக் கொண்டிருப்பதும் தெளிவாகப் புரிகிறது. வரவு செலவின் முடிவு யாதோ? எத்தனை கலகங்கள் எதிர்நோக்கி யிருக்கின்றனவோ கண்ணீர்தான் எஞ்சுமோ? காலந்தரும் பரிசை எப்படி அறிவது? குழந்தைமை குடிகொண்ட பெண்ணே! உழுதபுலமாக நின் நெஞ்சம் மலர்ந்து கிடப்பதை என்னில் அறிய முடிகிறது. அந்நெஞ்சத்தில் விளைகின்ற நினைவுப் பயிர்களில் உயிர்ப்பசுமையாய்க் குடிகொண்டிருப்பவன் யானே என்பதை நின் சிறுசெயல்கள் உணர்த்தும்போது என்னையறியா இன்பக் கிளர்ச்சியும் பெருமித உணர்வும் பீறிடுகின்றன. புலர்ந்தும் புலராத

காலைப் பொழுதைப் போல் நின்னைப் பற்றிய என் நினைவில் சொல்லிற்ககப்படா ஓர் எழில் துயின்று கிடக்கின்றது. மாலையும் இரவும் எதிர்ப்படுங்கால் ஏற்படும் மயக்கத்தைப் போல் நம் நெஞ்சங்களும் மயங்கிக் கிடக்கின்றன. இன்று அரும்பிய இம்மயக்கம் பூத்துக் காய்த்துக் கனியுமா? அன்றிக் கருகிப் போகுமா? தொடக்கத்திலேயே கருகிப்போனால் அதிகத் துன்பமிராது. கனிந்து அழுகிப்போனால் ஏற்படும் பேரவலத்தை ஏற்றுக்கொள்ள நெஞ்சத்திண்மை வேண்டுமே! உனக்குந்தான்! நீயும் என்னைப்போல்தான் இருப்பாய் என எதையெதையோ எண்ணியான் கட்டும் எண்ணக்கோட்டையின் அடிப்படையே தகர்ந்திருந்தால்... நெஞ்சக்கிழியில் வேறு எவரையும் ஓவியமாய் நீ வரைந்திருந்தால்... ஏதோ பார்க்கிறோம் அவ்வளவே என்று நீ எண்ணியிருந்தால்... உன் உள்ளத்தின் ஒவ்வொரு அசைவையும் என்னால் உணர்ந்துகொள்ளவா முடிகிறது? இன்றைய நிலைத்த பெருநினைவாய் நீயிருந்தாலும் சின்னேரச் சலனங்களில் மின்னுகின்ற நினைவுகளில் வேறு சிலரும் என்னிடம் குடிபுகப் பார்ப்பதைப் போல்நின்மாட்டும் அமைந்திருக்கலாமன்றே; அணையுடைத்துப் பல்கிப் பரவும் நீரைத்தடுத்து நிறுத்திக் கால்வாய்களில் பாய்ச்சினாலன்றோ பயன் விளையும்? மணல்வீடு கட்டிக்கொண்டிருக்கும் சிறு பிள்ளைகள் தாமா நாம்?

*(14.9.66)*

◆

## செந்நாக் கதிரவன்

விவேகானந்தரின் கருத்துக்களடங்கிய சிறுநூலை மேற் பார்வையினிடை படித்தேன். மலைபோல் துயரம் எதிர்ப்படினும் மலைக்கா நெஞ்சம் வேண்டுமென்றும் மாதர்தமை அடிமை செய்யும் மடைமையொழித்து முதன்மை கொடுத்துப் போற்றல் வேண்டுமென்றும் இளமையில் தவழ்ந்த தொட்டிலாக, காளைப் பருவத்தில் களித்து மகிழ்ந்த பூஞ்சோலையாக, முதுமை யில் ஈடு எடுப்பற்ற துறக்கவுலகாக ஒவ்வொருவனுக்கும்அவன் தாயகம் அமைகிறதென்றும் பலபடப் பேசுகிறார். அறியாமையை வேட்டையாடும், அறிவுக் கனற்பொறி தெறிக்கின்ற சுடர்விழிகளில் தான் எத்துணைப் பெருமிதம்! எதிர்ப்படுவோரை ஏவற்படுத்தும் அந்த இருவிழிகள் காண விழைந்த உலகம், அவ்வுலகத்தின் வீறார்ந்த இளமைப்படை, அறிவார்ந்த பெண்மைப்பொலிவு, என்றும் நிமிர்ந்து நிற்கும் பண்பார்ந்த செயற்பாடுகள்தாம் என்னே! மேலை உலகம் மிகமிக வியக்கக் கீழை உலகின் அறிவுக்கதிர்களைப் பரப்பிக் காட்டிய அச்செந்நாக்கதிரவனின் வாழ்க்கை வரலாற்றை

முழுமையாக அறியவேண்டும். சாம்பிப்போயிருக்கும் இன்றைய இளமைக்கு அவன் ஓர் எழுச்சிமுரசு; தளர்ந்து போய்க் கிடக்கும் பெண்மைக்கு அவன் ஓர் ஊன்றுகோல்; பண்பைக் கரைத்துவரும் இன்றைய மன்பதைக்கு அவன் ஓர் கலங்கரை விளக்கு, அவன் காட்டும் திசையில் நாடு நடைபோடத் தொடங்கிவிட்டால் எல்லாம் வாய்க்கும். செழித்த அறிவாற்றலும் பழுத்த பொதுப்பணி விழைவுமுடையவர்கள் இளமையிலேயே இறந்துவிடுவதால் இவ்வுலகம் எவ்வளவு வறிதாகிவிடுகிறது.

*(15.9.66)*

◆

## அம்மா படைத்த நண்டுக்கறி

திட்டமிட்டபடி 8.15 உந்தில் கோவளம் செல்ல தமவே, சுயா, வவே பயணமானோம். அவர்கள் விடுதியிலுள்ள ஒரு கிறித்துவ நண்பரும் எதிர்பாரா நிலையில் நிலையத்திற்கு வந்தார். சமயத்தொடர்பான பேச்சு எழுந்தது. தமிழ், மலையாள ஆங்கிலத்தில் மூன்று தொழுகைகள் கோயிலில் உண்டென்றும் எதற்காவது ஒன்றிற்குப் பிற்பகலில் போக வேண்டுமென்றும் சொன்னார். தமிழர்கள் தமிழ்த் தொழுகைக்குத்தான் செல்வர் என யான் கருதியமையைச் சொன்னேன். 'எந்த மொழியில் வழிபாடு இருந்தாலும் என்ன' என்றார். தாய்மொழி வழி வழிபாடு நம் உணர்வைப் பிணைப்பதைப் போல் பிற பிணைக்கா. வழிபாடு, உள்ளநெகிழ்வு, ஒருமைப்பாடு என்றும் 'வழிபடுவதற்குக் கோயிலுக்குச் செல்பவர்கள் தான் மொழியைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்' என்றும் கிண்டலாகச் சொன்னேன். தால்சுதாய் 'தங்கச்சிலுவை, மரஉள்ளம் பற்றிக் கூறியதை யான் சுட்டினேன்' தமவே 'உலகில் ஒரே ஒரு கிறித்துவர் இருந்தார். அவர்தான் இயேசு. அவரும் இறந்துவிட்டார்' என்ற பெர்னாட்சாவின் கருத்தைச் சொன்னார். எட்டேகாலிற்கு உந்து வந்தது. ஒன்பதிற்குள் கோவளம் சென்றோம். பாவேந்தரின் 'கடல்' பாடல் நினைவில் பட்டது. யான் முன்பு சென்ற போதிருந்ததை விடக் கடல் கவினொடு காட்சியளித்தது. முன்பு பார்க்காத அழகிய பகுதிகளையும் இம்முறை பார்த்தேன். இந்த அமைதி யில்லாக் கடலை நாடித்தானே நாம் அமைதிபெற வருகிறோம் என்றேன். தமவே 'ஓரளவு ஏழையாயுள்ளவன் மிகவும் வறியவனைப் பார்த்து ஆறுதலையடைவது போல, ஓயாது புலம்பிக் கொண்டிருக்கும் கடலைப் பார்த்து மாந்தன் ஆறுதல் பெறுகிறான் எனலாமா?' என்றோர் இனிய கருத்தை வெளியிட்டார். உணர்வொத்த நண்பரவர். குறிப்பறியும் ஆற்றலும் நன்குளது. கிறித்துவம் (திமிர்)

என்ற சொல்லிற்கும் கிறித்துவ சமயத்திற்கும் ஏதேனும் தொடர் பிருக்குமோ என நினைத்தேன்.

'ஆக்க இலக்கியத்தில் போக்கைத் திருப்பி - அவள்
ஆசையை நீக்க வேண்டும்'

'சின்னமணிவிழிப் பெண்மயிலே - என்
சிந்தை கவருஞ்செல் சொல்லழகீ!'

முதலிய சில வரிகள் மின்னலாய்த் தோன்றின. நண்டுக்கறியைப் பற்றிய பேச்சு நண்பர்களிடை எழுந்தது. முதல்சேரியில் சிவத்தின் வீட்டில் அகங்கனிந்து அம்மா படைத்த நண்டுக்கறி அடிசில் நெஞ்சில் இனித்தது. எண்ண எண்ண இனிக்கும் பண்பூற்றல்லவா அந்த அன்புத்தாய். அமைதியான தந்தை! இனிய குடும்பம், நெஞ்சுள் புகுந்து விளையாடிய சிவம் மணத்தின் பின் எப்படித் தான் மறந்து இப்படி மடல் எழுதாதிருக்கின்றாரோ? இவர்களை யெல்லாம் என்னென்பது?...

## மண்தானே மாணிக்கம்

கத்தும் கடலில் மரக்கலங்களில் கவலையின்றித் தொழில் நடத்தும் மீனவர்களைப் பற்றிய பேச்சு எழுந்தது. 'தாமரைக் குமரியில் கடலைப்பற்றி அண்ணாமலை பாடும்போது ஒரு மீனவன் கடல் தன் தாய்மடி என்றும், ஏறிச் செல்லும் குதிரை என்றும் சொல்வதாக வரும் பகுதி நினைவில் பட்டது. தகழி, செம்மீனில் பழனியைக் கடல்தாயின் புதல்வனாகக் காட்டும் பகுதியும் நெஞ்சில் விழுந்தது. திரைப்படத்திலும் அவனைக் கடல்தாயின் குழந்தையாக நன்முறையில் காட்டியுள்ளதாக நண்பர்கள் சொன்னார்கள். முன்சென்ற பொழுதெல்லாம் பாரா ஓர் இடத்தை இம்முறை பார்த்தேன். எழில் கொஞ்சும் இடமது. இளைஞர்கள் பாறையிற்படியும் நத்தைகளைச் சுரண்டிக் கொண்டிருந்தனர். நாறும் நத்தையில் என்ன சுவை பொதிந் துள்ளதோ? வாழும் சூழற்கேற்ப மாந்தனின் அறிவு, உணவு, உடை மாறுகின்றதல்லவா? எல்லா உயிர்களையும் உணவுப் பொருள் களாக்கிக் கொள்வதில்தான் இந்த மாந்தர்க்கு எத்துணை ஆவல்!

புதுப்பகுதியில் கவினொழுகப் படிந்துகிடந்த பொடிமணல் கண்சிமிட்டிக் கண்சிமிட்டிக் கருத்தைக் கவர்ந்தது. மண்ணில்தான் எத்தனை வகை இந்த மனிதர்களைப் போல! மண் தானே மாணிக்கம்! தாய் மண்ணைக் காப்பதற்காக, நீண்ட வரலாற்றுக் காப்பியத்தில் வரையப்பட்டுள்ள குருதிப் படலங்கள்தாம் எத்தனை! ஏ! என் முந்தையர் கூடிமகிழ்ந்து ஆடிப்பாடி கொஞ்சு தமிழ்ப்பேசி உலகிற்கொளியூட்டிய தாய்மண்ணே! புலன் உழுதுண்ணும் புலவர்களின் கால்சுவடு பட்ட பெருமையுடைய

நின்னோடு புரண்டு மகிழ்வதில் அல்லவா இன்ப ஊற்று இருக்கின்றது! என்னை உலகிற்குத்தந்த தாய் தந்தையர் நின்மீதல்லவா கொஞ்சி மகிழ்ந்தனர். தத்தித் தளர்ந்து தடுக்கி வீழ்ந்து இளமைப்போதில் உன்னோடு ஆடி மகிழ்ந்த விளையாட்டுத் தோழனல்லவா யான்? தாய் அடிக்க, கண்டவர் கடிய உன்னை வாரிப்புசித்து யான் சுவைத்து மகிழ்ந்ததை மறக்கவா முடியும்? உனக்காகக் குருதியைச் சிந்தும்போது எனக்கெழும் பெருமித மகிழ்வை, பூரிப்பை என்னென்பது! இஃது உயிர்போன உடலாயிற்றே. வெறும் பிணம்தானே என எண்ணாது என்னுடலைச் சேமச் செப்பாக வைத்துக் காக்கும் தாயல்லவா நீ! எதிர்காலத்தில் வர இருக்கும் இன்னொருத்தியோடு யான் ஆடிப்பாடி அகங்களித்துக் கிடப்பதைக் கண்டு நீ சிரிப்பாய். நின் சிரிப்பே மலர்கள் என்பது எனக்குத் தெரியாதா?

ஏழைகள் தங்கி இளைப்பாறி வாழ்வதற்காக எத்தனை வீடுகளை நீ எழுப்பியிருக்கிறாய்! அறியாத இவ்வுலகோர் அவ்வீடுகளை மரங்கள் என்கின்றனர். என்னே பேதைமை! கடலில் பல வண்ணங்கள்! எந்த ஓவியன் வண்ணக்கலவையை இப்படி இறைத்தானோ? சூல்கொண்ட பெண்ணின் தளர் நடையைப் போல் கடலின் தொலைப்பகுதியில் அலையும் அலைகள்; துள்ளிக் குதித்து ஓடிப்பொருது மகிழ்ந்தாடும் இளஞ்சிறார்கள்போல் சில சிற்றலைகள் கரையை மோதி நுரைச்சிரிப்பை உதிர்க்கின்றன. கரையோடு பொருதி முழங்குவதில் இந்த அலைகளுக்கு என்ன இன்பமோ? நிலைகுலையாத இந்தக்கரை எவ்வளவு அமைதியாய்க் கிடக்கிறது. ஆர்ப்பரிப்புக்கும் அமைதிக்கும் நடக்கின்ற போர், ஏதோ சிலவேலைகளில் ஆர்ப்பரிப்பு வென்றாலும் அமைதியின் வலிமை புலப்படத்தான் செய்கிறது! நீலத்திரைக் கடலில் கரும்புள்ளிகளாகப் பாய்விரித்தும் விரிக்காமலும் பல கட்டுமரங்கள் கரையை நோக்கி அசைகின்றன. அசையும் கட்டுமரத்தில் தன் அன்றைய பிழைப்பை நிலைநிறுத்திக் கரையில் எத்தனை உள்ளங்கள் அசைந்து கொண்டிருக்குமோ? இதுதானா வாழ்க்கை?

கடல் எழுப்பும் இனிய பண்ணைச் சுமந்த மென்காற்று மேனியைத் தழுவிக் கொண்டிருந்தது. புதிய பகுதியைப் பார்த்து மீளும்போது வழியில் கட்டப்பட்டு மேய்ந்து கொண்டிருந்த ஓர் எருமை, நண்பர்கள் அணிந்திருந்த குழாயைக் கண்டு மிரண்டது. அதையும் எத்தனையோ உந்துகள் சென்றாலும் எதற்கும் அஞ்சாது சாலையில் ஓரங்களில் நகரங்களில் செல்லும் மாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். ஒப்புமையில் என்முன்னே நாட்டுப்புற மானஉணர்வு மாந்தர்களும் மழுங்கிய நகர்ப்புற மாந்தர்களும் நின்றனர். வழியில் வேறொரு இளம்பெண் வந்தாள். அகவை

பதினைந்திருக்கும். பருவத்திற்கேற்ற பொலிவு எங்கோ பறந்து போய்விட்டது. வாழ்க்கைச்சுமை அவளை அழுத்திவிட்டதா அன்றி வறுமைஅட்டை எழிலை உறிஞ்சிவிட்டதா என்பது தெரியவில்லை. வளர்ந்து நிமிர்ந்த தென்னை, படர்ந்து விரிந்த பலா முதலிய இயற்கை மரங்கள் நிறைந்த சூழலில் சிறுகுடில்களில் முடங்கிக்கிடக்கும் ஏழைகளின் எழில் எங்கோ போய்விடுகின்றது. ஆடவரினும் மகளிரையே, அகவையாகியும் மணமாகாநிலை தாக்கிப் பொலிவைக் குறைக்கின்றது.

மீண்டும் குளிக்கும் இடத்தருகே வந்து அமர்ந்தோம். சளி காரணமாக யான் குளிக்கவில்லை. நண்பர்கள் குளித்தனர். கரையில் நடக்கும் காட்சிகளைக் கண்டு கொண்டிருந்தேன். வெள்ளையர்கள் குடும்பத்தோடு நீராடவந்தனர். நல்ல வெயிலைத் தேன்நிலவாய் எண்ணி மணலில் அமர்ந்து இரு ஆடவரும் இரு மகளிரும் புகைபிடித்தவாறே சீட்டாடிக் கொண்டிருந்தனர். இன்றைக்கொரு நாளாவது இப்படிக் கழிக்கலாம் என்ற விருப்பம். எந்த நாட்டிலிருந்து வந்தவரோ? இந்தக் கேரளக் கடற்கரையிலும் தங்கள் பழக்கவழக்கங்களைப் பதித்துக்கொண்டிருந்தனர். பெண்மையின் மென்மையொழிந்த பிற பண்புகளின் விளக்கமாக ஒருத்தி இருந்தாள். நிமிர்ந்த நடையும் பருத்த தொடையும் கைவீச்சும் ஆண்மைச் சாயலின் ஆட்சியைக் காட்டின. அவளின் குழந்தைகள் மணலைக்குவித்தும் கலைத்தும் ஆடிக்கொண்டிருந்தன. அவைகளோடு சிறிது உரையாடி மகிழ்ந்தேன். குறும்புக்காரச் சிறுமி ஒருத்தி, அமைதியும் அழகும் வாய்ந்த சிறுவன் ஒருவன் இருவரும் நெஞ்சைக் கவர்ந்தனர். இன்னொரு வெள்ளைக் குடும்பத்தோடு வந்த நான்கைந்து அகவையுடைய சிறுமி ஒருத்தி மார்பகத்திற்கணியும் உடையை (பிரேசியர்) அணிந்திருந்தமை எல்லோர்க்கும் நகை விளைத்தது. குழந்தைமையின் பேதைமையைக் காட்டும் பால்சாக்கின் கதை என் நினைவில்பட்டது.

தமவே ‘கன்னிகா’ தொகுதியில் இரகுநாதன், ஓர் குழந்தையின் பேதைமையை, வெளியார் வரும்போது முகத்தை மறைத்துக் கொள்ளும் பெரியவர்களைப் பார்த்து அது தானும் தன் மேலணி (கவுன்) யால் முகத்தை மூடிக் கொள்வதாகக் காட்டியுள்ளார் என்றார். கரையில் ஒரு சிறுதுண்டைக் கட்டிக்கொண்டு ஒரு வெள்ளைப் பையன் நின்றான். இந்தக் கரையைச் சேர்ந்த பெண்ணொருத்திக்கு வெள்ளையன் வழங்கிய கொடையின் பயனோ என்ற எண்ணம் எழுந்தது. ‘கதிர்’ இதழில் மொழி பெயர்க்கப்பட்டுவந்த பொற்றைக்காட்டின் காசுமீரச் சூழல் கதையொன்று பளிச்சிட்டது. வாழ்க்கையை நுணுகி நோக்கும் போது புலப்படும் பொருள்கள் தாம் எத்தனை! கண்முன்னே

விரிந்து கிடக்கும் வாழ்க்கைக் காப்பியத்தை வேட்கை தீரப்படித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

கரையில் ஓரிடத்தில் பருத்த முலைகளும் தழுத்த உடம்பு முடை ஒரு வெள்ளை மாது தினவேறிய பசுங்கிடேறியைப் போல் உடம்பை நீட்டி வளைத்துப் புரட்டி முறுக்கிக் கொண்டிருந்தாள். வேறோர் வெள்ளையன் வளைக்கப் பார்த்தான். அவளும் நீச்சலுடையில்தான் இருந்தாள். வெள்ளை மாதர்க ளெல்லாம் பன்னேரமும் குறையுடைகளில் காட்சி தருவதால், மறைக்கப் படாது உறுப்புக்கள் தெரிந்து கொண்டிருப்பதால் உறுப்பழகைப் பற்றி வெள்ளையர்கள் அதிகம் பொருட்படுத்த மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். உடல் முழுவதையும் ஆடையால் மறைத்துக் கொள்ளும் தமிழ் மாதர்களின் உறுப்பெழிலைப் பற்றித் தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளமை போன்று ஆங்கிலப்புலவர்கள் பாடியிருப்பார்களா என்பது ஐயமே, மறைப்பும் திறப்புமே இவ்வகை உணர்வுகட்குக் காரண மாயமையுமா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

பல்வண்ணங்களில் கண்சிமிட்டிய மணல் வைரங்களைப் பார்த்தபோது கண்ணதாசனின் 'மணல்கூட சில நாளில் பொன்னாகலாம்' என்ற தேன்பாடல் நினைவில் ஒலித்தது. 'ஒரு காலத் தமிழ்நாடு இதுதானடா - இதை உன்காலத் தமிழ்நாடு அறியாதடா' எனும் வரலாற்றுக் காப்பிய முடிவு வரிகளைப் பற்றியும் பேசினோம். ஒருகாலக் கண்ணதாசனின் நிமிர்ந்த நடையைக் காணமுடிந்தது. மாறுவதில் இந்த மாந்தனுக்குத்தான் என்ன வேட்கை! கரையில் அமர்ந்திருந்தபோது 'வெட்டுக்கிளி' என்ற செக்காவின் கதையின் முன்பகுதியைப் படித்தேன். ஒருத்தியின் எழிலைச் சொல்லும்போது 'வசந்த காலத்தில் பூத்துக் குலுங்கும் செர்ரி மரத்தைப் போன்றிருந்தாள் என்கிறான். எனக்கு உடனே திருவனந்தைத் தலைமைக் கணக்கர் அலுவலகத்தின் முன் நிற்கும் சரக்கொன்றை மரம்தான் தோன்றியது. மண்மீது செயற்கைப் பூச்சுகளோடு நடமாடுகின்ற இற்றைப் பெண்டிரைவிட இயற்கைத்தாய் ஈன்றெடுத்த அந்தச் சரக்கொன்றைமகள் தான் என்ன பொலிவு! நண்பகல் பன்னிரண்டரை உந்தில் அனந்தை திரும்பினோம்...

## ஊமை நெஞ்சிற்குள் ஓராயிரம் தடவைக்குமேல்...

இருதலைப் புள்ளின் ஒருயிராகும் நாட்டுப்புறக்காதல் இளஞ்சியத்தை முன்நிறுத்தியது. த.ம.வே.யிடம் சொன்னேன். நெஞ்சுக்குள்ளே தன் காதலனை, சிறகிற்குள் குஞ்சை அணைத்துக் காக்கும் பெடைக்கோழிபோல காப்பதில் தானே அவள்

இன்பமடைவாள்! கணவன் உண்ட பின்னரே தான் உண்ண வேண்டுமென்ற நினைவில் நள்ளிரவானாலும் காத்திருப்பவ ளல்லவா அந்த நங்கை! அப்படிக் காத்திருப்பது பேதமையோ? இல்லறத்திற்கு அடிப்படையான அன்பின் ஊற்றே அந்தக் காத்திருப்பிலிருந்தல்லவா கசிகிறது! ஒருவன் தன்னைப் பற்றித் தான் அறிந்ததைவிட அவனை விரும்பும் ஒருத்தி அவனை அறிந்துகொள்வதே மிகுதி. நெஞ்சில் குடியிருப்பானின் நடையில், உடையில், கைவீச்சில், கண்ணசைவில் எல்லாம் தன் கண்ணையும் கருத்தையும் பதித்திருப்பவளல்லவா அவள்? எப்படி எப்படி அவனோடு பேசுவது? என்ன என்ன மாற்றத்தை அவனிடம் காணவேண்டும்? அவனுள்ளம் விரும்பும் என்னவென்ன மாற்றத்தைத் தான் செய்துகொள்ள வேண்டும்' என்றெல்லாம் ஊமை நெஞ்சிற்குள்ளே ஒரு தடவைக்கு இரு தடவையாக என்ன? ஓராயிரம் தடவைக்கு மேல் எண்ணி கற்பனைக் கோட்டைக்ளைக் கட்டி மகிழ்பவளல்லவா அவள்!

*(18.9.66)*

◆

## விலங்குகளினின்று வேறுபட்டவர்கள் நாம்

இரண்டாம் மணி வகுப்பு. வகுப்பு முழுவதும் தேர்வில் மாணவர்கள் எழுதியிருந்த முறையைத் திறனாய்ந்து சொல்வதில் கழிந்தது. 'தமிழ் படிக்கும் தமிழ்மாணவர்களாகிய நீங்களே தமிழ்த் தேர்வுத்தாளில் உங்கள் பெயரைத் தமிழில் எழுதாவிடின் பின் எங்குபோய் எழுதப் போகின்றீர்கள்? என தேர்வுத் தாளில் தமிழில் பெயர் எழுதியிருந்த சிலர் பிற தாள்களில் ஆங்கிலத்தில் எழுதி யிருந்தனர். ஆளுக்குத் தக்கவாறு உங்களை மாற்றிக் கொள்வது நன்றா? உங்களுக்கென்று ஒரு தனித்தன்மையை வளர்த்துக் காத்துக்கொள்ளுங்கள்; விலங்குகளினின்று வேறுபட்டவர்கள் நாம். உண்ணவும் உறங்கவும் உடுக்கவும் நாம் இவ்வுலகில் பிறக்கவில்லை. எண்ணவும் உயரவும் உயர்த்தவும் பிறந்தோம்' என்று பலபடக் கூறினேன். பயன் விளையலாம்...

## திருவிளக்கு அண்ணா மலர்

மாதவனைப் பார்த்தேன். சென்னைச் செய்திகள் சிலவற்றைப் பற்றியே பேசினோம். பின்னர் விரிவாய்ப் பேசலா மெனத் 'திருவிளக்கு' அண்ணா மலரை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு விடைபெற்றோம். அண்ணாவைப் பற்றிக் கழகத்தா ரல்லாத பிறர் எழுதியுள்ள கட்டுரைகள் மிகுதி. நன்றாக உள்ளன. உணர்வோடொன்றிய தலைவனை நினைக்கையில் குருதிக் கிளர்ச்சி, கண்பனிப்பு, மெய்மயிர்ச் சிலிர்ப்பு; தன் நெஞ்சைத்

தமிழர்க்காக்கி என் நெஞ்சைத் திருடிக்கொண்ட தலைவா! நீ இல்லாத் தமிழகத்தை நினைத்துப் பார்க்க முடியவில்லை.

*(20.9.66)*

◆

## காலத்திற்குள் ஆய்வை முடிக்க அறிவுறுத்தல்

பேரா என் சொல்லடைவுக் கோப்புகளைத் தானே எடுத்துவந்து கொடுத்தார். நேற்றிரவே யான் இல்லாதபோது மூன்று கோப்புகளைக் கொண்டு வைத்திருந்தார். ஏனைய கோப்புகளை இன்று கொடுத்தபிறகு ஆய்வுத் தொடர்பாகப் பேசினார். மூன்றாண்டுக் காலத்திற்குள் ஆய்வை முடித்துவிடும் வழியில் செயல்பட வேண்டும் என்றார். முயற்சியைப் பாராட்டி எதுவும் தொல்லையுள்ளதா எனக் கேட்டார். தொல்லையில்லை, தொல்லை ஏற்படின் தெரிவிப்பேன் என்றேன். ஒரு மாதத்தை வேறோர் ஆராய்ச்சியைத் திறனாயவும், அடுத்த மூன்று மாதங்களை ஒலியனியல் செய்வதற்கும் அடுத்து வினைப் பொருள்களைப் பார்த்துப் பின் பொருள் எழுதலாம் என்றார். 'அடுத்த ஆண்டு 200 உருபா சலுகைப் பணத்திற்கு விண்ணப்பிக்க லாம், Paradigms, Free variation முதலியவற்றை நோக்குக; மற்றொருவர் துணையோடு மற்ற நூல்களின் சொல்லடைவு களோடு பெருங்கதையை ஒப்பிட்டுப் புதுச் சொற்களைக் காண்க, கழகப் பதிப்பு குறையுடையதெனில் அதுபற்றி என்பெயரைக் குறிப்பிட்டு அவர்கட்கு எழுதுக; பெருங்கதை பற்றிய எல்லாக் கருத்துக்களையும் திரட்டிக் கொள்க; எனப் பலவாறாக ஆய்வுத் தொடர்பாகப் பேசினார். மாணவர்கள் என்னிடம் பேசிக் கொண்டிருப்பதறிந்து அதிகநேரம் அவர்களோடு பேசுவது பயன் விளைக்காது. ஏதாவது கேட்டுக்கொண்டே இருப்பார்கள் என்றார். புதினம் முதலிய பிற வகை நூல்களை யான் படிப்பதறிந்து கொண்டு 'புதிய நூலைக் காணின் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் எழுதல் இயற்கை. அதைத் தவிர்த்துக் கொள்ளல் நன்று' என்றார். பொதுவாக ஓரளவு இனிமையாக நெருக்கத்தோடு பேசியமை நிறைவு தந்தது. கடமையை ஒழுங்காகச் செய்து நற்புகழ் ஈட்டவேண்டும்.

*(21.9.66)*

◆

## கவலைதரும் தென்மொழிப் போக்கு

தென்மொழி, தமிழ்ச்சிட்டுக் கட்டு வந்தது. தென்மொழி ஆசிரியவுரை கழகத்தார் பதவிக்காகப் பார்ப்பனர் அடிவருடுவ

தாகக் குறிப்பிட்டிருந்தது. சண்பகத்திற்கும் பொது மறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. தென்மொழிப் போக்கு கவற்சி தருகின்றது. தமிழ்ச்சிட்டில் என் மடலும் 'தம்பி'ப் பாட்டும் வெளியிடப் பட்டிருந்தன. அறம் பாட்டு நன்றாக இருக்கிறதென்றார். 'தங்கை'க்கு ஒரு பாட்டும் எழுத வேண்டும். 'வீ' பதினைந்து காசு கொடுத்து ஒரு சிட்டை எடுத்துக்கொண்டார். பின் 'மாணவியரிடம் அதிகநேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். பொய்ச் செய்திகளைப் பரப்பும் புரட்டர்கள் உள்ள பகுதி இது' என்றார். ஓரளவு அதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. மனச்சான்றுக்கு மாறின்றி நாம் நடக்கும்போது மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவானேன்? மதனன் மாலையில் அறைக்கு வந்தான். இருவரும் சாலை சென்று தமிழ்ச்சிட்டு மூன்று இதழ்களைக் கடையில் போட்டோம்.

*(21.9.66)*

◆

## பழைய முகம்

காசோலை வந்தது. மாநில வங்கியில் மாற்றினேன். அஞ்சலகஞ் சென்றபோது நண்பர் நாகப்பனைக் (பழனி) கண்டேன். பழனிப் பகுதியில் கழகநிலை சிறப்பாக உள்ளது என்றார். இந்த ஆண்டோடு ஆசிரியப்பணியை விட்டுத் திருவனந்தையில் ஓர் ஆங்கில இதழ் தொடங்கும் எண்ணமுளது என்றார். எண்ணித் துணிய வேண்டிய கருமம் இது. இருப்பதையும் இழந்துவிட்டு நிற்கும் நிலை ஏற்படலாம் என்றேன். தற்போது ஆங்கில இதழ் ஒன்றுகூட கேரளத்திலிருந்து வெளியாகவில்லை என்ற உண்மையை முதலில் அவர் வாயிலாகத்தான் அறிந்தேன். இத்திங்கள் தீபத்தில் 'பழையமுகம்' என்றொரு கதையைத்தான் எழுதியுள்ளதாகவும் மேலும் கதைகள் எழுதவேண்டிப் பார்த்தசாரதி மடல் விடுத்திருந்ததாகவும் இக்கதை ஈராண்டின் முன் எழுதியதென்றும் சொன்னார். விடை பெற்றேன்...

## வேலவன் தந்தை, உறவினர் வருகை

வேலவன் தந்தை உறவினர் இருவர் வந்திருந்தனர். இன்று அவரின் நினைவு நிதியைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் வழங்கப்போகின்றமைக்காக அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். 'அவர்களோடு வீயும் நானும் சௌராட்டிராவில் உணவு முடித்தோம். பிற்பகல் மூன்று மணிவரை சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அவர்கள் தங்கியிருந்த அறையில் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். பேச்சில் நாகரிகம் வளர வளர உடல்

வலுவும் தனக்குத்தானே துணையாய் இருக்கும் நிலையும் போய் வலிகுன்றி மற்றவற்றைச் சார்ந்து வாழ்ந்தாக வேண்டிய நிலை உருவாகி வருவது மையமாய் நின்றது. அழகாகக் கத்தரித்து வைக்கப்பட்டுள்ள குரோட்டன்சு முதலான பகட்டுச் செடிகளைப் பற்றிய பேச்சு எழுந்தபோது புறப்பகட்டு ஒன்றை மட்டுமே கொண்ட மணமோ பிற பயனோ இல்லாத அச்செடிகள் நகர்ப்புற மாந்தர்களை முன்நிறுத்தின. கத்தரிக்கப்படாது பசுமை அடர்ந்து பரந்து விரிந்து மண மலர்களோடு எழுந்து நிற்கின்ற இயற்கைச் செடிகள் மரங்கள் நாட்டுப்புற மாந்தர்களைக் கண்முன் காட்டின. தமவே விற்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களை வவே வழிவிடுத்தேன்.

(22.9.66)

◆

## வேலத்தொடு உரையாடல்

பிற்பகல் அறைக்குச் சென்று சின்னேர ஓய்வின் பின் துறைவந்தேன். வந்தவுடன் யான் எதிர்பார்த்தாங்கு விடைத் தாளொடு வேல் வந்தது. 'மற்ற விடைத்தாள்களில் ஆங்கிலத்தில் பெயர் எழுதி என் தாளில் மட்டும் தமிழில் எழுதியமை ஏன்? உனக்கென்று ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டாமா' என்றேன். உங்களுக்காகத்தான் தமிழில் எழுதினேன். இனி மற்றவற்றிலும் தமிழில் எழுதுவேன் என்றது. முதலெழுத்தை ஆர் என்றுபோட்டிருக்கிறாயே, உன் அப்பா பெயர் ஆர்வமா என்ன? என்றதற்குச் சிரித்துக் கொண்டே அது என் அம்மாவின் பெயர் என்றது. பெயரைக் கேட்டேன், சொன்னது. நினைவில்லை. ஆனால் 'ரா'வில் தொடங்குகின்ற பெயர் அது. நன்னூல் விதிப்படி எப்படி எழுதவேண்டும் என்றேன். 'இரா' என எழுதவேண்டும்' என்றது. அப்படி எழுதுதல் புரட்சி செய்வதாய் விடும் இல்லையா என்றேன். பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தது. தமிழ்ச்சிட்டைப் பார்த்தாயா என்றேன். அருணாசலம் கொடுத்தார். பார்த்தேன் என்றது. 'என்ன சொல்லிக் கொடுத்தார் எல்லோரிடமும் காட்டச் சொல்லிக் கொடுத்தார்', 'காட்டினாயா?' 'காட்டினேன்' 'எப்படி இருக்கிறது? அதிலிருந்து என்ன தெரிந்து கொண்டாய்' 'சில கருத்துக்கள் இருந்தன' பின் முகம் சிவக்க ஒரே நாண விழிப்பு. 'ஓரளவு பொருள் வசதி உடையவர்கள் என்றுதான் கருதுகின்றேன்' 'சலுகைப் பணம் கிடைக்கிறதாமே' 'ஆம்' என்பதோடு உடன்பாட்டுத் தலையசைப்பு. தம்பி தங்கைகள் உளரா? 'தம்பியில்லை. இரு தங்கையர் உளர். ஒருத்தி ஒன்பதாம் வகுப்பு படிக்கின்றாள்'. 'சிட்டு உன் தங்கைக்குப் பயன்படுமே' 'பயன்படும்'

வேண்டுமெனில் விருப்பமிருந்தால் இம்மாத இதழ் ஒன்றே உள்ளது. 'வாங்கிக்கொள்' 'வேண்டும்' கொடுத்தேன். 'உன் வீட்டில் எவரும் காஞ்சி இதழ் வாங்குகின்றனரா?' - தெளிவில்லாப் பார்வை. 'ஒரு புத்தகத்திற்கு அதை அட்டை போட்டிருந்தாயே அதனால் கேட்டேன்' 'எங்கப்பா ஓரிதழ் வாங்கி வந்திருந்தார்' 'அப்படியா' சரி அழகின் சிரிப்பில் சில சரியான பகுதிகளை அடித்துத் தவறாகத் திருத்தியிருப்பது யார்? என் தோழி ஒருத்தி சில இடங்களில் திருத்தினாள். யானும் திருத்தினேன். ஆசிரியரும் மாற்றஞ்செய்யச் சொன்னார்' 'யார் பாடம் எடுத்தவர்' 'சொங்கலிங்கம் சார்' பொதுத் தொடர்பான பேச்சு முடிந்தது. விடைத்தாள் தொடர்பாகச் சிலவற்றை விளக்கினேன். நின்றவாறு கேட்டுக் கொண்டிருந்தது. 'போதிய எடுத்துக்காட்டுக்கள் காட்டப்படவில்லை' ஓர் எடுத்துக்காட்டு காட்டின் போதுமானது என நினைத்தேன்' 'சிலவற்றை விளக்கவில்லை' 'காலம் போதியதாக இல்லை. வேகமாக எழுதியதால் சில எழுத்துப் பிழைகள் நேர்ந்தன' 'எழுத்துத் தொடர்பாய நன்னூல் கேள்விக்கு ஒரு பக்கமே எழுதியுள்ளாயே, போதுமா?' 'விளக்கி எழுத வேண்டுமென்று யான் நினைக்கவில்லை' பின் எப்படி நிறைய மதிப்பெண் வாங்குவது? 'வகுப்பில் தரமென்ன' 'மூன்று' வரும் 'தேர்வில் எத்தனைப் பெறுவாய்' 'முதல் தரம் பெற முயல்வேன்' 'பார்க்கலாம்' 'வேறு செய்தி எதுவும் இல்லையே' 'ஏதோ கேட்க வேண்டுமென்ற தயக்கம். ஏதும் கேட்காது விடைபெறல். காலைப் பனிமலரைப் போல் தூய்மைப் பண்புகள் சில துயிலும் குழந்தை. குழந்தைப் பண்புகள் இருப்பதைச் சுட்டி 'நீங்களும் குழந்தையைப் போன்றவல்லவா இருக்கின்றீர்கள்' என்று சொன்னதை நினைத்தேன். உள்ளக்கிளர்ச்சி. உணர்வுப் புலப்பாடு எதிர்த் தரப்பிலும் இருக்கலாம். கேட்கவேண்டுமென நினைத்த சில செய்திகளை மறந்து போனேன். சின்னேரத்தின் பின் வ.வே. வந்து 'மங்கையர் இருவரும் நேற்றே தங்களிடம் வர அஞ்சினர். யான் 'ஒன்றும் செய்ய மாட்டார் போங்கள் என்றேன்' என்றார்.

*(23.9.66)*

◆

## அடிமையல்லன்

அடி போடி! உன்னை நினைத்து யான் உருக்குலைந்து போவேன் என்று மனப்பால் குடிக்கின்றாயோ? ஏதோ யான் தூண்டில் போடுவது போலவும் அதிற் சிக்காது நீ ஓடிப்போகும் மீன் போலவும் நினைப்போ? நீ என்ன ஓவிய மன்னன் மாதவனின் காவியப் பாவையாய் உயிர்பெற்று வந்தவளோ? மணிவண்ணன்

பெற்றெடுத்த பூரணியோ? பாவேந்தரின் பைந்தமிழ் ஓவியமாம் குடும்பவிளக்கின் தலைவியோ? நான் என்ன எந்தக்கிளியை நெஞ்சக் கூண்டில் அடைத்து வைக்கலாம் என்று அலைந்து திரியும் வெறியனா? அன்றி ஏதாவதொரு புறவை வீழ்த்தி மகிழும் வேடனா? கண்பார்வை எனும் எச்சில் இலைக்காக அங்காந்து கிடக்கும் நாயா? ஏதோ என்னுள்ளம் சின்னேரம் நின்பால் நெகிழ்ந்தது உண்மைதான். நீயும் என்னைப் பார்த்து நாணிக்கோணி நெளிந்து வளைந்து புன்னகை பூக்கவில்லையா? யான் உனக்காக நெகிழ்ந்தமையும் நீ எனக்காக நிலைகுலைந் தமையும் போதும். என்னைப் பார்த்து வளைந்து நெளியாதே. நின் பார்வைக் கணையால் துளைபடும் அளவு, புன்னகையின் ஒளியில் தன்னிலை இழந்துவிடும் அளவு என் மனம் மெலிவுடையதாய் இன்று இல்லை. உள்ளத்தை உறுதியாக்கிக் கொண்டேன். யாரோ ஒருத்தி என்ற நிலையில்தான் நின்பால் என்போக்கு அமையுமே யன்றி பார்வை, பேச்சு, செயல் எதிலும் நின்பாற்சாயேன். அடியோடு நின்னைப் புறக்கணிக்கவும் இயன்றால் வெறுத் தொதுக்கவும் முயல்வேன்.

அடி! மயிலே இசைக்குயிலே அன்பே என்றுன்
அழகுதனைக் கணந்தோறும் பாடிப்பாடி
கடைக்கண்ணின் வீச்சிற்கும் வாய்ப்பேச்சிற்கும்
கடவுளருட் கேங்கியிரும் அடியார் போல
அடி வீழ்ந்துக்கிடக்கின்றேன் என நினைத்தா
ஆகாத வீண் செருக்குக் கொள்கின்றாய் நீ?
அடிபோடி! நீ என்ன தமிழா? நெஞ்சம்
அசையாத பெருங்குன்று. மறந்திடாதே!

நாள்தோறும் வகைவகையாய் உடுத்துகின்றாய்,
நடனஞ் செய்வதைப்போல நடக்கின் றாய்நீ!
தேள்கொடுக்கைப் போல்மையை இமையில் தீட்டித்
திருடத்தான் பார்க்கின்றாய் என் நெஞ்சத்தை!
வாள்கள் பல துளைத்தாலும் கலங்கா இந்த
வைரமனம் குலையாது, பூஞ்சை நெஞ்ச
ஆள்வேறு பார்ப்பாய் நீ! உனக்காய் ஏங்கும்
அடிமையல்லன் இளவரசு, போடி போபோ...

## மாத்திரை பற்றி ச.வே.சு. கட்டுரை

மாலைக் கருத்தரங்கில் ச.வே.சு. மாத்திரை பற்றிய கட்டுரை படித்தார். பல கருத்துக்களடங்கிய தொகுப்பே அக்கட்டுரை. 'கண்ணன்' எனவரும் ஒற்றளபை கண்/ண்(தேமா) எனப் பிரித்துள்ளமை தொடர்பாக யான் கேள்வி கேட்டேன். மாத்திரை

அடிப்படையில் நாம் அசையைப் பிரிப்பதில்லையே என்றேன். 'இல்லை அசையையும் அவ்வாறே பிரிக்கிறோம்' என்றார். ஓசை வேறுபாடுடைய 'கலம்', 'கலாம்' என்ற இரு சொற்களையும் பின் ஏன் நிரையசைக்குள் அடக்குகின்றனர் என்றேன். விழிப்பு ஏதேதோ கூறல்! நிலையறிந்து யான் வாய்மூடினேன். பேரா அதை விடாமல் மேற்கொண்டு கேட்டார். ஒரே திணறல். கண்ணன் என்பதைத் தேமாவாகப் பகுக்கக் காரணம் உண்டு. ஒன்று குறிலின் ஒரே மெய் அளபெடுத்து வருதலை நாம் நேர் அசை என்பதில்லை. குறிலின்பின் (பார்த்/தல்) இருவேறு மெய்கள் இணைதலையே நேர் என்கிறோம். இக்கருத்தடிப்படையில் கண்ண் என்பன நேரசையெனத் தடையுண்டு. இதோடு கால அடிப்படையைக் (ஓசை) கொண்டும் தேமா எனப் பகுத்திருக்கலாம். இப்பகுப்பு நம் மரபுக்குச் சிலவகைகளில் முரணாக உள்ளது. ஒன்று நாம் கால (ஓசை) அடிப்படையில் அசையைப் பிரிக்கவில்லை என்பது. இரண்டு தனிமெய் ஓர் அசையாக ஆதலில்லை. எவ்வசைக்கும் முதலெழுத்தாய் மெய் நிற்றலில்லை என்பது தனிமெய்யை ஓரசையாய் ஆக்கியுள்ளமை இவ்வடிப்படைகளில் தவறானதாகத் தெரிகிறது, கண்ணிமைத்தல், நொடித்தல் ஆகிய மாத்திரை அளவுகோல்களில் இயற்கையான் இமைத்தல் நிகழ்வதால் அதுவே சிறந்தது. நொடித்தல் 'உள்ளத்தான் நினைத்து நிகழ்வதால்' அடுத்ததே என்ற நச்சர் கருத்தையும் கூறினேன். அளவுகோல்கள் துல்லியமாய் அளக்கக்கூடியவையா? என்றேன். இல்லை என்றார். 'இயற்கை மகன் தன் குறிப்பின்றி இரண்டினையும் ஒருகாற் கூட்டி நீங்கின காலக் கழிவும்' என்ற நச்சரின் கருத்தையும் 'இயல்பெழு மாந்தர் இமை நொடி மாத்திரை' என்ற பவணந்தி கருத்தையும் அவர் விளக்கியிருக்கலாம். தொல்காப்பியன் மாத்திரைப் பகுப்பைக் கண்டவர்களைப் பற்றி 'நுண்ணிதின் உணர்ந்தோர்' என்று கூறினானே தவிர 'எவரின் இமைத்தல் நொடித்தல்' மாத்திரை எனக் கூறவில்லை. நச்சரின் விளக்கம் நன்று. ஐ ஔ இருமாத்திரை எனத் தொல்காப்பியர் கூறி 'அகர இகரம் ஐகார மாகும்' 'அகர உகரம் ஔகாரமும் என அ+இ - ஐ1+1=2 மாத்திரை அ+2= ஔ 1+1=2 மாத்திரை எனல் 'The diphthongs are of the same length as the long vowels' என்ற தேனியல் சோன்சின் கருத்தொடு உடன்படுகிறது. [Daniel joines, An Outline of Eng. Phonetics (p. 104].

தன்னைச் சுட்டியும் அளவெடுத்தும் வராவிடத்து ஐ ஔ (அ+ய்-1+½ - 1½ அ+வ்1+½ - 1½) ஒன்றரை மாத்திரை பெறும் என்பர் நன்னூலாரும் யாப்பருங்கலவிருத்தியாரும். இக்கருத்துக் களை நன்கெண்ணிக்காணல் வேண்டும். மொழியியலார் ஆ (aa) என்பதை நீண்ட உயிர் (lengthened vowel) என்கின்றனர். எவ்வுயிர் நீண்டதெனில் குற்றுயிர் நீண்டதென்னும் மொழியியலார்

அக்குற்றுயிரின் ஒலியளவை இன்று கூறிற்றலர். இவ்வொலியளவு பற்றிய பண்டையோரின் நோக்கு நுண்மாண் நுழைபுலங் காட்டுவதாகும்.

*(27.9.66)*

◆

## இலட்சிய வேகம்

மண்ணில் வேரூன்றியிருந்தாலும் அதிலேயே புரண்டு கிடக்காது தன் கிளைக்கைகளால் வானமங்கையைத் தழுவித்தீர வேண்டும் என்ற வேட்கையால் இந்த மரங்கள் தாம் எப்படி நிமிர்ந்து வளர்கின்றன! பிறந்த மண்ணில் நடந்து ஆடி, ஓடி எல்லாவற்றையும் கண்டு களித்தாலும் நெஞ்சம் விண்முட்டும் இலட்சிய வேகத்தோடு வளர்ந்தாக வேண்டும். வளர்த்தாக வேண்டும்...

## பிறந்தவன், பிறந்தவள்

பிறந்தவன் என்ற சொல் ஆங்கில 'Brother' என்பதற்கும் பிறந்தவள் என்ற சொல் ஆங்கில 'Sister' என்பதற்கும் இணையாகத் தமிழில் உள்ளன. உடன்பிறந்தமையை அடிப்படையாகக் கொண்டு முளைத்தவை இவை.

*(28.9.66)*

◆

## தென்மொழி ஆசிரியர் எழுதிய மடல்

தென்மொழி ஆசிரியர் அஞ்சலட்டையில் பாவேந்தர் கூறும் 'அகத்தியர் காப்பியர்கள்' பற்றிய எனவினாவிற்கு அகத்தியர் காப்பியர்கள் என்ற பாவேந்தர் பாத்தொடரில் வரும் காப்பியர்கள் ஐம்பெருங்காப்பியர்களையும் பாரத இராமாயணப் பழங்கதைக் காப்பியர்களையும் குறிப்பிடுவதாகலாம். அது பற்றிய அவர் உட்கருத்தை யான் அறியக்கூடவில்லை. அக்காப்பியர் என்ற சொல்லுள் எவ்வாற்றானும் தொல்காப்பியர் அடங்கார் என்பதுறுதி! பாவேந்தர் பார்ப்பனப்பூசல்கள் உட்கிடக்கையான் மணிமேகலை சிலப்பதிகாரங்களைக் கூட எரித்தல் வேண்டுமென ஒருகால் சினந்தது மொழிந்தது என் நினைவில் உள்ளது'' என்றெழுதியிருந்தார்.

*(29.9.66)*

◆

## மொழியியல் வகுப்பு

முதல்மணி வகுப்பு. இரண்டு நாட்களாக நல்ல தொடர்ந்த மழை. துறைக்கு வருங்காலும் பெய்து கொண்டிருந்தது. வகுப்பில் குரல் உறுப்புக்களின் படம் வரைந்து விளக்கினேன். வகுப்பு முடிந்ததும் வெளியே நின்றுகொண்டிருந்த அ.ம. பல்கலைக் கழகத்தில் மொழியியல் பயிலும் ஈனோசின் இரு மாணவ நண்பர்கள் என்னைக் கண்டு 'தங்கள் வகுப்பை வெளியி லிருந்தவாறே நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். மிகச் சிறப்பாக இருந்தது. எங்களுக்கு இவ்வளவுத் தெளிவாக வகுப்பை நடத்தவில்லை. அரைமணி நேரத்தில் குரல் உறுப்புக்களின் விளக்கத்தை முடித்துவிட்டார்கள். இப்போது நீங்கள் நடத்தியமை தெளிவாகப் புரிந்தது. வகுப்புக்குள்ளேயே வந்தமர்ந்து கேட்கலாம் என நினைத்தோம்" என்றனர். பின் ஊர் பற்றியும் மொழியியல் படித்த முறை பற்றியும் கேட்டனர். எனக்குக் கடமையைச் செவ்வனே ஆற்றுவதான் வரும் சிறப்பெண்ணி மகிழ்வேற்பட்டது...

## வள்ளுவர் தனித்தன்மை

அண்ணாமலையின் 'வள்ளுவர் தனித்தன்மை' என்ற நூலின் முற்பகுதியைப் படித்தேன். ஆசிரியன் தனித்தன்மை நன்கு வெளிப்படுகின்றது. பேரா. வ.சுப.மாவின் வள்ளுவச் சாயல்கள் கிடக்கின்றன. வடமொழியாளரின் 'தர்மார்த்த காமமோட்சம்' நம் அறம் பொருள் இன்பவீட்டிற்கு அடிப்படையாகுமா என வினாவெழுப்பி தமிழரின் பாகுபாடு பொருளடிப்படையில் வேறுபடுவதையும் அறம் பொருள் இன்பத்திற்கெனத் தனித்தனி நூல்கள் வடமொழியில் உளவேனும் மூன்றும் பிணைந்துக் கிடப்பதையுணர்ந்து முதன்முதல் ஒரு நூலிலேயே மூன்றையும் விளக்கியவன் வள்ளுவனே. வடமொழியில் கி.பி. 16ஆம் நூற்றாண்டளவிலேயே மூன்றையும் விளக்கும் நூல்கள் தோன்றின' என விளக்குகின்றார். பால்வைப்பு முறையில் இன்பத்தின் இன்றி யமையாமையை நன்கு விளக்கினும், அறத்துப்பால் முதன்மை யிடம் பெற்றிருப்பது பொருந்துவது. இன்பத்துப் பாலை முதலில் வைத்தல் சரியன்று என்பதையும் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

*(30.9.66)*

◆

## கருத்தம்மா

'செம்மீன்' பார்த்தோம். ஒளிப்பதிவு தவிர்த்த வேறு எக்கூறும் ஓகோ என்று வியக்கும் நிலையில் இல்லாவிடினும் எல்லாக் கூறுகளுமே தரமாகக் கையாளப்பட்டிருப்பதால் படம் சிறக்கிறது.

சத்திய சித்ரே, செயகாந்தன் படங்களைப் போல் தனித் தன்மையைக் காட்டுவதாகப் படம் அமையவில்லை. எனினும் மொத்தத்தில் பாராட்டற்குரிய படமே. இறுதிக் காட்சியில் தன் தங்கையிடம் பரீக்குட்டியைப் பற்றிக் கறுத்தம்மா கேட்கும்போது பழநி வந்து அதைக் கேட்டு ஆத்திரத்தோடு அவளை வினாவும் போது கறுத்தம்மா (சீலா) ஒரு விழி விழிக்கிறாளே; நொந்து வெந்த உள்ளத்தைக் காட்டும் அந்நோக்கு மிக மிக அருமை! பழநி கடலின் சுழியில் சுறாமீனால் இழுக்கப்பட்டு அழியும் காட்சி நன்கு படமாக்கப்படவில்லை. செயற்கை நீர்க்குளத்தில் அக்காட்சி எடுக்கப்பட்டுள்ளது. புதின ஆசிரியனின் உணர்வைப் புரிந்து கொண்டு அவ்வுணர்வு கெடாவண்ணம் சிலமாற்றஞ் செய்து நன்கு படம் பிடித்துள்ளனர்.

*(31.9.66)*

◆

# அக்டோபர் - 1966

## எச்சில் உணவு

நண்பகல் உணவு எச்சத்தை நாய்க்குப் போட்டேன். எச்சில் இலை வீழ்ந்த இடத்திற்கு அண்மையில் படுத்திருந்த ஒருசிறு நாய் உண்ணும் ஆவலில் எழுந்தது. ஆனால் எட்டியிருந்த பெருநாய் ஒன்று ஓடி வருவதைக் கண்டு அப்படியே வேட்கையை அடக்கி அடங்கிக் கொண்டது. எனக்கு ஒரே இரக்கம். வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் நிலைதானா எங்கும்? மாந்தரிட மிருந்து தான் இப்பழக்கத்தை நாய்கள் கற்றுக் கொண்டனவா? அன்றி விலங்கினின்று பிறந்த மாந்தன் தன் மூதாதையர்ச் சொத்தாகச் சேர்த்துக் கொண்ட குணமோ? நாளை இப்படி இரு நாய்களும் வந்தால் பெரிய நாயைத் துரத்திச் சிறிய நாய்க்கு உணவிட வேண்டும்...

## சென்னைச் சந்திரன்

சென்னைச் சந்திரன் தன் துணைவியார்க்கு ஒன்பது மாதம் என்றும் இன்னும் இரண்டு மாதங்கட்குபின் தேர்தல் தொடர் பாகத் தான் செய்யும் வேலையை விடவேண்டி வரும். அதன்பின் குடும்பம் நடத்தல் தொல்லையாகும் என்றும் எழுதியிருந்தார். ஏதோ இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். அன்பு நிறைந்த நல்ல நண்பர்.

*(1.10.66)*

◆

## ஆங்கிலம் கலந்த தமிழ்

பத்து மணியளவில் துறைக்கு வந்தேன். வந்தவுடன் மமா வந்தார். குடும்பவிளக்குத் தொடர்பாக எழுதிய கட்டுரையைப் படித்துக் காட்டினார். இடையில் சில திருத்தங்கட் சொன்னேன். யான் சொன்னாங்கு அவர் கட்டுரையைப் பகுத்துத்திறன் செய்யவில்லை. நம்மிடம் கருத்துக்கள் பெற்று அவற்றைப் பயன்படுத்தாவிடில் என்ன நினைப்பது? மேலும் யான் வகுப்பில் தனித்தமிழ்த் தொடர்பாய்ப் பன்முறை பேசியும் என் உணர்வைப்

புரியாது ஆங்கிலச் சொற்களைக் கலந்தே என்னிடமும் பேசி வந்தார். இன்றும் 'இளைய பெருமாள் Sir weekly three days help செய்ய முடியுமா' என்ற கேட்டார் எனப் பேசினார். உடனே நீங்கள் பேசுகின்ற தமிழில் தமிழ்ச் சொற்கள் எத்தனை உள? இப்படிப் பேசலாமா? இதைப் பற்றி யான் வகுப்பில் எத்தனை முறை சொல்லியிருப்பேன்' என்றேன். 'இனிமேல் நல்ல தமிழில் உரையாட முயற்சி செய்வேன்' என்றார். குடும்பவிளக்கே ஒன்றரை மணிக்குமேல் எடுத்துக் கொண்டது. யான் குறிப்பிட்ட சில வேலைகளை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு வரும்போதெல்லாம் எதிர்பாராமல் இனிய நேரத்தைப் பிறர் எடுத்துக் கொள்கின்றனர். இந்நிலைக்கு இனி அதிக இடங் கொடுக்கக் கூடாது.

(2.10.66)

◆

## கனவுகள்

கனவுகள் இறந்தகால அடிமன நினைவுகள் அடிப்படையில் தான் எழுகின்றனவா? அன்றி எதிர்காலத்தைக் கோடிட்டுக் காட்டும் வருவதுணர்த்தும் வாயிலாக அமை கின்றனவா? என்பதைப் பல்வாயில் அறிதல் வேண்டும். பொதுவாகப் பெரும்பாலான கனவுகள் இறந்தகால எண்ண அடிப்படையைக் கொண்டுள்ளன. மிகச் சிலவே வருவது உணர்த்தும் வாயிலாக அமைகின்றன. நண்பர் பன்னீர்ச்செல்வம் தான் முதல்நாள் தன் தமக்கையின் குழந்தை இறந்துபட்டதெனத் தன்தாய் சொல்வதைக் கேட்பதுபோல் கனவுகண்டதாகவும் மறுநாள் தன் குழந்தை பிறந்து பத்து மணித்துளிகளே உயிரோடிருந்ததாகத் தன் தமக்கையிட மிருந்து மடல் வந்ததாகவும் சொன்னார். நான் மடலைப் பார்த்தேன். ஆபிரகாம் இலிங்கன் பாராளுமன்றில் தான் மீகாமன் இன்றிக்கடலில் ஒரு கலம் போவதுபோல் கனவு கண்டதை அறிவித்த ஐந்து மணிக்குப் பின்னர் பூத்தால் கொலை செய்யப் பட்டமையும் நோக்கத்தக்கது. இளங்கலை படித்தபோது யான் கண்ட சில கனவுகளும் எதிர்கால நிகழ்வுகளோடு பொருந்தி நின்றன. உளவியல் அடிப்படையில் நுணுகி நோக்கின் இக்கனவு களை நன்முறையில் விளக்க இயலும். மறைமலையடிகளின் 'தொலைவிலுணர்தல்' திரு.வி.க.வின் 'உள்ளொளி' முதலிய நூல்களைப் படித்தால் ஓரளவு விளக்கம் கிடைக்கலாம். படிக்கவேண்டும்...

## 'பேரா'விற்கு வந்த சினம்

மாலைக் கருத்தரங்கில் கோகு, எண்களின் அமைப்பு பற்றிய கட்டுரையைப் படித்தார். மாற்றவியல் இலக்கணச் சார்பில் இராமாயணத்தில் வரும் எண்களைப் பகுத்திருந்தார். மிகு பயனுடைய கட்டுரையன்று. பிழையெனில் தன் கருத்துக்களைத் திருத்திக் கொள்ளும் பக்குவமில்லாப் பிடிவாதப் போக்குடன் நின்றார். பேராவும் அவர்க்குத் துணையாயிருந்தார். "முறை (Order) என்றால் என்ன என்று தெரியவேண்டும். கொஞ்சமாவது மாற்றவியல் இலக்கண (Transformation grammer) அறிவிருந்தால் யான் சொல்வது தெரியும்" என்று கோகு பேசியமைக்குத் துணை நிற்பது போல, கோகுவின் கருத்தை எதிர்த்துப் பேசிய ச.வே.சு.வைப் பேரா ஆணைமிடுக்கோடு கண்டித்தார். கோகு அப்படிச் சொல்லலாமா? என யானும் சவேசுவும் கேட்டோம். பேராவிற்கு மிகுசினம் வந்துவிட்டது.

*(3.10.66)*

◆

## ஆத்திச்சூடி பற்றி...

ஒன்பது மணி அளவில் சங்கத்தில் அப்பனிருந்தார். கண்டோம். கனரா வங்கி மேலாளர்க்குச் சங்கச் சார்பில் அவர் எழுதிய விண்ணப்பமொன்றைக் கண்டேன். 'மானேஜர் - கனறா பாங்கு' என எழுதப்பட்டிருந்தது. செயற்குழுக் கூட்டங்களில் பன்முறை யான் சொல்லியும் பயன் விளையாமையைக் கண்டு வருத்தமும் சினமும் ஏற்பட்டன. உள்ளத்தைத் திறந்து பொரிந்து தள்ளினேன். அறுவை மருத்துவம் தேவைதான். உணர்ந்து கொண்டார். மூவரும் சௌராட்டிராவில் உண்டோம். பின் 'மீதூண் விரும்பேல்' என்ற ஔவை ஆத்திசூடியை இகோ சொன்னார். யான் 'ஊண் மிகவிரும்பு' என்ற பாரதி ஆத்திசூடியைச் சொல்லி முரண்பாட்டுண்மையைச் சுட்டினேன். இகோ முரண்பாடன்று. ஊணை அதிகமாக விரும்பு என விருப்ப மிகுதியையே அது சுட்டும். உணவு மிகுதியைச் சுட்டாது என்றார். யான் உணவு மிகுதியைச் சுட்டும். பாரதி ஔவை இருவரின் ஆத்திசூடிகளை ஒப்பிட்டுக் காணின் ஔவைக்கு முரணாகப் பாரதி சில கருத்துக்களைச் சொல்லியுள்ளமை புலனாகும் என்றேன். அவர் பேசியமுறை எனக்குச் சினமூட்டு வதாய் இருந்தது. குரலெழுப்பியே பேசினேன். இறுதியில் என் கருத்திற்கு இடமுண்டு என ஒத்துக்கொண்டார்.

*(4.10.66)*

◆

## எண்ணெய்க் குளியல்

எண்ணெய்க் குளியல். குளிப்பறையிலிருக்கும் போது பக்கத்துக் குளிப்பறையில் அந்தப் பார்ப்பனன் குளித்துக் கொண்டிருந்தான். 'நீர்க்குழாயை மூடுக' என்று நான்கைந்து முறை கத்தினான். பின் 'நீ உன் அறை நீர்க்குழாயை மூடேன்' என்றேன். நிறைய நேரம் நீங்கள் குளிப்பதா? என்றான். 'அப்படித்தான் குளிப்பேன். ஏதாவது பேசவேண்டுமென்றால் வெளியில் வந்து கேள்' என்று குளித்து முடித்தேன். சிற்றுண்டி முடித்தபின் அவனை அறையில் கண்டு 'என்னவோ கேட்க வேண்டுமென்றாயே என்ன' என்றேன். 'அவன் நாங்கள் எல்லாம் அலுவலகம் போகிறவர்கள். பல்கலைக்கழகத்திற்குப் போகிற நீங்கள் சற்றுநேரம் கழித்துக்கூடச் செல்லலாம். நீங்கள் காலையிலே குளித்துவிடலாம்' என்றான். இந்த அறிவுகூட எங்கட்கு இல்லை என்று நினைக்கிறாயா? யான் குளிப்பதற்குச் சற்று அதிக நேரம்தான் ஆகிறது. எனினும் யான்குளிக்கும் அதே நேரத்தில் அதே அறையில் தான் நீ குளிக்கவேண்டுமா? வேறு அறைகள் இல்லையா? நீ பல நாட் களாக யான் குளிக்கும் போது கிண்டல் செய்வதை நண்பர்கள் உணர்த்தினர். யானும் உணர்ந்தேன். நீ யாரோ, யான் யாரோ நமக்குள்ளே வீண் பகை, வெறுப்பு எதற்கு' என்றேன். நிலை தாழ்ந்து அறைக்குள்ளே வந்து அமருங்கள் என்றான். யான் அமர வில்லை. பின் இங்கு யார்யார் எவ்வளவு நேரம் சிறுநீர் கழிக்கிறார் கள்! குளிக்கிறார்கள் என்பதைக் கணக்கிடுவதுதானா உன்வேலை" என்று கேட்டு வந்தேன். 3ஆம் நாள் முரசொலி வரவில்லை.

*(5.10.66)*

◆

## நிறம் மாறும் மாந்தன்

செடி கொடிகளின் செழிப்பை வைத்து மண்ணின் வளத்தை அறிந்து கொள்ளலாம் என்கின்றனர். தோற்றத்தை வைத்து இந்த மாந்தனின் உள்ளத்தை அறிந்துகொள்ள முடிகின்றதா? மாலையில் கைப்பந்துப் போட்டி பார்த்தேன். சிறப்பாயின்று. பின் வீயொடு அறைசென்று சிற்றுண்டி முடித்தேன். வீ ஊரில் ஒரு முகம்மதியரிடம் எட்டு ஒன்பது ஆண்டுகளாகக் குத்தகைக்கு விட்டிருந்த ஒரு தோப்பை அவர் திரும்பி விடமாட்டேன் என்பதாக அண்ணன் தொலைபேசி வழிச் சொன்னதாகக் கூறிக் கவன்றார். அந்த முகம்மதியர் முன்பு தன்னிடம் இவ்வாண்டு விட்டுவிடுவதாகச் சொன்னதாகவும் கூறினார். இந்த மாந்தன் நிறம் எத்தனை எத்தனை மாற்றங்களைப் பெறுகின்றது. மண்ணிற்கேற்ப மழைநீர் மாறுகின்றதல்லவா? சங்கச் செயற்குழுக் கூட்டத்திற்குப்

போனேன். திவேதி, அப்பன், முருகேசன் மூவரே இருந்தனர். நால்வரும் கூடி விழா, போட்டித் தொடர்பாக முடிவு செய்து பத்தரை மணிக்குமேல் பிரிந்தோம்.

*(6.10.66)*

◆

## கடவுள்

உயிரோடிருக்கும் மாட்டை வதைத்து வாட்டும் மாந்தன் உயிரற்ற சிலையான நந்தியை வணங்கி வழிபடுகின்றான். சிலையுருவில் கடவுளை வழிபடும் மாந்தன் உண்மை உயிருருவோடு கடவுள் தோன்றின் அவனை வெறுத்து ஒறுத்தாலும் வியப்பதற்கில்லை. அதனால்தான் எவர்க்கும் தன் உருவுகாட்டாது 'அவன்' ஒளிந்து கிடக்கிறான் போலும்!

*(11.10.66)*

◆

## சின்னஞ்சிறு உலகம்

கோபாலகிருட்டிணனின் 'சின்னஞ்சிறு உலகம்' என்ற படத்தை அறத்தொடு பார்த்தேன். இடைவேளை வரை இனிதிய லும் அப்படம் பின்னர் அறிவொடுபடா நிகழ்ச்சிப் பின்னணியில் அசைகிறது. கோகியின் தரம் வீழ்ந்தது. உரையாடல் நிமிர்ந்து நிற்கின்றது. மணமாகாத பெண்ணை வீட்டில் வைத்திருப்பதுதான் பெரிய கடன் என்றும் நாளடைவில் அக்கடன் மானம் மதிப்பையே அடைமானம் வைக்கின்ற நிலைக்குக் கொண்டு வந்துவிடும் என்றும் ஒரு பகுதி. தீயவழியில் பொருள் திரட்டித் தன் தங்கைக்குத் தங்கத்தால் தாலி செய்து போடுவதை விட நல்ல வழியில் உழைத்துத் தகரத்தால் தாலிசெய்து போடுவதே மேல் என்ற கதைத்தலைவனின் பேச்சு 'பணக்காரனோடு ஏழை பகைத்துக் கொண்டாலும் ஏழையொடு பணக்காரன் பகைத்துக் கொண்டாலும் இறுதி வீழ்ச்சி ஏழைக்குத்தான்' என்ற வேறு ஒரு பகுதி முதலியவை இனிக்கின்றன. நாகேசுவின் கற்பனை நோக்கு நன்று. கதைத் தலைவனின் மெய்ம்மை வேட்கையும் அவன் அதனால் அடையும் தொல்லையும் பொய்ம்மையின் சமுதாய ஆட்சியும் படத்தில் கோடிட்டுக் காட்டப்படுகின்றன. காந்தியின் சிலையை நோக்கிக் கதைத்தலைவன் பேசுகின்ற பகுதிகள் ஓரளவு மிகையாயினும் கருத்துவளமுடைய.

*(12.10.66)*

◆

## விடுதலை மறவர் செண்பகராமன் பற்றி...

*மாலையில் பல்கலைக்கழகக் கல்லூரியின் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவிற்குச் சென்றேன். வானம்பாடி என்றொருவர் பேசினார். விடுதலை மறவர் செண்பகராமனைப் பற்றியும் இலக்கியம் பற்றியும் பேசினார். இலக்கியம் பற்றிய பேச்சில் எதுவுமே இல்லை. செண்பகராமனைப் பற்றிய பேச்சு தேவலாம். 1932இல் செண்பகராமன் செருமனியில் மறைந்தபோது அவர் மனைவி இலட்சுமிபாய்க்கு (வடநாட்டை - மணிப்புரியைச் சார்ந்தவர்) 25 அகவையாம். அன்றிலிருந்து இன்றுவரை கணவன் நினைவை அவர் போற்றி வருகின்றாராம். கூட்டத்தில் தனித்தமிழ் தொடர்பான பேச்சும் எழுந்தது. செயலாளர் தான் வரவேற்புரையில் Advice என்ற ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தியமைக்காக மன்னிப்புக் கேட்டார். வானம்பாடி தன்பேச்சிடை 'அப்படிப் பயன்படுத்துவது தவறன்று, ஆங்கிலம் ஒதுக்கத்தக்க மொழியன்று' என்றார். சில மாணவர்கள் அதுகேட்டுக் கைதட்டினர். இழிநிலை கண்டு மிக வருந்தினேன். இளமை நெஞ்சங்கள் என்று பண்படப் போகின்றனவோ? கைதட்டலின் பின் வானம்பாடி 'செயலாளர் கூற்று தவறில்லை. நாம் விண்மீனைக் குறிவைத்தால்தான் மாங்காய், தேங்காயையாவது பெறமுடியும்' என்ற அமைதி கூறிப் பேசினார். பேச்சில் முரணிருப்பினும் இக்கருத்தையாவது சொன்னாரே என்ற அளவில் மகிழ்ச்சி. பேரா சே.தா.வின் தலைமையுரையில் அவரின் கலையுணர்வு புலப்பட்டது. தமிழ்ப் பேராசிரியர் பேச்சில் தமிழ்தான் தமிழாக இல்லை. வடமொழியும் ஆங்கிலமும் தமிழின் கழுத்தை நெருக்குகின்றன. இவர்களிடம் உருவாகும் மாணவர்கட்கு எங்கே தமிழ் நெஞ்சம் அமையப் போகிறது. தான் கெட்டுப் போனாலும் மற்றவர்களைக் கெடுக்காத அளவு நல்லவர்களாக மாணவர்கள் வெளியேறினால் போதும்!...*

## ஆடிக்குதிக்கும் தீமை

*நல்லவன் தன் நடத்தையை ஒருவன் பாராட்டும்போது மகிழ்வதைவிடக் கெட்டவன் தன் செயலுக்குப் பாராட்டும் ஆதரவும் பெறும்போது எப்படி ஆர்ப்பரிக்கிறான். நன்மை என்றுமே அமைதியாய்க் கிடக்கத் தீமைதான் ஆடிக்குதிக்கும் போலும்!*

*(13.10.66)*

◆

## அழகும் அழகின்மையும்

*யான் புதிய உடைகளைப் புதுமுறையில் அணிந்து சென்றதைச் சிலர் சுட்டினர். குழாய்க்குள் மெய்ப்பையை விட்டுப்*

போட்டிருந்ததே புதுமை! ஒருவனுக்கு அழகாகத் தென்படுகின்ற உடை பிறிதொருவனுக்கு அழகின்றித் தோன்றுகிறது! அழகென்பது என்ன? கண்கள் வழிமனம் பார்க்கும் பார்வைதானே? விழிக்கும் அழகுக்கும் என்ன தொடர்பு! எதிர்ப்படுகின்ற பொருளைக் காட்டும் கண்ணாடிதானே கண்கள்! கண்ணாடி வழிக்காணும் பொருளின் அழகைக் கணிப்பது நெஞ்சந்தானே! உணர்வு அடிப்படையில் அமைந்த இந்த விருப்பு வெறுப்புக்களில் தாம் என்ன வேற்றுமை...

## கடற்கன்னி

இந்தக் கதிரவன் காலையிலும் மாலையிலும் தண்ணிய ஒளியும் அழகிய வடிவும் நிறமும் கடலுக்கு அண்மையில் இருக்கும் போது பெறுகின்றானே எப்படித் தெரியுமா? கடற்கன்னியின் இனிய தாலாட்டும் பண்ணின் இனிமையும் தண்மையும் அவன் நெஞ்சை நிறைவிக்கின்றன. அவளின் இன்னோசையை விட்டு எட்டிப் போகப் போக அவன் உடல் வேகத் தொடங்கிவிடுகின்றது. இன்னோசையை நெருங்க நெருங்கத் (மாலையில்) தண்மை ஏறுகிறது. கதிரவன் வெம்மைக்கும் தண்மைக்கும் இக்கடற் கன்னியே காரணமாகின்றாள்.

(15.10.66)

◆

## தமிழ்ச் சங்கத்தில் இலக்கியப் போட்டிகள்

காலையில தமிழ்ச்சங்கப் போட்டிகள் நடந்தன. யானும் ஒரு நடுவராக இருந்தேன். சின்னஞ்சிறு மகவுகளின் முகங்களைப் பார்க்கையில் உவகை ஊற்றெடுக்க நெஞ்சம் அமைதியான இன்பக்கடலில் மிதக்கின்றது. பாரதியின் குழந்தைப் பாட்டின் சில வரிகளை ஓரிரு குழந்தைகள் இசையோடு பாடின. செவியில் தேன் பாய்ந்தது. உயர்நிலைப்பள்ளிக்கான பேச்சுப்போட்டியில் பங்குகொண்ட பெண்கள் ஏற்கனவே ஒவ்வொரு தலைப்பில் கருத்துக்கள் சேர்த்து மனப்பாடம் செய்து வந்தனர். போட்டிக்கு ஐந்து மணித்துளிகளின் முன் கொடுத்த தலைப்போ 'பாரதியும் நாடும்' என்பதாம். 'பாரதியின் சுதந்திரப்பள்ளு' 'பாரதி பாடியவன் கம்பனா காப்பியனா?' முதலிய தலைப்புக்களில் பேசிய இருபெண்களின் பேச்சு கருத்துச் செறிவாய் இருந்தது. எனினும் போட்டித் தலைப்பிற்குப் பொருந்தாமையான் பரிசு வாய்ப் பில்லை. போட்டிகள் 12 3/4 மணியளவில் முடிந்தன. தொடக்கப் பள்ளி மாணவ மாணவியர் நிறையபேர் கலந்து கொண்டமை பாராட்டற்குரியது...

## தில்லானா மோகனாம்பாள்

மாலை நான்குவரை உறக்கம். பின் 'கலைமணி'யின் தில்லானா மோகனாம்பாளைப் படித்தேன். பாதிகூட இன்னும் முடியவில்லை. கதைத்தலைவி மோகனாம்பாள் மேல் ஐயங் கொண்டு நாதசுர சண்முக சுந்தரம் வருந்தவும் வெறுக்கவும் செய்ய ஆசிரியன் ஏற்படுத்தும் சில சூழல்கள் பொன்விலங்கில் மோகினி மேல் இறுதியில் சத்தியமூர்த்தி வெறுப்படைய மணிவண்ணன் ஏற்படுத்தும் சூழல்களை நினைவூட்டின. மணிவண்ணன் தில்லானா மோகனாம்பாளைப் படித்திருக்கலாம். பொன்விலங்கைத் திறனாயும் போது இவ்வொப்புமையைச் சுட்டவேண்டும்.

(16.10.66)

◆

## ச.வே.சு. கட்டுரை

நல்ல உறக்கம். சின்னாட்களாகக் காலை ஐந்து மணிக்கே விழிப்பு ஏற்படுகிறது. இனி ஐந்திற்கே எழுந்து படிக்கத் தொடங்கிவிட வேண்டும். தென்னரசு தேர்தல் நிலைபற்றி விரிவாக எழுதியிருந்தார். தமிழ்ச்சிட்டில் என் பாடல் நன்றாக இருந்த தெனவும் எழுதியிருந்தார். வீ ஊரினின்று மீண்டார். பாரதிவிழா அழைப்பிதழ்களை உறுப்பினர்களிடம் கொடுத்தேன். இன்று பேரா விடுமுறை. ஆதலால் தான் படிக்க இருந்த கட்டுரையைப் படிக்கத் தயங்கிக் கட்டுரை முற்றுப்பெறவில்லை என இபெ சொல்லி விட்டார். பேரா இன்றெனில் துறையே இன்றென ஒரு நினைப்பு. ஆசிரியர்களிடம் புகுந்துகிடக்கும் கோழைமையை என்னென்பது! அவர்க்கு மாறாக சவேசு சிலம்பு - மருமக்கள்வழி மான்மிய மொழிநிலை பற்றிய கட்டுரையைப் படித்தார். படிக்க முன்வந்தமையும் படித்தமையும் எண்ணி மகிழ்ந்தேன். கருத்தரங்கு இனிது இயன்றது. 'காரன்' விகுதி சிலம்பில் இன்று மான்மியத்தில் உளது என்றார். 'சிலம்பில் தோலின் துன்னரும் துன்னகாரரும்' என வரும் பகுதியை யான் சுட்டிக் காரன் விகுதி வருகின்றதே என்றேன். இதைப்பற்றி எண்ணுவதாகக் கூறினார். வேறு சில வினாக்களை யும் கேட்டேன். பின் படிக்க அமர்ந்தேன். தாமோ பாமணி முதலியோர் இடையிடைப் பேசிப் படிக்க விடவில்லை. எட்டுமணியளவில் அறைசென்று உணவு முடித்து அசொவின் அழைப்பால் அவர் வீட்டிற்குச் சென்றேன். துறை, சங்கம் பற்றிப் பல பேசினோம். தமவேலிற்குப் பாரதிவிழாக் கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு கிடைத்தமையையும் க.சு.விற்குச் சம்பள உயர்வு கிட்டியமையையும் அறிந்து மீண்டேன்.

(17.10.66)

◆

## பாரதி விழா

மாலை 4¾ மணியளவில் பாரதிவிழா நடைபெறும் கிரந்தசாலா மன்றத்திற்கு அ.சொ, வீ யொடு சென்றேன். பரிசு நூல்கள் தரமில்லாதவையாயிருந்தன. எம்.ஏ. மாணவர்க்காய கட்டுரைப்போட்டிக்கு முதற்பரிசொன்றே கொடுப்பதெனவும் பரிசு மதிப்பு உருபா ஐந்திற்குக் குறையாதிருக்க வேண்டுமெனவும் முன்பு முடிவெடுத்திருந்தோம். 'இரகுநாதன் கவிதைகள்' என்ற ஒரே நூலையே எம்.ஏ. மாணவர்க்குப் பரிசு கொடுப்பதெனவும் அதுவும் முதற்பரிசுத் தகுதியை எக்கட்டுரையும் பெறவில்லை. சிறப்புப் பரிசென்று ஒன்றைக் கொடுத்தால் போதுமென நடுவர்கள் சொல்லியதாகவும் தி.வே.தி. சொன்னார். போட்டிக்கு வந்த இருகட்டுரைகளுமே தகுதியானவை என்பதையும் ஐந்து உரூபாய்க்குக் குறையாது பரிசு கொடுக்கவேண்டும் என்ற செயற்குழு முடிவையும் அறிந்த எனக்கு திவேதி கூற்றின் பொய்மை விளங்கியது. மேலும் முதற்பரிசு முதல் மூன்றாம் பரிசு வரை எல்லாப் பரிசுப் பொருள்களின் மதிப்பும் ஒரே அளவில் இருந்தது. இப்படி யான் எங்கும் பார்த்ததில்லை. அறத்திற்கு ஓர் ஊக்கப்பரிசு கொடுக்க அ.சொ. விரும்பி ஒருநூல் வாங்கினார். அந்நூலைக் கொடுக்க மறுப்பதும் வெறுப்பதும் போல் இருந்தது திவேதி, நாறும்பூப் போக்கு. எல்லாவற்றையும் பார்த்து எனக்குச் சினம் பொங்கியது. வேகத்தோடு எண்ணிய எல்லாவற்றையும் சொல்லி 'ஏண்டா சங்கத்தில் சேர்ந்தாய்' என்று எங்களைக் கேட்பது போல இருக்கிறது உங்கள் செய்கை' என்று கூறினேன். பின் முருகேசன், நாறும்பூ முதலியோர் அமைதிப்படுத்துவதைப் போல் பேசினர். பின் 6.5க்கு விழா தொடங்கியது. தலைமை தாங்கிய செங்கோட்டை நகராட்சித் தலைவர் சட்டநாதன் நாடு இன்று இருக்கும் அவலநிலையைப் பாரதி காணப்பொறான் என்றும் கலப்படம், மாணவர் ஒழுங்கு முதலியவற்றின் நிலையை விளக்கியும் முன்னுரையில் பேசினார். முடிவுரையில் இன்றைய இளைஞர்கள் உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்றார். பொதுவாக நல்ல நெஞ்சர் என்பதை உணர்ந்தேன். முருகேசன் பாரதியின் சில கதைகளைப் பற்றிப் பேசினார். சனார்த்தனம் பிள்ளையின் பேச்சு கதை நிகழ்ச்சி செய்வதைப்போல் இருந்தது. அவர் பேசிக் கொண்டிருக்கும்போது மன்றத்தின் இறுதியில் அமர்ந்து மூவர் ஒலியெழுப்பிப் பேசிக் கொண்டிருந்தனர். யான் எழுந்து சென்று பார்த்தால் அம்மூவரும் தமிழறியா மலையாளிகள் என்று தெரிந்தது. கூட்டத்தில் குழப்பம் விளைக்க வந்தவர்கள் போன்றே தெரிந்தது. ஒழுங்காகப் பேச்சைக் கேட்க விரும்பின் கேளுங்கள். இன்றெனில் வெளியேறுங்கள் என்றேன். அமைதியாகப் பேசாதிருந்தனர். அவர்கட்கு முன்

இருந்த பலகையில் யான் அமர்ந்திருந்தேன். யான் அமர்ந்திருந்த பலகையில் காலை வைத்து ஆட்டிக் கொண்டிருந்தான் ஒருவன். ஆட்டாதே என்றேன். முறைத்தான், செருப்பைக் கழற்றி அடிக்கலாம் போன்றிருந்தது. நண்பர்களை அழைத்துக் கழுத்தில் கைபோட்டு வெளியே அனுப்பலாமா என்றெண்ணினேன். மூவரின் முகத்தையும் செய்கையையும் பார்த்தால் அழுகிய நெஞ்சப் பயல்களைப் போலிருந்தனர். சிவதாணுவும் அவர் நண்பர்களும் வேறு என்னிடம் வந்தனர். சிவதாணு என்னமோ சொன்னார். பின் பேசாமல் அப்பயல்கள் இருந்தனர். காவலர்களிடம் ஒப்படைக்க வேண்டிய ஆட்கள்! என்ன தொழில் செய்கிறார்களோ? நாம் அவர்களை அடிக்க அதனால் எழும்பூசல் இறுதியில் தமிழன் மலையாளித்தகராறில் கொண்டுவிடலாம் என்றெண்ணி யானும் அமைந்தேன். விழா 9 1/2க்கு முடிந்தது.

(18.10.66)

◆

## தஞ்சை செயராமன், தண்டபாணி மடல்

செயராமன் (தஞ்சை) தண்டபாணி ஆகியோரிடமிருந்து மடல்கள் வந்தன. செயராமன் "மூன்றாண்டுக்கு மேலாகத் தங்களிடையே மடற்றொடர்பு கொண்டும் தங்களின் முகம் காண இயலாமைக்கு ஒருவகையில் வருத்தமடைகிறேன். எனினும் ஓர் ஆசிரியனாக வெளிவந்தபின் தங்களைச் சந்திப்பதில் பெருமை யுண்டு என்றெண்ணி உள்ளேன்" எனக் குறித்திருந்தார். நீண்ட நாட்களின் பின் எழுதிய தண்டபாணி "உங்களை என்றும் நானும் என் அண்ணன் சண்முகமும் மறப்பதேயில்லை. நாங்கள் தொழும் கடவுள் நீங்கள்தான். நானும் அண்ணனும் கோவிலுக்குச் செல்லுவதோ அங்குள்ள கற்சிலைகளைக் கும்பிடுவதோ கிடையாது. உலகில் கடவுள் உண்டென்றால் உங்களைப் போன்ற ஒருசில உயர்ந்த எண்ணங்கொண்டு வாழும் இலட்சிய மனிதர்களைத்தான். எங்கள் குடும்பத்தைப் பொறுத்தவரை, அந்த உயர்ந்த எண்ணங்கொண்ட அந்த இலட்சியம் கொண்டவர் நீங்கள்தான். அதனால் தான் நீங்கள் எங்களுக்குப் போற்றித் தொழும் கடவுளாகிக் காட்சி தருகிறீர்கள். உங்கள் இலட்சியம் வாழவும் உயர்ந்த எண்ணங்கள் வெற்றிபெறவும் நீங்கள் எதிர்கால வாழ்வில் தடங்கலின்றி முன்னேறவும் வாழ்த்துக் கூறி அச்செயல் களில் வெற்றிபெற நாங்களும் என்றும் உங்களோடு உதவி செய்வோம் என்றும் பணிவுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என எழுதியிருந்தார். மிகையான புகழ்ச்சிக்கு நாணினும் என் மெய்ம்மை வேட்கையை உணர்ந்த நெஞ்சமறிந்து

மகிழ்ந்தேன். அப்புகழ்ச்சிக்கு மிகவும் உரிய நிலைக்கு என்னை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். தண்டபாணி மேலும் குணமங்கலம் பெரியகணேசன் துணைவியார் மறைந்தமை பற்றியும் குறித்திருந்தார். இளமைச்சாவு பெருந்துயர் விளைப்பது. என் செய்வது? நெருநல் உளரொருவர் இன்றில்லை. நில்லா உலகமிது...

## முகவரி எழுதும் முறை

மடல்களில் இப்போது ஆட்பெயர் - தெருப்பெயர் - ஊர்ப்பெயர் வட்ட மாவட்ட மாநிலப் பெயர்களென்ற வரிசையில் முகவரி எழுதுகிறோம். முன்போ 'திருச்சி மாவட்ட இலால்குடி வட்ட இராமநாதபுரத்தில் உள்ள பூங்குன்றன் கையில் கொடுப்பது' என்பதுபோல் மாவட்டந் தொடங்கி இறுதியில் பெயர் குறிக்கப்படும். மாந்தன் புறஉலக வளர்ச்சியில் எப்படித் தனக்கு முதலிடமும் பிறகு தான் உள்ள தெரு, பின் ஊர், வட்டம் மாவட்டம் எனப் பிறநிலைகட்கு அடுத்தநிலையும் கொடுக்கிறான் என்பதை இம்முறையால் உணரலாம். மாநில அடிப்படையில் பிற மாவட்டங்களை விடத் தன் மாவட்டத்தையும் மாவட்டத்தில் உள்ள வட்டங்களில் பிற வட்டங்களைவிடத் தன் வட்டத்தையும் வட்டத்துக்குள்ளே தன் ஊரையும் ஊருள்ளே தன் தெருவையும் தெருவுள்ளே தன்னையும் எப்படி வேட்டு நிற்கின்றான் இந்த மாந்தன். பற்று, பல குறுகிய நிலைகட்குட்பட்டு நிற்பதுதான் நடைமுறை உலகச் செயற்பாடு போலும்...

## வானொலிக்காக: கலப்புத் தமிழா? தனித்தமிழா?...

பிற்பகல் அறைக்குச் செல்லாது மாலை ஐந்தரை வரையில் துறையிலேயே இருந்தேன். பின் அறைசென்று ஏழரை மணி அளவில் அசொ வீடு சென்றேன். வீ, அறம் வந்தனர். அங்கேயே சிற்றுண்டி முடித்தோம். அசொ அவர்களின் துணைவியார் விருந்தோம்பும் கலை கைவந்தவர்கள். சிற்றுண்டியின் பின் பத்து மணிவரை அசொவும் வீயும் 'கலப்புத் தமிழா தனித்தமிழா' என்பது பற்றி வானொலியில் பேசுவது தொடர்பாக நால்வரும் உரையாடி கருத்துக்கள் திரட்டினோம். உரையாடல் நன்கமைந் திருந்தது. நம்மொழிக்கு ஆக்கந்தரும் பிற மொழிக் கூறுகளை அவை நம் மொழியில் இல்லாதிருக்குமாயின் நம் மொழியின் ஒலியமைப்பு முதலிய உயிர்ப்பகுதிகள் கெடாவண்ணம நம் மொழியியல் பிற்கேற்ப ஏற்றுக்கொள்ளலாம் என்ற முத்தாய்ப்போடு முடித்தோம்.

(19.10.66)

◆

## இகோ வந்தார்

நண்பகல் பன்னிரண்டரை அளவில் இகோ வந்தார். விழா சிறப்பாக இல்லை என்றதோடு ‘நீங்கள் புறநிலையில் (சங்கச் செயற்பாடுகளில்) அதிகத் தொடர்பு கொண்டால் ஆய்வு பாதிக்கப்படும். புறநிலை ஈடுபாட்டைக் குறைத்துக்கொள்ளுங்கள்’ என்றார். யான், சங்கத் தொடர்பாக இங்குள்ள நீங்கள் செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் நான் செய்ய வேண்டியிருக்கிறது. நீங்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு என்னை விட்டால் பளு குறையும்’ என்றேன்.

*(20.10.66)*

◆

## சாத்தையா மடல்

சாத்தையாவும் அக்கா கணவரும் எழுதியிருந்தனர். ‘குடும்பத்தில் எல்லோரும் நலம். இளையான்குடி பறம்புக்குடித் தொகுதிகளின் பொறுப்பு என் கையில் விடப்பட்டுள்ளது. அடுத்த தேர்தலில் போட்டியிடுவதைப் பற்றி எண்ணலாம்’ என்று சாத்தையா எழுதினார். குமரி மாவட்டக் குளச்சலில் தான் பேசியதாகவும் மறுநாள் திருவரங்கத்தில் பேசவேண்டியிருந்ததால் அனந்தைக்கு வர இயலவில்லையென்றும் எழுதியிருந்தார்...

## முரசொலி வரவழைத்தல்

பிற்பகலில் நல்லதம்பியை அவர் வீட்டில் பார்த்தேன். அவரின் இல்ல முகவரிக்கே முரசொலியை வரவழைக்க ஒப்புக் கொண்டார். செல்லத்தின் மாமா, இதழ் அவர் விடுதிக்கு வருவதை விரும்பவில்லை போலும்.

*(21.10.66)*

◆

## அண்ணா செய்ததே சரி

அறத்தொடு வீ அகத்திற்குச் சென்றேன். உப்புமா, இட்டளி நிறைவொடு உண்டோம். தமவே, வவே, இராசு எல்லோரும் எங்கட்கு முன்பே உண்டுகொண்டிருந்தனர். 8¾ அளவில் ‘தனித்தமிழா கலப்புத்தமிழா’ உரையாடல் ஒலிபரப்பப் பட்டது. குறுகிய காலத்தில் எழுதப்பட்டதெனினும் சிறப்பாக இருந்தது. பின் மொழி, அரசியல் தொடர்பாகச் சூடும் சுவையும் பொதுள உரையாடினோம். அண்ணா இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் மாணவர்கள் ஈடுபட்டபோது கிளர்ச்சியைக் கைவிடச் சொல்லி

அறிக்கை விட்டிருக்கக்கூடாது. தலைமை யேற்றுப் போரை நடத்தியிருக்க வேண்டும் என்றனர். அண்ணா செய்த செயலே சரியானது என யான் வாதிட்டேன். பின் எல்லோரும் 'செம்மீன்' 'பத்துமணிக் காட்சி கண்டோம். இரண்டாம் முறையாக யான் பார்த்ததால் உரையாடலில் நயமான பகுதிகளை முன்னையினும் சுவைக்க முடிந்தது. 12 1/2க்குப் படம் முடிந்ததும் மதனன், அப்பன், இகோ ஆகியோர்க்குத் தென்மொழி, தமிழ்ச் சிட்டு கொடுக்கப் போனேன்.

*(23.10.66)*

◆

## தென்மொழியில் 'படைவேண்டும்' பாடல்

க.சு. தென்மொழியில் வந்த என் பாட்டைப் படித்துப் பின் என்னிடம் வந்து நன்றாயுளது என்றார். சில பகுதிகளைக் குறிப்பிட்டுச் சொன்னார். வீயின் வானொலிப் பேச்சைக் கேட்டதாமோ பழைய பண்டிதபாணியில் இருந்ததாகக் கூறினார். பழம் புலவர்கள் எதற்குமே தகுதியற்றவர்கள் என்று கருதுகின்றாரோ? உறுதியாக என் 'படைவேண்டும்' பாட்டை இவர்கள் பார்த்திருப்பார்கள். உதைக்க வேண்டும் என யான் பாடியது அவர்களையே என எண்ணியிருக்கக்கூடும். நண்பகல் உணவிற்கு அறை செல்லுங்கால் அகுடம் 'உதைபட வேண்டிய ஆட்களில் யானும் ஒருவனாய் இருக்கலாம்' என்றார். என் எண்ணம் பாட்டில் முழு அழுத்தம் பெற்றிருப்பதை உணரமுடிந்தது. மேலும் குடம் 'தமிழ் இனிமையான மொழியாயிற்றே என்றார். தீமையை அழிப்பதில் எவ்வளவு இனிமை இருக்கிறது தெரியுமா? வள்ளுவன் கூட 'கரும்புபோல் கொல்லப்பயன்படும் கீழ்' எனப் பாடியுள்ளமையைச் சுட்டி இழிதகையரை உதைப்பதோடு பல்லையும் உடைக்கவேண்டும் என்றேன்.

*(24.10.66)*

◆

## கருத்தரங்கில் போரிடலாம்

மாலையில் கசுவைப் பார்த்தேன். வரும் திங்கட்கிழமை கருத்தரங்கில் படிக்கப் போகின்ற கட்டுரையைப் பற்றிப் பேசினார். இன்றையத் திறனாய்வின் போக்குப்பற்றியும் புதினங்களில் வளரும் இயல்பியப் (Naturalism) போக்கைச் செயகாந்தனின் 'யாருக்காக அழுதான்' 'கைவிலங்கு' மூலம் காட்டியும் கட்டுரை எழுதுவதாகச் சொன்னார். Naturalism என்பது இயற்கையே கடவுள் என்னும் கொள்கை என்ற ஒரு பொருளையும் சுட்டுவதை அகரவரிசை வழி

அறிந்தேன். கசு புதினங்களில் குறிப்பிலுணர்த்தும் போக்கு (Suggestion) இருத்தல் சிறப்பு என்றார். எழுத்தாளன் காவல்துறை நாயின் பின் ஓடும் காவலன் போல்தான் நாயின் பின்னே ஓடவேண்டுமே தவிர நாயை இங்கு போ அங்கு போ எனக் கட்டளையிட்டு அறிவுரை கூறி நிற்பது அவன் வேலையன்று என்றார். கருத்துக்கள் எப்படி? என்று கேட்டார். கருத்தரங்கில் போரிடலாம் என விடைபெற்றேன்.

*(26.10.66)*

◆

## கீழ்மைப் பிணியில் உழலும் மாணவர்கள்

முதல் மணி வகுப்பு. நெருங்குயிர் திறப்புயிர் பற்றிய ஓர் ஐயத்தை வேல் எழுப்பியது. தெளிவுபடுத்தினேன். எழுத்துப் பெயர்ப்பு, ஒலி அட்டவணை ஆகியவற்றைச் செய்து மாணவர்கள் கொணர்ந்திருந்தனர். வகுப்பில் இவே என்ற மாணவன் இரண்டு கைகளை விரித்துப் பரப்பிக் கொண்டு அமர்ந்திருந்தான். ஏனோ தானோப் போக்கில் அவன் பாடங்கேட்பதுபோல் எனக்குப் பட்டது. பாடத்தொடர்பாக ஒருவினா எழுப்பினேன். விழித்தான். நடத்திய பாடப்பகுதியைப் படிப்பதில்லை எனத் தெரிந்தது. மேலும் என் வகுப்பன்றிப் பிற வகுப்புகளிலும் தொடர்பற்ற வீண் வினாக்களை அவன் கேட்பதாக வவே, பன்னீர் சொன்னார்கள். வகுப்பு மாணவர்களே அவன் கேள்வி கேட்பதை வெறுக் கின்றார்கள் என்பதையும் அறிய முடிந்தது. படிப்பதுமில்லை, பண்பாக நடப்பதுமில்லை என்பதால் எனக்குச் சினம் ஏறியது. 'வகுப்பில் ஒழுங்கான முறையில் அமர்ந்திரு. இல்லையேல் வெளியில் போ. கண்டபடி எல்லா வகுப்புக்களிலும் கேள்வி கேட்பது எல்லாவற்றையும் படிக்காமல் வருவது ஒழுங்கான முறையில் பண்போடு வகுப்பில் நடந்துகொள்' என்றேன். பேசாமல் தலையைக் குனிந்தவாறு கேட்டுக் கொண்டிருந்தான். வகுப்புகட்கும் ஒழுங்காக வருவதில்லை. வருகைப்பதிவு குறைந்திருக்கும். எதிர்காலத்தில் போக்கை மாற்றிக் கொள்கிறானா எனப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். நன்னூலார் கடை மாணாக்கனை எருமைக்கு ஒப்பிட்டுள்ளமைக்கு இலக்கியமாக உள்ளவன் இவன். இவன் போன்றோர் நாளை வெளியுலகில் தமிழாசிரியர்களாய்ப் போய் எப்படிப்பட்ட மாணவர்களை உருவாக்குவார்கள் என்பதை எண்ணுங்கால் என் நெஞ்சம் துடிக்கிறது. நல்ல மாணவர்களும் கெட்டுப் போவார்களே!

நீடிய பிணியால் வருந்துநின் றோரென்<br>
நேருறக் கண்டுளந் துடித்தேன்'

என வள்ளலார் துடித்தாரே அப்படிக் கீழ்மைப் பிணியில் உழலும் இத்தகையோரைக் கண்டு என் நெஞ்சம் பதைக்கின்றது.

*(27.10.66)*

◆

## மெய்நீட்சி

காலைக் கருத்தரங்கில் மெய்நீட்சி (Consonant lengthening) தொடர்பாகப் பேச்சு எழுந்தது. மெய்நீட்சி பெறுவது உண்டு என்றார் பேரா. 'யான் உயிர்நீட்சி பெறுவது .போன்றதா இதுவும்' என வினவினேன். 'இரண்டிற்கும் வேறுபாடு உளது. அது நீட்சி என்பதற்கு நாம் கொடுக்கும விளக்கத்தைப் பொறுத்தது' என்றார். மெய்நீட்சி என்று சொல்வது சரியா என்பதே வினாவிற்குரியது. உயிர் நீட்சியில் ஓர் உயிரே அளபெடுத்து ஒலிப்பதை நீட்சி என்கிறோம். ஆனால் இரண்டு மெய்இணைப்பை (ஓரின) மெய்நீட்சி என்கிறோம். நீட்சி என இணையைச் சொல்வது பொருந்துமா என்பதே கேள்வி. இதை மெய்நீட்சி என ஒத்துக்கொண்டால் கால்டுவெல்லின் இரண்டு உயிர்களின் இணைப்பே ஒரு நெடில் (அ+அ=ஆ) என்ற கருத்தையும் ஒத்துக்கொள்ளவேண்டி வரும். நீட்சி பற்றிய தெளிவான கருத்து இன்னும் ஏற்படவில்லையென்றே கருதலாம்.

*(29.10.66)*

◆

## 'யாருக்காக அழுதான்' மீண்டும் படித்தேன்

'மீண்டும் யாருக்காக அழுதான்' குறும்புதினத்தைப் படித்தேன். கதையில் உள்ள சில குறைபாடுகள் இப்போது புலப்பட்டன. நல்லமுறையில் திறன் செய்யவேண்டும். உணவு விடுதி முதலாளியின் பணத்தேவையைக் கதைத் தொடக்கத்தி லேயே காட்டுவதும் அத்தேவையாலாயே வடநாட்டுச் சேட்டின் பணத்தைப் பதுக்கிவைப்பதைப் பிற்பகுதியில் காட்டுவது நன்று. விடுதியில் தங்கியுள்ள பெண் (பரத்தை) படைப்பு சிறப்பு. கடை முதலாளி, சமையல் நாயுடு, விடுதியில் தங்கியுள்ள சூதாடி, அவன் நண்பன் லுங்கிக்காரன் ஆகிய பாத்திரங்களும் நன்றாக உருவாக்கப்பட்டுள்ளன. கதைத்தலைவனாகிய சோசப்பின் பாத்திரப்படைப்பில் தெளிவில்லை. அவன் ஓர் அப்பாவிக் குழந்தையா அன்றி வேதாந்தியா எனத் தெரியவில்லை. 'அவனுக்கு எழுத்துவாசனை இல்லை. அழவே தெரியாது சிரிக்கவும் தெரியாது, அவன் அம்மா இறந்தபோதும் கூட அவன் அழுததில்லை. தான் வைத்திருக்கிற குரங்குப் பொம்மையின்

பொருளே தெரியாமல் அதைப் பலமுறை பார்த்துக் கொண்டே இருத்தல், நாயுடுவிடம் 'ஆண்டவனே கெட்டது என்றால் என்ன' எனக் கெட்டதைப் பற்றி அறியாத குழந்தையைப் போல் கேட்டல் முதலிய ஆசிரியர் குறிப்பிடும் பகுதிகளைப் பார்க்கும்போது அவன் ஓர் அப்பாவியாகத் தெரிகிறான். அடுத்து அழகுநிறைந்த மாமன்மகள் பார்வதியைத்தான் மணந்து கொண்டது 'மகாபாவம்' என நினைத்து மாரிமுத்தோடு தொடர்புகொண்ட அவளிடம் 'எப்பொழுது நீ வேறொருவன்மேல் ஆசைவைத்துவிட்டாயோ அப்பொழுதே என் மனைவி இல்லை' எனக் கூறிவிட்டு அந்த மாரிமுத்துவிற்குத் தான் பார்த்த வேலையை வாங்கிக் கொடுத்து விட்டு ஊரைவிட்டு வெளியேறல், தன் ஊரைப்பற்றி நாயுடுவிடம் கூறும்போது 'அழகில்லாத பெண்கள் என்பதை மறுத்துத் தன் பார்வதியின் அழகைப் புகழ்வதோடு அழகு என்பது ஆசையைப் பொறுத்தது என விளக்கமளித்தல், தன் மனைவியொடு தொடர்பு கொண்ட மாரிமுத்துவை ஏன் அடிக்கவில்லை என்பதற்கு ஏசுகிறித்துவின் வாழ்க்கை நிகழ்ச்சி யொன்றை நாயுடுவிடம் சுட்டிக்காட்டல், பணப்பையைக் கண்ணால் பார்த்த சோசப்பு அதை எடுத்தவரைச் சொல்லாததற்கு மகாபாரதக்கதை யொன்றைச் சான்றாக்கப் பரத்தையிடம் காரணம் கூறல், நாயுடு அவனைத் தனிப்பிறவி எனப் புகழல், இறுதியில் முதலாளி 'ஆண்டவனே என்னை மன்னிச்சிடு' எனச் சோசப்பை வேண்டல் முதலிய பகுதிகளை நோக்கும்போது இன்பந்துன்பங்கடந்த உலகியலறிந்த வேதாந்தி யாகத் தெரிகிறான். சோசப்பின் இனங் கண்டு கொள்வது எளிதாக இல்லை. உலகறியாக் குழந்தையா, குறிக்கோள் மாந்தனா எனில் விடை? கதையில் இறுதிப் பகுதியில் ஆசிரியன் வழுக்கி விழுந்துவிடுகிறான். சோதனைப் போட காவலர்களை அழைக்க ஆள் அனுப்பிய நாயுடுவே 'காவல் நிலையத்தில் புகார் செய்யப் போக வேண்டுமாதலால் சேட் அவரின் குப்பாயத்தைப் போட்டுக் கொள்ள வேண்டுமாம். 'அவர் அறையைப் பூட்டாதீர்கள்' எனல் முரண்பாடுடைத்து. சேட்டு அறைக்குச் செல்வதில்தான் கதையின் சிக்கல் அறுபடப் போகிறது. ஆகவே அவரை எப்படியாயினும் அறைக்கு அனுப்ப வேண்டி ஆசிரியன் வழுக்கிய இடமிது. 'யாரும் இடத்தைவிட்டு அசையக்கூடாது என நாயுடுவழிப் பேசியிருக்க வேண்டியதில்லை. மேலும் காவலர்களைச் சோதனையிட அழைக்க ஆள் அனுப்பிய நாயுடுவே 'காவல்நிலையம் சென்று சேட்டு புகார் செய்ய வேண்டியதால் குப்பாயம் போட்டுக் கொள்ள அறைக்கு அனுப்புவது ஒரு நொண்டித்தாங்கலே. பொருத்தமாகவும் படவில்லை...

## தண்டபாணி தேசிகரின் இசை நிகழ்ச்சி

*மாலையில் அப்பன் வந்தார். இருவரும் சாலை 'கேப்பு'க் கடையில் கோழி அருந்தினோம். கொழுஞ்சுவை. நிறைவயிறு. பத்மநாபக் கோயிற்கு எதிரிய மணலில் அமர்ந்து பேசிவிட்டுத் தண்டபாணி தேசிகரின் இசை நிகழ்ச்சியைக் (சைவப் பிரகாச சபை) கேட்க வந்தோம். நிகழ்ச்சி 12 மணி வரை நடந்தது. தமவே, வவே முதலியோரும் இருந்தனர். இனிமையும் எடுப்புமிக்க குரலில் நற்றமிழ்ப் பாடல்களைப் பாடினார். சைவப்பிரகாச சபைத் தமிழர்கள் விழா விளம்பரச் சுவரொட்டிகளை ஆங்கிலத்தில் அச்சிட்டிருந்தனர். விழாமன்ற வாயில் முன் மலையாளத்தில் அறிவிப்பு இருந்தது. எதிலும் தமிழைக் காணோம். தமிழன் நடத்தும் விழா! சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்றனவாம் அம்மன்றத்தே! இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால் நெஞ்சு பொறுக்குதில்லை.*

*(30.10.66)*

◆

## திறனாய்வும் புதினமும்

*மாலைக் கருத்தரங்கில் 'திறனாய்வும் புதினமும்' எனுங் கட்டுரையைக் கசு படித்தார். கட்டுரை விரிவும் போதிய வேண்டிய விளக்கம் இன்மையும் உடையதாயிருந்தது. சுருங்கவும் விளக்கமாக வும் கருத்துக்களைக் கூறியிருக்கலாம். (காலையிலேயே என்னைத் தன் கட்டுரையைப் படித்துப் பார்க்க வேண்டினார். எங்கே வினாக்கணைகளால் அவரை வீழ்த்திவிடுவேனோ என்ற அச்சம் அவர்க்கிருந்தது) கைவிலங்கை உண்மைஇயம் (Realism) அடிப்படையில் எழுந்த புதினம் என்றார். ஆசிரியர் செயகாந்தனே 'இராகவையர் எனக்கு ஒரு கற்பனா பாத்திரமாகவே இப்பொழுதும் தோன்றுகிறார்... எனது நல்லுணர்வில் மனித வர்க்கத்தின் மீதுள்ள நம்பிக்கையால் பிறந்தவர்' என முன்னுரையில் கூறுவதைச் சுட்டிக்காட்டி அவர் கருத்தின் மெய்ம்மையை வினவினேன். திறனாய்வுத் தொடர்பாய் வேறுசில வினாக்களும் தொடுத்தேன். அவர் (வளவள என்று பேசினாரே தவிர) வினாக்கட்குச் சரியான விடை தரவில்லை. கருத்தரங்கில் தான் தாளைப் படித்து முடித்ததும் நாற்காலியில் அவர் அமர்ந்து கொண்டு விடையிறுத்தமையும் சவேசு அவரைக் கட்டுரையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எவை அவற்றைக் கரும்பலகையில் எழுதினால் தேவலாம்' என்று கூறியதும் கசு 'கட்டுரையைத் தருகிறேன் வேண்டுமெனில் படித்துப் பாருங்கள்' என்று விடையிறுத்தமையும் பொதுவாக இருவரும் நடந்து கொண்ட போக்கு எனக்கும் வீ, அறம் முதலிய நண்பர்கட்கும் மகிழ்ச்சி*

தருவதாயில்லை. கருத்தரங்கச் செயலாளர்களில் ஒருவராய மணி, தாமோ முதலியவர்கள் கருத்தரங்கிற்கு வரவில்லை. அரங்கு முடிவுற்று யான் மீளுங்கால் இடத்தில் இருந்தனர். இழிதகை நெஞ்சுடை இவர்களைக் கண்டபோது முகத்தில் உமிழ்ந்து விடும் சினமே எனக்கு ஏற்பட்டது. ஓரளவு நல்லவராய மணி பன்றியொடு சேர்ந்த கன்றானார். அடுத்த அரங்கிற்கு வருவாரா எனப் பார்ப்போம். க.சு. தன் கட்டுரையில் தமிழிலக்கிய இலக்கண உரைப்பகுதி மேற்கோள் காட்டியமை நன்று. Technique என்பது புதினத்தின் எல்லாக் கூறுகளையும குறிப்பது என்றார். இக்கருத்து தெளிவாக விளக்கப்படல் வேண்டும். பொருள் (Content) வண்ணனை (Discription) சூழல் தெளிவு (Circumstantial realisation) இயல்பியம் (Naturalism) உண்மையியம் (Realism) உய்த்துணர்வு (Suggestiveness) முதலிய பல கூறுகளைத் தெளிவு போதிய அளவின்றி விளக்கினார். சுருக்கமாக ஒழுங்குபடுத்திக் கட்டுரையை விளக்கியிருந்தால் நன்றாயிருக்கும். கருத்தரங்கு முடிந்த சின்னேரத்தின் பின் சவேசுவைப் பார்த்துக் கருத்தரங்கில் அவரும் கசுவும் நடந்துகொண்ட போக்கைச் சுட்டியதோடு அவர் இனிமேல் பிற ஆசிரியர்களோடு நல்ல முறையில் தொடர்பு கொண்டால் துறைக்கும் அவர்க்கும் தமிழுக்கும் நலம் என்றேன். ஆசிரியரிடை உள்ள பூசல் மாணவரிடைப் பரவல் நன்றன்று என்றேன். பின் கசுவைப் பார்த்தேன். அவர் தான் படித்தபின், அமர்ந்தமை பற்றியும் 'புதுவழக்கம் நன்றா?' என்றேன். கட்டுரை படிப்பதன்முன் ஒருமணி நேரம் தான் பாடம் நடத்தியதாகவும் கட்டுரையை 50 மணித்துளிகள் நின்றுகொண்டே படித்ததால் களைப்பு ஏற்பட்டதாகவும் ஆகவே தான் நாற்காலியில் அமர்ந்து கொண்டதாகவும், வேற்று நோக்கம் ஏதும் இல்லையென்றும், காரிக்கிழமையன்றே தான் சவேசுவிடம்தன் முழு ஒத்துழைப்பையும் தருவதாகச் சொல்லியுள்ளதாகவும் கூறினார். இளைய பெருமாள் கருத்தரங்கிற்கு வரவில்லை. மேலும் தான் கட்டுரை படிப்பதற்கில்லை என்று சொல்லிவிட்டதாகவும்அறம் சொன்னார். பேரா விஜசுவிற்கு முன்பேயே இத்துறையில் பணியாற்றியும் தனக்குப் பதவி உயர்வு வழங்காமை எண்ணி அவர் வருந்துதல் இயல்புதான். எனினும் கருத்தரங்கில் வராததன் மூலம் தன் வருத்தத்தை வெறுப்பாகக் காட்டல் நன்றன்று. "உங்களிடையே தனிப்பட்ட முறையில் எத்தனைக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் தமிழ்த்துறைச் செயற்பாடுகளில் எல்லோரும் இகழும் வண்ணம் அவற்றைக் காட்டிக் கொண்டிருத்தல் கூடாது" என்று கசுவிடம் கூறினேன். தன்னைப் பொறுத்த நிலையில் தான் அந்த எண்ணமே கொண்டுள்ளதாகக் கூறினார். இபெயையும் ஒருநாள் பார்த்துத் துறைத் தொடர்பாய்க் கேட்டுக்கொள்ள வேண்டும்.

*(31.10.66)*

◆

# நவம்பர் - 1966

## இன்றைய தமிழ்த் திறனாய்வின் போக்கு

*திறனாய்வின் பொருள், பயன் இன்றைய தமிழ்த் திறனாய்வின் போக்கு 'யாருக்காக அழுதான்' குறும்புதினத் திறனாய்வு இவற்றைக் கொண்ட ஒரு கட்டுரையைக் கருத்தரங்கில் படிக்கவேண்டும். நறுக்குத் தெறித்தாற்போல் கட்டுரை அமைதல் வேண்டும். தொல்காப்பியத்தைத் தெளிவாகப் படித்து முடித்தால் பயன்மிகும். உரையாசிரியர் தம் அறிவு வளத்தையும் பிழைத்த போக்கையும் வகுத்தறிய வேண்டும்.*

*(1.11.66)*

◆

## வாய்மொழியின்றி வறிதே நிற்றல்

*துறைக்கு வந்த சின்னேரத்தில் யான் எண்ணியாங்கே வேல் உயிரொலி பற்றிய கட்டுரையோடு வந்தது. பட்டம் வாங்கி விட்டாயா? 'உம்'. ஏதும் பரிசு கிடைத்ததா? 'உம்' 'என்ன பரிசு' வாய்க்குள்ளேயே தங்கப்பதக்கம் என்ற முனகல். மறுபடியும் என்ன பரிசு? ஆதிலட்சுமி அம்மாள்* 'Gold Medal'. 'Gold Medal' *என்றால் என்ன' நாணங்கலந்த நகை அரும்பல். 'தங்கப்பதக்கம்'. 'எழுத்துப் பெயர்ப்பு, ஒலி அட்டவணைத் தாள்கள்...'' தோழியரிடம் கொடுத்துள்ளேன் வாங்கிக் கொள்ளுங்கள்' எழுத்துப் பெயர்ப்புப் பாட்டில் (பாவேந்தர்) பிந்தியக்காரிருள் என்று வருகிறதா? பிந்தியந்த என்று வருகிறதா? 'பிந்தியக் காரிருள் என்றுதான்' 'இல்லை பிந்தியந்த என்றே வருகிறது. திருத்தியுள்ளேன். மேலும் அனைத்து நாட்டு ஒலி அட்டவணை ஒன்றும் கொடுத்துள்ளேன். அதை வாங்கிக் கொள்ளுங்கள். இல்லையெனில் வாருங்கள். நான் வேறு தருகிறேன்' 'சரி' 'தமிழ்ச்சிட்டு பார்த்தீர்களா?' 'உம்' அதற்கு ஏதாவது எழுதுவது தானே?' அமைதி - இளநகை எப்போதும் போல் - 'ஏதாயினும் துணுக்கு எழுதலாம். எழுதுவீர்களா?' மறுமொழியில்லை. 'அதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்' 'வேறு ஏதேனும் செய்தி உள்ளதா' ஏதோ சொல்லவேண்டும் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தயக்கம் முகத்தில் தெளிவாய்த்*

தெரிகிறது. 'வாய்மொழியின்றி வறிதே நிற்றல்' 'செய்தி ஒன்று மில்லையே' தலையாட்டல். 'சரி போகலாம்' பிரிவு.

*(2.11.66)*

◆

## முரசொலியிலிருந்து... 'ஆங்கிலத்தில் கைச்சாத்து'

முரசொலியிலிருந்து நேற்றே கைச்சாத்து வந்தது. 425 இதழ்கள் அனுப்பிவிட்டு 465 இதழ்கள் எனக் கணக்குக் கொடுத்திருந்தனர். மேலும் கைச்சாத்து ஆங்கிலத்திலேயே இருந்தது. தமிழறிந்தவர்க்கெனத் தமிழில் இதழ் நடத்தும் தமிழ்ப் பற்றுள்ளவனெனக் கருதப்படும் தமிழன் ஏன் ஆங்கிலத்தில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்கிறானோ? அதோடு பிறமொழிச் சொற்களும் ஏனோ தானோப் போக்கில் கையாளப் படுகின்றன. பணம் விடுக்கும்போது எல்லாவற்றையும் பற்றி விரிவாக எழுதுதல் வேண்டும். பொருட்படுத்துகிறார்களா எனப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இல்லையெனில் அறுவை மருத்துவம் செய்தல் வேண்டும்.

*(3.11.66)*

◆

## தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்

விழித்ததும் 'தமிழ்நாட்டு நாடோடிக் கதைகளை'ப் படித்துமுடித்தேன். நெல்லைப் பகுதியில் வழங்கும் கதைகளைத் தொகுத்துள்ளதாகத் தொகுப்பாசிரியர் குறிப்பிட்டிருந்த போதினும் எம் ஊர்ப்பகுதியில் வழங்கும் புளுகன் மகன் புளுகன், திருடன் மகன் திருடன் முதலிய கதைகளும் உள. அரசி அரசன் தொடர்பான பல கதைகள் நாட்டுப்புறத்தில் வழங்குகின்றன. இளமைச் செவியில் விழுந்த அக்கதைகள் நெஞ்சக்களத்தில் பறந்தும் பறக்காமலும் ஆடிக்கொண்டிருக்கின்றன. மாலை நேரத்தில் புளியம்பழம் பொறுக்கப் போகும்பொழுது புகைவண்டி நிலையத்தின் பக்கத்திலுள்ள சுமைதாங்கியில் அமர்ந்தவாறு இளமை நண்பர்களுடன் எத்தனைக் கதைகள் கேட்டேன்; பற்பலர் வாயிலாகக் குழந்தை வேட்கையொடு கேட்டுமகிழ்ந்த கதைகளெல்லாம் பறந்துபோயின! அரசன், பேய் ஆகியவை தொடர்பான கதைகளே அதிகம். இக்கதைத் தொகுப்பில் அத்தகு கதைகள் அதிகம் இடம்பெறவில்லை. பொதுவாகப் பெரும் பாலான நாட்டுக்கதைகள் பாமர மக்களின் அறியாமையையும் ஏமாற்றையும் அடிப்படையாகக் கொண்டே இயல்கின்றன. இடைக்கால இலக்கியங்களில் ஏறிய அறியாமையின் முழு வடிவை

நாட்டிலக்கியமாகிய இக்கதைகளில் நன்கு காணமுடிகிறது. எல்லாக் கதைகளிலுமே அடிப்படை நோக்கமொன்று ஊடுருவி நிற்கின்றது. அறியாமையைப் பரக்கக் காட்டும் இக்கதைகள் அறிவின் வெற்றியை முடிவாகக் கொண்டுள. மக்களின் மனநிலை, பழக்கவழக்கங்களை வில்லிட்டுக் காட்டுவனவாகவும் இவை உள. இத்தொகுப்பில் வருகின்ற 'வழக்கம்' உடல் உழைப்பும் மூளை உழைப்பும் முதலிய கதைகள் எனக்கு மிகவும் பிடித்தன. ஓர் அரசன் தளதளவென உள அழகிய ஒரு பிச்சைக்காரியை மணந்து கொள்கிறான். அரச உணவு உண்டும் அவள் பருத்த உடல் இளைக்கிறது. பிச்சைக்காரி மன்னனிடம் தனக்குத் தனியறையில் (யாருமன்றி) உணவு வைக்கச் சொல்கிறாள். அவ்வாறே உணவு படைக்கப்படுகிறது. தனியாக அத்தனியறையை உள்பூட்டிட்டு உணவருந்தி வருகிறாள். உடல் வளப்பமுறுகிறது. மன்னன் காரணமறிய ஒரு நாள் அறைக்குள் அவளறியாது ஒளிந்து கொள்கிறான். பிச்சைக்காரியாகிய அவன் மனைவி அறையைத் தாளிட்டபின் சோற்றோடு எல்லாப் பொருளையும் சேர்த்துப் பிசைந்து உருண்டை உருண்டையாகப் பிடித்துவைத்தபின் 'அம்மா தாயே இந்த ஏழைக்கு ஒரு பிடி அன்னம் போடுங்கம்மா' எனப் பழைய முறையில் கேட்டவாறே ஒவ்வொரு உருண்டையாய் எடுத்து அருந்துகிறாள். இதை அரசன் பார்த்துப் பழக்கத்தின் ஆட்சியை அறிந்து கொள்கிறான். இதுவே 'வழக்கம்' எனும் கதை, இக்கதை இராமகிருட்டிணரின் கருவாட்டுக் கூடைக்காரிகள் கதையை அப்படியே ஒத்துள்ளது. வங்க இராமகிருட்டிணரின் கதை பரவிய அளவு இக்கதை பரவவில்லையே! ஏன், தமிழனாய எனக்கே தமிழ் நாட்டுக்கதையாய இது இப்போதுதானே தெரிகின்றது. மூளை உழைப்பின் சிறப்பை 'உடல் உழைப்பும் மூளை உழைப்பும்' வெளிப்படுத்துகின்றது. 'எல்லாம் தெரிந்த ஏகாம்பர முதலியார்' என்ற கதையில் பனங்கொட்டையைக் 'கரடிமுட்டை' என்றும் பாம்புக்குட்டியைக் 'கோணக்க மாணக்கத்தையக்கக்குட்டி' என்றும் யானையை 'இரவில் வருகிற இருட்டின் மிச்சம்' என்றும் உவமிக்கின்றமை நன்று. 'உடும்பிலே போய் இறகு பிடுங்கணும்னு நினைச்சிருக்கானே. அது என்ன ஆமையின்னு நினைச்சான் போலிருக்கு' என்று தன் தம்பியை. அறியாமையைச் சுட்டும் அறியாமை உள்ள அண்ணனின் கதையும் 'உனக்குப் பிறந்தது எத்தனை, ஊரானுக்குப் பிறந்தது எத்தனை' என்ற தச்சரின் கதையும், "உனக்கு மாத்திரமா பெண்டாட்டியாக இருந்தாள், ஊரில் உள்ள எல்லோருக்குமே பெண்டாட்டியாக அல்லவா இருந்தாள்" என்ற அறிவிலித்தம்பி யின் கதையும் நகைவிளைப்பனவாயிருந்தன. மக்களின் அறியாமைக்கூறு கதைகளில் பின்னிக் கிடப்பதைப்போல்

நகைச்சுவையும் மிடைந்து கிடப்பதைப் பல இடங்களில் காண முடிகிறது. பணம் சேரச்சேர மனம் மாறுவதை மாட்டுக்காரன், சுப்பா, சுப்பய்யா, சுப்பய்யா முதலியார்' ஆன கதை காட்டுகின்றது. இக்கதைத் தொகுப்பைப் படித்தபோது நண்பர்கள் வழி கதை திரட்டும் முயற்சியில் இறங்கலாம் என்ற ஓர் எண்ணம் என்னுள் அரும்பியது...

## அழகிரிசாமியின் 'இலக்கியச் சந்திப்பு'

அப்பனொடு 'இராமு' திரைப்படம் சென்றேன். ஓரளவு நல்ல கதை. புறக்காட்சிகளும் நன்று. ஊமைப் பையனாக நடித்தவன் நன்றாக நடித்தான். ஊமைப் பையனைப் பேசச் செய்த முறை நன்று. கோயில்கட்குச் சென்று குறுந் தெய்வங்களை வழிபட்டும் வாய்பேசாது மீளலும் நன்று. பாடல்கள் சிறப்பாக இருந்தன. படையினின்று விடுமுறையில் வரும் கதைத்தலைவன் திரும்பிப் போகாமையும் படையினின்று எந்நடவடிக்கையும் எடுக்காததுபோல் காட்டியிருப்பதும் சிறப்பன்று. உணவு முடித்து இருவரும் பிரிந்தோம். அப்பன் வாங்கிவந்த தீபத்தைப் படித்தேன். இலங்கைக்கு மணிவண்ணன் சென்று வந்த சாயல் இதழில் பரந்து கிடக்கின்றது. அழகிரிசாமியின் 'இலக்கியச் சந்திப்பு' ஓகோ எனக் கூற முடியாவிடினும் ஓரளவு சிறப்பாயுளது. அழகிரிசாமியின் அருந்தமிழ்வேட்கை, கம்பன் பாலுள்ள பத்தி, பாரதி மீதுள்ள ஆர்வம் முதலியவை புலப்படுகின்றன. பாரதிக்குப் பிறகு தமிழில் பாட்டே தோன்றவில்லை என்பதுபோன்ற கருத்துக்கள் சரியன்று. காரண அடிப்படையில் கருத்தைச் சொல்வதினும் அளவிகந்த கம்பன் பற்றால் பிறமொழி இலக்கியப் புலவர்களைப் புறக்கணிக்கும் போக்கும் தெரிகிறது. அதோடு புதிய இலக்கியப் படைப்பாளர்கள் நம் மொழியின் பழமை பற்றிய அறிவு பெறவேண்டும் என்று அழகிரிசாமி வற்புறுத்தும் கருத்து நன்று. மலேயாவில் 'தமிழ்நேசன்' இதழ்க்கு ஆசிரியராயிருந்து அவர் ஆற்றிய பணிகளையும் அறிய முடிகின்றது.

*(5.11.66)*

◆

## பெரியபுராணப் பெண்டிர்: வீயின் கருத்தரங்கு கட்டுரை

மாலையில் கருத்தரங்கு. வீ 'பெரியபுராணப் பெண்டிர்' எனுங்கட்டுரை படித்தார். மனைவியைப் பொருளுக்கு ஈடாகவும் விலையாகவும் கொடுத்தல் - கடன் கொடுத்தார்க்குத் தன் மகளை மணம் செய்வித்தல் - மகளைக் கன்னிமாடங்கட்டிச் சிவனடிச் செல்வியாக்கல் - இயற்பகை தன்மனைவியை அடியார்க்குத் தரல்

- மகன் பிணத்தைக் கணவன் பிணத்தையெல்லாம் பாயுள் பொதிந்து வைத்து விருந்தோம்பல் - பிள்ளைக் கறி சமைத்துப் போடல் - கூந்தலரிதல் - மணமகள் வீட்டில் மணம் நடத்தல் - மணமகள் தந்தை மணமகனின் காலைப் பால்நீர் கொண்டு விளக்கல் - மேல்சாதி மக்கள் வடமொழிப் பெயர்களையும் கீழ்சாதி மக்கள் தமிழ்ப் பெயர்களையும் பெற்றிருத்தல் - முன்பு தமக்குப் பணியாளராயிருந்து தற்போது சிவனடியாராய் உள்ள ஒருவரின் அடியை நீரிட்டு விளக்கத் தன் மனைவி தயங்கியமை அறிந்து அவள் கையைத் துமித்தல் போன்ற பல செய்திகள் கட்டுரையில் கிடந்தன. அன்றை மன்பதையில் சமயவெறியெனும் பின்புலத்தில் அண்டிக் கிடந்த மடமை, பெண் அடிமைநிலை முதலியவற்றையும் கோடைமழை போல ஓரிரண்டு நல்ல நெஞ்சங்களையும் கட்டுரை வாயிலாய் அறிய முடிந்தது. சங்கச் செயற்குழுக் கூட்டம் 7இற்குத் தொடங்கி 8½ அளவில் முடிந்தது. பாகவதரின் சில பாடல்களை வானொலியில் கேட்டேன்.

*(7.11.66)*

◆

## முரசொலிக்குப் பணம் விடுத்தல்

கையிலிருந்து ஆறு உருபாய்ப் போட்டு முரசொலிக்குப் பொருள் பேற்றுரிமைச் சீட்டுவழி முப்பத்திரண்டு உருபாய் விட்டேன். பற்றுச்சீட்டு, பட்டியல் முதலியவற்றை ஆங்கிலத்தி லேயே அச்சடித்துள்ளதைக் கண்டித்தும் தலைப்புச் செய்திகளி லேயே தேவையில்லாப் பிறமொழிச் சொற்கள் இடம்பெறுவதைச் சுட்டியும் மடல்விட்டேன். ஏதாவது மாற்றம் ஏற்படுகிறதா எனப் பார்க்க வேண்டும். இல்லையெனில் ஒருதிங்கள் இதழ்களை எடுத்து வைத்துத் திறனாய்ந்து தென்மொழிக்கு விடவேண்டும். தினமணி, நம்நாடு முதலிய பல இதழ்களையும் திறனாய்ந்து கட்டுரைகள் எழுதவேண்டும்.

*(9.11.66)*

◆

## அசொ வீட்டில் தீபாவளி உணவு

நண்பகலில் அசொ நாளைக்காலை அவர் வீட்டிற்கு விருந்துண்ண (தீபாவளி) அழைத்தார். தவமணியிடம் இத்தகவலைச் சொன்னேன். இதுவரை தீபாவளியன்று தான் வீட்டில் உணவு அருந்தாது விடுதியிலேயே உணவு அருந்தி வந்ததாகவும் கொண்டாடுவதில்லையென்றும் கூறினார். 'தீபாவளி எனக்கு எல்லா நாளைப் போலவும் ஒருநாள். விழாவுமில்லை

துயரமுமில்லை' என்றேன். சைவப் பிரகாசசபையின் கந்தர் சட்டிவிழா அழைப்பைப் பார்த்தேன். மாதர்விழாவில் வேலம்மாள் வரவேற்புரை வழங்கப் போவதாக அச்சிடப்பட்டிருந்தது. இந்த அளவிற்குத் துணிவு வந்தமை பாராட்டற்பாலதே. 7½ மணியளவில் சவேசுவைப் பார்த்தேன். 'சபை' அழைப்பிதழில் இருந்த பிழைகளைச் சொன்னேன். அறியாமையே காரணம் என்றார். சபையார் பேச்சுப்போட்டிப் பற்றி அவர்க்கு விடுத்த அழைப்பையும் மடலையும் பார்த்தேன். எல்லாம் ஆங்கிலத்தில், 'தமிழ் தழைக்கிறதோ' என்றேன். நொண்டிக் கட்டுகள் கட்டினார். 'அடுத்த ஆண்டு அணுவளவாவது இத்திருவனந்தபுரத்தில் மாற்றம் நிகழ்த்திக் காட்டுவேன்' என்றேன்.

*(10.11.66)*

◆

## குடும்பச் செய்திகள் உடனே புறப்படுக

திடுமென 12.11 சனி மாலை ஊர்க்குக் கிளம்பினேன். 6½ மணியளவில் துறையில் வேலை செய்து கொண்டிருந்தபோது என் பெயர்க்குத் தொலைவரி வந்தது. தங்கை மகப்பேற்றில்தான் ஏதும் இடர் விளைந்ததோ என்ற அச்சப்பரபரப்பு. தொலைவரியைப் பிரித்தேன். 'குடும்பச் செய்திகள் உடன் புறப்படுக' என்று அப்பா கொடுத்திருந்தார். என்னவோ ஏதோ என்ற கிளர்ச்சி. செல்வதா? உடன் செல்வதா? தொலைபேசி வழி நிலையறிந்து செல்வதா எனப் பல்வகைத் தயக்க நினைவுகள். வீ, அசொ முதலியோர் சென்று வருதல் நன்றென்றனர். வீ முப்பது உரூபா கொடுத்தார். ஏழரை விரைவு வண்டியில் கிளம்பினேன். உள்ளத்தில் அமைதி யில்லாதபோது உறக்கம் வருமா? புகைவண்டிப் பயணத்தின்போது பரவலாக இருக்கும் பேராயக்கட்சி எதிர்ப்புணர்வை உணர முடிந்தது. உருப்படியான பயன் விளையுமா?

*(12.11.66)*

◆

## திருச்சியிலிருந்து ஊருக்கு

காலை பத்து மணி அளவில் திருச்சி அடைந்தேன். சிறு சிறு தூறல்கள். செல்வம் முடிதிருத்தகத்தில் முகமழிப்பு. பழைய புத்தகக் கடை வாடிக்கைக்காரர்களைத் தேடினேன். மழையால் கடை விரிக்கவில்லை. பழைய வீட்டைத் தேடிப் போனேன். பூட்டியிருந்தது. தூவிய மழையில் நடைபாவினேன். நகர்ப் புகைவண்டி நிலையத்தில் செகந்நாதன் வந்தான். இனிய தம்பி. ஒரு பெண் மகவிற்குத் தந்தை. பயணந்தொடங்கி வீடுவரும்வரை

இணைந்து வந்தான். ஊர்க்குள் செல்லுங்காலும் மழையே. நனைந்துகொண்டே சென்றேன். செகந்நாதன் உடன் வந்ததால் பறைத்தெருவழி சென்றேன். அப்பாயி எனைக் கண்டதும் முதுமைத்தளர்வில் அன்று கண்ணீர் வடித்தது. தங்கை மகப்பெறா நிலையில் மருத்துவமனையில் நலமாய் இருப்பதாய் அறிந்தேன். அப்பா கண்டார். குடும்பநிலை பற்றிச் சொன்னார். அண்ணனின் போக்கு வருத்தந்தருவதாகவே இருந்தது.

*(13.11.66)*

◆

## இலால்குடி மருத்துவமனையில் தங்கை

தங்கையைக் காண்பதற்காக மருத்துவமனைக்குச் (இலால்குடி) செல்லப் புறப்பட்டேன். புகைவண்டி நிலையத்தருகில் என்தாய் மருத்துவமனையிலிருந்து என்னைக் காண்பதற்காக ஊர்க்கு வருவதையறிந்தேன். மிகவும் இளைத்துப் போயிருந்தது. எனக்காக மூன்று வாத்து முட்டைகளையும் காய்கறிகளையும் வாங்கி வந்தது. பின் மருத்துவமனை சென்று தங்கையைப் பார்த்தேன். முகமெல்லாம் சோர்வாயிருந்தது. பழங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டு ஒருமணிவரை பேசிக் கொண்டிருந்து மீண்டேன்.

பூவாளூரில் அரவரசைப் பார்க்கச் சென்றேன். அப்போது தான் அன்பிலில் ஒரு திருமணத்திற்குச் சென்று மாவட்டத்தோடு வந்தார். மாவட்டம் என்னைக் கண்டதுமே 'தந்தியைப் பார்த்ததும் வந்து விட்டீர்களா' எனக் கேட்டார். தந்தி கொடுத்தபோது அப்பா அன்பிலைக் கண்டு இத்தொடர்பாகப் பேசியதாக அறிந்தேன். விடைபெறும்போது 'இச்சிக்கலில் எல்லாம் கவனம் செலுத்தி ஈடுபடாது உங்கள் வேலையைப் பாருங்கள்' என்றார் மாவட்டம்.

*(14.11.66)*

◆

## வயல்களைச் சுற்றிப்பார்த்தல், அண்ணனோடு பேசல்

காலையில் வெளியில் சென்றபோது அப்பா, இராமர் (காலாடி), வேலு முதலியோரோடு சிறிது நேரம் குடும்ப நிலை பற்றிப் பேசினேன். எல்லோரும் கலந்தே பேசிக் கொண்டிருந்தோம். நண்பகலில் எல்லா வயல்களையும் மாணிக்கத்தோடு சுற்றிப் பார்த்தேன். பயிர் செழிப்பாயிருந்தது. கார் விளைச்சல் அருமை யாயிருந்ததாம். அப்பாவின் மேற்பார்வையில் வேளாண்மை சிறக்கிறது. குமுளூர் மைத்துனரும் வந்திருந்தார். கடைசி நடவாகப் பரியாரிவயல் நடவு நடந்தது. மாலையில் சுப்பையனுடன்

அண்ணனைக் கண்டு பேசினேன். அண்ணன் மனத் தூய்மை யோடு பேசவில்லை. தான் குடிக்காத நிலையிலேயே எல்லோரை யும் அடித்ததாகச் சொன்னார். முழுப்பொய். எனக்குச் சினம் வந்தது. தான் செய்த தவறை உணர்வதாகத் தெரியவில்லை. நல்ல அறிவு மயக்கம். எதிரிக்கு இடங்கொடுத்துப் பேசுவதும் எல்லோரையும் அடிப்பதும் வாய்க்கு வந்தபடி பேசுவதும் நல்லதல்ல. அழிந்துபோக வேண்டியதுதான் என்று கூறிவிட்டுப் பின்னர் விரிவாகப் பேசலாம் என்று விடைபெற்றோம்.

*(15.11.66)*

◆

## காதல் பற்றி...

இளவல் மிகவும் தளர்ந்து போய்விட்டார். இந்தக் காதல்தான் மாந்தனை எப்படி ஆட்டிப் படைக்கின்றது. அறிவை அடிமைப்படுத்தி அது ஆடுங்காத்தில் தூசாகப் பறக்கின்றானே இந்த மாந்தன்! வாய் மணக்க இந்தக் காதலைப் பற்றி ஏன்தான் புலவர்கள் புகழ்கின்றார்களோ! உண்மை வாழ்வில் அடைய முடியாத ஒன்றைக் கற்பனையிலாவது கண்டு மகிழலாம் என்ற ஏமாற்றத்தின் அடிப்படையில்தான் அவர்கள் புகழ்ச்சி அமைந்திருக்கும் போலும்! கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றிக் கோதையும் காளையும் மணந்தார்களாம். இலக்கியம் பேசுகிறது. தடுப்பாரும் அடிப்பாரும் இல்லாத காதல் ஏதேனும் உண்டா? இம்மன்பதை தனக்குத்தானே போட்டுக் கொண்டிருக்கும் தளைகள் என்று அறுபடும்? நல்லது செய்ய ஆற்றா மாந்தன் அல்லது செய்ய எவ்வளவு முனைந்து நிற்கிறான்? மன்பதை முன்னேறுகிறதாம்! எதில் முன்னேற்றம்? உள்ளம் அழுகிப்புழு நெளிகிறது சீழ் வடிகிறது. உடலில் நற்குருதியில்லை. சாம்பிப் போனது. நாகரிகமாம் நாகரிகம்! புழுத்த உடலுக்குப் பட்டுச்சட்டை? எதை நினைத்து அழுவது? உள்ளம் இணைந்த இரண்டு பேரைப் பிணைத்து வைக்க மனமில்லாத பேடிகள் அவர்களின் நெஞ்சப்பிணைப்பை அறுத்தெரிய எப்படி ஆர்த்தெழு கிறார்கள்! இணைந்த நெஞ்சர்கள் இருவராலும் நிமிர்ந்து நிற்க முடியவில்லையே! வழியில் போகின்ற நாயெல்லாம் குரைக்கும் அளவிற்கு காதல் தாழ்ந்து போய்விட்டதா? காதலர்க்குப் பாதுகாப்பிருக்கிறதா? காதல் மகனையும் மகளையும் இழிவாகப் பேசவும் இடிக்கவும் அடிக்கவும் தெருத்தொடர்பு, ஊர் உறவு, சாதி ஒற்றுமை காட்டி எத்தனை இழிந்த பிறவிகள் எழுகின்றன! உலகமே! நீ என்றுதான் உருப்படப் போகின்றாயோ? பாரதி பாடினானே நாடகத்தில் திரைப்படத்தில் காதலை நன்றென

வாழ்த்தும் நாட்டுமக்கள் ஊரகத்தில் கிணற்றோரத்தில் காதலென்றால் ஒத்துக்கொள்வதில்லை என்று! உண்மை பொதிந்த கருத்தல்லவா அது! காதலரிடம் நெஞ்சத்தூய்மையிருந்தால் துணிவு பிறக்கும். உலகமே எதிர்த்தாலும் தன்தோளில் அப்பெண் கிளியைத் தொத்திக் கொள்ளச் சொல்லித்தொகை தொகையாய் வரும்பகையைத் தூள் தூளாக்கும் வன்மை ஆடவனுக்குப் பிறக்கும்.

*(19.11.66)*

◆

## நெஞ்சை நெகிழ்வித்த 'லாரன்ஸ் அரேபியா'

மாலையில் வீ யொடு Laurence of Arabia என்ற ஆங்கிலப் படம் பார்த்தேன். படப்பிடிப்பு நெஞ்சை நெகிழ்வித்தது. அன்பின் வலிமையை அருமையாய்க் காட்டியிருந்தார்கள். திரைப்படத்தையும் ஓர் இலக்கியமாகப் படைத்திருந்தமை எண்ணி வியந்தேன்.

*(22.11.66)*

◆

## அழகிரிசாமியின் 'நான் கண்ட எழுத்தாளர்கள்'

அழகிரிசாமியின் 'நான் கண்ட எழுத்தாளர்கள்' என்ற நூலைப் படித்தேன். ஓரளவு நல்ல நூல். புதுமைப்பித்தனைப் பற்றிய சில புதுக்கருத்துக்கள் இருந்தன. டி.கே.சியை அறிந்து கொள்ள முடிந்தது. மொத்தத்தில் உள்ள நிறைவு. காலைப் பொழுதில் பெரும்பகுதி அந்நூலைக் குறிப்பெடுப்பதிலேயே கழிந்தது. பிற்பகலில் எழுத்து இதழ்கள் மூன்றைப் பார்த்தேன். பெரும்பாலான கட்டுரைகளில் கருத்துத் தெளிவில்லை. சொற்றொடரமைப்பும் சரியில்லை. புதிய தமிழ்ச் சொற்கள் பரவலாகக் கையாளப்பட்டிருந்தமை சிறப்பு.

*(25.11.66)*

◆

## இளமையிலேயே ஆங்கிலம்

காலையில் தமிழ்ச்சங்கக் கருத்தரங்குத் தொடக்கம். செல்லுங்கால் உந்து நிறுத்தத்தில் பேட்டா விற்பனையக மேலாளரை அவர் இள மகளொடு பார்த்தேன். அப்பெண் 'Father you got that much' என்று தன் அப்பாவிடம் பேசியது. அவரும் ஏதோ ஆங்கிலத்திலேயே கூறினார். ஆங்கிலப் பள்ளியில் அப்பெண் பயில்கிறது. எப்போதும் தனக்குத் துணையாய் வருவார்

கையைப் பற்றிக் கொண்டே வரும். தமிழனாய ஒருவன் தமிழ் மகவாய தன் பெண்ணை ஆங்கிலப்பள்ளியில் பயில்விப்பதும் அதோடு உரையாடுங்காலும் ஆங்கிலத்திலேயே மொழிவதும் வெட்கமும் வெந்துயரும் தருவதாம். இரண்டு நாள் முன் சவேசு வீட்டிற்குச் சென்றபோது திறவுக்கொத்தில் இணைத்துள்ள என் பெயர்த் தட்டில் தமிழில் பெயரெழுதியிருப்பதைப் பார்த்து 'என்ன தமிழில் எழுதியிருக்கிறது. ஆங்கிலத்திலல்லவா எழுதியிருக்க வேண்டும் என்று அவரின் தமிழ் படிக்கும் மகன்கள் கேட்டமை என் நினைவில் பட்டது. வளரும் முளையிலேயே நஞ்சு ஊட்டப்படுதல் அமிழ்ந்துபோன அடிமை மனப்பான்மை எண்ணி நைந்தேன். எண்ணுறும் போது தமிழையே எண்ணி இசைத்துழி தமிழையே இசைக்கும் தமிழகம் என்று வருமோ?

*(27.11.66)*

◆

## அழைப்பிதழில் 'Sow'

அழைப்பிதழை ஆங்கிலத்தில் அச்சிடுங்கால் மணமகள் பெயர்க்குமுன் 'Sow' எனச் சௌபாக்கியவதி என்பதைக் குறிக்கிறார்கள். sow என்பதற்கு ஆங்கிலத்தில் பெண்பன்றி என்ற பொருள் உண்டு என்பதை அறிந்து கொண்டேன்.

*(28.11.66)*

◆

## பொன்விலங்கு சத்தியமூர்த்தி

குறிஞ்சி மலர்போல் பொன்விலங்கு சிறப்பாக இல்லை யென்றும் சத்தியமூர்த்தியின் பாத்திரப் படைப்பு இயல்பு இறந்தது. அவன் ஆங்கிலத்தில் வகுப்பு நடத்துவது இயற்கையா யில்லை. எந்தத் தமிழாசிரியனால் ஆங்கில வகுப்பு நடத்த இயலும்?' என்றார் தா. 'நீங்களே தமிழ் சிறப்பு வகுப்பு படித்துக் கொண்டு ஆங்கிலப் பேரவையின் செயலாளராக இருந்து மெ.சுந்தரம் நன்கு ஆங்கிலம் பேசுவார் என்று சொன்னீர்களே' என்றேன். ஆங்கிலம் பேசலாம். கவிதையை நடத்த முடியுமா?' என்றார். கவியுள்ளம் காண்கின்ற திறம் இருந்தால் யாரும் நடத்தலாம். ஓர் ஆங்கில ஆசிரியன் கீட்சைத் தமிழ்மாணவர்க்கு நடத்துவதைவிடச் சிறப்பாக யான் தமிழில் நடத்திக் காட்டுகிறேன்' என்றேன். பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் இந்தியைப் பாடமொழி யாக ஏற்க விழைந்த ஆட்சிக்குழு முடிவை எதிர்த்துப் படிப்பு நிறுத்தம் செய்தனர். ஓரளவாவது உணர்ச்சியிருக்கிறதே என்றெண்ணி மகிழ்ந்தேன்...

## 'வீட்டினில் தூர்த்தம்' என்பார்

*உணவுண்டபின் மதனன், இராமசாமி இன்னொரு மாணவர் ஆகியோரொடு அறைக்கு வந்தான். அழகின் சிரிப்பில் கிளியைப் பற்றிய பாடலில் வரும் 'வீட்டினில் தூர்த்தம் என்பார்' என்ற பகுதியை நடத்தும்போது இகோ பார்ப்பனரைத் தாக்குதல் நன்றன்று என உணர்ச்சிவயப்பட்டு சொன்னதாகவும் மாணவர்கள் அத்தொடர்பாய்க் கேட்டதாகவும் அறிந்தேன். பார்ப்பன உணர்வு எழுகின்றதே!*

*(29.11.66)*

◆

## பாவேந்தரின் சௌமியன்

*பாவேந்தரின் சௌமியன் நாடகத்தைப் படித்தேன். காளிதாசரின் சகுந்தலை சாயல் சில இடங்களில் தென்படுவதாக ஓர் உணர்வு. அண்ணாவின் ஒரு நாடகத்தில் (சந்திரோதயம்) இறுதியில் மக்களாட்சி ஏற்படுவதுபோல இந்நாடகத்தும் ஆட்சிப்பொறுப்பேற்ற சௌமியன் 'ஆள்வதும் ஆட்படுவதும் மக்களே' என இறுதியில் கூறித் தன் முடி துறக்கிறான். பத்ரா என்ற பெண்படைப்பு சகுந்தலையை நினைவூட்டுகின்றது. பாரதிதாசன் கதைகள் என்ற ஒரு தொகுப்பையும் படித்தேன். சில அருமையான கதைகளும் உள. பகுத்தறிவுக் கொள்கை விளம்பும் கதைகளில் பார்ப்பன எதிர்ப்பு மிகுந்துள்ளது. மேற்குறிப்பிட்ட இரு நூல்களிலும் அளவிறந்த பிறமொழிச் சொற்கள் கையாளப்படுவது ஒரு குறையே. உணர்வொன்றித் தமிழியக்கத்தைப் படித்தேன். இளைஞர் இளைஞியர் குழாத்திடைப் படித்து உணர்வு மழை பொழிவித்துக் குளிப்பாட்டிப் புதியவர்களாய் வார்த்தெடுக்கப் பயன்படும் நூல். பாடல் முழுவதும் ஒரு மூச்சில் இயன்றதோ என்ற எண்ணம் எழுப்பும். தமிழ் முன்னேற்றம் உன் முன்னேற்றம், தமிழ்க்கு வருந்தீமை உனக்கு வரும் தீமை என இளைஞனை நோக்கி அறிவுறுத்துவதும் பெண்மை இயல்புணர்ந்து அடுத்த பாடலில் தமிழ்காக்கப் பெண்கள் எழாவிடில் வெண்ணிலவு முகம் சுருங்கும், மலர்க்கன்னம் வாடும் எனப் பேசுவதும் சுவை கெழுமிய உணர்வூற்றுப் பகுதிகள். படித்துத் திறனாய வேண்டும்.*

*(30.11.66)*

◆

# டிசம்பர் - 1966

## நல்லதம்பி

*நல்ல தம்பி திடுமென வந்து இன்றுமுதல் முரசொலி இதழ்களை எல்லோர்க்கும் தானே போட்டுவிடுவதாகக் கூறினார். வியப்பு! எண்ணித் துணிதல் நலம் என்றேன். பணிக்கு இத்தொடர் பில் இடையூறு வரலாம், ஒழுங்காக ஒவ்வொரு நாளும் தாள் போட இயலாமற்போகலாம். எல்லாவற்றையும் எண்ணிப் பாருங்கள் என்றேன். எல்லாவற்றையும் தான் பார்த்துக் கொள்வதாய்க் கூறினார்.*

*(1.12.66)*

◆

## ஆங்கிலத்திலிருந்த 'முரசொலியின் பட்டியல்'

*9½ மணியளவில் சோசப்பு வந்தார். இருவர் முரசொலிக்குக் கொடுத்ததாக உருபா 6 கொடுத்தார். பட்டியல் இன்று வந்தது. ஆங்கிலத்திலேயே இருந்தது. பணம் விடும் போது மடல் மீண்டும் வரைதல் வேண்டும்.*

*(2.12.66)*

◆

## சுவரொட்டிக்கு மாலையிடும் கண்மூடிப் பழக்கம்

*கருத்தரங்கிற்குப் புறப்படும்போது சோசப்போடு ஒரு நண்பர் வந்தார். எம்.சி.ஆரின் 'பறக்கும் பாவை' இன்று வெளியிடப்படுவ தால் தாங்கள் கஞ்சி காய்ச்சி ஏழைகட்கு ஊற்றப் போவதாகவும் அதன்பொருட்டுப் பணம் தண்டவும் வந்ததாகக் குறிப்பிட்டார். எனக்குச் சினம் வந்தது. 'எவனோ ஒருவன் எடுக்க, எப்படிப்பட்ட கருத்தெல்லாமோ இடம்பெறுகிற எம்.சி.ஆரின் படம் வந்தால் உங்களுக்கென்ன? சுவரொட்டிகட்கு மாலை யிடுவதும் கண்மூடிப் பின்பற்றுவதும் நன்றன்று. எம்.சி.ஆரின் பிறந்தநாள் விழாவை யேனும் கொண்டாடி அவரின் குணநலத்தைப் பற்றிப் பலர்க்குச் சொன்னாலும் பயனிருக்கும். படவெளியீட்டைக் கொண்டாடும்*

உங்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. இந்தா நான்கணா எனக் கொடுத்தனுப்பினேன். திரைப்படத்தோடு குமுகாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் மனம் எப்படிப் பின்னிக் கிடக்கிறது? ஒன்றைப் பின்பற்றுவதிலும் கைவிடுவதிலும் ஒரு வெறிநிலை...

## தமிழனின் தாழ்வு மனப்பான்மை

பன்னீர் வேலின் ஒரு கட்டுரையை மேற்பார்வையிட்டு அடியில் ஆங்கிலத்தில் குறிப்பு எழுதியிருந்தார். 'தமிழாசிரியர், தமிழில் எழுதியுள்ள கட்டுரையை நோக்கி ஆங்கிலத்தில் குறிப்பெழுதியுள்ளமை நன்றா? ஏனிப்படி' என்றேன், 'வரலாற்றுத் தொடர்பில் சில ஆங்கில நூல்களையும் படிக்க வேண்டியிருக்கிறது அதனால்' என்று பொருத்தமில்லாக் காரணங் கூறி மழுப்பினார். தமிழனின் தாழ்வு மனப்பான்மையை என்னென்பது?...

## குருவாயூரப்பன் நாடகம்

இ.கோ வொடு 'குருவாயூரப்பன்' என்ற கலா நிலையத்தாரின் நாடகம் பார்த்தேன். காட்சி அமைப்புக்கள் மிக அருமை. ஒளி அமைப்பும் அவ்வாறே! 'கடமத்துக் கத்தனார்' என்ற, முன் யான் பார்த்த கலாநிலையத்தாரின் நாடகத்தைப் போலவே இந்நாடகத்தும் ஒலி அமைப்பில் ஒரே இரைச்சற் குழப்பம். செவிகள் துளைக்கப்படுவதோடு உள்ள அமைதி குலைக்கப் படுகிறது. தொழிற்சாலையில் பேய் இரைச்சலில் முடங்கியதைப் போன்ற உணர்வு வெளிவருங்கால் ஏற்படுகிறது. நாடக வாயிலாய் நெஞ்சிளைத்துப் போன இற்றை மக்கள் பெறுதற்கான உயரிய கருத்தும் இல்லை.

*(3.12.66)*

◆

## காலம் பற்றி...

காலம் ஓடிக்கொண்டே இருக்கின்றது. இறப்பைப் பிறப்பைப் பற்றி, அது கவலைப்படுகின்றதா? எவன் நின்றால் என்ன? எவன் ஓடினால் என்ன? மரம் துளிர்த்தாலென்ன? சருகுகள் உதிர்ந்தாலென்ன? எதைப்பற்றி அது கவலைப் படுகின்றது. ஆனால் எல்லாம் காலத்தைப் பற்றிக் கவலைப்படு கின்றன. இந்தக் காலத்தை விட்டால் தன் நைந்த உடைகளைக் கழற்றியெறிய முடியாதென எண்ணி ஒரு காலத்தில் சருகுகளை உதிர்த்து விடுகின்றன மரங்கள். இன்னொரு காலத்தை எதிர்நோக்கி, வண்ண ஆடைகளை அணிந்து எழிலில் ஆடுகின்றனவே!

காலத்தையன்றோ எதிர்பார்த்து மாந்தன் ஒவ்வொரு நிலையிலும் காத்திருக்கிறான். மாந்தனைப் பற்றியோ உயிர்களைப் பற்றியோ காலத்திற்கென்ன கவலை? ஓடுகின்ற காலத்தை உருப்படியாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்...

## இளம்பெண் முகத்தில் புதிரான முதுமை

சில நாட்களாக ஒரு பெண்ணைப் பார்த்து வருகின்றேன். சிறுவன் ஒருவனைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வது அதன் பணிபோலும். பாவாடை தாவணி கட்டிய சிவந்த பெண். பார்த்தால் இளம்பெண்போல்தான் தெரிகிறது. நெருங்கிப் பார்ப்பின் முகத்தில் புதிரான முதுமை. வாய்ப்பற்கள் உதிர்ந்த நிலை. பல்லிலா நிலையே முதுமையை வரைந்து காட்டுகின்றது. என்ன நிகழ்ந்ததோ? அகவை இருபது இருக்கலாம். கழுத்தில் எதையுங்காணோம். எவன் மணந்து கொள்ளப் போகின்றான்? முழுக்க முழுக்க கண்பார்வையே அற்ற குருட்டு ஆடவர்க் கெல்லாம் மணம் நிகழ்ந்து விடுகின்றது. பார்வை கோணிய பாவையர்க்கு மணம் நிகழ்கின்றதா? பெரும்பாடாகி விடுகின்றதே! அப்படி நிகழ்ந்திருப்பினும் பொருள், புகழ்ப் பின்புலமின்றி நிகழ்வதில்லையே! பெண்ணை உலகு எப்படிக் கருதுகின்றது! நாம் உரிமை வழங்க முன்வந்தாலும் அவற்றைப் பயன்படுத்தாது அடிமைச் சிறையிலேயே முடங்கிக் கிடப்பதில் தான் இற்றைப் பெண்ணுலகும் இன்பம் காண்கின்றது. பெண்மையைப் போற்றும் ஆண்மை மிகுமா என்பது ஐயம்! பெருமையுணர்ந்து உரிமையைப் பயன்படுத்தி உயரும் பெண்மை மிகுமா என்பதும் ஐயமே! ஆடவர் மகளிரை வாழவிடவில்லை என்பதினும் மகளிர் வாழத் தெரியாதவர் என்பது பொருந்துமோ?...

## நோகின்றது நெஞ்சம்

இனிமேல் ஐயங்கேட்கவோ வேறு எதற்கோ வருகின்ற மாணவிகளை வகுப்பில் கேட்டுக்கொள்ளச் சொல்ல வேண்டும். பெண்களை அதிகமாகப் பழகவிடக் கூடாது. ஊரார் கூற்றைவிட இருதரப்பு உள்ளங்களில் ஏதேனும் நெகிழ்ச்சி ஏற்பட்டால் - அதற்காக அல்லவா அஞ்சுதல் வேண்டும். எத்தனையோ உயர்ந்த கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருக்கின்ற என் நெஞ்சம் நற்றமிழ் மங்கையரின் உருவாக்கத்தை நாடுகின்றது. இருள் முழைஞ்சில் எங்காயினும் ஒளிக்கீற்று கிழித்துக்கொண்டு தோன்றாதா என்று தேடுகின்றேன். அகல் விளக்கையாவது நாம் ஏற்றி வைப்போமே என முயல்கின்றேன். முயற்சியிடையில் சில சலனங்கள். 'நான் புளியங்கொட்டை. என்னிடம் சந்தன மணத்தை நீ எதிர்பார்க்கலாமா? வாய் கிழிய நெஞ்சு வலிக்க எனக்காக நீ

*கத்திக் கொண்டிருப்பதில் ஏதேனும் பயனுண்டா? ஏ முட்டாளே!' என என்னை நோக்கிக் கேட்பது போல் அமைகின்றது சில பெண்களின் நிலை. 'நாம் உண்டு நம் வேலையுண்டு' என்று போய் விட்டால் என்ன' என்று நினைக்கின்றேன், உயரிய என் உணர்வுகளை யாருக்காக யான் மலர்த்திக் காட்டுகிறேனோ அவர் அவ்வுணர்வுகளை உணர்வதோ மதிப்பதோ இல்லையென்றாகி விட்டால்? நெஞ்சம் நோகத்தான் செய்கின்றது.*

*(7.12.66)*

◆

## நெஞ்சைப் பெயர்த்து விழிகளில் வைத்து...

*பல நாட்களாகக் கவனித்து வருகின்றேன். பொரு ளில்லாத பார்வையா அது? புன்னகை அவிழ்த்து நெஞ்சைப் பெயர்த்து விழிகளில் வைத்துப் பார்க்கின்ற பார்வையில் ஒரு நுண்பொருள் புதைந்து கிடப்பது எனக்குப் புரிகின்றது. என் மாட்டும் பன்னேரங்களில் சிறிய அசைவுகள். காரணமின்றியா? ஏதோ ஒருவகை ஈர்ப்பு. வேண்டாதது எனப் பலநேரம் விலக்கப் பார்ப்பேன். விரிந்த மலராகக் கிடக்கின்ற என் நெஞ்சில் விழுந்த அவ்வெண்ண விதை முளைத்துக் கிளைத்துச் சிலகால் நச்சரித்துக் கொண்டிருக்கின்றது. நச்சரிப்பு தன் எல்லையைச் சிறுகச் சிறுக ஒரோவொருகால் அகற்றிக் குழப்பி வருத்தி விடுகின்றது. வேண்டாத வருத்தம். வீண் உளைச்சல். ஆக்கப் பணியை அமிழ்த்திவிடும். ஏ பேதையே! உன்னைப் பேதையென யான் விளிப்பதே பேதைமை என நீ கருதுகின்றாயோ என்னவோ? விழி சுழற்சியும் நகையரும்பலும் பேதை என்றே எனக்குக் காட்டின. ஆனால் என் தூய உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதது போலும் புறக்கணிப்பது போலும் சிற்சிலகால் நீ நடந்து கொள்வதாக யான் நினைக்கின்றேனே. அது காரணமின்றியா? புதிர் போடுவதைப் போலப் பார்ப்பதை விட்டுவிடு. பார்வை நெருப்பில் வெண்ணை யாய் என் நெஞ்சம் உருகுகின்றது. தூ என நின்னை நின் நினைப்பை உதறிவிடப் பலகால் முயல்கின்றேன். முயற்சியில் வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கை அரும்பியுள்ளது. என்ன நினைப் பை நெஞ்சில் ஏந்தி இப்படி நோக்குகின்றாய்? எல்லா வற்றிற்கும் ஒரு முழுக்குப் போட்டுவிடுதல் நல்லது. இல்லையேல் வாலையும் தலையையும் காட்டும் விலாங்கு நிலை வேண்டாம். தெளிவாய் நின் நெஞ்சைக் காட்டு. சேச்சே நின் நெஞ்சை அறிந்து நான் என்ன செய்ய? நீ எப்படியாவது போயேன். எருக்காகவே இரு. மல்லிகையாக மாறினால் என்ன? மாறாவிட்டால் எனக்கென்ன?*

*(8.12.66)*

◆

## கம்பனும் சிவனும்

அரவரசு 'கம்பனும் சிவனும்' வாங்கி விடுத்திருந்தார். கம்பன் என்ற சொல் சிவனைக் குறிக்கவே பல இடங்களில் (திருமுறை களில்) பயன்படுத்தப்படுவதைக் காட்டி சைவ ஈடுபாட்டாலேயே கம்பன் இப்பெயர் பெற்றிருக்கலாம் என இடமுள்ளதென்றும் சடையப்ப வள்ளலின் பெயரும் சிவனைச் சுட்டுவதைக் காட்டி மேலும் இராமாயணத்தில் பல இடங்களில் கம்பன் சிவனைப் புகழ்ந்து பாடியுள்ள பாடல்களைத் தொகுத்தளித்தும் நூல் படைத்துள்ளார் இராயசொ. தொகுப்பு நூல் இது. பேரா.வ.சுப.மாவின் பதிப்புரையும் பர்.அ.சிதம்பர நாதனின் அணிந்துரையும் உள்ளன.

## தூய்மையும் அழகும்

மேசையின உட்புறத்தும் மேலும் பரவி விரவிக் கிடந்த பொருள்களை ஒழுங்குபடுத்தினேன். ஏறத்தாழ இரண்டு மணி நேரத்தை அப்பணியே எடுத்துக் கொண்டது. தூய்மையில் துயிலும் அழகு பண்படுத்தும் ஆற்றலுடையது. 'அழகே மெய்ம்மை, மெய்ம்மையே அழகு' என்று என் நெஞ்சங்கவர் கீட்சு பாடினானே அஃது எத்துணை மெய்ம்மை ஈடுபாடு கொண்டது! புற அழகு வாய்த்தாரெல்லாம் அக அழகு பெற்றாரெனல் இயலாது. அக அழகு உள்ளார்க்குப் புற அழகு வாய்க்கும்; பொலியும்.

*(10.12.66)*

◆

## சங்கத்திற்காக நன்கொடைப் படக்காட்சி

மாலையில் அ.சொ.வொடு 'சென்டிரல்' திரையரங்கு உரிமையாளர் சுப்பையாவைத் திரையரங்கில் சங்கச் சார்பில் நடத்த இருக்கும் நன்கொடைப் படக்காட்சித் தொடர்பாகப் பார்த்தேன். 'பூம்புகார்' போடலாமென்றும் பிப்ரவரி இரண்டாம் சனி (10) ஏற்பாடு செய்யலாமென்றும் படம் ஏனைச் செலவு ஆகிய வற்றிற்கு 300 உருபாய்த் தரவேண்டும் என்றும் நுழைவுச் சீட்டுகள் அச்சிட்டு 1900 உருபாய்க்கு மேல் விற்கலாமென்றும் சொன்னார்.

*(11.12.66)*

◆

## 'நீ அறிவுள்ளவன்'

பேரா வந்து அழைத்தார். அவரிடம் சென்று அமர்ந்தோம். 'மேற்பார்வையை மாற்றித் தமிழ்த்துறையில் ச.வே.சு.வின் கீழ் ஆய்வு

நடத்தேன்' என்றார். யான் சிரித்தவாறே 'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்' என்றேன். 'ஒரு மாற்றம் இருந்தால் உனக்கு நன்றாயிருக்கும். அதோடு சரிவர வேலை செய்வதில்லை என்றும் நினைக்கிறேன். சனிக்கிழமை உன்னை எதிர்பார்த்தேன். காணவில்லை' என்றார். சனி மாலை யான் துறையில் இருந்தேன். எப்போது பார்த்தாரோ தெரியவில்லை. 'நீ அறிவுள்ளவன். நன்கு உழைத்தால் முன்னேற முடியும். நான் இட்ட வேலை எதையும் நீ குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கவில்லை' என்றார். 'பாடம் நடத்துவது பெரும் பொழுதை எடுத்துக் கொள்கிறது' என்றேன், 'மாணவர்கள் இப்போது ஓகோ ஆகா என்பார்கள். பின்னர் மறந்து விடுவர். பாடம் நடத்துவதில் அதிக உழைப்பு வேண்டியதில்லை. நம் முழுமுதல் நோக்கம் ஆய்வு' என்றார். 'உடல் நிலையும் தளர்ந்துள்ளது' என்றேன். 'என்ன செய்கிறது' 'இரவில் என்னை மறந்து உறங்க முடிவதில்லை' 'கொசுக்கடியோ' 'கொசுவலை இருக்கிறது'. 'அப்படியென்றால் ஒருமாதம் ஓய்வெடுத்துக் கொள். பின் நல்ல முறையில் செய்யலாம்'. 'பாடம் நடத்துவது போதும். தேவையில்லை. பார்த்துக்கொள்கிறேன்' கிறித்துமசு விடுமுறையில் ஓய்வெடுத்துக் கொள்ளேன் என்றார். பின்னர் 'உன் நண்பன் வேலவன் யான் கொடுக்கும் வேலையைக் குறித்த காலத்தில் செய்யவில்லையென்றால் இல்லை என்று என்னிடம் சொல்லி விடுவார். இந்த ஆண்டு என் தாயை இழந்தது எனக்கு ஓர் இழப்பு. அதைப்போலவே பேரிழப்பு அருமையான மாணவர் ஒருவரை இழந்தது' என்று கண்கலங்கிச் சொன்னார். சில கட்டுரைகளாவது நீ வெளியிட வேண்டும் என்றார். செய்யலாம் என்றேன். இறுதியில் வெளிப்படையாக நெஞ்சு திறந்து பேசியதுபோல் தோன்றியது.

*(12.12.66)*

◆

## அண்ணாவின் 'மணிமகுட'ப் பேச்சு

'மணிமகுடம்' பட வெளியீட்டு விழாவில் அண்ணாவின் பேச்சைப் படித்தேன். பரந்த அறிவும் இனிய நெஞ்சும் விளையாடு வதைக் காண முடிந்தது. படத்தில் நல்லவர் ஐந்து பேரைச் சாடுவதுபோல வருகின்றதாம். அதைப்பார்த்த அண்ணாவின் அறிவுவானில் வரலாற்று நிலவெழுந்து ஒளிக்கதிர் வீசியது. "இங்கிலாந்து நாட்டில் முதலாவது சார்சு மன்னன் காலத்தில் அடக்குமுறைக்கு எதிராக எழுந்த ஐந்து பேரைக் கொன்றார்கள். அதுதான் வரலாற்றில் ஐவர் வழக்க - ஐவர் வழக்க என அழைக்கப்படுகிறது. நல்லது கெட்டது இரண்டிற்கும் அந்த வழக்கின் பெயர் பயன்படுத்தப்பட்டது" என்றார். பின் "பத்திரிகை

யாளர் ஒரு சந்தேகத்தைக் கேடகலாம். மன்னன் மனம் மாறி மணிமுடி துறப்பது (படத்தில்) நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை என்று அவர்கள் கூறலாம். ஆனால் தூரக் கிழக்கு நாடுகளில் ஒன்றான கம்போடியா நாட்டில் சிக்கனூக் என்ற மன்னன் மணிமுடி தரித்து ஆண்டுவந்தார். நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக அவரே முன்வந்து முடிதுறந்து தன் அன்னையாரை அரசியாக்கிவிட்டு - புதிய அரசியல் கட்சி துவங்கி மக்கள் ஆதரவு பெற்று முதலமைச்சரானார்" என மேலும் கால மாற்றத்தைச் சுட்டியுள்ளார்.

(13.12.66)

◆

## கணக்குக் காட்டாத தமிழ்ச்சங்கப் பொருளாளர்

சங்கச் செயற்குழுக் கூட்டத்திற்குச் செல்லுங்கால் புகைவண்டி நிலையத்தில் 'தாமரை' வாங்கினேன். மாதவனின் குறும்புதினத்தை வெளியிட்டு நல்ல முறையில் இதழாசிரியர் முன்னுரையும் இருந்தது. விளைவுகளை எதிர்பார்க்க வேண்டும். இரண்டு திங்கட்கு முன்பே உரூபா (6.50) விடுத்தும் பழைய இதழ்களை ஏனோ இன்னும் அனுப்பவில்லை. எழுதிக்கேட்க வேண்டும் போலும்! செயற்குழுவில் பொருளாளர் கணக்குக் காட்டவில்லை. கடந்த இரு செயற்குழுக் கூட்டத்திற்கும் வரவில்லை. தன் பொறுப்பை ஒழுங்காகச் செய்வதில்லை. பிறரைத் திறனாய்வதில் குறைவில்லை. யான் தொடக்க முதல் அமைதி யாகவே இருந்து இறுதியில் சினத்தோடே பொருளாளர் கணக்குக் காட்டாமையைக் கேட்டேன். சிறு சொற்போர். திவேதி, நாறும்பூ போக்கு எனக்கு மிகவும் வருத்தமளித்தது. என் உணர்வை மதிக்கும் மனமில்லை. தங்களுக்கே சங்கம் என்ற எண்ணமும் தெரிந்தது. எனக்கு அழுகையும் ஆத்திரமும் வந்தது. நம் ஆய்வு வேலையைப் பார்ப்பதை விட்டு விட்டு இத்தகு புல்லியரொடு எதற்கு இச்சங்கத் தில் இருக்கவேண்டும். காலம், உழைப்பு எல்லாம் பாழ்தானே! நம்நிலைக்குத் தாழ்ந்து போவானேன்? வழியில் கிடக்கும் கோடரியைக் காலில் எடுத்துப் போட்டுக்கொண்டு குத்துகிறதே குடைகிறதே என்பானேன்? என்றெண்ணி எல்லாப் பொறுப்பு களினின்றும் யான் விடுபெற விழைகின்றேன் என்று சொன்னேன். 'எனக்குள்ள உணர்வும் இச்சங்கத்தில் இருந்தால் எங்கே மங்கி விடுமோ என அஞ்சுவதாலும் ஆய்வுப்பணி அதிகமுளதாலும் யான் விடுபட விரும்புகின்றேன்' என்றேன். எல்லோரும் அது கூடாது என்றனர். திருமாறன் 'நாங்கள் சொன்னதை உங்கள் தம்பி சொன்னதாக எடுத்துக் கொள்ளுங்கள்' என்றார். கூட்டம் முடிந்து

அ.சொ.வொடு வெளியேறுங்கால் அழுகையும் சினமும் எழுந்தன. 'நமக்கேன் இத்தொல்லை விலகிவிட விரும்புகின்றேன்' என்றேன். அ.சொ. அதெல்லாம் கூடாது. நீங்களெல்லாம் இருக்கிறீர்களென்று தான் தலைமைப் பொறுப்பை யான் ஏற்றுக் கொண்டேன். நீங்கள் விலகினால் யானும் விலகவேண்டி வரும். எதற்கும் இன்னும் பொறுத்திருந்து விடுபடுவோம் என்றார்.

*(14.12.66)*

◆

## பேராயக் கட்சி வேட்பாளர் பட்டியல்

பேராயக் கட்சியின் பெரும்பான்மை வேட்பாளர் பட்டியல் வெளியாயுள்ளது. என் தொகுதியில் அரங்கசாமி (நகர்) நிற்கிறார். காமராசர் விருதுநகரின் சட்டமன்றத்திற்கு போட்டி யிடுகிறார். கோவையில் சில பணக்காரர்கள் இடம்பெற்றுள்ளனர். காரைக்குடியில் கல்லூரிகள் அறநிலையச் செயலர் வேங்கடாசலம் பேராயக் கட்சியின் சார்பில் போட்டியிடல் கண்டு பெருவியப்பு! பணத்தை நம்பும் நிலை பளிச்செனத் தெரிகின்றது பட்டியலில்.

*(17.12.66)*

◆

## கருமமே கண்

சில நாட்களாக வைகறையிலேயே எழுந்துவிடுகின்றேன். புலரும் முன்னே குளித்துவிடுவதில் ஓர் இன்பம் இருக்கத்தான் செய்கின்றது. கோயில் திருவிழாக்களில் காப்புக்கட்டிகள் இருப்பார்களே அவர்களைப்போல் பணி முடியும் வரை காப்புக் கட்டிக்கொள்ள வேண்டும். கருமமே கண். நம் உளம் நிறைவெய்தும் வகையில் உழைக்க வேண்டும்...

## நாம் குங்குமம் சுமந்த பெரியோர்களே

தாயம்மாள் கொடுத்த 'புதுமைப்பித்தன் 'கட்டுரைகள்' என்ற நூலைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன். உழைத்து எழுதி யுள்ளது. "மதிப்புரை உண்மை இலக்கியத்தைப் போலி இலக்கியத் தினின்று பிரித்தறியத் தக்கதாய் அமையவேண்டும்" "நாம் குங்குமம் சுமந்த பெரியார்களே; அதாவது நிறைய இலக்கியங்கள் வைத்துள்ளோம். ஆனால் அவற்றை அனுபவிக்கும் முறையை உணராது, ஔவைக்கிழவி கூறியது போன்று ஓட்டைச் செவி யுடையவர்களாய் இருக்கிறோம்; எனவே கலையை உணராது கால ஆராய்ச்சியில் ஈடுபடுதல் பயனன்று'' "கடவுள் கனவு கண்ட

பொழுது இந்த உலகம் பிறந்தது. கவிஞன் கனவு கண்ட பொழுது இலக்கியம் பிறந்தது. கவிஞன் ஒரு பெரிய கலைஞன். அவனே கண்கூடாகக் காணக்கூடிய பிரம்மா. கவிஞனுக்குக் கடவுள் கட்டுப்பட்டு விடுவார். தமிழர்களே கலையின் மேன்மையை உணர்ந்தவர்கள். நடராச உருவத்தைக் கலைவடிவில் படைத் துள்ளார்கள். 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிள் சிரிப்பும்... என்ற பாட்டு கவிஞனுக்குக் கடவுள் கட்டுப்பட்டு விடுவார் என்று காட்டுகிறது" "ஒழுக்கமும், தர்மமும், இலக்கண மும் மட்டும் அமைந்தது கவிதையாகாது அவைகள் கவிஞனது உள்ளத்தில் ஊறி இருதயத்தின் கனிவான வெளிப்படும் இசைதான் கவிதை" "இருதயத்துடிப்பின் பேச்சே கலை. கலைகளிலெல்லாம் சிறந்தது இலக்கியக்கலை"

"யாப்புமுறையானது பேச்சு அமைதியின் விரைவிற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு வடிவமே" தெரிந்ததைச் சொல்ல இலக்கியமும் தெரியாததை அறிவதற்கு அறிவியலும் தேவை" வாழ்க்கையில் ஒருவெறி ஏற்பட்டால்தான் பிடிப்புடன் முன்னேறி வாழமுடியும். "வாழ்க்கையின் நுட்பத்தை அறிந்து வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் கோருவது இலக்கியம்."

பாரதியார் விட்டுச் சென்றவை ஞானரதம், குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம். அவற்றோடு பாரதிதாசன் இன்றைய கவிதை உலகிலே அவரது கவிதை ஒன்றே நிமிர்ந்து நிற்கின்றது"...

## கனவிலும் ஆகாதடி

இவ்வுலகில் நாம் வாழ்தல் இயலாது பெண் மயிலே
இறந்து, பின் ஒருலகில் இணைந்திடுவோம் வருவாய்
உடலென்னும் கூட்டைவிட்டு உயிர்ப்பறவை பறந்தால்
உலகத்தின் துன்பமெல்லாம் ஓடிவிடும் அறிவாய்
தாய் தந்தை ஓலமிடச் சாத்திரங்கள் வழிமறிக்க
நாய் நரி ஊளையிட நம் காதல் சாவதுவோ?
மண்கெட்டுப் போனதடி மனம்கெட்டுப் போனதனால்
கண்கெட்ட இவ்வுலகம் கனவிலும் ஆகாதடி...

## ஆசிய ஓட்டப்போட்டி: மலேசிய, சிங்கப்பூர் தமிழர்கள்

பிற்பகலில் செய்தித்தாள் பார்த்தேன். பாங்காக்கில் (Bangkok) நடைபெறும் ஆசிய விளையாட்டு ஓட்டப்போட்டிகளில் கலந்துகொண்ட மறவர்களில் சிறந்தவராக மலேசியாவைச் சார்ந்த மாணிக்கவாசகம் ஜெகதீசன் என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். 100, 200 மீட்டர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றவர். மேலும் மலேயா, சிங்கப்பூரைச் சார்ந்த

சுப்பிரமணியன் குணாளன் முதலியோரும் போட்டிகளில் வெற்றிபெற்றதைத் தாள்வழி அறிந்தேன். இவர்கள் எல்லோரும் தமிழர்கள். தமிழ்நாட்டுத் தமிழன் ஒருவன்கூட ஆசியப் போட்டிகளில் பங்குபெற இயலாத நிலையில் கடல்கடந்த நாடுகளில் இருக்கும் என் உடன்பிறப்புக்கள் போட்டிகளில் பெரும் சிறப்புப் பெறுவதை அறியும்போது நெஞ்சம் பெருமிதத்தால் விம்முகின்றது. இனத்திற்கும் நீங்கள் உள்ள நாட்டிற்கும் பெருமை சேர்த்த தமிழர்களே! நீங்கள் நீடுவாழ்வீர் என வாழ்த்துகிறது நெஞ்சம்...

## அமெரிக்கப் பண்பாட்டு நிலைய ஓவியக்கண்காட்சி

நேற்று மாலை கடையில் பொருள்கள் வாங்கும்போது நந்தன்கோட்டில் வாழும் ஒரு முதிய தமிழர் நான் பேசிய தமிழைக் கேட்டுத் தமிழன் என்பதால் என்பால் காட்டிய அன்பும், பேச்சும் நிழலிடுகின்றன.

என்னினம் தமிழினம் - எட்டுத்திசையினும்
என்கொடி பறந்ததடா
அன்ன செந்நிலையை ஆக்கிட நெஞ்சில்
ஆவி துடிக்குதடா.

என்ற என் பாடற்கண்ணி நெஞ்ச ஊற்றல்லவா? மாலை ஐந்து மணி அளவில் துறை வருகையில் அமெரிக்கப் பண்பாட்டு நிலையத்தின் பின் அமைக்கப்பட்டிருந்த ஒரு வண்ண ஓவியக் கண்காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன். பளிங்கு முகக் குழந்தையின் படமொன்று சிறப்பாக இருந்தது. இரவிவர்மாவின் தமயந்தியைப் போலும் அழகுடன் ஒரு அன்னத்தோடுள்ள தமயந்தியின் படம் இருந்தது. கருத்திற்கினிய சில ஓவியங்களும் இருந்தன.

*(18.12.66)*

◆

## வந்த மடல்கள்

தென்னரசு மடல் ...லையில் வந்தது. பெரம்பலூர்த் தொகுதியில் நண்பர் சே.எசு.இராசு போட்டியிடப் போவதாகவும் என் பணி தேவை என்றும் 'இன்னும் பல செய்திகள் விரிவாக விரைவில் உங்களுக்கு எழுதவேண்டியிருக்கிறது' என்றும் எழுதியிருந்தார். பல செய்திகள் எவையோ? அவரின் மூன்றாம் மடல் இது. இன்னும் யான் மறுமடல் விடவில்லை. தம்பி மணி மடல் மாலையில் கிடைத்தது. கிறித்தவ நண்பரொருவரின் மகவிற்கு நற்றமிழ்ப் பெயரிட வேண்டும் என்றும் பாசுகரன் வீட்டிற்குச் சென்று நலம் உசாவி எழுத பாசுகரன் வேண்டினான் என்றும் எழுதியிருந்தான். பி.எசு.இராமையாவின் 'பூவும்

பொன்னும்' எனுங் கதைத் தொகுப்பில் முதற்கதையாக உள்ள 'பூவும் பொன்னும்' என்ற கதையைப் படித்தேன். சொல்லுமுறை சில இடங்களில் இனித்தது. அவ்வளவே! கதையில்லாத திரைப்படக் கதைகளில் ஒன்று எனலாம்.

## இயற்கை வழிபாடு

இறைவழிபாடு இயற்கை வழிபாட்டினின்று (ஞாயிறு, தீ) மலர்ந்தது இயற்கை வழிபாட்டின் அடிப்படை அச்ச உணர்வே. இறைவழிபாடும் அவ்வச்ச அடிப்படையை உடையது என்றேன். பதின்மரைக் கோழைகளாக்கிவிட்டே ஒரு வீரன் வருகிறான். ஒருவனை வீரன் என்று சொல்லும்போதே சில கோழைகள் உண்மை புலப்படுகின்றது. மக்கள் தலைவன் மன்னன் என்பா ரெல்லாம் தொடக்கநிலையில் ஏனையோரினும் மறத்தாற் சிறந்து அவர்களை அடக்கி ஆளும் வன்மையும் அவர்களால் வழிபடப் படுகின்ற சிறப்பும் உடையவர்களாகத்தான் இருந்திருக் கிறார்கள். மலரினும் மேம்பட்ட ஒருவன் மாட்டு உள்ள உரமே தலைவன் அரசன் என்ற அரசியல் நிலைகளை உருவாக்கியது. கடவுளர் களைப் படைத்து அவர்களை இன்றைய மாந்தன் காப்பாற்றுவ தாக ஒரு பொய்த்திரையைப் போட்டுவிடுகிறான். கடவுள் பெயரால் மூட நம்பிக்கைகள் பரவியுள்ளன, பரவுகின்றன.

*(19.12.66)*

◆

## வேலவன் தந்தை வருகை

வேலவன் தந்தை வந்தார். வங்கியில் வேலவன் பெயரிலுள்ள நூறு ரூபாய் அளவிய பணத்தைப் பெற்றுச்செல்ல. 'வீ' அவரை அழைத்துச் சென்றார். வள்ளியூரில் வேலவனுக்கு ஒரு சிலை நிறுவ இருப்பதாகவும் சொன்னார். உயிர் நண்பரின் பிரிவை நினைக்கும் போதெல்லாம் துன்ப ஊற்றாகிறது நெஞ்சம். இருந்திருந்தால் மொழிக்கு எவ்வளவுப் பயன் கிடைக்கும். 'எல்லாம் போனதே! எதை எதையோ பேசி என்னென்னவோ கோட்டைக ளெல்லாம் கட்டி மகிழ்ந்த அந்நாட்கள் நெஞ்சக் குளத்தின் நீங்கா அலை களாக அலைந்து நெஞ்சைக் குலைத்துக் கொண்டிருக் கின்றன. பிரிவைப் பற்றி ஒரு பாடல் எழுதவேண்டும் என்ற பல நாள் நினைப்பு என்று செயலாகுமோ?

*(20.12.66)*

◆

## கல்கி வெள்ளிவிழா மலர்

கல்கி வெள்ளிவிழா மலரில் சில கதைகள், கட்டுரைகள் படித்தேன். ஏ.எசு.இராகவனின் கை இரேகை பார்ப்பவனைக் கதைத்தலைவனாக வைத்து எழுதப்பட்டிருந்த கதையும், இராசம் கிருட்டிணனின் 'மாவிலைகள்' என்ற உள்ள வளர்ச்சியைப் பருவக் கிளர்ச்சியை வெளியிடும் அழகிய நடையில் இயலும் கதையும் இனித்தன. தாயின் நெஞ்சுள் தன்மகளின் பருவ உணர்வு வெளியீடுகள் விளைவிக்கும் அசைவுகளை எழிற்கோலமாகத் தீட்டிக் காட்டுகின்றார் இராசம் கிருட்டிணன். முத்தாரத்தில் சில கட்டுரைகள் படித்தேன். 'பச்சோந்தி'யைப் பற்றிய கட்டுரையால் புதிய செய்தியை அறிய முடிந்தது. பச்சோந்திகளின் இரு கண்களும் ஒரே நேரத்தில் ஒரு பொருளைப் பார்ப்பதோடன்றி இரு பொருள்களைப் பார்க்கும் ஆற்றலுடைய என்பதே அது.

*(21.12.66)*

◆

## துறைக்கு வந்த புதிய நூல்கள்

முதல் மணிவகுப்பு. சில கணக்குகளைப் போட்டுக் காட்டி விடுமுறையில் செய்துவருமாறு இரு கணக்குகளைக் கொடுத்தேன். என்றுமில்லா வகையில் சில குழப்பங்கள்! முதலில் வருகைப் பதிவை எடுக்கும் போதே வராதாரை வந்தாராகவும் வந்தாரை வராதராகவும் ஏதோ நினைவில் குறித்தேன். ஏதோ நினைவென்ன? யான் வகுப்பிற்குச் செல்லுமுன் எதிர்பார்த்த வாறே கணக்கேட்டோடு வேல் வந்தது. வகுப்பில் சில கணக்குகள் தரப்போகிறேன். அதன் பின் குறிப்பேட்டைக் கொடு என்றேன். மெய்யொலிக் கட்டுரையைக் கேட்டது. 'சில புதுக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள் - விளக்கம் தேவை. தர முடியுமா?' என்றேன். 'சாயங்காலம் வருகிறேன்' எனச் சென்றது. அது சென்றதும் நெஞ்சில் ஒரு இனமறியாக் கிளர்ச்சி. அக்கிளர்ச்சி யோடேயே வகுப்பிற்குச் சென்றேன். அதன் விளைவே ஏற்பட்ட கருத்துக் குழப்பம். அடுத்த வகுப்பில் தெளிவாக விளக்க வேண்டும். தமிழ்த்துறை நூலகத்திற்குப் புதிய நூற்கள் நிறைய வந்தன. புதினங்களில் பெரும்பாலும் யான் படித்தவையே இருந்தன. 'பொன் விலங்கு' வந்தது. முதன்முறையாக நூல் வடிவைப் பார்த்தேன். மணியத்தின் ஓவியம் தாழ்விலை. அட்டைப் படத்தில் கதைத்தலைவனை மீசையில்லாதவனாக்கி உள்ளே மீசையொடு போட்டிருந்தமை பொருந்தவில்லை. பெருங்கதையை உரைநடையில் கதைவடிவில் நா.பா. எழுதிய 'வெற்றி முழக்கம்' என்ற நூலையும் முதன்முறையாகப் பார்த்தேன். அதையும் படிக்க

வேண்டும். 'அதிகமாக அன்பு செலுத்துகிறவன் அதிகக் கவலைப் பட்டுத்தான் ஆகவேண்டும். ஏனென்றால் அவனுடைய கவலை யின் எல்லைகள் அவனது அன்பு பரந்திருக் கின்ற எல்லாப் பரப்பிற்கும் உரியது' எனும் பொன்விலங்கு வரிகள் நினைவில் தேங்கின.

*(22.12.66)*

◆

## வேலவன் போட்ட பணத்தை எடுத்தல்

வேலவன் வங்கியில் போட்ட பணத்தொடர்பாக உறுதி மொழிச் சீட்டுகட்காக வழக்கறிஞரைப் பார்த்து அறமன்றம் சென்று வேலை முடிக்கவே காலை 8½ முதல் 2½ மணிவரை கழிந்தது. 'வீ' மிகவும் தொல்லையேற்றார்.

*(23.12.66)*

◆

## பதவிப் போர்க்களம்

ச.வே.சு. அறையில் நுழைந்து இ.பெ. தனக்கு அறைக்குள் இடம் வேண்டுமென்று சொல்லிக் கண்டவாறு பேசியதாகவும் ச.வே.சும் எதிர்த்துப் பேசியதாகவும் அறிந்து கவன்றேன். ஏட்டுச்சுவடி நூலகத்தார்க்கு இவர்களின் பூசல் தெரிந்துவிட்டது. அறமில்லா வகையில் அடித்து மிரட்டும் போக்கில் இ.பெ. ஈடுபடுவது வருந்தற்குரியது. கண்டிக்கப்பட வேண்டியது. பதவிப் போர்க்களமாகத் தமிழ்த்துறையைப் பயன்படுத்தும் இழிதகை மையை எண்ணுதொறும் நெஞ்சம் இனைகிறது. உதை கொடுக்க லாமா என உணர்ச்சி முந்துகிறது...

## இராசாமுகம்மதுவுக்கு மடல்

இன்று முழுதுமே மடல் எழுதினேன். இனனும் இருபது மடல்கள் எழுதவேண்டி உள்ளன. நாளை எழுதவேண்டும். இன்று இராசாமுகம்மதுவுக்கு எழுதிய மடலின் சில வரிகள் 'சருகுகள் உதிர்கின்றன. தளிர்கள் துளிர்க்கின்றன. இன்றைய தளிரும் நாளைய சருகுதான். இந்த இறப்புப் பிறப்புக் கால ஓட்டத்தில் ஒரு வளர்ச்சி. அழிவில் வளர்ச்சி அடங்கிக் கிடக்கிறதல்லவா? அடக்கு முறை அடிமைகளாட்சி அழிவில் எத்தனை அருமைகள் மலர இருக்கின்றன. தளிரைப் பார்! எத்துணை மென்மை, பளபளப்பு, கவர்ச்சி, குழைவு, முகர்ந்தால் மூக்கினிக்கும் மணம்! அதோ ஒரு சருகு! மென்மையும் குழைவும் எங்கே போயின? மணத்தைக் காணோமே! வீண் சலசலப்ப வேறு! இளமையின் இனிமைகள்

முதுமை வளர்ச்சியில் மறைந்து விடுகின்றனவே!

மழைநீர்தான் மிகவும் தூய்மையானதாம். சொல்கிறார்கள். கம்பிகளாக இழிகின்ற மழைத்தாரைகளில் உதிர்கின்ற தூயவெள்ளிய அம்முகில் முத்துக்கள் இம்மண்ணில் விழுந்தவுடன் என்னாகின்றன? அவற்றின் கற்பைப் பறித்துக் கழிசடைச் சேறாக்கி விடுகின்றதே இந்த மண்! இதுதான் வாழ்க்கையோ?

*(24.12.66)*

◆

## கேரளத்தில் கழகம்

நண்பகல் 12 அளவில் மசூது (கழகம்) எசு. என்.மணி இருவரும் தேடி வந்தனர். மாநில மாநாட்டிற்குச் செல்வதாகவும் அதற்குமுன் செயற்குழு உறுப்பினர்க்குக் கேரளக் கழக நிலை, தலைமைக் கழகப் புறக்கணிப்பு, தேர்தல் உடன்பாடு ஆகியவை பற்றிய ஓர் அறிக்கையை அனுப்ப வேண்டுமென்றும் வந்தனர். மலையாளத்தில் எழுதப்பெற்ற அறிக்கையைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்றனர். அறிக்கை முழுவதையும் மசூது படித்துக் காட்டினார். நன்றாக இருந்தது. 'பகவதி அப்பனிடஞ்செல்லுங்கள். மொழி பெயர்த்துத் தருவார்' என்றேன். ஓர் உருபா நன்கொடை யோடு பிரிந்தனர். கேரளத்தில் இடதுசாரியை மிஞ்சிவளர வாய்ப்புடைய ஒரே கட்சி கழகம். கழகத்திற்கென முழுநேரம் உழைக்க, பொருளிழப்பைப் பொருட்படுத்தாது பாடுபட நான்கு ஆட்கள் இருந்தால் நல்ல வளர்ச்சி காண முடியும். இருப்பவர்கள் சிலரெனினும் எத்தனையோ சிக்கல்கள்! பொருள் வசதியின்மை கொள்கைப்பிடிப்பின்மை! பீர்மேடு தொகுதியில் தொழிலாள ரிடை கழகத்திற்குச் செல்வாக் குள்ளமையை அறிய முடிந்தது.

## ஆறணாவிற்கு கல்கி மலர்

பழவங்காடியில் 1960 கல்கி மலரொன்று ஆறணாவிற்கு வாங்கினேன். காளிதாசனின் குமாரசம்பவத்திற்கு மணியம் போட்டிருந்த படங்கள் அருமை. நல்ல ஓவியங்களைத் திரட்டித் தொகுக்க வேண்டும்.

*(25.12.66)*

◆

## இங்கிலாந்தில் இலக்கிய யாத்திரை: சுந்தா கட்டுரை

கலியனுக்குப் பத்து உருபா விடுத்தேன். கேட்கவில்லை யெனினும் தேவையிருக்கும். பெற்றதும் மகிழ்வான். மாநாடு

வருகிறதல்லவா? இன்றுமுதல் நீலிபிருங்காதி எண்ணெய் தடவத் தொடங்கியுள்ளேன். காமாட்சியின் பட்டறிவின் விளைவு. வீயின் மைத்துனர் முத்துக்குமார் என்பவர் வந்தார். உரையாடினோம். 'வீ மணமுடித்த போதெல்லாம் நல்ல தமிழிலேயே உரையாடுவார். பின்னர் மாற்றம் ஏற்பட்டது!' என்றார் அவர். தனித்தமிழ் தொடர் பான சில கருத்துக்களைச் சொன்னேன். விரும்பிக் கேட்டார். பிற்பகல் அறையில் இங்கிலாந்தில் இலக்கிய யாத்திரை' என்ற கல்கி வெள்ளிவிழா மலரில் வந்த 'சுந்தா' என்பவரின் கட்டுரையைப் படித்தேன். இனிய கட்டுரை. சொல்லும் முறையும் நடையும் நெஞ்சைக் கவ்வுகின்றன. பிரௌனிங், சான்சன், இலேம்ப், கீட்சு, சேக்சுபியர், கார்லைல் முதலியர்களின் நினைவுச் சின்னங்களைப் பார்த்துச் சுவைத்து எழுதிய கட்டுரை. சுந்தாவொடு தொடர்பு கொள்ளல் வேண்டும். வீயும் நானும் வேறிரு வடமொழிக் கல்லூரியரொடு பூப்பந்து விளையாடினோம். உடற்குப் பயிற்சியும் உளத்திற்கு இன்பமும் வாய்த்தன.

*(26.12.66)*

◆

## கழக வளர்ச்சி – இடதுசாரியின் வீழ்ச்சி

'கேரளப் பேராயக் கட்சியொடு கழகம் எவ்வகை உடன்பாடுங் கொள்ளாது' என அமைப்புச் செயலாளர் அறிக்கை விட்டிருந்தார். இங்கிருந்து செல்கின்ற நண்பர்கள் நிலையைத் தெளிவாக விளக்கிச் சொல்ல வேண்டும். நான்குபேர் உள்ள கட்சியோடெல்லாம் உறவுகொள்ளும் கேரள இடதுசாரியினர் கழகத்தொடு பேசவே முன்வரவில்லை என்பதையும் கழக வளர்ச்சி இடதுசாரியின் வீழ்ச்சி என அவர்கள் எண்ணுவதையும் எடுத்துக் காட்ட வேண்டும். எப்படியும் தலைமைக் கழகம் உடன்பாட்டை ஏற்காதென்றே எண்ணுகின்றேன்.

*(27.12.66)*

◆

## ஐயாவின் மணல்திட்டு

தென்மொழி, தமிழ்ச்சிட்டுக் கட்டு வந்தது. வழக்கமான சிறப்போடு வந்த சிட்டில் இருதங்கையர் புதிர் போட்டிருந்தனர். அதைப் பார்த்ததும் நிறை மகிழ்ச்சி. பகர்கின்ற செந்தமிழின் பழி நீக்கப் பெண்களெலாம் பறந்துவரும் நாளையன்றோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்! அடுத்த சிட்டில் என் 'தங்கையே' பாடல் வெளியாகலாம். ஐந்து ஆடவர்களால் இயலாத

அறிவுப்பரப்பலை ஒரு பெண் செய்து முடிக்கலாம். ஐம்பது ஆடவர்களை வைத்து அறிவுரை வழங்குவதை விட ஐந்து மகளிர்க்கு அறிவுரை வழங்குவது நிலைபயன் தரும். தென்மொழி யில் வெளியான ஐயாவின் 'மணல் திட்டை'ப் படித்தேன். சிறப்பாயுளது...

## தந்தையராகும் நண்பர்கள்

வளனுக்கு 4.12.66 மகன் பிறந்ததாகவும் 'அருள் இளங்கோ' எனப் பெயரிட்டிருப்பதாகவும் எழுதியிருந்தார். சாமிக்கு 6.12.66 பெண்மகவு பிறந்து தாயும் சேயும் நலமாயிருப்பதாக எழுதி யிருந்தார். நண்பர்களெல்லாம் தந்தைகளாகின்றனர். தம்பிகள் சிலரும் அப்படியே! இனிய மகவுக்குத் தந்தையாகும் நினைப்பே இனிக்கின்றது. ஒருத்திக்குக் கணவனான பிறகல்லவா ஒரு மகவுக்குத் தந்தையாக வேண்டும்! கணவனாவதற்கே இன்னும் காலமிருக்கின்றதே! அதற்குள் எத்துணை ஆவல்!

(28.12.66)

◆

## நெய்யாற்று அணைக்குப் பயணம்

9¾ மணி அளவில் வீ மைத்துனர் நெய்யாறு அணைக்குப் போக வந்தழைத்தார். பத்தரை மணிக்குக் கிளம்பி குடும்பத்தில் எல்லோரும் 12¼ அளவில் அணை சென்றோம். அறிவின் நடனமும் உழைப்பின் வெற்றியும் இயற்கைத்தாயின் மடியில் துயில்கின்றமை உளம்பிணிக்கும் காட்சி. வைகையை விட இனிய, காணவேண்டிய அணை. முன்பு யான் சென்றபோது அணையில் நீர் விடவில்லை. இம்முறை இழிந்து வீழ்ந்தது. எல்லோர்க்கும் வழிகாட்டி யானே!

## 'தி வார் லார்டு' ஆங்கிலப்படம்

'The war Lord' என்ற ஆங்கிலப் படத்திற்கு 'வீ' மைத்துன ரொடு முதற்காட்சிக்குச் சென்றேன். 'ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு ஒண்ணுதற்கு உடைந்ததே' என வள்ளுவத் தலைவன் கூறுகிறானே அதன் விளக்கமாகப் படம் அமைந்தது. ஆற்றல் மறவன் ஒருவன் அன்னமயிலின் காதற்கடிமை யாய்க் கிடக்கிறான். மீறிய மோகம் அவன் பட்டத்தைப் பறித்துக் கொள்கிறது. தம்பியைக் கொல்ல வைக்கிறது.

(30.12.66)

◆

## கொட்டை எழுத்தில் இராசாசி பேச்சு

முறையாகக் கழகச் செய்திகளையோ மாநாட்டைப் பற்றியோ தகவல் தராத பார்ப்பன இதழ்கள் பொது மாநாட்டு இரண்டாம் நாளில் இராசாசி பேசியதைக் கொட்டை எழுத்தில் போட்டிருந்தன. ''தன்னாட்சி' இதழிலிருந்து தகவல் வந்தது. நண்பர்களொடு கலந்து பணம் விடுக்க வேண்டும்.

*(31.12.66)*

◆

1967

# சனவரி - 1967

## அறிவை மீறிய உணர்வுகள்

அறிவை மீறிய உணர்வுகளே ஆட்சி செய்வதைக் காண்கின்றேன். உணர்வூற்றில் இன்பம் பொங்கிவழிகிறது. ஆனால் துன்பமும் ஊமைக்காயம் போல உள்ளுக்குள்ளேயே பரவிப் படர்ந்து நச்சரித்து நாசப்படுத்தலாமே! நிறைகின்ற வேகத்திலேயே நீலவானில் உலவுகின்ற வெண்மதி குறைவ தில்லையா? ஒளிமழையில் ஒருநாள் உலகைக் குளிப்பாட்டும் முழுமதி இருள் முழைஞ்சில் ஓர்நாள் சிறைப்படுகின்றதே! அதேபோன்று உணர்வின்பத்தில் கூத்தாடும் இந்நெஞ்சம் துன்பஉணர்வில் கருகிப்போகும். உணர்வாற்றை அறிவுக்கரையால் தடுத்து நெறிப்படுத்தவேண்டும். உணர்வு - இனிப்பு - இனிப்பையே அருந்திக்கொண்டிருக்க இயலுமா? உடற்கு ஊறு பயக்குமே; அறிவுக்காரம் வேண்டும்.

முன்னைய இரண்டேடுகளையும் புரட்டிப் பார்க்கின்றேன். பெற்ற மகவைக் கண்குளிரக் கண்டு நெஞ்சுகனிய நெகிழ்வாளே தாய், அம்மகிழ்ச்சி! வாழ்க்கைச் சோலையில் சருகுகள் உதிர் கின்றன. தளிர்கள் முளைக்கின்றன. மொட்டு மலராகின்றது. பழம் அழுகுதல் உண்டு. நெஞ்சமரத்தில் அமர்ந்து எண்ணப் பறவைகள் எத்தனையோ, மகிழ்ச்சியால் கூவுகின்றன். துயரத்தால் ஓலமிடு கின்றன. ஒவ்வொரு நாளும் அவைகள் எத்தனைப் போர்கள் செய்கின்றன. கனியிசைக்குயில் கரைகின்ற காக்கையிடம் மண்டி இடுகின்றது. காக்கை வேறிடம் போனவுடன் 'ஐயோ நாம் தோற்றுப்போனோமே எனக்குயில் அழுகின்றது. கோழிக்குஞ்சின் உயிர்குடிக்க 'எங்கே எங்கே' எனப் பொல்லாப்பருந்து வட்ட மிடுகின்றது. தாய்ப்பெடையின் பேரவலத்தைப் பற்றி அதற்கென்ன கவலை? வல்லூறு வந்துவிடுமே என்று அதற்கோர் அச்சம்; இரைதேடும் வேட்கைமுன் அவ்வச்சவுணர்வு ஓடி ஒளிந்து கொள்கின்றது.

தென்றல் வந்து தழுவாதா எனச்சில செடிகொடிகள் ஏங்கி நிற்கின்றன. வண்டு வந்து வாய்வைத்து ஊதாதா என வண்ண மலர்கள் மணத்தைப் பூசி விழியோட்டுகின்றன. பெருங்காற்று

வீழ்த்திவிடுமோ என்று மரக்கன்றுகள் சில நடுங்குகின்றன. பிஞ்சுகள் தடுமாறுகின்றன. காற்று பிஞ்சைப் பார்க்கிறதா? பூவைப் பார்க்கிறதா? பிஞ்சு காயாகுமே, பின் கனியாகுமே என்று அதற் கென்ன கவலை? சோலைக்குள் நுழைகிறேன். எங்கும் இனிமை! பொங்கும் கவர்ச்சி, காட்சியின்பம், கேள்வியின்பம்... ஏன் ஐம்புல இன்பங்களுமே கிடைக்கின்றன. இவ்வின்பத்தால் உலகம் பெறும் பயன்? இனிமை துயிலும் வாழ்க்கைச் சோலையை இருளல்லவா போர்த்தி இருக்கிறது. இன்ப உணர்விற்கும் இருட்டிற்கும் அதிகத் தொடர்பு போலும்! அறிவொளி பாய்ந்தாக வேண்டும்.

முன்னை இரண்டு ஏடுகளிலும் இன்பப் பொழில்களைக் கண்டேன். ஆனால் பாவையர் பற்றிய இருட்போர்வையன்றோ அப்பொழில்களை மூடி இருக்கின்றது! பெட்டிக்கடையில் குப்பியுள் இருக்கும் மிட்டாயைப் பார்த்து அஃது தன்வாயில் விழுந்ததாயெண்ணிச் சப்புக்கொட்டிப் பார்க்கும் சிறுவனாகப் பன்னேரம் இருந்திருப்பேன் போலிருக்கிறதே! சொடுக்கியைத் தட்டினால் மின்விசிறி ஓடுகிறது. விளக்கு ஒளிர்கிறது. என் நினைவோட்டத்தை, எண்ண ஒளியை இரண்டு ஏடுகளிலும் பார்க்கும்போது அவற்றின் ஊற்றுக்காலாக அமைவது எது? நெஞ்சைப்பறிக்கும் பார்வையும், நினைவைக் குழப்பும் சிரிப்பும், ஏங்கித் தவிக்கச் செய்யும் நெளிவும் சுளிவும் உடைய பெண்மை தானே! நல்லவோர் கொடியைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்ற நாட்டந்தான் இந்தக்கொம்பை அலைக்கின்ற தோ? நெஞ்சக் காற்றால் இந்தக் கொம்பை நோக்கி நான்கைந்து கொடிகள் ஆடுவானேன்? வேறு திசைநோக்கி ஆடுவதை யார் வேண்டா மென்றது? காற்றடிக்கும்போது கொம்பை நோக்குவது, பின் எட்டிப்போவது - கொம்பை மறந்ததுபோல் கண்ணாமூச்சி விளை யாடுவது - இந்த விளையாட்டு தேவைதானா? நடக்கின்றதே!

கதிரவன் வருகிறான் எத்தனை மலர்கள் சிரிக்கின்றன! மணத்தை வாரிப்பொழிந்து தூதுவிடுகின்றனவே! இதைப் பற்றியெல்லாம் அவன் கவலையா படுகின்றான். எல்லாவற்றையும் பார்த்தவாறே பாதையை மாற்றிக்கொள்ளாமல் பயணஞ்செய் கிறான். 'பார்வைகட்கு நெஞ்சைப் பறிகொடுக்காது பயணஞ் செய்தாக வேண்டும்'. ஞாயிற்றோடு போர்செய்ய வேண்டிய என் நெஞ்சம் கட்டைவண்டியின் உருளையில் ஒட்டிக்கொண்டிருக்கும் தூசாக இருப்பதா? மதியொளியைக் கிழித்துப் பாயவேண்டிய என் நோக்கு தரையிற் கிடக்கும் வாழைப்பழத் தோலையா பார்ப்பது? கொடி ஆடினால் என்ன? அறுந்து வீழ்ந்தால் என்ன? கொம்பு ஏன் கவலைப்படவேண்டும். குதிரைக்குக் கடிவாளத்தோடு கண்களின் பக்கப்பார்வையை மறைக்க ஒரு கருவியை மாட்டிவிடுவதில்லையா? செம்மையான நெறியில் செல்ல அப்படி

ஓர் அமைப்பு வேண்டும் போலும்! கொதிக்கின்ற உலை அடங்க வேண்டுமென்றால் எரிகின்ற கொள்ளியை எடுத்தெறிய வேண்டும். நெஞ்சில் அமைதி குடிகொள்ள, அலையும் உணர்விற்கு அறிவுக்கடிவாளம் போட்டாக வேண்டும்...

## ஊராட்சித் தேர்தலைப் புறக்கணித்த சிற்றூர் மக்கள்

கோவையில் ஓர் சிற்றூர் மக்கள் ஒற்றுமையாய் அரசின் ஆணையை எதிர்த்து ஊராட்சித் தேர்தலே நடத்தாது உள்ளன ராம். காரணம் அவ்வூராட்சியைச் சேர்ந்த பகுதியை மக்கட் கருத்துக்கு மாறாக அரசு வேறுபகுதியிற் சேர்த்துவிட்டதாம். நெடுநாட்களாக இந்நிலைமை என்கிறது இன்றைய செய்தி...

## அவதாரபுராணம்

அறையில், மாதவன் முன்பெழுதிய 'அவதாரபுராணம்' 'பசீரின் மூன்று நவீனங்கள்' முதலிய மொழிபெயர்ப்பு மலையாளக் கதைகளைப் படித்தேன். அவதார புராணம் நெஞ்சைப் பிணித்தது. ஏசுவின் பிறப்பிலுள்ள புதிரை மையமாக வைத்துக் கதை இழைகிறது. மேரிக்கு ஒருவன் கொடுத்த கருவே ஏசு என்பதைப் பிறிதோர் கதைவழி விளக்குகின்றார் ஆசிரியர். மூல ஆசிரியரின் பெயர் இதழில் (திராகிெ ன்) குறிப்பிடப்படாதிருப்பது நன்றன்று.

*(1.1.67)*

◆

## கருத்துச் சிறப்பில்லா அ.கி.ப. நூல்

'திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும்' என்ற அ.கி.ப. நூல் பற்றிய சுருக்கக் கட்டுரையைப் படித்தேன். வள்ளுவர் வாழ்வின் பெரும்பகுதியைக் குறள் எழுதச் செலவிட்டுள்ளார் எனும் அ.கி.ப. 'துப்பார்க்குத் துப்பாய...' எனுங்குறளை வள்ளுவர் 25 வயதிற்கும் மிகாத நிலையிலேயே எழுதியிருப்பாரென்றும் 'உணலினும் உண்டதறல் இனிது...' எனுங்குறளை 55 அகவையிருக்குங்கால் எழுதியிருக்கலாமென்றும் கூறுகின்றார். குறளில் இற்றைச் சர்வோதயக் கருத்துக்கள் பரந்து கிடப்பதை எடுத்துக்காட்டும் ஆசிரியர் குறளில் 'நட்பு' என்பதில் மக்கள் கொள்ளும் நட்பு அடங்குமெனினும் அதனினும் நேசநாட்டு நட்பையே அது சுட்டுவதாகக் கொள்வது பொருந்தும் எனக் கூறி எடுத்துக் காட்டாக 'செயற்கரிய யாவுள...' 'தொழுதகையுள்ளும் படை யொடுங்கும்...' முதலிய குறள்களைக் காட்டுகின்றார். அவரின் 'தமிழ் இலக்கியம் கற்க' என்ற பிறிதொரு நூலில் இலக்கியக் கல்விக்கு, இலக்கணம். தமிழ்மரபு, வரலாறு ஆகியவை பற்றிய

அறிவு இன்றியமையாதது என்கிறார். கருத்துச் சிறப்பில்லா நூல் இது.

*(2.1.67)*

◆

## சானகிராமனின் கதைசொல்லும் திறன்

'சிறுகதைக் களஞ்சியம்' என்ற நூலில் கு.ப.ராவின் விடியுமா?' தி. சானகியின் 'கோபுரவிளக்கு' எனும் இரு கதைகளை யும் படித்தேன். 'விடியுமா' கதை சொல்லும் முறையில் சிறப்பாக ஒளிர்கின்றது. சங்கிலித்தொடர் போன்ற பின்னிப் பிணைந்து இயல் கருத்துவளம், சிறு தொடர்களில் பாய்ந்தோடும் அழகிய நடை; புகைவண்டியில் கதைமாந்தர்களைப் பயணஞ் செய்ய வைத்து புறச்சூழலை அகநிலையோடிணைத்து ஆசிரியன் கதைநடத்தும் பாங்கில் இயற்கை துயில்கின்றது. கு.ப.ராவின் பல கதைகளையும் படிக்க வேண்டும். கோபுரவிளக்கின் கதைக்கரு புதுமையும் புரட்சியும் வாய்ந்தது. வறுமையால் பரத்தமை மேற்கொண்ட ஒரு குடும்பத்தை மையமாக வைத்து நடக்கின்றது. அம்மா, பரத்தமையில் மகளையும் ஈடுபடுத்திவிடுகிறாள். மகட்குற்ற கருவைக் கலைக்கும் முயற்சியில் காலனுக்கு வெற்றி, தி.சா. கதை சொல்லும் முறையில் நம் உள்ளம் பறந்தோடி இறந்து கிடக்கின்ற பெண்ணின் பக்கத்தே அடித்துப் புரண்டு கதறிப் புலம்புகின்றது. அவளுக்காகக் குருதிக் கண்ணீர் வடிக்கின்றது. உள்ளத்தை உருக்கிவிடுகிறான் ஆசிரியன்...

## 'அவர்கள்' படும்பாடு

ஆண்பாலொருமைக்குத் தொடக்க நிலையில் 'ன்' விகுதியே பயன்படுத்தி அவன் என்றழைத்த மாந்தன் பின் பலர்பால் ரஃகான் ஒற்று விகுதியைப் பயன்படுத்தி 'அவர்' என்று ஆண்பால் ஒருமையை அழைத்தான். பின் அதுவும் போதாதென்று கள் விகுதியைச் சேர்த்து 'அவர்கள்' ஆக்கினான். இவ்வளர்ச்சி மன்பதையில் வளர்ந்து வந்துள்ள போலித்தன்மையைக் காட்டுவ தாக யான் கருதுகின்றேன். மெய்ம்மையினின்று நழுவிப் பொய்ம்மையை, புரட்டை, போலித்தன்மையை நோக்கி ஓடுகின்ற குமுகாயத்தின் கால்சுவட்டை இச்சொற்கள் காட்டுகின்றன. அவன் என்றழைத்த நிலை, எவனோ ஒருவன் ஏதோ ஒன்றைப் பிறிதொருவனிடம் பெறுதற்காக 'அவர்' என்றழைத்தமையால் தாழ்ந்தது, ஏய்ப்போனாய வேறொருவன் 'அவர்கள்' என்றமை யான் 'அவர்' தாழ்ந்தது. மேடைதொறும் இதழ்தொறும் 'அவர்கள்' படும்பாட்டை என்னென்பது? அவர்கள் என்றழைப்பதும்

போதாதென்று வெற்றுப் புகழ்ச்சியையே வேலையாகக் கொண்டவர்கள் நிறைய அடைகளைச் சேர்க்கத் தொடங்கிவிட்டனர். போலிப் புகழ்ச்சியில் உலகம் மயங்கிக் கிடக்கின்றது. பெரிய மட்பானை! உள்ளீடற்றது. இதுதான் இன்றைய குமுகாயம்.

(3.1.67)

◆

## தி.மு.க. தேர்தல் அறிக்கை: அண்ணாவின் பேச்சு

'நம் நாட்டில்' கழகத் தேர்தல் அறிக்கையையும் வேட்பாளர்ப் பட்டியலையும் பார்த்தேன். எல்லாக் கருத்துக்களை யும், உள்ளடக்கி இருந்தது அறிக்கை. வேட்பாளர்ப் பட்டியலில் ஏனை இதழ்களில் வந்த விசுவநாதன், அருணா (புலவர்) கிருட்டிண மூர்த்தி (பொன்பரப்பி) ஆகிய பெயர்கள் இல்லை. முரசொலியில் அண்ணாவின் தலைமைத் தொடக்கவுரையின் ஒரு பகுதி 'தமிழ்மொழி - இனம் - மரபு காக்கவே தி.மு.கழக ஆட்சி' எனுந் தலைப்பிட்டு வெளியாகியிருந்தது. "இந்த நேரத்தில் தமிழ் மரபு பற்றியும் - வரலாறு பற்றியும் உலகத்தோடு அதற்கிருந்த தொடர்பு பற்றியும் எண்ணிப் பார்த்திட வேண்டும்'. தரணி புகழ வாழ்ந் திருந்த புகழ்பெற்றது தமிழ் மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு - எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு - அவர்கள் அரசு என்ற ஒன்று ஏற்படுத்தாதற்கும் முன்பு அரச நீதிகளை வகுப்பதற்குமுன்பு; காடுகளில் அவர்கள் உலவிக் கொண்டிருந்தபோது - உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறிபெற்றுத் திகழ்ந்தது தமிழகம். நமது மூதாதையர் யவனம்வரை தொடர்பு கொண்டிருந்தனர் - சீனம் வரை சென்ற திரும்பினர். தூரக் கிழக்கு நாடுகளில் கலாச்சாரத் தொடர்பு மேற்கொண்டிருந்தனர். இரண்டு ஆண்டுகளுக்குமுன் தம்பி செழியனுடன் மலேசிய நாடு சென்றி ருந்தபோது கடாரம் என்றழைக்கப்பட்ட ஊருக்குச் சென்றோம். இப்போது அது கெட்டாமாகாணம் என்றழைக்கப் படுகிறது. அங்கே - சோழநாட்டின் மண்டபங்களையும் - வாவிகளையும் - கோவில்களையும் - பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த சிற்பங்களையும் கண்டேன். அது முன்பு மண்மேடாகிக் கிடந்தது. இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்டு கண்காட்சிக்காக வைக்கப் பட்டிருக்கிறது. அந்த ஊரிலுள்ள திடலில் நான் பேச எழுந்தபோது 10 நிமிடம் என்னால் பேச முடியவில்லை.

கடல் கொந்தளித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் - கடலைக் கடந்துசெல்லும் கலங்கள் நேர்த்தியாக அமைக்கப்படாத அந்தக்காலத்தில் - நீராவிக் கப்பல்கள் இல்லாத அந்தக் காலத்தில்

அலைகடலைக் கிழித்துக் கொண்டு ஆயிரக்கணக்கான மைல் களுக்கப்பால் கடாரம் சென்று பெருமையை நிலைநாட்டியது தமிழகம். அதே தமிழினத்தைச் சார்ந்தவர்கள் - தேயிலைத் தோட்டத்திலும் - இரப்பர் காடுகளிலும் காலிகளாய் இருக்கும் நிலையை நினைத்ததும் அந்தப் பெருமை மிக்கத் தமிழ் மரபிலா நாம் பிறந்தோம்? என்று எண்ணினேன். 10 நிமிடம் பேச முடியவில்லை. அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்றவகையில் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும். இன்னும் நம் மொழியை இலக்கியச் செறிவுள்ளதாக்கி நமது பொருளாதாரத்தைச் சீராக்கி உரிமைகளை நிலைநாட்டி - இந்த நாட்டுத் தமிழர்கள் - தமிழ்ப் பரம்பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டு களாவது ஆகும்.

வெறும் அரசியல் நடத்த - 67இல் ஆட்சி அமைக்க மட்டும் நம் கட்சி இருக்கிறது என்று நினைக்காமல் 67க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டு காலத்திற்காவது நமது பணி இருக்கிறது என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப்பதியவேண்டும். தமிழ் மக்கள் - தமிழ் மரபைப் புரிந்துகொண்டு - தமிழ் வரலாற்றைப் புரிந்துகொண்டு புதுவரலாற்றை - புதிய செய்தியை புதிய பண்பை உலகுக்கு வழங்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் பணி யாற்றுகிறோம்."

பேச்சில் ஒருபகுதி இது. அண்ணன் என் உயிரின் உயிர்ப்பாக இருப்பதன் காரணம் இப்பகுதியில் அடங்கிக் கிடக்கின்றது. கம்பன் சீதையைத் 'தவஞ்செய்த தவ மாந்தையல்' எனப் பாடுகிறான். என் அண்ணனைத் தமிழ்த்தாய் நூற்றாண்டுக் கணக்கில் தவமிருந்து பெற்றிருக்கிறாள். அண்ணாவின் காலத்தில் வாழ்கின்றமை பெரும்பேறு. அண்ணா பிரிந்து விட்டால்...? நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகின்றது. அண்ணாவின் பிரிவை இந்நெஞ்சு தாங்காது. அதற்கு முன்பே உடற்கூட்டினின்று உயிர்ப்பறவை பறந்துவிடல் வேண்டும். நெஞ்சச் சிறையில் அண்ணனைக் கைதியாக்கி வைத்திருக்கிறேன். எங்கேயாவது கைதியே சிறையை ஆட்டிப் படைக்கும் அதிகாரியாக இருக்க முடியுமா? ஆனால் இந்தக் கைதி நெஞ்சச் சிறையின் மேலதி காரியாகவன்றோ இருக்கின்றான். கைதியாகிய அவன் பார்க்கி றான். நெஞ்சச் சிறையின் உரிமையாளனாகிய நான் கனிவும் அறிவும் வழிகின்ற அப்பார்வைமுன் என்னையே படையலாக்கு கின்றேன். காவிப்பல் வெளியே தெரிய கையை உயர்த்திக் காவியச் சொன்மழை பொழிகிறான். அவன் பேச்சு என்னை அழவைக் கிறது. சிரிக்கவைக்கிறது. சிந்தனைப்பொறி தெறிக்கச் செய்கிறது.

விழிகளில் புதியஒளி பிறக்கிறது. கூனிய நெஞ்சம் நிமிர்ந்தெழு கின்றது. ஆறிய உணர்வுகள் வீறிடுகின்றன. அரிமா நோக்கு, களிற்றுப் பெருநடை, புலிப்பாய்ச்சல் எல்லாம் என்னுள் அடிமை. கைதியே! ஆணையிடு எனச் சிறையின் உரிமையாளனாகிய யான் காத்திருக்கின்றேன். என்னுள் யானாய் இருக்கின்றான் அண்ணா...

## முறைப்பெயர்கள்

'யாய்' எனுஞ்சொல் 'என்தாய்' எனும் பொருளில் வருகின்றது. குறுந்தொகையில், இதுவே பிறகு ஆய் ஆகி இப்போது 'ஆயா'வாக வழங்கலாம். யான் என் அன்னையை 'ஆயா' என்றழைப்பது பிழைபாடுடைய வழக்காயிராது என இதனால் உணரமுடிகின்றது. கணவனை ஊர்ப்புறத்தில் 'ஆம்படையான்' எனச் சொல்லும் வழக்குளது. 'ஆம்படையான் வீட்டிலே இருக்கின்றானா' எனில் கணவன் வீட்டில் உள்ளானா என்பது பொருள். இத்தொடர்க்கும் அகமுடையான் (நெஞ்சில் இருப்பவன்) என்பதற்கும் தொடர்பிருக்கலாம் போல் ஓர் உணர்வு. எண்ணிப் பார்க்க வேண்டும். மலையாளத்தில் 'வாரம்' எனுஞ்சொல் நாளையும் வாரத்தையும் குறிப்பதைப் போலவே தமிழில் 'கிழமை' குறிக்கின்றது (திங்கட்கிழமை, கிழமை இதழ்).

*(4.1.67)*

◆

## பொங்கல் வாழ்த்து

தாங்கருந் துயர்மடு தவித்துழல் கின்ற
ஓங்கிய மலைமுகட் டுலவிய தமிழா!
நேற்றை அழுக்கை நீக்கினை வீட்டில்;
மாற்ற வேண்டாமா நாட்டிரும் மாசை?
அறுவடைப் பயன்நுகர் திருவிழா நாளில்
உறுதுய ரெல்லாம் ஒழிய
அறுவடை செய்யும் ஆற்றல் பெறுகவே!

என இவ்வாண்டிற்கான பொங்கல்வாழ்த்தை எழுதியுள்ளேன்.

*(9.1.67)*

◆

## நீலிகதை

கேரளப் பல்கலைக்கழகம் வெளியிட்ட நீலிகதை, பொன் னிறத்தாள் கதை, வாதில் திறப்பாடல்கள், ஞானமுத்து மாலை முதலிய நான்கு மலையாளப் புத்தகங்கள் வேண்டுமென மாதவன்

நேற்றுக் குறித்துக் கொடுத்தார். பெயர்களிலிருந்து அவை தமிழ் நூல்களாக இருக்கலாமென்றார். கடையிற் கேட்டபோது ஞானமுத்து மாலை, நீலிகதை ஆகிய நூல்களே இருந்தன. அதில் ஞானமுத்து மாலை கிறித்துவச்சமயக் கருத்துக்களைப் பேசுவதாம். அஃது இன்றியமையாததன்று என்பதால் நீலிகதையை மட்டும் வாங்கினேன். நண்பகல் அறைக்கு வந்த நல்லதம்பி அதைப் படித்துப் பார்த்து பெரும்பாலும் தமிழாகவே இருப்பதைப் புலப்படுத்தினார். பழைய நூல்களைப் படித்துப் பார்ப்பின் மலையாளம் தமிழ்க் கிளையே என நிறுவ நிறைய சான்றுகள் கிடைக்கலாம்.

*(9.1.67)*

◆

## நாகம்மாள்

சண்முகசுந்தரத்தின் 'நாகம்மாளை'ப் படித்தேன். மண முடிந்து பெண்மகவுக்குத் தாயாகி விதவையானவள் நாகம்மாள். அவள் கொழுந்தன் சின்னப்பன் அவன் மனைவி இராமாயி ஆகியோரொடு வாழ்கிறாள். கெட்டியப்பன் என்ற ஓர் குடித்துத் திரிபவனோடு தொடர்பு. இறுதியில் பங்குபோடும் அளவுக்கென்று கெட்டியப்பனின் தடியடியால் சின்னப்பன் உயிர்பிரிகிறது. இராமாயியையும் விதவையாக்கிக் கதைமுடிகிறது. நாகம்மாள் பெயருக்கேற்ப நாகமாகவே தோன்றுகிறாள். சின்னேரம் வெளிப்படும் நல்ல உணர்வுகளும் தோற்றுப் போகின்றன. நாகம்மாளை ஆசிரியன் கொன்றுவிடுவான் என நான் எதிர்பார்த்தேன். எதிர்பாரா வகையில் முடிவு அமைந் துள்ளது. முடிவால் புதினம் சிறக்கிறது எனலாம்.

*(10.1.67)*

◆

## பனித்துளி

சண்முகசுந்தரத்தின் 'பனித்துளி'யைப் படித்தேன். கொங்கு நாட்டு மண்மணம் அழியாக் கோலம், மாயத்தாகம். நாகம்மாளை விடக் கமழ்கின்றது. முத்தாயாள் என்றொரு, மணம் முடித்து ஆறு மாதத்துள் விதவையாகிய பாத்திரம் நினைவில் நிற்கிறது. நாட்டுப்புற மக்களின் மன ஓட்டங்கள் படம்பிடித்துக் காட்டப் படுகின்றன. மொழிநடையில் கொங்கு நாட்டுத்தமிழ் ஆட்சி செய்கிறது. 'கட்டுமானம், அதுக்கோசரம், மாரீப்பெ (மாரியப்பன்) குத்தாரி (சோளத்தட்டைக் குத்தாரி) பண்டங்கள் (மாடுகள்) இது எதும்பட கண்ணுங்க (இது எதுபோட்ட, எதனுடைய கன்று)

போவணி, கொட்டம், வளர்த்தியது (முற்று - வளர்த்தினது) பண்ணயம் (பண்ணை) பொறந்தவ (உடன் பிறந்தவள்) மொண்ணத்தனம், கவுண்டிக்கை, தூக்கு (மெய்ப்பை மாட்டுமிடம்) அப்பேசம் (பழக்கம்) பள்ளுப்பறை பதினெட்டு சாதி(?). வெவுரி யோய் போட்டா குருட்டாம் போக்கு, காணமா (காணோமே), நடவை (வீட்டுவாயில்?) விளா (ஏர்) ‘இண்ணிக்குச் செத்தா நாளைக்க ரெண்டு நாளுங்க’ அமுட்டுத்தா (அம்புட்டுத் தான்) நாம செத்தா நாடெல்லா எலும்பாவா போயிருது’ திரிவாத்தானா இருக்காரே (திருவையாத்தானா?) கொங்கமொரி (பருவப்பெண்) தண்டுவன் - தெம்பரம் (தென்புறம்) தோட்டத்துக் கடவு, பொடக்காழி (?) மசப்புள்ளெ (விதவை, பேதை) தாட்டிவிடுதல், பண்டம்பாடிகள் (மாடுகள்) திக்குத்திக்கந்தம் என இவ்வாறு வழக்குமொழி மணக்கிறது. முத்தாயாளின் துயரத்தைப் பல இடங்களில் ஆசிரியன் வடித்துக் காட்டுகிறான். அதுவும் அவள் பண்ணையைப் பார்த்து வரும் நாச்சப்பனோடு தொடர்புப்படுத்தி ஊரில் பரவியுள்ள செய்தியை அறிந்து அவள் மனம் படும்பாடு, இறுதியில் அரளிவேரை அரைத்துக் குடித்து அவள் இறக்கத் துணிவது, மருத்துவத்தால் பிழைத்துக்கொள்ளும் போது நாச்சப்பன் ஊரைவிட்டே வெளியேறுவது ஆகிய காட்சிகள் நினைவில் பதிகின்றன. சில இடங்களில் ஆசிரியன் வரைகின்ற சில கோடுகள் முத்தாயாள் நாச்சப்பனிடை நெஞ்சக்கலப்பு இருக்குமோ என்ற ஐயத்தை எழுப்புகின்றது. நாச்சப்பன் வெளியேறுதலாகிய கதை முடிவும் ஐயத்திற்கிடந் தருகிறது. இளம்விதவை முத்தாயாள் வீட்டில் தூங்குகின்ற காட்சியை ஆசிரியன் “எங்கோ கண்காணாத இடத்திலே, ஆழமான ஒரு சுனையிலே, இந்த உலகத்தின் தொடர்புகளை யெல்லாம் அறுத்துக்கொண்டு, விடுதலை பெறவிரும்பிய ஜீவன் ஒன்று நீரில் மிதப்பது போலிருந்தது” என்கிறான். முத்தாயாளின் துயர்ச்சோர்வு “மனிதகுலத்தின் மாளாத்துயர் அனைத்தும் தன்தலையிலே தாங்கியவளைப்போல் சேர்ந்து நின்றாள். இயற்கையும் பெண் இனந்தானே? அம்மா, இயற்கைத்தாயே! அதோ துவண்டு துடிக்கும் மெல்லியலாளை உன் மடியிலே ஆர்வத்தோடு அணைத்துக்கொள் அம்மா! இந்த மனிதவர்க்கத் தின் முகத்திலே விழிப்பதில்லை என்ற வைராக்கியத்துடன் உன் மடியில் தலை சாய்த்துக் கொள்ள விரும்புகிறாள்... அம்மா, தேவி அவளை அனாதரவாக விட்டுவிடாதே தாயே!” என ஆசிரியனால் பேசப்படுகின்றது. நம்முள்ளமும் அவட்காக வருந்துகின்றது. சண்முகசுந்தரத்தின் அழியாக் கோலத்தில் உயிர்துறக்கின்ற பேதைப்பெண் முத்தாயாள்! நாகம்மாளின் பெண் மகவின் பெயர் முத்தாயாள்! பனித்துளி விதவை முத்தாயாள். முத்தாயாள் என்ற

பெயரில் சண்முகசுந்தரத்திற்கு ஏதோ ஓர் ஈடுபாடு, அழியாக் கோலம் நிர்மலாவை மணக்க இயலாது, முத்தாயாள் மறைவைத் தாங்கி ஊரைவிட்டு துரைசாமி வெளியேறுவதொடு நிறைகிறது. நாகம்மாள் சின்னப்பனின் இறப்போடு முடிகிறது. பனித்துளி நாச்சப்பன் ஊரைவிட்டுச் சொல்லாமல் வெளியேறுவதில் முற்றுகிறது. மூன்றிலும் இறுதியில் எஞ்சுவது துன்ப இசையே. நாகம்மாளும் ஒரு இளம்விதவை. இன்னுமுள்ள சண்முக சுந்தரத்தின் நூல்களைப் படித்து முடித்தால் சில பொது அடிப்படைகளைக் காண முடியும்...

## மானப்புலியைப்போல் இரு

ஏய், இளவரசு! உனக்கு அறிவே இல்லையா? நெஞ்சை அடக்கி ஆளும் திறமையே இல்லையா? பஞ்சா நின் நெஞ்சம்? பார்வை மூச்சில் பறந்து துடிக்கின்றதே! ஏனடா உன் நெஞ்சம் இப்படி ஊசலாடுகின்றது? எதைப் பற்றியும் கவலைப்படாது? எதற்கும் அடிமைப்படாது உலகுக்கு ஒளி ஈயும் கதிரவனாக நீ இருப்பாயென நான் எதிர்பார்க்கிறேன். நீயோ சிறுவனின் கை நூலில் கட்டுண்டு காற்றுத் திக்கிற்கேற்ப பறந்து திரியும் பட்டமாக இருக்கின்றாயே! உழைப்பவனின் காய்ந்த வயிற்றை, இளமகவு களின் அழுகையை; சிரிப்பை இன்னபிறவற்றைக் கண்டு வெண் தயிர்ச்சோறாக நின் நெஞ்சம் குழைகின்றது. நின் அருளாட்சி என்னை மகிழ்விக்கின்றது. அல்லவற்றை, நல்லவற்றைக் கண்டு துயராலும் மகிழ்வாலும் நெகிழும் நின்மென்னெஞ்சே நின்னைப் பலகால் துன்புறுத்துகின்றதை அறியாயோ? கற்பாறை யாக நின் நெஞ்சை ஆக்கிக்கொள். எதைப்பற்றியும் கவலைப் படாதே. இரக்க நெஞ்சம் நினக்குத் தருகின்ற நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம். திண்ணிய நெஞ்சுகொள்; சோறு போடுகிறோம். நாய் தின்கின்றது. அதே சின்னேரத்தில் மலத்தைச் சுவைக்கின்றது. சோறும் மலமும் அதற்கு ஒன்றுதானா? மலந்தின்னும் நாயாக நீ இருக்கலாமா? பசியோடிருந்தாலும் தான்வீழ்த்திய இடப்புறம் வீழ்ந்த விலங்கைப்புலி உண்ணாதாமே, உனக்குத் தெரியாதா? அகம் 29 உம், புறம் 190 உம் அதைப் பேசுகின்றனவே. கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென அன்றவணுண்ணாதாகி வழிநாட் பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்திருங்களிற்றொருத்த னல்வலம் படுக்கும் புலி. (புறம் 190)

எனப் புறம்பேசும் மானப்புலியைப் போல நீ இரு, ஊசலாட்டத்தை உதறியெறி.

தென்றற்கும் புயற்கும் வளைந்து கொடுக்கும் நாணலைப் போல இருந்து விடுவதினும் ஒரேயடியாய் வேர்கள் பதிய பெருங்காற்றில் கிளைக்கைகள் முறிய விழுகின்ற மரமாக இருக்க நீ

விரும்புகிறாய் என்பதை நானறிகிறேன். நாள்தோறும் அரும்பி மலர்ந்து வாடி வீழும் ஆயிரக்கணக்கான மலர்களில் ஒன்றாக இருப்பதைவிடப் பன்னிரண்டாண்டிற்கு ஒருமுறை மலரும் குறிஞ்சிமலராய் இருக்க விழைகிறாய். மகிழத்தக்க நின் எண்ணங்கள் காளான் வாழ்க்கையுடையனவாய் உளவே! பன்னேரம் அவற்றின் தடங்களே தெரியவில்லையே, மற்றவர் மார்பில் இடம்பெற ஏங்கியும், மணத்தால் பிறரைக் கவர்ந்தும் சிறக்கின்ற சந்தனமரமாய் இருப்பதைவிட எரிக்கப்பயன்படும் விறகைப்போல எரிந்துபோக விரும்புகிறாயல்லவா?...

## இறவாப் பெருஞ்சாவே நீ வாவா

உணர்வு நெருப்பே நீ அவிந்துபோ,
கற்பனைக் கடலே நீ வற்றிவறள்,

நெஞ்சப் பூங்கா புல்பூண்டற்ற கட்டாந்தரையாகட்டும்! பூத்துக் குலுங்கும் எண்ணத்தரு பட்டுப்போகட்டும். கண்களே! கருமணியில் சிறைப்பட்டிருக்கும் ஒளி உங்களை விட்டு ஓடிப்போவதாகுக! குருடான பின்பு அவளைப் பார்க்க முடியாதல்லவா? அசை இடையை, அவிழ்சிரிப்பை, சுழல் விழிகளைக் காணாவிட்டால் கவலையேது? வாயே! நீ மொழியை மறந்துவிடு, காதே! ஒலியை ஈர்க்கும் திறன் உன்னைவிட்டு ஓடுவதாகுக. நடந்து தளர்ந்த கால்களே! எழுதிச் சோர்ந்த கைகளே! புழுத்துப்போகும் வியர்வை நாற்ற உடலைவிட்டுக் கழன்று ஓடிப்போங்கள். எதையும் பேச, கேட்க, எழுத எங்கும் நடக்க என்னால் இயலாதல்லவா? பின் துன்பத்திற்கேது இடம்? பின் எவள் என்னைப் பார்க்கப் போகிறாள்? ஒருத்தியையும் எண்ணியான் உளைய வேண்டியதில்லை! இறவாப்பெருஞ்சாவே! நீ வாவா! தாயை நோக்கித் தாவிக் குதிக்கின்றது கன்று. நாவால் தடவி மடியால் ஊட்டி வளர்க்கிறதல்லவா தாய்! உன்னை நோக்கிப் பாய்ந்து வருகிறேன் நான். நின் மடியில் துயில்வதில் எனக்குப் பெரும்பேரின்பம். நீ தரும் அமைதிக்கு இணை யுண்டோ? உலகை மறந்து உயிர் வவ்வும் விழிகளை மறந்து நீரில் துயிலும் அசைவைப் போல் நின்கை ஊஞ்சலில் துயில விரும்புகின்றேன். நேற்றுவரை விதையிலிருந்து வெடித்துத் தலைகாட்டும் முளையைப்போல் அரும்பி நின்ற நின் நினைவு இன்று தழைத்துக் கிளைத்துப் படர்ந்து நின் அணைப்பையே கேட்டு நிற்கின்றது - வாவா! என்னைத் தூக்கிக்கொள்!

*(11.1.67)*

◆

**சட்டி சுட்டது**

இன்று 'சட்டி சுட்டது' படித்தேன். குடும்பப் பெரியவர் சாமிக்கவுண்டர் பாத்திரப்படைப்பு அருமை. வளர்ச்சி பெற்ற மனிதத் தன்மையின் உருவமான அவர் அன்பிற்கு அடிமை யாகிப்படும் மன உளைச்சல்கள் கண்கலங்க வைத்து விடுகின்றன. சிற்றூரில் படிந்துள்ள தன்னலச்சிறுமைகள், நெஞ்சுபொய்த்தும், உணர்ச்சியால் ஆடியும் தீங்கிழைக்கும் பண்படாமக்கள், இவற்றின் நடுவே பண்பாட்டின் வடிவமாய் அன்பின் உருவாய் குன்றின்மேல் விளக்காய்க் காட்சிதருகிறார் சாமிக்கவுண்டர். அவரின் மாரப்பன், பழநியப்பன் என்ற இரு மகன்கள், அவர்களை அவர் வளர்த்த நேர்த்தி, மகன்களின் பிறழ்ந்த போக்கு, சாமிக்கவுண்டரின் நெஞ்ச உளைச்சல் மணமாகாத இளைய பருவமகள் வேலாத்தாள், இறுதியில் அவள் பூசாரிச்சி மீனாட்சியின் மகன் அங்கமுத்துவை மணந்து கொள்கிறேன் எனத் தந்தையிடங்கூறல், அவர் ஒத்துக்கொள்ளல் முதலியவை இயல்பாக இனிய முறையில் நடத்தப்பட்டுள்ளன. சாமிக்கவுண்டரின் மகன்களோடு தாராள மாக உரையாடி இடித்துரைக்கும் இராசிபாளையம் மணியக் காரரை நாள்தொறும் நாட்டுப்புறந்தொறும் காணலாம். சாமிக்கவுண்டர் போன்ற தந்தைகள், மாரப்பன், பழநியப்பன் போன்ற மகன்களைக் கோவைப்பகுதியில் மட்டுமன்று தமிழகத்துச் சிற்றூர்தொறும் காணலாம். பார்த்த மனிதர்களை நினைப்பூட்டும் பாத்திரப்படைப்பு! எழுத்தில் இனமறியா ஒரு இன்பம் (சுகம்) கிடைக்கிறதென்கிறார்களே அக்கூற்று எவ்வளவு மெய்ம்மை பொதிந்தது என்பதைச் சண்முகசுந்தரத்தின் புதினங்களைப் படிக்கும்போது உணர முடிகின்றது. படித்தவுடன்தான் தி.சானகியின் தஞ்சைப் பாத்திரங்களில் ஓரளவு சாயப்பூச்சு உள்ளதோ என்ற ஐயம் எழுகின்றது. சண்முகசுந்தரத்து நாட்டுப் புறப் படப்பிடிப்பில் உள்ள துல்லியம் தி.சாவில் இல்லை. சிறுசிறு சொற்றொடர்கள் தென்றலைப்போல மிதக்கின்றன. சிக்கென நெஞ்சைப் பிடிக்கும் ஒரு மணம் பொதிந்து கிடக்கின்றது.

'கால் அங்குலம் முடி' 'வடக்கல் கவிழ்த்தாற்போல் சிரசில்' இருபது வள்ளப் பண்ணையத்துக்கு அதிபதி, 'ரகளைரச்சை', சாளை, தயிர் சிலுப்புதல், சூட்டிப்பு, இமைத்தியானம், பறி (பெயர்) வள்ளம் (Cent) (நீர் இறைத்தல் தொடர்பில்) என்ற (என்னுடைய) சல்லை (அலக்கு) (பக்கம் 19), 'கொமுரிக்கும் நாய்க்கும் குடி போறதிலே கொண்டாட்டம்', 'நீ பேச்சுக்குப் பேச்சு' 'ராவிக்கிட்டே இருக்கறே' 'சும்மா தாளிக்கிறயே' (நிறைய விரைவாய்ப் பேசுதல்) 'சும்மா பொளக்காதே' (வாயைப் பிளத்தல், கத்துதல்) முரண்டு பிடித்தல், 'வேய்க்கானம்' (அறிவு) தன்ற பொறந்தவள் (தன்னுடைய பிறந்தவள்) (பக்கம் 22) "அவதான் 'தூபம்' போட்டாளோ

என்னவே” ‘பொடக்காளி’ ‘குருடும் குருடும் குருட்டாட்டமாடின கதை’ நங்கையாக்காரிகள்’ கலாமுலாமென்று கலகலப்பாக பொக்கிண்ணு (திடுமென்று) பெத்த அப்பனையே தெரம் பாத்திட்டீங்க! உங்களுக்குப் பெத்து ஏது? பொறப்பு ஏது?” ‘தறிதலைகள்’ பண்ணாடி (முதலாளி) ‘கவுண்டிக்கை’ திமிர் மாராப்புச் சேலை - பூட்டு (சோளக்கதிரின் பூட்டு) (பருத்திப்பூட்டு) அட்டுக்குஞ்சுகள் (சிறிய குஞ்சுகள்) பொங்கு (பெயர்) ‘வேவாரம்’ (வியாபாரம்) ‘துப்பினதம்பலத்தை யாராச்சும் வாய்க்குள்ளே எடுத்துப் போடுவாங்களா?” ‘கூடார்த்தமாக’ (மறைபொருளாக) ‘ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே” “வெளம்பா முண்டை வெறகுக்குப்போனா வெறகு சிக்கினாலும் கொடி சிக்காது” ‘திமுதிமுன்னு’ செரகு (பாத்தி) அடிசாய்தல் (பொழுது இரங்குதல்) திக்காலுக்கொன்று (திசைக்கு ஒன்று) ‘சமிஞ்சபுள்ளெ’ ‘நோயாநொடியா’ ‘கல்யாணங் காட்சியா’ ‘வியாபார வெட்டியா?’ ‘ஏவைதேவை’ நாசுவத்தி (மருத்துவச்சி - மருத்துவமனை) போக்கிரி சாக்கிரி சடவு (தொல்லை) கூலிநாலி, ‘மொகாமைக்காரர்’ ‘ஆரந்தூரந்தெரிந்தவர்’ “தாய்க்கும் புள்ளைக்கும் என்னய்யா கிடக்குது? சட்டியோடு பானை முட்டாமலா போகுது?” ‘நீரடிச்சா நீர் வெலகியா போகும்’ - ‘வில்லங்கம்’ - பேத்துப் பிதிர் (பேரப்பிள்ளை) கெழக்குமொகனா (கிழக்கு முகமா) தொலகு (பகை, வருத்தம்) உண்ணி (இனி). நடக்கப் போறதையும் தாக்குதாக்காச் (அப்படி அப்படியே) சொல்லறாளாம்’, இளம்முறுக்கு, அடாவடித் தனங்கள், எம்டன்’ மமிட்டி (மண்வெட்டி), பானகம், ஆருட்டம் (மயக்கம், களைப்பு) ‘சில்லுண்டித்தனம்’ பெண்கள் கூட்டம் சதா சுழமாடிக் (சுற்றிக்) கொண்டே இருக்கும்’ தாங்கல் (வருத்தம்) குட்டிக்குளுமானுக, அக்கட்டாலே (அந்தப்பக்கம்) கிள்ளிப் பிடிக்கச் சதையில்லாதவன் விங்கினிச்சுக்கிட்டு (சினந்துகொண்டு?) ‘அக்கிசு’ புண்ணியத்து உளுகிற மாட்டை பல்லைப்புடிச்சுப் பதம் பார்ததானாம்’ கோழியும் மொட்டும் (ஒருவகைக் குழம்பு) ஆள்காரன் (ஆள்) நூணாயம் (நூல்நயம்) பேசுதல் ‘சின்னப் புள்ளைகளுக்காட்ட படிச்சுப் படிச்சு எத்தனை ‘விசுக்கா’த்தான் சொல்றதோ உங்கரண்டு பேருக்கும்!’ ‘உண்ணி (இனி) நா மக்கிளிச்சன்னா (பிறழ்ந்தால்) உங்க கால்லே இருக்கிறதைக் கழட்டி...’ ‘அங்கலாய்ப்பு’ மச்சாண்டார், கொழுந்தனார் ‘நிமிலாங் கூட்டம் நம்ம பசங்க அவன் கடகெலும்பை எண்ணி எடுத்திரு வாங்க’ ‘என்னுங்க மாமா து டுக்கறயாங் கட்டறீங்க’ (மறைமுக மாக (சுற்றி வளைத்து)ப் பேசுதல்) ‘ஆசமோசம்’ (ஏதம்) சரவடை (சுற்றம்) ‘முட்டிச்சீலை’ ‘தொக்கடவுகள் (வேலியில் ஓட்டை (இடைவெளி) ‘இங்காப்படுத்துதல்’ (உற்சாகப்படுத்துதல்) மேற்கண்ட சொற்கள், தொடர்கள் சிலவற்றில் கொங்குமண் மணம் பரப்பினும்

பொதுவாக நாட்டுப்புற மக்கள் மொழி பொருத்தமாய்ச் சிறப்புடன் கையாளப்பட்டுள்ளது. இயல்பான நடை எப்படித்தான் கைவந்ததோ? சில இடங்களில் வரும் வண்ணனை, உவமைகள், ஆசிரியன் நெஞ்சுதிறந்து பேசும் பகுதிகள் உயிர்ப்போடு உலவுகின்றன. 'சாமிக்கவுண்டரின் முன்னோர்கள் பற்றி - "சீரங்கக் கவுண்டர் என்றால் சிங்கம்! அவன் மகன் பெரியசாமி புலிக்குட்டி! தேகக்கட்டையும் அவர்கள் திடசித்தத்தையும் அவ்வாறு கூறுவார்கள்! தகப்பனாரும் பாட்டனாரும் யாருக்கும் எந்தவிதக் கெடுதலும் செய்ததில்லை, செய்ய நினைத்ததுமில்லை! தானுண்டு பூமியுண்டு என்ற மண்ணைக் கிளறிக் கொண்டிருந்து விட்டு மண்ணிலே தலைசாய்த்த மகராசன்கள்! ஆம், 'அவுங்க மகராச கூட்டமடா!' என்று அந்த வட்டார மூலை முடுக்கில் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள்", "புதுப்பளபளப்பில் மரத்தில் பச்சைக் காய்களுக்கிடையே பழம் ஒன்றுமாத்திரம் பழுத்திருந்தால் எப்படிப் பளிச்சென்று தென்படுமோ அவ்விதம் பொதுநோக்காக வீடுகளைப் பார்த்தால் சேமலை மூப்பன் வீடு கண்ணைக் குத்திக் கொண்டு காட்சி அளித்தது"

வறட்சியைத் தழுவிக் கொண்டிருக்கும் அந்த வட்டாரத்தில் செய்வதற்கு என்னவேலை இருக்கிறது? பிஞ்சுக்கரங்கள் வேகாத வெயிலில் ஓடி ஓடிச் சாணி எடுப்பதும், கழிதட்டுப் பொறுக்கு வதும், வருசத்திற்குப்பத்து வள்ளம் கம்பிற்கும் எட்டு வள்ளம் சோளத்திற்கும் - ராகிக்கூழுக்குமாக அடிமைச்சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டுப் பண்ணையங்களில் அவதிப்படுகிறதைப் பார்க்குந்தோறும் சாமிக்கவுண்டர் அந்தப்பேசும் பொற்சித்திரங் களைப் பெற்றெடுத்த புண்ணியவாளர்களை எண்ணி இரங்குவார். வசதியுள்ள குடும்பத்தினர்தான் பிள்ளைக்கனியமுதுகளின் எதிர்காலத்தைச் சிந்தித்தார்களா? எதற்காக சிந்திக்க வேண்டும்? 'இருப்பதை வைத்திருந்தால் இதுவே போதும்! என்றிருந்தனர்.

"ஆகாய கங்கைக்காகக் காத்திருந்தவனைப் பாதாளச் சாக்கடைக்குள் தலைக்குப்புறத்தள்ளினால்"

"வசதி உள்ளவர்களுக்குத்தான் விழா, அன்னக்காவடி விழாக் கொண்டாட நினைத்தால் கணகணவென்று மணிகளை ஆட்டவேண்டியதுதான்?

பெயர் சூட்டுவிழாவின்போது - "வாழைக்கம்பம் முன்புறம் கட்டப்பட்டிருந்தது. வாசலில் உட்காருவதற்கு ஜமுக்காளமும் பாய்களும் விரிக்கப்பட்டிருந்தன. நாலைந்து இடங்களில் வெற்றிலைப் பாக்குத்தட்டங்கள். சிறுவர்களும் சிறுமிகளும் குறுக்கில் நெடுக்கில் ஓடும்போது வெற்றிலைத் தட்டுக்களைத் தட்டிவிடாமல் இருக்க முருகனைக் காவல் போட்டிருந்தார்கள்.

முருகன் இன்னொரு ஆளைக் காவலுக்கு வைத்துவிட்டு எத்தனை வண்டிகள் வந்திருக்கிறது? இன்னும் வந்து கொண்டிருக்கிறது என்ற கணக்கில் மூழ்கி இருந்தான்.

ஏழெட்டு ஊர்ப்பெரிய மனிதர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள். ஒரு சின்னக்கல்யாணம் போலத்தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பலகார வாசனை, நெய் வாசனை, பெண்களின் கொரநாட்டுப் பட்டுச்சேலை வாசனை, ஆம், கூரைச்சேலையை, திருமணத்திற்கு வாங்கிய புடவையை இம்மாதிரி விழாக்கள் நிகழும் சமயங்களில்தான் திரும்பவும் எடுப்பார்கள். பெட்டிகளுக்குள்ளோ, மூட்டைச் சந்திலோ சிக்கி, அமுங்கிக்கிடந்த அந்தப் புடவைகளுக்கென்றே ஒரு தனிவாசனை உண்டு. அத்தனை வாசனைகளோடு ஊதுபத்திமணமும் கலந்து கொண்டால் கேட்கவா வேண்டும்?'

"வறண்டு கிடந்த இடங்களில் பசுமை தலைகாட்டியது. ஆலம் துளிர்களும் கன்னிப்பெண் மெள்ளக் கதவைத் திறந்து எட்டிப்பார்ப்பதுபோல் முகம் காட்டிற்று."

'பச்சைமலை பவளமலையை முன்னர் தங்கள் நாடாகக் கொண்டிருந்த மலைக்குறத்தி வம்சாவளியினர் ஓரத்தபாளையத்தில் டேராப் போட்டிருந்தார்கள். இப்பொழுது காடுமேடு பட்டிதொட்டிகள்தான் அவர்களது நாடும் வீடும். முன்பிருந்த கலை அம்சங்கள் மறைந்துவிட்டன! தற்போது அவர்களிடம் எஞ்சி இருப்பது கலாட்டா அம்சம்தான்! பச்சைக்காரிகள் சண்டை போட்ட வண்ணம் இருப்பார்கள், சண்டைகள் அவர்கள் வாழ்வின் இன்றியமையாத ஒரு பகுதி! சச்சரவிட்டுக் கொள்வது போலவே கூடிக்குலாவிக் குஷாலாக கொஞ்சாமலும் இருக்க மாட்டார்கள்.

'வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்'

சாலையிலே - அந்தத் தோட்டத்திலே - வேலாத்தாளைச் சுற்றி நிறைந்திருந்த பேச்சுக்களிலே இனிமை கலந்திருந்தது. ஆனந்தம் விம்மிற்று! அழகுகூட இருந்தது. ஆம்! அழகியைப் பற்றிய அழகான பேச்சுக்களில் அழகு வீசுவதில் என்ன வியப்பு?

'சாமிக்கவுண்டரின் மனத்தில் என்ன இருந்தது? அவருக்குத் தம்முடைய மகள் மனதிலே அணுவளவு கூட சோகத்தின் சாயல் படியக்கூடாதென்ற நினைப்பைத்தவிர வேறொன்றுமில்லை. வேறு என்ன இருக்கமுடியும் அவர் உள்ளத்திலே?

பெரிய பண்ணாடி சாமிக்கவுண்டர் மயக்கமுற்று காய்ச்சலொடு கவலைக்கிடமான இரவில்: 'சோகம் தனது பக்கவாத்தி

யங்களை மீட்டிக் கச்சேரி செய்யக் காத்திருந்தது. சாளையின் எட்டுத்திக்கிலும் தவறிய தாளங்கள்! வேப்பமரங்கள், நல்ல கட்டத்தில் மட்டும் தலையை அசைத்துச் சபாஷ் கூறி மௌனத்தில் ஆழ்ந்திடும் ரசிகனைப்போல் சிலசமயம் கிளைகளைப் பலமாக ஆட்டிவிட்டு சலனமற்று நின்றுவிடும். புளியமரங்கள் தெருக்கூத்துப்பாணி! அரச இலைகள் அஞ்சிய சுபாவமுள்ள அபலையின் நெஞ்சம் போன்று படபடத்துக் கொண்டிருந்தன. வாகை, கிழுவ மரங்கள் வேருடன் பெயர்கின்ற மாதிரி காற்றைக் கட்டி அணைக்க முயன்று கொண்டிருந்தன. இந்தச் சூழ்நிலையில் இருண்ட இரவில் எழுபதைத் தாண்டிய கணக்கய்யரும் பதினெட்டை மிதித்துக்கொண்டிருந்த வேலாத்தாளும் பேச்சு மூச்சற்றுக் கிடந்த பண்ணாடியின் அருகே பதைபதைத்துக் கொண்டிருந்தனர்.

'அடித்துப்போட்ட மாடுபோல் குறட்டைவிட்டுத்
தூங்க ஆரம்பித்தான்'

'எப்போதும் அரப்பு தேய்த்துக் குளிக்கும் அவள் இப்போதெல்லாம் வில்வக்காயை ஆட்டி கூந்தலை குளுமை யாக்கிக் கொள்கிறாள். ஆம் அது குளுகுளுக்கும் வில்வக்காய் நுரைதான் எவ்வளவு மணமணக்கிறது! அதன் கமகம வாசனை அவளுக்கு மிக ரம்மியமாக இருந்தது. அதனுடைய நுட்பத்தை அங்கமுத்து சொல்லத்தான் அவளுக்குத் தெரியவந்தது.

இவ்வாறு சூழலைக் கண்முன் நிறுத்தும் வகையில் விளக்குவதிலும் தெறித்த உவமைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பதிப்பதிலும் தந்தைமைப் பாசத்தின் உச்சநிலையை உருவாக்கியிருப்பதிலும் ஆசிரியனின் கைவண்ணத்தைக் காண இயல்கின்றது.

ஒரத்தப்பாளையத்தில் இரவு நேரத்தில் குன்னுடையாக் கவுண்டன், (பாடல்) ராமநாடகம் ஆகியவற்றை (நாட்டுப் பாடல்கள்) மனப்பாடஞ்செய்துள்ள குப்புமூப்பனின் பாடல்களை அங்கங்கே கதைநடப்பிற்கேற்பப் பெய்து செல்கின்றார் ஆசிரியர். கதையின் மையமாந்தர்களின் உள்ளஉணர்வுகளை வில்லிடுவனவாக

'பழமை படிச்சவங்க
பண்டிதத்தால் வெண்ணவிங்க!
உங்க பழமை பலிக்கலியே
உங்க பண்டிதங்க வெல்லலியே

(சாமிக்கவுண்டரின் மனநிலை)

"சதுரகிரி மலை யோரம்
சாஞ்சிருக்கும் திருகுகள்ளி

திருகுகள்ளிப்பால் எடுக்க
திரிஞ்சனடி சில காலம்!"

(சாமிக்கவுண்டர் மகன்கள் மாட்டு அன்புத்தளைகளில் திக்கு முக்காடியமை உருவகம்).

ஒண்ணாப் பொறந்தவங்க
ஒருமுலைப்பால் உண்டவங்க!
கூடப் பொறந்தவங்க
கூட்டுப்பால் உண்டவங்க,

(தந்தை நலக்கேடுற்றபோது அண்ணன்கள் எட்டிப்பார்க்காத நிலையில் வேலாத்தாளின் துயரம்)

எனும் குப்புமூப்பன் கொட்டாவியோடு இரவு நேரங்களில் பாடுகின்ற பாடல்கள் அமைகின்றன. இவையன்றிப் பருத்தி எடுக்கும்போது ஒரு பெண் பாடும்

'பருத்தி எடுக்கையிலே
பலநாளும் கேட்டமச்சான் - இப்ப நான்
ஒருத்தி தனிச்சிருக்க
ஓடிவரலாகாதா?'

என்ற பாட்டும் இடம்பெற்றுள்ளது. கதைக்கு அழுத்தமான இயல்பியப் பூச்சை இப்பாடல்கள் கொடுக்கின்றன. கதையின் சில பகுதிகள் என் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவூட்டின. அன்பில் குளிப்பாட்டி வளர்க்கும் தந்தையின் நினைவு எழுந்தது. தன் மனைவி "நீங்கபோன சென்மத்திலே பொம்பளையாத்தான் பொறந்திருப்பீங்க" என்று சொல்லுமளவு தன் மகன்களை உயிர்க்குயிராக வளர்த்தார். பின் நாளில் அவர்களின் பிறழ்ந்த போக்கால் பிரிந்து சாளையில் குடியேறியவுடன் கடந்தகாலச் செயல்கள் மனக்கண்ணில் நிழலிடுகின்றன. திருப்பூர்த் தேர்விழா விற்குத் தன் தனயன்களை அழைத்துச் சென்றது. அப்போது அங்கு வந்த காடையூர் பட்டக்காரர் இரண்டுபையன்களையும் அருகே அணைத்து "படிச்சிட்டு மாப்பிள்ளைமார்கள் ரண்டுபேரும் ஐயனை உக்கார வைச்சுக்கிட்டே சோறு போடுவீர்களா?" என்றார். சின்னவன் 'ஆமாங்க' என்கிறான். அவர் 'என்ன சின்ன மாப்பிளே சொன்னாப்போதுமா? பெரிய மாப்பிளே பேசக் காணோமே' என்றார். 'ஆமாங்க' என்றான் பெரியவனும். 'அப்ப ஐயனை ரண்டு ஆளுகளும் உக்கார வெச்சிருவீங்க' அவர் அதைக் கூறிவிட்டுப் பண்ணாடியின் முகத்தைப் பார்த்தார். "ஆமாங்க நாங்க ஐயனை உக்கார வைச்சிருவமிங்க" என்றார்கள் சிறுவர்கள். பண்ணாடி அன்று சிரித்ததை தூக்கம் வராத இன்றைய பௌர்ணமி இரவில் நினைவூட்டிக்கொண்டார். அடுத்த

நினைவொன்று: 30 ஆண்டுகட்குமுன் திருப்பூரில் இரண்டு பையன்களும் ஒரு விடுதியில் தங்கிப்படிக்கும்போது வாரத்திற்கு இருமுறை சாமிக்கவுண்டர் சென்று பார்த்துவருவார். சின்னவன் சைக்கிள் பழகிச்சவாரி செய்தபோதும் காலில் காயம் பண்ணிக் கொண்டான். மொக்கை அடி! சும்மா வீக்கம்தான் ஆனால் தூங்காமல் சிணுங்கிக்கொண்டே இருந்தான். இம்முறை சென்ற சாமிக்கவுண்டர் காயம் குணமாகுமட்டும் பத்து நாட்களுக்கு மேல் அங்கேயே தங்கிவிட்டார். பத்து நாளும் கணநேரங்கூடத் திங்க வில்லை. விடியுமட்டும் அவனருகே கண் விழித்துக் காத்திருப்பார். துளி முனகினாலும் 'நான் இங்கதான் அப்புனு இருக்கிறேன் என்பார்' இந்தப் பகுதியைப் படிக்கும்போது ஆய்வில் சேருமுன் அம்மைகண்டு இரவெல்லாம் உறக்கமின்றி எரிச்சலில் நான் மாடிவீட்டில் வாடியபோது என் தந்தை பக்கத்திலேயே அமர்ந்து 'ஒன்னும் செய்யாதப்பா' என விசிறிக்கொண்டிருந்த காட்சி கண்முன் நின்றது. இளமை முதலே தந்தையின் செல்லப்பிள்ளை யாக வளர்ந்த யான் அவரின் தோளில் அமர்ந்து தலைப்பாகை யைப் பற்றிக்கொண்டு உலாவந்த காட்சிகளையும் பிறவற்றையும் நினைக்கிறேன். அன்புத்தந்தையின் நெஞ்சு நோகாமல் நடந்து கொள்ள வேண்டும். அண்ணனின் போக்கு வருத்தத்தை அளிக்கிறது. தந்தைமைப்பாசத்தின் முழுநிறை வாகச் சட்டி சுட்டது அமைகிறது. நாகம்மாள், அழியாக்கோலம், பனித்துளி ஆகிய புதினங்களைப் போன்றே இதிலும் ஒரு முத்தாயாள் (மாரப்பனின் மூத்தமகள் - சிறுமி) வருகிறாள். அலகுமலைக் கோவில் அய்யரை மணந்து மறு ஆண்டே விதவையான, இராமாயணம் பாரதம் படித்துக்காட்டும், கணக்கய்யரின் சகோதரி பார்வதி அம்மாளையும் இதில் காண்கிறோம். மேலும் கதை மண்ணின் மணத்தைப் பற்றி நிற்பது போலவே நடையும் பற்றி நிற்கிறது. நம் நெஞ்சையும் பற்ற வைக்கிறது.

(12.1.67)

◆

## நாட்டு மொழி மணம்வீசும் புதினங்கள்

நண்பகல் ச.வே.சு. வீட்டில் உணவு. வெண்பொங்கலும் யான் மிக விரும்பும் சருக்கரைப்பொங்கலும் படைத்தனர். பக்கக் கறிகளும் அருமை, மொத்தத்தில் முழு நிறைவு. உண்ண அமரும் போது சவேசு 'முருகா நீ வாழ்க' எனச் சொன்னார். உடனே வேலன் (மகன்) 'பெண்ணே நீ வாழ்க' என்றான். அவர்க்கு ஒரே வியப்பு. பின்னர்தான் அப்பெயரில் ஒருபடம் நடைபெறுவதாக விளம்பரம் வந்திருப்பது தெரிந்தது. அதைப்படித்த வேலன் மனம் உடனே ஒப்புமை போட்டது. முற்காலத்தினும் இக்காலத்தில்

சிறுவர் சிறுமியரின் அறிவில் கூர்மை உள்ளது. அறிவுக் கூர்மை பாயும் நெறியில் செம்மை இருந்தால் வீடும் நாடும் நலம்பெறும், உண்டு முடித்து அவரோடும் பையன்களோடும் மகிழ்ந்துரையாடி 3 மணி அளவில் அறைவந்து ஓய்வெடுத்தேன். பின் கல்கியில் வந்த 'இலையுதிர்காலம்' என்ற மகரிசியின் குறும்புதினத்தைப் படித்தேன். கறுத்த மேனியுடைய பெண்ணிக் கதை. அவளை விரும்பிய ஒருவனும் படையில் சேர்ந்து விடுகிறான், தகவலே இல்லை. தந்தை ஏற்பாட்டின்படி வேறொருவனை மணக்கிறாள். அவனோ பிரிதொருத்தியோடு தொடர்புகொண்டு பெற்ற பிள்ளையைத் தருகிறான். பிள்ளையை வளர்க்கும் இன்பம் ஒன்றே கிட்டுகின்றது. பிள்ளையைத் தந்தபின் பிரிந்து சென்றவன் தகவலேதுமின்றி எங்கோ அலைந்து பலமாதங்களின்பின் நோயொடு திரும்புகிறான். படையில் சேர்ந்த, பண்பு நிறைந்த தன் பழைய காதலனும் திரும்பி வந்து பார்க்கிறான். கணவன் மனதில் ஐயம் முளைக்கிறது. பழைய காதலன் விடைபெற்றுக் கொள்கிறான். வளர்க்கின்ற பிள்ளையைப் பெற்றெடுத்தவள் வந்து வாங்கிச் செல்கிறாள். ஒரே ஆறுதலான குழந்தையும் போய்விடுகிறது. கணவனோ நோய்ப்படுக்கையில்; பருவம் மாறுகிறது. இலையுதிர் காலத்தின்பின் வசந்தம் வரும். இவள் வாழ்வில் இனி ஏது வசந்தம். இலையுதிர்காலத்தை மட்டுமே இவள் கண்டவள் மிகச்சிறந்த கதையன்றெனினும் தாழ்விலை. ஆசிரியனின் உயர்ந்த உள்ளத்தை நடையில், பொதிந்த கருத்தில் சில இடங்களில் காண முடிகின்றது.

'நாகம்மாள்' 'பூவும் பிஞ்சும்' பனித்துளி ஆகிய புதினங்களை எழுதிய பத்தாண்டுகட்குப்பின் சண்முகசுந்தரம் எழுதிய சிறு புதினமாகிய (72 பக்கங்கள்) அறுவடையைப் படித்தேன். மணமுடிக்கும் நிலையில் ஒரு பேரனையுடைய ஒருவன் நண்பனின் தூண்டுதலாலும் மோகத்தாலும் மணக்கவிரும்புகிறான். சீட்டாடியே பொழுதைப்போக்கும் இன்னொருவனுக்கு அழகிய மகள் ஒருத்தி. அவளுக்கும் முன்னைக்கிழவனின் பேரனுக்கும் தொடர்பு, நெஞ்சக்கலப்பு உண்டு. இறுதியில் கிழவன், பேரனின் காதலியை மணக்கப் போகிறான். காதலி, தன் காதலனைப் பார்த்து நிலையை விளக்கி மணந்துகொள் என்கிறாள். அவனே 'தாத்தாவை மணந்துகொள் - பின்னர் நாம் தொடர்பு கொள்ளல் எளிது' என விலங்குணர்வில் மொழிகிறான். கன்னத்தில் அறைந்து திரும்புகிறாள் அவள். மணநாள். பெண் மேடைக்கு வருமுன் மாப்பிள்ளையை அழைக்கின்றனர். அறையில் படுத்தவர் மீண்டும் எழ இயலாது. நீங்காத்துயில் கொண்டு கிடக்கிறார். பெண்ணின் தந்தை மகளை அறைக்குள்ளிட்டு காவலர்கட்குத் தகவல் தருகிறான். காவலர் வருகின்றனர். மகளைப் பூட்டிய அறையைத் திறக்கிறான். உள்தாழ் இடப்பட்டிருக்கிறது. கதவை உடைக்

கின்றனர். பெண் தூக்குக்கயிற்றில் தொங்குகிறாள். இதுவே அறுவடையின் கதை. நான்கைந்து பக்கங்களில் அருமையான சிறுகதையாக எழுதியிருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். நாகம்மாள் அழியாக்கோலம் முதலிய ஏனையபோன்று அத்துணைச் சிறப்பில்லை. வெளியார்கள் வந்திட்டை (வந்து விட்டேன்) 'நாலுபேரு உங்களப் போலொத்தவங்க பேசுவாங்களே' 'உடம்புவாக்கு' 'யார் கையினாலாச்சும் புடிச்சுக் கொடுத் திட்டானா உம்பாடு யோகம்தான்! பண்ணறாய் (பண்ணுகிறாள்) 'திருப்பூரின்னாய், செட்டியார்னாய்' (திருப்பூர் என்றாய், செட்டியார் என்றாய்) 14 பக்கம்) 'பொய்யிலச்சாத்தெ' (புகையிலைச் சாறை) 'தாட்டிவிடுதல்' மேக்காலெ (மேற்குத் திசையில் சாமானக்காரன்' (சாமானுக்குரியவன்) 'எங்கக்கா வாரமிம்பாளோ, மாட்டேன் என்பாளோ) 'அவெ' (அவன்) 'கோவணத்திலே ஒரு காசிருந்தா கோழி கூப்பிடப்பாட்டுப் பாடுற ஆளுங்க" சொல்றே (சொல்லுகிறேன்) 'எனக்குப் பிடிக்கலைன்னா சொல்றே' (பக் 20) முடிக்கோணுமிண்ணு (முடிக்க வேண்டுமென்று) 'கண்ணுக் குத்தலெ தெரியாமெ ஓடினோம்' பழக்கம் (எச்சில் உமிழ்வதற்கு) 'சக்தியுள்ள சாமியெக்கும்பிடோணும் புத்தியுள்ள புள்ளேயெப் பெக்கோணும்'

எனக்கும் தா பசிக்குது (தான்) வாலுஏ அளந்து வச்சிருக்குது (ஏன்) இப்பொ நா (நான்) பொன்னாள் பாப்பாள் முதலிய பெயர்கள் 'வளத்திட்டே (வளர்த்து விட்டேன்) தெரக்கா (நிறைய, சிறப்பாய்) அல்லுங்க (இல்லைங்க) மொளகாய்மாறு (சிம்பு) என நாட்டு மொழி மணம் வீசுகின்றது.

(17.1.67)

◆

## கீ.இராமலிங்கனார் கட்டுரை

செண்பகம் இதழைப் படித்தேன். கீ.இராமலிங்கனாரின் 'பொருந்துவன பொருந்தட்டும்' என்ற சொல்லாக்கத் தொடர் கட்டுரையில் சில புதுச்செய்திகள் இருந்தன. முன்னைய இதழ் களில் தோற்றோரியல் கல்லூரி (Tutorial College) அண்டு (நெருக்கம், சேர்க்கை) (and) பற்றி எழுதியிருந்தார். ஒலி ஒப்புமை அடிப்படையில் தமிழ்ச்சொற்களைப் படைத்து மொழியும் அவர், பாங்கு (Bank) என்ற சொல்லைப் பற்றி எழுதியுள்ளார். பாங்கு எனுந்தமிழ்ச் சொற்கு வளமை, நன்மை, தன்மை எனும் பொருள்கள் உள. அவ்வடிப்படையை வைத்துக் கொண்டு ஆங்கில Bank ஐப் 'பாங்கு' எனலாம். பணம் நிறைந்த வளம், பணப் பாதுகாப்பு நலம், புழக்கத்திற்கு வாய்ப்பான பணத்தன்மை

ஆகியவை உடைய இடத்தைப் பணப்பாங்கு என்று சொல்வதில் தவறில்லை என்கிறார். அடுத்து 'ஏரி' எனுஞ்சொல் ஏர் உழும் வயற்குப் பயன்படும் நீரை உடையதால் வந்தது என்கிறார். இஃது அவ்வளவாகப் பொருந்துவதாய்த் தெரியவில்லை.

*(18.1.67)*

◆

## ஆண் மகவுகளையே குறிப்பிடும் சங்க இலக்கியம்

மதிதொகுத்துக் கொடுத்த சங்க இலக்கியத்தில் வரும் குழந்தைகள் பற்றிய குறிப்புக்களுக்கான பகுதிகளைப் பல இலக்கியங்களினின்றும் குறித்தேன். இன்று குழந்தைகளுக்குப் பேய், பூச்சாண்டி காட்டி ஒரு செயலைச் செய்யச் சொல்வதுபோல் அன்றும் புலியைச் சொல்லி அச்சுறுத்தும் பழக்கம் (புறம் 160) இருந்திருக்கிறது. புலி, பேய், பூச்சாண்டியானமை நம் மறவுணர்வு மங்கலை, மூடநம்பிக்கை வளர்ச்சியைக் காட்டுகின்றது. குழந்தைக்குச் சோறூட்டும்போது இன்று 'இது அம்மாப்பங்கு இது அப்பாப்பங்கு' என்று ஊட்டுவதைப்போல அன்றும் ஊட்டும் பழக்கம் இருந்திருக்கிறது. (அகம் 219) அம்புலி காட்டும் முறையையும் பல இடங்களில் பார்க்க முடிகின்றது. (கலி. 80; புறம் 160) பொன்னணிகளைப் புதல்வர்கட்குப் பூட்டி அழகு பார்த்திருக்கின்றனர். கிண்கிணி (புறம் 198; கலி 81 புலிப்பற்றாலி (குறுந் 161; புறம் 374) பொன்தாலி (அகம் 51) முதலிய அணிகளைக் குழந்தைகட்கு அணிவிப்பதோடு தோளில் சிறுபறையைத் தொங்க விடுதலும் (நற்றிணை 58) தலையில் மாலையைச் சூட்டுதலும் (அகம் 5) புழக்கத்திலிருந்திருக்கின்றன. குழந்தைகள் தேருருட்டினர் (கலி 81, பட்டினப்பாலை 24 - 25; பெரும்பாண் 248 - 252) கிலி கிலியாடினர் (சிறுபாண் 60-61) மலர் வாயில் மழலைத்தேன் பொழிந்தனர். தளிர்க்கையால் சோற்றை அளைந்தனர். அப்பிக்கொண்டனர். தளர்நடையில் உலக இன்பமெல்லாம் குடிகொண்டிருந்தது. உள்ளத்தில் உள்ளதை உரைக்க ஊடல் தீர்க்க தாயும் தம் புதல்வரை நாடினர். சிறுவர்கள் நீராடி குளத்தைக் கலக்கினர் (புறம் 104) நெல்லிக்காயை வட்டாகக் கொண்டு வட்டாடினர். (நற். 3) மாடு மேய்த்தனர் (நற். 80, அகம் 206) காலைப் பொழுதே மாடுகளை மேய்க்க ஓட்டிச்செல்லும் பழக்கம் இருந்தது. மாட்டின் முதுகில் ஏறி அமர்ந்து மகிழ்ந்தனர் சிறாஅர்.

இவ்வாறு கழக இலக்கியங்களில் வரும் குழந்தைகள் பற்றிய பகுதிகளைப் பார்க்கும்போது ஆண்மகவுகளையே பெரும்பாலும் குறிப்பிடும் பழக்கம் இருக்கின்றது. (புதல்வன் கலி 80, குறு 161, அகம் 5, 16, 54 (மகன்) புறம் 160, பதிற், 74) புதல்வர் (நற். 58, புறம் 92, 198,

*250 சிறுபாண். 61) பட்டினப் 24, பெரும்பா. 249) சிறாஅர் - பெரும்பா. 248, புறம் 374, நற்றிணை 3) (குறுமாக்கள் நற். 80, புறம் 104) (மக்கள் புறம் 188, மகாஅர் (குறும் 206, சிறுபாண்) குறுமகள் (அகம் 219) இக்கருத்துக்களைப் பயன்படுத்திப் பாரதியின் பாப்பாப் பாட்டு பற்றிய கட்டுரையை எழுதவேண்டும்...*

## வீ வீட்டில் உணவு, உரையாடல்

*நண்பகல் உணவு வீ வீட்டில். வீ அவர் அண்ணன் யான் மூவரும் உண்டோம். நிறையுணவு, உண்ணுங்கால் உடன்பிறந்தார் இருவரும் குடும்ப அலுவல்கள் தொடர்பாக உரையாடிக் கொண்டிருந்த முறை மகிழ்வு தந்தது. பல நண்பர்கள் ஆசிரியர்கள் மடல் விட்டிருந்தனர். காட்டூர் அண்ணாமலை தேர்தல் தொடர் பாக மாணவ நண்பர்கட்கு நல்ல முறையில் வேலை செய்யுமாறு எழுத வேண்டியிருந்தார். கொத்தமங்கலத்தில் சுப்பையன் கைவல்யத்திடை ஏதோ பூசல் இருப்பதாகவும் அதைத் தீர்க்க வேண்டியும் குறிப்பிருந்தது. எழுதவேண்டும் ஐயா மணிமாறன் 'இங்கு தேர்தல் பணிகள் மும்முரமாக நடக்கின்றன. இம்முறை அறம் வெல்லும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் நீ கவிதைகள் எழுதும் தென்மொழி' இதழ் ஏன்தான் இப்படி அரசியலில் குறுக்கச்சால் ஓட்டுகிறதோ? நமக்குப் புலனாக வில்லை. நல்ல தமிழ் இப்படியா பயன்பட வேண்டும்,' என்று உளம் நொந்து எழுதியிருந்தார். நற்றமிழன்பர் பலரின் கருத்தும் இதுவே. இன்று 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' கட்டு வந்தது. அதன் ஆசிரிய உரையைப் படித்தபோது நல்ல தமிழ் இதற்கா பயன்பட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. மூர்க்கனும் முதலையும் கொண்டதை விடா! எவ்வகையிலேனும் வீழ்ச்சி வந்தாலன்றித் தன்நிலை உணரார் தென்மொழியார். ஏதோ பெரும் படை யொன்றை உருவாக்கி வைத்திருப்பது போன்றும் தான் ஒருவனே தமிழன் தமிழைக் காப்பதற்குப் பிறந்துள்ளவன் போன்றும் எழுதிவருவதை எண்ணுங்கால் வருத்தமும் சினமும் எழுகின்றன. போனால் போகட்டும். புறக்கணிப்போம். ஆசிரியர் மணிமாறன் மேலும் மலையாளத்தை நன்கு கற்றுக்கொள்ளுமாறு கேட்டுள் ளார். ஓர் ஆசிரியர் வழி விரைவில் கற்கத் தொடங்க வேண்டும்.*

*(20.1.67)*

◆

## சிரிப்பின் சிறப்பு

*மாந்தனுக்குரிய அரும்பெரும் புதையல் சிரிப்பல்லவா? சிரிப்பைத் தாங்கும்போது இந்த இதழில்தான் என்ன எழில்!*

பற்கள் பளிச்சிடுகின்றனவே! சிலருக்குக் கண்களும் சிரிக்கின்றன. அறைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறுகுழந்தை சிரிக்கும்போது அதன் கன்னங்களில் எழில் ஏறிக்கொள்கின்றது. கன்னங்களும் சிரிக்கின்றன. எந்நேரமும் அது சிரிக்காதா? அதைப் பார்த்துக் கொண்டே இருக்க மாட்டோமா என்ற வேட்கை எழும். துன்பத்தைத் தூக்கி எறிந்து சிரிக்கக் கற்றுக்கொள்ளடா மாந்தா! உனக்குக் கிடைத்த பெறற்கரும் பேற்றை ஒளித்து வைக்காதே; உன்னையறியாமல் சிற்சிலகால் இதழ்க்கடையில் அமரவருகின்ற நகைக்குழவியை எட்டித்தள்ளாதே! என்று நீ பிறந்த மேனியை மூட ஆடையணிந்தாயோ அன்றே உன் நெஞ்சில் கள்ளமும் கரவும் புகுந்துவிட்டன. இயற்கையின் தூய்மையைச் செயற்கைத் திரை போர்த்தத் தொடங்கிவிட்டது. இயற்கை அன்பளிப்பான இன்னகையையும் செயற்கைச் சாயம் பூசி பொய்மமையாக்கப் பார்க்கின்றாயே! நெஞ்சம் கூம்பிக் கிடக்கின்றது. இதழ் விரிகின்றது இதுவோ சிரிப்பு? இயற்கையின் எல்லா எழில்களையும் மாசுபடுத்தி விட்டாயே!...

## மனிதர்கள் என்ற நிலையை மறந்த காவலர்கள்

நண்பகல் சோசப்பு அறைக்கு வந்தார். வாடகை வீடு தொடர்பாக வந்த வழக்கில் தன்னைக் காவலர்கள் அடித்து விட்டதாகக் கூறினார். காவலர்கள் பணியிலிருக்கும்போது, தாங்கள் மாந்தர்கள், ஒரு நிலையில் மருத்துவர்கள் என்பதையே மறந்துவிடுகின்றனர். உயிரிகளின் பண்புகள் சில குடிகொள் கின்றன. தரமிழந்து பேசுகின்றனர். சாய்க்கடைப் புழுக்களாக நெளிகின்ற சொற்களை வாரி வீசுகின்றனர். எதற்கெடுத்தாலும் அடி, உதைதான். ஏன்தான் இவர்கள் இப்படி இருக்கின்றார்களோ என்று எண்ணிப் பார்த்தேன். மருத்துவன் தீராத நோயாளியாக இருப்பதா என வருந்திக் காரணம் தேடினேன் மக்களின் போக்கே இந்த மனநிலைக்குக் காரணம் என அறிய முடிந்தது. இடம் கொடுத்தால் மடம் பிடுங்கும் பண்பு மக்களிடம் பரந்து கிடக்கின்றது. அன்பாக அமைதியாகக் காவலன் நடந்து கொண்டால் மக்கள் ஏறிமிதிக்கும் நிலையையும் 'அடாபுடா' என அதட்டின் அஞ்சி அடங்கிச் சரிவர நடந்துகொள்ளும் போக்கையும் பட்டறிவால் தெளிய முடிந்தது. அடித்துக் கறக்க வேண்டிய மாடுகளாக மக்கள் இருக்கின்றனர். ஆர்ப்பாட்டக் காரனை மறவன் என்றும் அமைதியாளனைக் கோழையென்றும் கருதுகின்ற உலகமல்லவா இது!

*(21.1.67)*

◆

## அரியலூர் தொகுதி வேட்பாளர் குழப்பம்

அரியலூர் சட்டமன்றத் தொகுதிக்கு கழகம் முன்பு அறிவித் திருந்த இராமசாமியொடு வட்டச்செயலாளர் சிவப்பெருமாளும் வேட்பு விண்ணப்பம் செய்துள்ளதாயும் கழகம் அதிகார முறையில் தன்னையே வேட்பாளராக அறிவித்துள்ள தாயும் சிவப்பெருமாள் கூறியுள்ளார். அமைப்புச் செயலாளர் என்.வி.நடராசனும் சிவப்பெருமாள்தான் கழக வேட்பாளர் என்று கூறியுள்ளதாகவும் செய்தி வந்தது. இருவருமே நல்ல தொண்டர்கள். தலைமைக்கழகம் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து அரியலூர்த் தொகுதி வேட்பாளரைப் பொறுத்து அறிவித்திருக்க வேண்டும். இல்லை யென்றால் வேட்பு விண்ணப்பம் நீட்டுமுன் 'கழக வேட்பாளர் இவர்தான்' என்றாவது அறிவித்திருக்க வேண்டும். அதை விடுத்து விண்ணப்பம் போட்டு நாடு முழுதும் செய்திபரவிய பின் அறிவித்திருப்பது வருத்தற்குரியதே. வளர்ச்சிக் கேற்ற அளவு கழகச் செயற்பாடுகள் அமையவில்லை. இராமசாமி தனியாகப் போட்டியிடப் போவதாகக் கூறியுள்ளார். நல்ல முடிவன்று. இருவரும் போட்டியிட்டால் எதிரி வெற்றிபெற வழியேற்படலாம்.

## மின்னூர் சீனிவாசனின் மழலைக்கனவுகள்

இக்காலப் பாடல்களை ஆய்ந்து எம்.லிட். பட்டம் பெற்ற மின்னூர் சீனிவாசனின் 'மழலைக்கனவுகள்' என்றோர் பாத் தொகுப்பு பற்றிய மாணவரின் கட்டுரையொன்றைப் படித்தேன். நல்ல வரிகள் சில:

'தாளாத பிணிபட்டோர் போல மேக
மெத்தையிலே படுத்தாலும் துடிதுடிக்கும்
மின்னலொரு நோயாளி என்று கண்டேன்'

காலமகள்

'நேற்றென்றும் இன்றென்றும் நாளையென்றும்
நித்தநித்தம் பெயர் மாற்றிக் கொண்டிருப்பாள்'

'ஞாலமவள் பயணத்தின் பாதையாகும்
நங்கையவள் அடிச்சுவடே நாட்களாகும்'

பாவலன்

'மென்னகை கொண்ட மல்லிகை மொட்டு
மெல்ல வெடிக்களன்ன வருந்துமோ'

என வருந்துகின்றான்.

'பிறைநிலவின் இருமுனைகள் பிரிதல் போலவே - வாய்
பேச்சுமின்றி ஊடலினால் பிரிவதானதே!

நிறைநிலவில் இருமுனைகள் இணைதல் போலவே
நினைவலைகள் இசை பயில இணைவதானதே'

நல்ல உவமை தூங்கும் வரிகள்.

மாந்தர்,

'இன்னல் நூறென இன்பம் ஐந்தாறென
இருந்திடும் போதினிலும் - மனக்
கன்னியைக் கொண்டுயிர்க் கற்பனைப் பூக்களில்
மாலை தொடுத்திடுவார்'

அகஒளியின் சிறப்பு:

காரிருளில் நள்ளிரவில் கைவிளக்கும் இல்லாமல்
ஆருயிர்தான் நடக்கிறதே அகமென்னும் ஒளிதனிலே
கண்பார்க்க மறந்தாலும் காணும்விழி மாய்ந்தாலும்
மண்மீதில் இருளேது மனமென்னும் வெளிதனிலே

ஓரிடத்தில்

'ஆசைக்கனவுகளை - பல்
ஆயிரம் ஆயிரமாய்
வீசி விதைத்துவிட்டு - அதை
வேடிக்கை பார்ப்பவர் யார்?'

என வினவி 'இறைவன்' என்று விடையிறுக்கிறான் பாவலன். இப்பாவலனின் ஆய்வு, இடம் பற்றி அறிதல் வேண்டும். பாவுள்ளம் சில இடங்களில் பளிச்சிடுகின்றது...

## மகரிசியின் மகாநதி

மாலையில் துறைவந்து எதிர்ப்புறப்புல் தரையில் அமர்ந்து மகரிசியின் 'மகாநதி'யைப் படித்தேன். நிறைவு தரவில்லை. கௌரி, இராகவன், சாமிநாதன், சகதா, தங்கம் முதலிய எப்பாத்திரமுமே நிமிர்ந்து நிற்கவில்லை. இராகவனின் தாய் சௌந்தரம்மாள் நெஞ்சில் ஓர் இடம்பிடிக்கப் பார்க்கிறார். பிள்ளையைத் தத்து எடுப்பதற்கான மனு முதல் இன்றைய சட்டம் வரை உள்ள கருத்துக்களை இறுதிப்பகுதியில் தொகுத்துத் தருகிறான் ஆசிரியன். சில இடங்களில் கருத்து மலர்கள் மணக்கின்றன. என் நெஞ்சைப்படம் பிடித்துக்காட்டும் சில இடங்களும் இருந்தன. கௌரி 'எல்லோரும் துயரங்களுக்குப் பயந்து ஓடுவார்கள். நானோ துயரத்தைத் தேடிக்கொண்டு ஓடுகிறேன். அப்படி ஓடறபோது இடர்ப்படுகிற வேதனையிலே உண்டாகிற தவிப்பு தாபம் எல்லாம் இருக்கே. அதைச் சமாளிக்க முடியாமல் தவிக்கிறபோது தான் ஏன் அதைத் துரத்திக்கொண்டு ஓடினோம் என்று தோணறது. சோர்வு

அயர்வு எல்லாம் மலையாட்டமா வளர்ந்தாலும் பேதமை மட்டும் போகலை. அதான் துயரத்தைத் துரத்திக்கொண்டு ஓடறேன். அது ஓடட்டும். நாம் நின்றுவிடுவோம் என்று நினைப்பதற்குக் கூட இப்போ தைரியம் வரமாட்டேங்கறது என்ன செய்யறது' என்று எண்ணுகிறானே அது என் எண்ணம்.

(22.1.67)

◆

## ஒப்பந்தம் செய்துகொண்டு 7 மாணவிகள் தற்கொலை

குளித்துக் கொண்டிருக்கும்போது கதவு இரண்டு மூன்று முறை பலமாக உதைக்கப்பட்டது. திறந்து வெளிவந்தேன். பின்புற அறை மலையாளிதான் தட்டியிருக்கிறான். என்னைப் பார்த்ததும் அவனுக்கு நல்ல அச்சம் முகத்தில் வழிந்தது. ஏன் தட்டினாய் என சினந்து கேட்டேன். வேறு ஓர் ஆள் என நினைத்துத் தட்டி விட்டேன் என்றான். முன்பொரு முறை யான் குளிக்கும்போது கையால் தட்டிச் சென்றவன் இவன். 'பண்பாடுள்ளவனா நீ. உள்ளிருப்பது யாரென்று கேட்டுத் தெரிந்துகொண்டல்லவா நீ தட்டவேண்டும்' படித்தவனைப் போல நடந்துகொள் எனக் கூறிவிட்டு குளித்து முடித்தேன். மற்றவர்கள் வழியில் குறுக்கிடாது நம் வேலையைப் பார்த்துக்கொண்டு நாம் சென்றாலும்கூட பிறபுல்லியர் விடமாட்டார் போலிருக்கின்றதே! செய்தித்தாளைப் பிரித்தவுடன் திடுக்கிடும் செய்தி ஒன்று! '6 மாணவிகள் தற்கொலை' என்பது செய்தித் தலைப்பு (தினமணி)

மதுரை சனவரி 22 - 18 வயதுக்குக் குறைந்த 7 மாணவிகள் தற்கொலை ஒப்பந்தம் செய்துகொண்டு எம்.கல்லுப்பட்டி அருகே ஒரு கிணற்றில் குதித்ததில் 6 பேர் மாண்டனர். ஒரு மாணவி உயிர் தப்பினார்.

எம்.கல்லுப்பட்டி உயர்நிலைப்பள்ளியில் 11வது வகுப்பில் படித்துவரும் பூரணம், அன்னலட்சுமி, வள்ளியம்மாள், சோதி, சுலோசனா, நவரோசா, சரோசா, சோதியம்மாள் ஆகியோர் 'தற்கொலை ஒப்பந்தம் செய்துகொண்டனர். அண்மையில் பள்ளியில் நடைபெற்ற அரையாண்டுத் தேர்வில் இவர்கள் ஏழு பேரும் மிகக்குறைவாக மதிப்பெண் வாங்கியிருந்தது காரணமாக தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தனர்.

இவர்களும் இன்னொரு மாணவியும் சென்ற வெள்ளிக் கிழமை விடுமுறை எடுத்துக்கொண்டு பள்ளியை விட்டுச் சென்றனர் என்றும் வழியில் அந்த ஒரு மாணவி பெற்றோருக்குப் பயந்து திரும்பி வந்து விட்டாளென்றும் மீதி ஏழு மாணவிகளும்

கிணற்றுக்குச் சென்று தாவணிகளால் கால்களையும் சடைமுடிகளையும் கட்டிக்கொண்டு கிணற்றில் குதித்தனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் சோதியம்மாள் மட்டும் உயிர் தப்பினாள்."

எவ்வளவு துணிவு? வாழ்வதற்குத் துணிவைத் தராத கல்வி சாவதற்குத் துணிவைத் தந்திருக்கிறது.

(23.1.67)

◆

## சாமர்செட்மாம்

சாமர்செட்மாமின் 'Summing up' என்ற நூலை மேலோட்டமாகப் படித்தேன். கதையாசிரியரின் பட்டறிவுத் தொகுப்பாகும் நூல். 'பிரெஞ்சு மாப்பசானின் கதைகள் தாம் தமக்கு முன்னோடியாக அமைந்தன; வாழ்வின் இளமைப் பகுதியில்தான் ஒருவன் எல்லாப் பொருள்களையும் சுற்றுச்சூழல் களையும் நுணுகிப்பார்த்து நினைவில் வைத்திருப்பான். இளமைப் போதில் குமுகாயக் கதைகள் எழுத நல்வாய்ப்புண்டு, முதுமையில் வரலாற்றுப் புதினங்கள் எழுதலாம், பெயர் பெற்ற, மேனிலையில் இருக்கும் மாந்தர்களை விடச் சாதாரண நிலையில் இருப்பவர் களிடமே அரிய சில பண்புகள் குடிகொண்டிருக்கின்றன' என்று பலபடப் பேசுகின்றார். 'இளமைப்போதே வரலாற்றுப்புதினம் எழுத ஏற்றது, வரலாற்று நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு ஒருவன் எளிதில் கதை உருவாக்கலாம் என்ற ஓர் ஆசிரியரின் கூற்றை நம்பித் தான் முதலில் ஒரு வரலாற்றுப்புதினம் எழுதியதாகவும் பின் அவ்வாசிரியன் கூற்று பிழைபட்டது எனப் பட்டறிவால் உணர்ந்ததாகவும் மாம் கூறியுள்ளார்.

(24.1.67)

◆

## 'உப்பு' என்ற சொல் உயர்சாதிக்காரர்களுக்காம்

4.11.1938இல் வெளியான 'பம்பாய் நியூசு' என்ற ஓர் இதழில் வெளியான துணுக்கொன்றைப் பிறிதோர் இதழில் இன்று படிக்க நேர்ந்தது. நாட்டில் அண்டியிருந்த மடமையைப் படம்பிடிப்பது அது.

மலபார் பகுதியைச் சார்ந்தது உத்பாலம் என்ற சிற்றூர். அவ்வூரைச்சேர்ந்த ஈழவ குலத்துச் சிவராமன் என்ற இளைஞன் உயர்சாதி வைணவரொருவரின் கடைக்குச் (உள்ளூர்) சென்று காசு கொடுத்து 'உப்பு' வேண்டுமென்றானாம். அதைக்கேட்ட கடைக்காரர் கண்மூடித்தனமாக அவரை அடித்ததன் விளைவாக

அவன் மாண்டான். காரணம் 'உப்பு' என்ற சொல் உயர்சாதிக் காரர்கள் பயன்படுத்துவதாம். கீழ்ச்சாதிக்காரர்கள் அதைப் 'புலச்சூடன்' என்றுதான் சொல்லவேண்டுமாம். அதைவிடுத்து 'உப்பு' என்றதால்தான் அவன் இறக்க நேர்ந்ததாம். உடையிலும் உடம்பிலும் ஒட்டிக்கொண்ட தீட்டு சொல்லிலும் ஒட்டிக் கொண்டிருந்திருக்கிறது?

## சகோதரி நிவேதிதை

உந்திலே பயணம் செய்யும்போதே மமாவின், 'சகோதரி நிவேதிதை' என்ற சித்பவானந்தரின் நூற்சுருக்கத்தைப் படித்து முடித்தேன். விவேகானந்தரின் அறிவு மகளாக, பாரதியின் முன்னோடியாக விளங்கிய நிவேதிதை அயர்லாந்தில் 1867 அக்டோபர் 28இல் பிறந்தார். இயற்பெயர் மார்கரெட் எலிசபெத்து, விவேகானந்தர் வெளிநாட்டுப் பயணத்தின் போது ஈர்க்கப்பட்டார் நிவேதிதை. இந்தியா வந்தபின் 'மூடக்கொள்கையில் மூழ்கிக் கிடக்கும் இந்தியருக்குத் தொண்டாற்ற உள்ள உறுதியும் வீரக்குருதியும் உடைய நீயே தகுதியானவள். என் உயிர் இருக்கும் வரை நான் உனக்கு உதவி செய்வேன்" என்று விவேகானந்தர் அழைத்தார். நிவேதிதை இந்தியா வந்தார். பெயரும் நிவேதிதை ஆனது. தாகூரின் தந்தை தேவேந்திரநாத் தாகூர், தாகூர், கோகலே, திலகர், அரவிந்தர், சகதீசசந்திரபோசு போன்ற பெருந்தலைவர் களோடு தொடர்பு கொண்டார். பாண்டிச்சேரி, திருச்சி, சேலம், தில்லை முதலிய தென்னக நகரங்கட்கு வந்தார். சேலத்தில், நாட்டுக்கு எவ்வெவ்வழிகளில் பணியாற்றலாம் என்பது பற்றி ஆங்கிலத்தில் உருக்கமாகப் பேசினார். அக்கூட்டத்தின் தலைவர் தம் முடிவுரையில் 'நிவேதிதையாரின் தெள்ளத்தெளிந்த ஆங்கிலப் பேச்சைக் கேட்கும் பேறு பெற்றோம்' என அவரின் ஆங்கில நடையைப் புகழ்ந்தார். அதைக்கேட்ட நிவேதிதையார் பொறுக்க முடியாதவராய் 'அடிமைத்தனத்தில் உழன்று கிடக்கும் அப்பாவிகள் ஆங்கில ஆட்சிக்கு ஆடும் பொம்மைகள், தேசீய உணர்வு கெட்டமரக் கட்டைகள், நாட்டுக்குரிய வேலைத் திட்டம் உங்கள் காதில் விழவில்லை. ஆங்கிலச் சொல்லோவியத்தில் மயங்கிவிட்டீர்கள். வெட்கம்" என்று கூறி வெளியேறிவிட்டார். இவரைப் போன்றே மாயவரத்தில் காந்தியடிகளும் மதுரையில் தாகூரும் தமிழனின் ஆங்கில அடிமை மனப்பான்மையைச் சுட்டிக் காட்டிக் கண்டித்துள்ளமையை நினைத்தேன். அடிமையாய்க் கிடப்பதிலே என்றும் இன்பம்! 1911 அக்டோபர் 13இல் 44 ஆம் அகவையில் இந்தியாவிலேயே மறைந்தார் அன்னை நிவேதிதை.

(25.1.67)

◆

## வடநாட்டில் விலங்குப் பகையுணர்ச்சி

வடநாட்டில் ஓர் இடத்தில் பகை காரணமாக எதிரி ஊரிலில்லாதபோது அவன் குடும்பத்தைச் சார்ந்த ஏழெட்டுப் பெண்கள் குழந்தைகளைக் கொலை செய்துவிட்டதாகச் செய்தி கண்டேன். காழ்ப்பேறிய விலங்குப் பகையுணர்ச்சி மென்மையான மாந்தப் பண்புகளைப் பொசுக்கிக் குழந்தைகளையும் கொன்று போடும் நிலைக்குக் கொண்டுசென்று விடுகின்றது! அண்ணா மரத்தின் வேர்களையும் அதன் காய்கனி மலர்களையும் தொண்டர்கள் தலைவர்கட்கு ஒப்பிட்டு முன்பு பேசியமை நினைவிற்பட்டது. வேர்கள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன. உலகத்தின் கண்களில் அவை படுவதில்லை. பூ, காய்கனிகளோ மரத்தில் உச்சிவரை தொங்கி உலகை ஈர்க்கின்றன. ஆனால் வேரின்றி மரமில்லை, காய்கனியில்லை. காய்கனியின்றி மரம் இருக்கலாம். அதேபோன்று ஒரு கட்டிடத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் அடிப்படை நம் கண்ணில்படாது. அதன்மீது எழுப்பப்பட்ட வீடு விழியைக் கவ்வும். அடிப்படை பற்றிய நினைவே எழுவதில்லை. குமுகாயத்திற்கு அடிப்படையாகின்ற ஆசிரியர், உழவர் நிலைமையும் அதுதானே?

(26.1.67)

◆

## புராணங்கள் பற்றிய கட்டுரை

மாலை கருத்தரங்கில் புராணங்கள் பற்றிய தன் கட்டுரையை வீ படித்தார். இராமகிருட்டிண பரம கம்சர் 'அறிவு என்ற வெண்ணையில் பொரித்து அன்புத்தேனில் தோய்த்துத் தந்தது புராணம்! என்கிறார். அரவிந்தர் 'கண்ணனின் இன்ப விளையாட்டுக்கள் புராணங்கட்கு வழிவகுத்திருக்கும்' என்கிறார். சாணக்கியன் அரசன் புராணங்கற்க வேண்டும் என்கிறான். உபநிடதங்களில் 'புராணம்' எனுஞ்சொல் இடம்பெற்றுள்ளது. புராணம் என்ற பெயரில் மாபுராணம் (நச்சர் உரை) பூதபுராணம் முதலிய இலக்கண நூல்களும் வழங்கின. வடமொழியாளர் பெரும் புராணங்கள் 18, துணைப் புராணங்கள் 18, அதிபுராணங்கள் 18 எனப் பகுத்திருந்தனர். பகுப்பின் அடிப்படையில் தெளிவில்லை. சிவன் - சரத்குமார முனிவர்க்குச் சொல்லி அவர்வழி வியாசர் கேட்டே பெரும் புராணங்கள் பதினெட்டிலும் பாதி வியாசர் எழுதியவையாய்க் கருதப்படுகின்றன.

பெரும் புராணங்களில் 10 சிவனுக்குரிய புராணங்களாம். புத்தர் காலத்திற்கு முன் தோன்றியவற்றைப் பழங்காலப் புராணங்கள் என்றும் பின் தோன்றியவற்றைப் பிற்காலப்

புராணங்கள் என்றும் பகுப்பர். 16ஆம் நூற்றாண்டில் வடமொழிப் புராணங்கள் தமிழில் பெயர்க்கப்பட்டன. பின்னர் தனித்தனித்தல புராணங்கள் தோன்றின. பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், சீறாபுராணம், மொகைதீன் புராணம், தேம்பாவணி இந்நூற்றாண்டில் அசலாம்பிகையின் காந்திபுராணம் மற்றும் சிவராத்திரிப்புராணம், ஏகாதசிப் புராணம் போன்ற 275 புராணங்கள் தமிழில் தோன்றின. பெரும்பான்மை சைவ சமயப் புராணங்களே. பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனார் 15க்கு மேற் பட்ட புராணங்களை இயற்றியுள்ளார். சைனர்கள் சான்றோர் களின் வரலாற்றையே புராணங்களாக எழுதினர். (ஆதி புராணம்) புராணங்களிலிருந்து, வரலாறு, கலை தொடர்பான செய்திகளை அறியமுடிகின்றது. தமிழில் தோன்றிய சில புராணங் கள் வடமொழியாக்கப்பட்டு கோயில்களில் குருக்கண்மாரால் ஓதப்பட்டன. எறும்பியூர் (திருவெறும்பூர் - மலையையுடைய ஊர்) என்ற தமிழ்ப்பெயர் வடமொழியாக்கத்தின்போது எறும்பு ஊர் எனத் தவறான பொருளில் பீபிலிகாபுரி என மொழிபெயர்க்கப் பட்டதாம். இப்படிப் பல செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது. எனக்கு எழுந்த சில ஐயங்கள் தெளிவாக்கப்படவில்லை. புராணம் என்பதின் பொருள் (இலக்கணம்) தெளிவாயில்லை. பொருட் பழமை பற்றியா, அன்றித்தோன்றிய காலப்பழமை பற்றியா புராணம் என்ற பெயர் வழங்கப்படுகின்றது என்பது விளக்கப்படவில்லை. பெரும் புராண, துணைப் புராணப்பகுப்பின் அடிப்படை தெரியவில்லை. புராணங்கள் ஒழுக்கத்தையும் அறிவையும் வளர்ப்பன என்பதற்கு மாறாக அறிவுத்தொடர்பற்ற, கண்ணனின் விளையாடல்கள் பற்றிய ஒழுக்கங்கெடுக்கும் செய்திகளே பேசப்படுகின்றன. தமிழ்நாட்டில் மூட நம்பிக்கைகள் வளர பண்பாட்டின், மொழியின் தனித்தன்மை தளர ஒரு பெருங்காரணமாக இருந்தவை புராணங்கள் எனலாம். கூர்ம புராணம், மச்ச புராணம், கல்கி புராணம், வாமனபுராணம் எனப் பல புராணங்களில் திருமாலின் அவதார அடிப்படைப் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றின் காரணத்தை அறிய வேண்டும். உட்பொருளுக்கும் பெயர்க்கும் தொடர்பின்மையும் உளது. மருந்துவகை, செடிகொடிகள் பற்றியும் புராணங்கள் பேசுகின்றன. தமிழில் உள்ள வைணவப் புராணங்களை அறிதல் வேண்டும்.

*(27.1.67)*

◆

## மேகம் என்னும் யானையிலே

இவ்வுலகில் நாம் வாழ்தல்... என்ற பாட்டின் தொடர்ச்சியாக

மேகமென்னும் யானையிலே விண்ணெலாம் உலவிடுவோம்.

விண்மீன்க ளோடுகதை விடியும்வரை பேசிடுவோம்
பெண்ணிலவே! இவ்வுலகப் பீழையெல்லாம் மறந்தே
வெண்ணிலவுப் பந்தெடுத்து விளையாடி நாம் மகிழ்வோம்
மின்னலெனும் பொன்னெடுத்து விதவிதமாய் நகைகள்
பண்ணி உனக்கணிந்து பார்க்க எனக்கு ஆவல்!
இன்னிசை உண்டங்கே; இடிக்குரல் கேட்டிலையோ
இன்னே இவ்வுலகைவிட்டு இருவரும் பறந்திடுவோம்!

என்றெழுதினேன்.

## பாரதியின் பாஞ்சாலி சபதம் : ஆய்வுக்கட்டுரை

பாரதியின் ‘முப்பெரும்பாடல்கள்’ பற்றிய கட்டுரை. கருத்துத் தொகுப்பாகவே இருந்தது. பாஞ்சாலி சபதத்தை அரசியற் பின்னணியில் கௌரவர் - ஆங்கிலேயர், பாண்டவர் - இந்தியர்கள், பாஞ்சாலி - இந்தியத் தாய் என நோக்குவதும் குயிற்பாட்டை ‘வேதாந்தப் பின்னணியில்

ஆன்மா - சின்னக்குயிலி - குயில்
காமம் - மாடன் - மாடு
மயக்கம் - நெட்டைக்குரங்கன் - குரங்கு

எனக் காணுவதும் பண்டையோர் நோக்கே. மாலைக் கருத்தரங்கில் ச.வேசு. முதலிய பிறர்வழி விளக்கம் பெறலாமெனச் சில கருத்துக்களைக் கேட்டேன். கண்ணன் பாட்டில் ‘கண்ணம்மா என் குழந்தை, கண்ணம்மா என் காதலி, கண்ணம்மா என் குலதெய்வம் எனப் பெண்பாலில் பேசும் பாரதி தாயைப் பற்றிப் பாடும்போது ‘கண்ணன் - என்தாய்’ எனத் தலைப்பிட்டது ஏன்? எனக் கேட்டேன். சரியான விளக்கந்தரப்படவில்லை. தாய், தந்தை முதலியவர்களைப் பற்றி ஒரொரு பாடல் பாடிய பாரதி காதலன் பற்றி 5 பாடல்களும் காதலி பற்றி 6 பாடல்களும் பாடியமைக்குக் காரணம் பாடற்கருப்பொருளாய கண்ணன் காதல் விளையாட்டுக் களில் அதிக ஈடுபாடுடையவனாக இருந்தமையாகலாம் என்ற என் கருத்தை வெளியிட்டேன். தாயாகப்பாடும்போது ‘அண்ணன் அருச்சுனன் போல் எனை ஆக்கிவிடுவாள்’ என்று பேசுகிறான். அருச்சுனனுக்கு மாமன் கண்ணன். மாமன், பெண்ணாயின் தாயாவது முறைமை - தாயொடு பிறந்த ஆணே மாமன். இந்நிலையில் ஆணாகிய மாமன் கண்ணன் பெண்ணாக உருவகப் படுத்தும்போது அருச்சுனனுக்குத் தாயாகிறான். ஆதலால் பாரதிக்கு அண்ணன் என்பதில் பொருத்தமுள்ளது என்ற என் கருத்தையும் வெளியிட்டேன். பாஞ்சாலி சபதத்தில் துகிலுரிதற் சருக்கத்தில் துகிலுரியும் செயலே தொடங்கப்பெறவில்லை. அடுத்த சருக்கத்தில் தான் தொடங்குகின்றது. எனினும் பாரதி இதைச்

துகிலுரிதற் சருக்கமெனப் பெயரிட்டுள்ளான். அது பொருந்துமா? எனக் கேட்டேன்.

*(30.1.67)*

◆

## ஆண், பெண் உணர்வுகள்

ஆண்கள், தாங்கள் செய்கின்ற பிழையோ தங்கட்கு நேர்கின்ற இழுக்கோ பொதுவாகப் பெண்கட்கும் குறிப்பாகத் தாங்கள் விரும்புகின்ற பெண்கட்கும் தெரிந்துவிடக் கூடாதே எனக் கவலையும் தெரிந்துவிட்டால் துயரமும் கொள்வது இயல்பு என்பதை விளக்கினேன். சாலையில் ஓர் ஆண் நடந்து செல்லுங்கால் வாழைப்பழத்தோல் வழுக்கி விழுந்துவிட்டால் சுற்றும் முற்றும் பார்ப்பான். யாராவது பெண் இதைப் பார்த்துவிட்டால் எவ்வளவு வருந்துவான்! இதைப்போல ஆண்களிடையில் பெண்களும் வருந்தலாம். இஃது உளவியல் உண்மை. கம்பன் கும்பகர்ண வதைப்படலத்தில் இராவணனின் மனநிலையை உளவியல் அறிஞன்போல் படம்பிடித்துக் காட்டும் வான்நகும் மண்ணுமெல்லா நகும், பெருவயிரத் தோளான் நான்நகு பகைவரெல்லாம் நகுவர்; என்றதற்கு நாணான் வேல்நகு நெடுங்கட்செவ்வாய் மெல்லியல், மிதிலைவந்த சானகி நகுவள் என்றே நாணத்தாற் சாம்புகின்றான்' என்ற பாடலை விளக்கி அடித்த கையாலேயே அணைத்தேன்.

*(31.1.67)*

◆

# பிப்ரவரி - 1967

## கதிரவக் குழந்தை

*இரவுப்பெண் சூல் கொண்டிருக்கிறாள். சூல் வளர வளர, பேற்றுக்காலம் நெருங்க நெருங்க அவள் மேனியில் ஒரு வெளுப்பு ஏறுகின்றது. கருவுற்ற மகளிர்க்கு அமைவது போல; வைகறைப் போதுதான் அவளின் மகப்பேற்றுக்காலம். அவள் பிள்ளைபெறப் போகிறாள் என்பதைப் புட்களெல்லாம் வாய் மணக்கப் பாடிப்பாடி உலகெல்லாம் அறிவித்துப் பறந்து மகிழ்கின்றன. தூக்கத்தைத் தூக்கியெறிந்துவிட்டு மகப்பேற்றுச் செய்தியால் மகிழ்ந் தெழுகின்றனர் மக்கள். கன்னங்கரிய அந்த இரவுப்பெண் சிவந்த அழகிய கதிரவக் குழந்தையைப் பெற்று விட்டாள். ஒரே ஒளிமயம்! கடல் பொன்னாடையைப் பூண்டு மகிழ்கின்றது. கன்னியர்கள் கோலந்தீட்டி மகிழ்கின்றனர். மலர்கள் சிரிக்கின்றன. மணத்தை வாரியிறைத்துக் குழந்தையைத் தழுவி மகிழ அவைகட்கு ஒரே ஆவல்! 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதுபோல அசைந்தாடி மகிழும் இளங்காற்று தென்னங்கீற்று களையும் சிறு செடிகொடிகளையும் மகிழ்ச்சியால் ஆடச்செய் கின்றது.*

*தேள், தன் தாய்த்தேளின் வயிற்றைப் பிளந்துகொண்டு பிறக்குமாம். இந்தக் கதிரவக் குழந்தையை ஈன்ற இரவுத்தாய் எங்கே போனாள்? தாயைக் கொன்று பிறந்த பயலா இந்தக் கதிரவன்? பிறந்தவுடனே நடைபயிலத் தொடங்கிவிட்டானே! தங்கமுருக்கித் தழல்குழைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பு கின்றானே! இளமையிலேயே இத்துணை ஆற்றலா? எங்கும் ஒரே இன்பக் கூத்தல்லவா?*

*(5.2.67)*

◆

## அவையடக்கம் பற்றிய கட்டுரை

*மாணவி கேத்தரின் 'அவையடக்கம்' பற்றிக் கட்டுரை படித்தது. கருத்துத் தொகுப்பில் உழைப்பின் மிகுதி தெரிந்தது. 'அவையடக்கியலே அரில்தபத் தெரியின்...' என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா அவையடக்கத்தின் இலக்கணங்கூறுவதாக*

வைத்துக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. தொல்காப்பியர் சுட்டும் 'அவையடக்கியல்' இன்றைய அவையடக்கம் தானா என எண்ணிப் பார்க்கவேண்டும். தன்னம்பிக்கை இல்லாதவர்கள் தாம் அவையடக்கம் பாடியிருப்பர் என்ற கருத்தும் எழுந்தது. அவையடக்கம் பற்றி இலக்கணங்கூறும் தொல்காப்பியத்தில் ஏன் அவையடக்கம் இல்லை என்ற வினா எழுந்தது. இருந்து அழிந்து போயிருக்கலாம் என்றார் ச.வே.சு. இடைச் செருகலாய் இருக்கும் என்று வீ.வ.வே. வாதிட்டனர். இரண்டு கூற்றிற்கும் இடமுண்டு என்றேன் யான். தொல்காப்பியத்தின் நூற்பாக்கள் சில மறைந்தன. தொல்காப்பியத்தில் வேற்று நூற்பாக்கள் சில புகுந்தன. மறைவின் அடிப்படையில் அழிந்திருக்கலாம், புகுதல் அடிப்படையில் இடையில் செருகப்பட்டிருக்கலாம். தொல்காப்பியர், இலக்கியக் கூறுகளைப் பற்றிப் பேசும் செய்யுளியலில் அவையடக்கம் பற்றிப் பேசுவதானும் இலக்கணத்திற்கில்லாத பாவரையறையை (கலியிலும் வஞ்சியிலும் அவையடக்கம் பாடக்கூடாது) அவை யடக்கத்திற்குக் கூறலானும் அவையடக்கம் இலக்கியத்திற்குரிய ஒன்று எனக் கருதியிருக்கலாமோ என் கருத்தை வெளியிட்டு இலக்கண நூலாய் தன் நூலிற்கு அவர் அடையடக்கம் கூறவேண்டியதில்லை என நினைத்துவிட்டிருக்கலாமென்றேன். ச.வே.சு. ஏற்றுக்கொண்டார். யான் சொன்ன கருத்து மாணவர் சிலர்க்குப் புரியவில்லை என்பது அவர்கள் யாப்பருங்கலக் காரிகையில் இலக்கணநூலில் அவையடக்கம் வருகின்றதே எனக் கேட்டதிலிருந்து தெரிந்தது. தொல்காப்பியரின் கருத்தைச் சில அடிப்படைகளில் ஊகம் செய்தேன். அவர்க்குப் பல நூற்றாண்டு கட்பின் வந்த, அவரினும் சில கூறுகளில் மாறுபட்ட, புதியவை படைத்த பிறரின் போக்கைத் தொல்காப்பியருடையதோடு குழப்பிக் கொண்டால் தெளிவேது? கட்டுரையில் திருமந்திரத்தில் தான் முதன்முதல் அவையடக்கம் இடம்பெறுகிறது. கந்தபுராணத் தில் நிறைய அவையடக்கப் பாடல்கள் உள்ளன. நேமிநாதம் பன்னிருபாட்டியல், இலக்கணக்கொத்து முதலிய நூற்களில் அவையடக்கமின்மை பிற்காலச் சிற்றிலக்கியங்களின் அவையடக்க நிலை ஆகியவை போன்ற குறிப்புக்கள் நிறைந்திருந்தன. அவையடக்கியவைத் தனித்து ஓர் இயலாகத் தொல்காப்பியர் கூறப் பிற்காலப் புலவர்கள் பலர் கடவுள் வாழ்த்துப்பாடுங்கால் ஓரிருவரிகளில் அதனோடிணைத்து அவையடக்கம் சொல்லி விடுகின்ற நிலையைக் கூர்ந்து பார்க்கவேண்டும்.

(6.2.67)

◆

## திருக்குறள் நூல் அன்பளிப்பு

காலையில் இரெட்டியார் அச்சக விற்பனையகஞ்சென்று கழக ஆங்கிலத்தமிழ் கையகராதியும், மு.வ. 'திருக்குறள் தெளிவுரை' இரண்டும் வாங்கி வந்தேன். பொருளனியல் குறிப்புக்களை எழுதித் தந்தமைக்காக தாயம் வேல் ஆகியோர்க்கு அன்பளிப் பாகக் கொடுக்கவே குறள் தெளிவுரை. சென்னையில் கடற்கரையில் முறுக்குவிற்ற இலலிதா என்ற மலையாளப் பெண்ணைக் குறள் சொல்லச்சொல்லி அதற்காகத் தெளிவுரை வாங்கித் தந்ததும், காசாமியான் பள்ளியில் எல்லோரும் குறள் வாங்க வேண்டு மென்று சொல்லி, பலர் பணம் தர வாங்கித் தந்ததும் எலிசபெத்து தனக்குக் குறள்வாங்கிச் சென்ற இரண்டு நாட்களின் பின் தன் தாத்தாவிற்கு ஒரு குறள் வேண்டுமென்று பணம் தந்ததும் அதனால் நான் மகிழ்ந்ததும் நெஞ்சில் நிழலிட்டன. பள்ளி வாழ்க்கையை நினைக்கும்போது பெருமிதத்தால் நெஞ்சு விம்முகின்றது. மாணவ, மாணவிய இளநெஞ்சங்களில் எனக்கென்று அமைந்த மேடையில் உலவி வந்தமையை என்று நினைத்தாலும் நெஞ்சு விம்மும். 'ஐயா ஐயா' என்று வாய் மணக்க, முகம் மலர என்னை அழைத்து மகிழ்ந்த, என் நெஞ்சை அறிந்துகொண்டு யான் இட்ட பணியை இனிதே செய்த அந்த மாணவ மாணவிகளை அன்புத்தம்பி தங்கை யரைக் காணவேண்டு மென்ற நிறை ஆவல். எங்கு காண்பது? பல் பகுதியில் பல நிலையில் பரந்து கிடப்பர். எங்கிருப்பினும், வட்டக் கழுத்து மெய்ப்பையோடு வெள்ளை உடையில் வள்ளுவரைப் பற்றியும் வண்டமிழைப்பற்றியும் வாய்மையைப் பற்றியும் பேசி உணர்த்திய இந்தத் "தமிழ் ஐயா"வை மறந்து விடமாட்டீர்கள். காற்றடிக்கும் போது மரங்கள் அசைவதைப்போல நல்ல எண்ணங்கள் மலரும்போது என் நினைவும் அவர்கட்கெழுமென்ற நம்பிக்கை எனக்குண்டு. மூன்று மாதங்களே அந்தச் சிறிய பள்ளியில் பணியாற்றியபோதும் எனக்கு முழுநிறைவு கிடைத்தது. விளைச்சலைக் கண்டு மகிழும் வேளாளனாயிருந்தேன். பின் வந்த தமிழய்யாவிடம் என்னைப் பற்றித் தலைமையாசிரியை புகழ்ந்து சொன்னார்களாம். மாணவச் செல்வங்கள் மனதில் நிறைந்து நிற்பதைவிட ஓர் ஆசிரியனுக்கு வேண்டியது என்ன? கடமையைச் செவ்வனே செய்தால் புகழ் தானே நம்மை வந்தெய்தும்.

ஆசிரியரை இழித்து மாணவ மாணவியர்க்கு மொட்டை மடல்கள் விடுகின்ற பெட்டை நாய்ப்பயல்களை என்ன செய்வது? ஆண்மையற்ற கழுதைகள்! இவனெல்லாம் படித்தவனா? அதுவும் சிந்தைக்களங்கம் போக்கும் செந்தமிழைப் படித்தவனா? வாயில் வயிற்றில் வளத்தமிழை வைத்து மனக்கோயில்தனில் நிறுத்தாக் குள்ளமனம் உள்ள இந்தக் கள்ளப் பயல்களை உதைத்துத் தான் திருத்த வேண்டுமா? அறுவை மருத்துவம் வேண்டும் போலும்!

மாலையில் ச.வே.சு. அழைத்து மடல்களைக் காட்டினார். வி.பெ.தான் எழுதியிருக்கக் கூடும் என்றார். 'வீழ்ச்சியை எண்ணி ஆண்மையற்ற பயல்களின் அழுகைக் கூச்சலே இம்மடல்! அவர்கட்காக நாம் இரக்கப்படுவோம். நம் நெஞ்சால் கற்பனை செய்யக்கூட இயலாதவற்றைச் செய்துவரும் இழிதகையாரிடை நாமும் வாழ்ந்தாக வேண்டியுளதே என்று வருந்தி அமைதியாகப் பணியாற்றுவோம். அளவுமீறின் அறுவை மருத்துவமும் செய்வோம்' எனக் கூறினேன்.

*(7.2.67)*

◆

## இசைக்குழுக்கள் அமைக்கவேண்டும்

தமிழோவியன் கவிதைகள் என்ற நூற்சுருக்கத்தைப் படித்தேன். மணவழகர் மன்றவிழாவில் அண்ணா வெளியிட்ட நூல், சிறந்த படைப்பன்று.

'சிந்தனையை அள்ளிவர சிறுமைதனைக் கிள்ளிவர
முந்தையர்கள் காத்துவந்த முழுமைதரும் தமிழுண்டு'

என்ற இரண்டு வரிகள் நின்றன.

அறிவேந்தும் விளக்கினையே அவித்துவிட - என்
ஆசையெனும் காற்றோதான் எழுந்திடுங்கால்
செறிவுடைய திறமையெலாம் சென்றிடவே - வாழ்வோ
சிறுவழியும் தெரியாமல் அலைந்ததடி.

கருத்து நன்று. ஓட்டமும் உயிர்ப்பும் இன்று, நூலாக வருவதற்குத் தக்கதா என்ற வினா எற்கு எழுந்தது. யான் முன்பே படித்த 'திராவிடர் திருப்பாடல்' என்ற பாவேந்தரின் சிறு நூற் கருத்தைப் படித்தேன். திராவிடர்கள் வைகறையிலும் இரவிலும் எழுச்சிதர வழிபாட்டுப் (பஜனை) பாடல்களைப் போன்று மொழி இன எழுச்சிக்குப் பாடவேண்டிய திராவிடர் இராப்பத்து, திராவிடர் காலைப்பத்து என பாவைமுறையில் பத்துப்பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். திராவிடர் ஒழுக்கம் என்ற ஓர் பாடலும் இடம்பெற்றுள்ளது.

'தூய அற உளத்தால் - செயலினில்
தொண்டு பிறக்குமடா
ஏயும் நற்றொண்டாலே - பெரியதோர்
இன்பம் பிறக்குமடா'

'மொழிப்போர் விடுதலைப்போர் மூண்டனவே இங்கே
விழிப்பெய்த மாட்டீரோ தூங்குவீரோ'

'நஞ்சுநிகர் இந்தியினை நாட்டித் தமிழமுதை
வெஞ்சேற்றுப் பாழ்ங்கிணற்றில் வீழ்த்த நினைத்தாரே'

நெஞ்சிளைப்போமோ? நெடுந்தோள் தளர்வோமோ?'

'காக்கைக் கழுத்துப்போல் வல்லிருளும் கட்டவிழும்'

'மீள்வது நோக்கம் - இந்த
மேன்மைத் திராவிடர் மீளுவதின்றேல்
மாள்வது நோக்கம்'

'தினவுண்டு தோளில் - வரத்
திறல் மிகவுண்டெனில் வந்து பார்க்கட்டும்'

இருபது பக்கங்களுடைய சின்னஞ்சிறிய இந்நூலில் பாவலனின் நெஞ்சம் தவழ்கிறது, பாய்கிறது, உள்ளத்திலுள்ளதல்லவா பாட்டு? பாவேந்தர் தெருத்தோறும் காலைப்பத்தும் இராப்பத்தும் பாடவேண்டினார். பித்துக்குளி முருகதாசைப் போல, மொழி இன பண்பாட்டு எழுச்சியை நோக்கமாகக் கொண்டு இசைக்குழுக்கள் அமைத்து நாடு முழுவதும் கொள்கைவிளக்கம் தரல் வேண்டு மென்று எனக்கு நீண்டநாள் வேட்கை நிறைவேறுமா?

(8.2.67)

◆

## பல்கலைக்கழகக் கல்லூரியில் பாவேந்தர் விழா

முதல் மணி வகுப்பு. ஒலியனியலில் மொழியிடை இருமெய் இணைகள் பற்றி 'ண்க்' இணைக்கு எடுத்துக்காட்டு தரும்போது 'வண்கண்' என்று குறிப்பிட்டேன். தாயம் அதுவன்கண் அல்லவா என்றது. வண்கண் என்றிருக்கும், அகரவரிசையைப் பாருங்கள் என்றேன். வன்கண் என்றே இருந்தது. யான் தாளில் பிழையாக எழுதியிருப்பதை உணர்ந்தேன். தாயத்தின் வினா ஒரு தவறைப் போக்கியது. பிற்பகல் ச.வே.சு. அழைத்தார். பேரா. வ.சுப.மாவிற்கு பாடப்புத்தகக் குழு தொடர்பான ஒரு தேர்தலின் பொருட்டு மடல் விடலாமென்றெண்ணுவதாகச் சொன்னார். யானும் அவற்கு ஆதரவுதர வேண்டி மடல் விடுப்பதாகச் சொன்னேன். இறுதி மணி இபெயின் வகுப்பை எடுத்தேன். ஆய்த எழுத்துத் தொடர்பான பேச்செழுந்தபோது நம் முன்னோர் பயன்படுத்திய போர்க்கருவிகள், முறைகள் இன்றைய ஆங்கிலப் படங்களில் இடம் பெற்றுள்ளமையைப் பற்றிக் குறிப்பிட்டேன். இழந்த பெருமையை நினைவூட்டும் அப்படங்களைப் பார்க்குங்கால் நெஞ்சம் விம்மும். என்று தமிழன் எழுவானோ? பல்கலைக்கழகக் கல்லூரியில் 'பாவேந்தர் விழா' நிகழ்ந்தது. 'வீ'யின் தலைமையில் மருத்துவ நண்பர் நல்லதம்பி உரை நிகழ்த்தினார். பாவேந்தர் விழாவில் கலந்துகொள்வோரை வரவேற்ற பேரா ஏசுகாசன் பாவேந்தர்

பெயரையே குறிப்பிடவில்லை. முன்னுரையில் வீ நமக்கு நாமே அடிமைப்பட்டிருக்கும் நிலையையும் நாம் பிறர்க்கு அடிமைப் பட்டிருக்கின்ற நிலையையும் எதிர்த்து முரசு கொட்டியவர் பாவேந்தர் என்றார். ‘கத்தே’ தான் 20 ஆண்டுகள் முன்போ 20 ஆண்டுகள் பின்போ பிறந்திருந்தால் இன்றைய கத்தேயாக இருந் திருக்க மாட்டேன். வேறொரு கத்தேயாயிருப்பேன் என்று கூறி யதையும் காலத்தால் பாவலன் உருவாக்கப்பட்டு சமைக்கப்பெறு கிறான் என்பதையும் சுட்டினார். நல்ல தம்பி பாரதி ஆரியத்தைப் புகழ்ந்து பாடினான். பாவேந்தர் துணிந்து எதிர்த்தார் என்ற கருத்தை மையமாக வைத்துப் பேசினார். நல்ல தமிழ்நடையும் கருத்துவளமும் இருந்த அப்பேச்சு எடுபடவில்லை. குரல் எடுப்பும் மொழியும் முறையும் ‘இன்மையே காரணம். வீ தன் முடிவுரையில் பாவேந்தர், பெண்மையை அறிவும் ஆற்றலும் வாய்ந்ததாகப் பாடி யுள்ளமையையும் கைம்மையை வேறெவரும் பாடாத அளவுக்குச் சிறப்பாகப் பாடியுள்ளமையையும் குறிப்பிட்டார். விழா முடிந்ததும் ஒரு மணிநேரத்திற்குமேல் நண்பர்களோடு உரையாடியபின் பேராவைச் சந்தித்து வாசுதேவநல்லூர் செல்வது குறித்துச் சனிக்கிழமை ஓய்வு வேண்டினேன். சென்று குற்றாலத்திலும் குளித்துவா என்றார். தேர்தல் வேலைக்குச் செல்வதாகச் சொல்ல வில்லை. நண்பர் சுப்பையாவின் தந்தையார் மறைவின் பொருட்டுச் செல்வதாய்ச் சொன்னேன். இரவு 8 மணிக்கே அறை சென்றேன். நல்ல களைப்பு. பேச்சுத் தொடர்பான குறிப்புக்களைத் திரட்டவே மணி ஒன்று ஆனது.

*(9.2.67)*

◆

## வாசுதேவநல்லூர் பயணம்

இரவு சென்னைப் பயணிகள் புகைவண்டியில் தமவே, வவே, தம்பி, தங்கராசு, மதனன், இராமசாமி, நடராசன், தேவராசன், யான் ஆக ஒன்பது பேரும் வாசுதேவநல்லூர் கழக வேட்பாளர் வெள்ளைத்துரையை ஆதரித்து வேலை செய்யக் கிளம்பினோம். சனி ஞாயிறு வேலை செய்து திங்கட்கிழமை திரும்பி விடுவதாகத் திட்டம். பயணம் செய்யும்போது பெட்டியின் பலகணி ஓரத்தில் கழகக் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தோம். கண்ட கழக நண்பர் கள் சிலர் வண்டி நின்ற நிலையங்களில் வந்து பேசினர். சங்கரன் கோவிலைச் சார்ந்த கழக நண்பரொருவரும் உடன் வந்தார். ஆளுங்கட்சியின் அறமற்ற செயல்களைச் சுட்டி கழகம் வெற்றி பெறும் நல்வாய்ப்பு உள்ளமையை விளக்கிச் சொன்னார்.

*(10.2.67)*

◆

## சிவகிரியில் தேர்தல் பேச்சு

காலை 5 மணி அளவில் சங்கரன்கோவிலில் இறங்கி பேருந்தின்வழி முள்ளிக்குளத்தை 6 மணிக்குள் அடைந்தோம். இனிய எல்லா வசதிகளையும் பெற்ற இயற்கை சிரிக்கின்ற எழில் சிற்றூர் அது. அ.சொ. மாமனார் மறைந்த இராமசாமியாரின் வளமனையில் தங்கினோம். காலைச் சிற்றுண்டி தவமணி வீட்டில். இனிய பெற்றோர்கள். அவர்களின் நெஞ்சங்களைப் போலவே படைத்த இட்டலியும் மென்மையாக இருந்தது. உணவு முடித்துப் பத்தேகால் வரை வேட்பாளரின் வண்டியை எதிர்பார்த்தோம். வராததால் முள்ளிக்குளத்தையடுத்த நகரம் என்ற சிற்றூரில் வாக்காளர்களைச் சந்திக்கச் சென்றோம். அவ்வூர் ஊராட்சிமன்றத் தலைவரைக் கண்டு பேசினோம். நாட்டுப்பணியில் ஈடுபாடுள்ள குடும்பம் என்பதை அறிய முடிந்தது. இன்றைய ஆட்சியின் இழிநிலையை அருமையாக விளக்கிக் குமுறிப் பேசி நல்லாதரவை நான் திரட்டித் தருவேன் என்றார். வேட்பாளரின் வண்டியும் வந்தது. பின் நகரத்தையும் துரைசாமிபுரம் என்ற ஊரையும் ஊர்வலமாக வந்தோம். வேட்பாளர் வந்து வரவேற்றார். இளைஞர் கள் பலரும் ஊர்வலத்தில் உரத்த குரலில் எழுப்பிய முழக்கங்கள் இத்தமிழ்நாடு எதிர்காலத்தில் ஏற்றம்பெறும் என்ற நம்பிக்கையைத் தந்தது. பின் சிவகிரி சென்று அங்கிருந்து இடது பொதுவுடைமைத் தோழர்களோடு விசுவநாதப் பேரிக்குப் போனோம்.மதிய உணவு அங்கே. மாலை ஆறு மணிவரை வீடுவீடாகச் சென்று வாக்காளர் களைக் கண்டோம். பின் பொதுக்கூட்டம். இறுதியில் பேசினேன். சீனு (முள்ளிக்குளம்) தவமணி இருவரும் பேச்சு சிறப்பாக இருந்தது என்றனர். அடுத்து இராயகிரிப் பொதுக்கூட்டத்தில் மதனன், மருத்துவர் நடராசன், வடிவேல் பேசினர். யான் பேசவில்லை. ஆனால் இறுதியில் மாணவர்க்குழுத் தலைவரென என்னைக் குறிப்பிட்டு இரண்டு மாலைகள் அணிவித்தனர். அதற்கு ஓரிரு மணித்துளியில் நன்றி கூறி அங்கேயே சிற்றுண்டி அருந்தி விடைபெற்றுச் சிவகிரி வந்தோம். சிவகிரியில் சீனு, நடராசன், மருத்துவர் பேசியபின் யான் பேசினேன். மதனன் வவே முதலியோரை வாசுதேவ நல்லூர்ச் சென்று பேசிக் கொண்டிருக்கச் சொன்னோம். சிவகிரியில் மக்கட் சமவுடைமை பற்றி விரிவாகப் பேசினேன். அரசியல் தெளிவுமிக்க ஒரு சிறந்த சொற்பொழிவு என்றார் மருத்துவர். வலதுசாரியினரைப் பற்றியும் பேசினேன். பதினொன்றேகால் மணி அளவில் வாசுதேவ நல்லூர் வந்தோம். நல்ல கூட்டம் வ.வே. பேசிக்கொண்டிருந்தார். முடித்ததும் யான் பேசினேன். ஆளுங் கட்சியின் அடிதடிச் செயல்களையும் பண்பாடில்லாப் போக்கினை யும் மையமாக வைத்துப் பேசினேன். நெஞ்சந்திறந்து பேசிய பேச்சு இது. எல்லோரும் அமைதியாக

இருந்து அருமையாகச் சுவைத்தார்கள். கூட்ட இறுதியில் தீண்டாமை தொடர்பாக ஒரு சீட்டு வந்தது. விளக்கிப் பேசினேன். கூட்டம் முடிந்ததும் பல நண்பர்கள் வந்து பார்த்தனர். அண்ணா வின் பேச்சால் பெற்ற பயனைவிட என் பேச்சால் பெற்றதாகப் பலர் பேசிச் செல்வதாகக் குறிப்பிட்டுக் 'கலைஞரின் வாரிசு' நீங்கள் என எண்ணும் வகையில் சிறப்பாக உங்கள் பேச்சு அமைந்தது என்றனர் சிலர். எனக்குப் பெருமைதான். மருத்துவர், இதுவரை யான் இதுபோன்ற தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்ட தில்லை என்றார். கூட்டம் முடிந்து கழகப் பணிமனையில் உரையாடி முள்ளிக்குளம் வர இரவு மணி ஒன்றரை ஆனது. தொண்டை கம்மிவிட்டது.

*(11.2.67)*

◆

## தென்மொழியின் ஆசிரிய உரை

தென்மொழியின் (இத்திங்கள்) ஆசிரியவுரை பற்றிய பேச்செழுந்தது. உரையின் இடையே புதுப்பாதையில் செல்வதினும் பழைய பாதையில் போதலே சிறந்தது எனவும் 'பக்தவச்சலம் போன்ற ஓரிரு புல்லியர் என்றும் இருப்பர் அவர்க்காக நாம் ஒதுங்கிக்கொள்ளத் தேவையில்லையெனவும் எழுதியுள்ளார். தமிழ்நானூறு எழுதிய கையினால் எப்படித்தான் பேராயக் கட்சிக்கு ஒப்போலை போடுங்கள் என்றெழுத ஆசிரியருக்கு மனம் வந்ததோ? பக்தவச்சலம் மட்டுமா எல்லா நிலைகட்கும் காரணியம்? ஆசிரியக்கோழை உரைமுடிவில் தெளிவாகப் பேராயக் கட்சிக்கு ஒப்போலை இடுங்கள் எனக்கூற இயலாது வடவரெதிர்ப்பும் பார்ப்பன எதிர்ப்பும் தமிழக விடுதலைக் கொள்கையும் உடைய எவர்க்கும் ஒப்போலையைத் தூக்கி எறிக என மழுப்புகின்றார். இவர் சொல்லி எத்தனைப்பேர் வாக்கிடப் போகின்றார்களோ? தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறார்.

*(14.2.67)*

◆

## வல்லம் வேங்கடபதி கவிதைகள்

மரபுவழி நடந்து அதன் எழில் காட்டி புத்தெழில் கூட்டி அளிக்கின்றார் என அண்ணா முன்னுரையில் கூறுவதற்கேற்ப 'வல்லம் வேங்கடபதியின் கவிதைகள்' என்ற நூல் அமைகின்றது. முன்பே நன்கு படித்துக் குறிப்பெடுத்த நூல் இது. குழந்தையை,

அருவி உருமாறி ஆடையின்றி வந்ததுவோ
கருவில் ஒரு நிலவு கனிந்திவ்வாறாகியதோ

எனும் பாவலன் ஒரு பெண்ணைப் பார்த்து

மான் தங்கும் மதியத்தில் பூத்த
மலர்க்கொத்தோ உன்னுடம்பு? இல்லை
வான் எங்கும் முகில் கிழிக்கும் மின்னல்
வரைகின்ற ஒளிக்கோடோ?

என்கிறான்.

வேறோர் இடத்தில்,

'கண்ணில் காட்சி சுமக்கின்றேன் - இரு
காலில் நடையைச் சுமக்கின்றேன்'

என்கிறான். இப்படி இனிய மலர்கள் மணக்கும் பூங்கொத்து இத்தொகுதி...

## வி.ஆர்.எம். செட்டியாரின் கவிஞன் குரல்

'கவிஞன் குரல்' என்ற வி.ஆர்.எம். செட்டியார் 172 பக்கங்களுடைய தன் நூலில் செல்லி, கீட்சு போன்ற மேலைப் பாவலர் களையும் பாவேந்தர், முடியரசன் முதலிய நம்மவர்களை யும் பிறரையும் பற்றிப் பேசுகிறார். 'செல்லி 13ஆம் அகவையிலேயே இலத்தீன் மொழியில் பாப்புனைந்தான். 'விடுதலையடைந்த பிராமீதியசு' என்ற நாடகத்தில் செல்லி அடிமை வாழ்வை வெறுத் தமையைக் காணலாம். 30ஆம் அகவையிலேயே மறைந்தான்; கீட்சு பாவே உயிர்; அஃதின்றித் தான் வாழமுடியாது என்று உணர்ந்த வன். சாகும் நிலையில் தாகுரைப் பார்த்து இறப்பைக் குறித்தொரு பாட்டுப் பாடினான். அவன் உள்ளத்தில் ஐந்து ஆண்டுகள் கவிதைப்புயல் கடுமையாக வீசி மாணிக்கங்களை உதிர்த்தது. கீட்சின் இசபெல்லா ஒரு காதல் துயர்க்கதை. இப்படிச் சில கருத்துக்கள் இறைந்து கிடக்கின்றன...

## ஊர்செல்லத் திட்டம்

தேர்தற்கு ஊர்செல்ல வேண்டுமென்ற எண்ணம் வலுப்பெற் றது. வாக்கைப் பயன்படுத்தாவிடில் மனச்சான்று சுட்டுப் பொசுக்கி விடும் என ஒரு தவிப்பு. பேராவைப் பார்த்துச் சொன் னேன். நீண்டநேரம், இலக்குவனார் நிலை, அரசியல் ஈடுபாட்டால் எதிர்காலப் பாதிப்பு ஆகியவை பற்றிக் கூறிச் சென்றுவா' என்றார். இனிமையாக உளந்திறந்து பேசினார். பின் ஊர் வருவது பற்றி நண்பர்கட்கு எழுதினேன். இயன்ற அளவு வேலை செய்தாக வேண்டும்.

கலைஞரைக் கடத்திக் கொலைசெய்யும் முயற்சி சைதாப்பேட்டைத் தொகுதியைச் சார்ந்த கோட்டூர் என்னும் ஊரில் நிகழ்ந்ததாகச் செய்தி வந்தது. திடுக்கிட்டுப் போனேன். பேராயக்கட்சி வெறிநாய்க்கிடங்காக மாறியுள்ளது. தாயத்தின் 'தமிழ் உணர்ச்சி' நூற்சுருக்கத்தைப் படித்து மிக மகிழ்ந்தேன். என் நெஞ்சை நன்கு புரிந்துகொண்டிருக்கிறது. அதன் நெஞ்சில் கிளர் உணர்வு நிலைத்து வளர்ந்தால் உலகம் பயன்பெறும். பதினொரு மணிவரை துறையில் பாடக்குறிப்புக்கள் எடுத்தேன்.

*(15.2.67)*

◆

## 'எங்களைவிட்டு ஓடிவிடாதீர்கள்'

ஊரில் 17.2. மாலை இராணி கரிகாலன் குழு கலை நிகழ்ச்சியும் பொதுக்கூட்டமும் உளவென அறிக்கை வந்தது. யான் போவதற்கும் நிகழ்ச்சிக்கும் பொருத்தமாக உளது. பேசி நெஞ்சங்களை ஈர்க்கவேண்டும். பிற்பகல் ஊர்செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். மாலை தாயத்தை அழைத்து தேனியல் சோன்சு கட்டுரைத் தொடர்பில் யான் எடுத்த குறிப்புக்களைக் கொடுத்தேன். நாள் குறைவெண்ணிப் பாடத்தை வேகமாக நடத்தாது மெதுவாகவே நடத்துங்கள். எங்களை விட்டுவிட்டு ஓடிவிடாதீர்கள் என்றது.

*(16.2.67)*

◆

## ஊரில் தேர்தல் பொதுக்கூட்டம்

வெற்றிச்செய்தியொடு மீளவேண்டுமென்ற வேண்டுதல் விழைவோடு நண்பர்கள் பலர் வழியனுப்ப 16 இரவு கிளம்பினேன். தீபத்தில் சில கதைகளைப் படித்துச் சென்றேன். ஒருகதை நெல் கொள்முதலை மையமாக வைத்துப் பின்னப்பட்டிருந்தது. பல நாட்களாக அவ்வடிப்படையில் ஒருகதை எழுதலாமென்ற விருப்பு எனக்கிருக்கின்றது. புகைவண்டிப் பயணத்தில் நல்ல உறக்கம் வந்தது இம்முறையே. பயணிகள் சிலர் காமராசரின் விருதுநகர்த் தொகுதியில் நடக்கும் அட்டூழியங்கள் அளவில என்றும் அவர் வெற்றி பெறுவது ஐயமென்றும் பேசிவந்தனர். மேலும் தியாகராசர் (மதுரை) கல்லூரி மாணவர் இருவரை (சீனிவாசனுக்கு வேலை செய்யச் சென்றவர்) மாடியினின்று தூக்கிக் கீழே பேராயக் கட்சியினர் போட்டுவிட்டதாகவும் அவர்கட்கு வலிய காயங்கள் என்றும் வந்த நேற்றைய செய்தியைப் பற்றியும் பேசி வந்தனர். என்ன கொடுமை! திருச்சி கூடல் நிலையத்திற்கு அண்ணாமலை

வந்திருந்தார். புகைவண்டி நிலையத்தொடர்பான சிற்றுண்டியகத்தில் சிற்றுண்டியருந்தியபின் விடைபெற்று பேருந்து நிலையம் வந்தேன். பன்னிரண்டரைக்குத்தான் உந்தென அறிந்ததால் புகைவண்டியிலேயே ஊர்சென்றேன். தொலைவரி கொடுத்து என்னை அழைக்கலாமென இருந்ததாகக் கழகத்தார் சொல்லினர். என்னைக் கண்டதும் பேராயக்கட்சியினர்க்கு இருந்த நம்பிக்கை தளர்ந்தது. திருச்சி புகைவண்டி நிலையத்தில் வாங்கிய 'சிந்தனையாளர் தொல்காப்பியர்' என்ற நூலைப் படித்தேன். ஓர் அறிமுக நூலன்றிப் பிறிது சிறப்பில்லை. படித்தபின் அறையில் படுத்திருந்தேன். அப்போது யானிருப்பதை அறியாமல் அப்பா' சூரியனுக்கு ஓட்டுப்போட்டால் பள்ளன் பறையனெல்லாம் ஒன்று என்பார்கள்' என்று வீட்டில் பேசியது என் காதில் விழுந்தது. வந்தவுடன் நடராசன் வெற்றி பெற்றுவிடுவார் என்று சொன்ன அப்பா உள்ளுக்குள் என்னென்ன நினைவுகளையோ அடக்கி வைத்திருக்கின்றாரே என்பதையும் சாதி பற்றிய வெறிப்பிடிப்பு சிறிதும் தளர்ந்திலதே என்பதையும் எண்ணி வருந்தினேன். மாலையில் கூட்டமும் கலை நிகழ்ச்சியும், 'இராணி கரிகாலன் குழுவினரை அழைக்கத் திண்டுக்கல் சென்றிருந்த அண்ணன் அவர்கள் எங்கிருக்கிறார்களென்று தெரியவில்லை எனவறிதே மீண்டார். வெ.ந.மு., குளக்குடி குஞ்சு முதலானோர் வந்திருந்தனர். முகதுவும் இறுதியில் கலந்து கொண்டார். யானும் பேசினேன். பேசியபின் மறுநாள் பெருவளநல்லூர்க்குப் பேச அழைத்தனர். முள்ளாலில் பேசவேண்டி இருப்பதைச் சுட்டி அதன்பின் வரலாமென்றேன். இரவு உணவு அரங்கராசு வீட்டில். அவன் மணமுடித்து வந்ததன்பின் இன்றே அவன் வீட்டுள் செல்வதாக நினைவு. கழக வழி ஊர் ஒன்றுபட்டு முன்னேற்றமெய்தின் நன்றே. இரவு உறங்கற்குக்கூட போதிய விரிப்பு தலையணை இல்லாத நிலை வீட்டில். நெல் போட்டிருந்ததால் எழுந்த புகைவீச்சம் அகலாத அறையில் படுக்கை. நான்தான் எல்லாவற்றையும் வாங்கிப் போடவேண்டும். புழங்கற்குக் கூட நல்ல ஏனங்கள் இல. பன்முறை சொல்லியும் அப்பா வாங்கிப் போடவில்லை. பணத்தைப் பெற்று நான்தான் வாங்கிப் போடவேண்டும். பன்னிரண்டு மணிக்குமேல் படுத்தாலும் நல்ல உறக்கம் வாய்த்தது. திருவனந்தையில் ஓடிய உறக்கம் அங்கே கூடியது.

*(17.2.67)*

◆

## மைக்கேல்பட்டிக்குச் செல்லல்

காலை உண்டியின்பின் மாணிக்கத்தொடு மைக்கேல் பட்டிக்குக் கிளம்பினேன் சுப்பிரமணி உடல்நலங்குன்றியுள்ளதாகப்

பலரும் கூறவே பார்த்துவரக் கிளம்பினேன். வழியில் சிறுதையூர் மூர்த்தியைப் பார்த்துக் கழகநிலை பற்றி உரையாடிப் பதினொன்றரை மணிக்கு மைக்கேல்பட்டி வந்தேன். திருவரங்கத் தொகுதியில் இன்று வாக்குப்பதிவாகையால் வேட்பாளரின் முகவராக மணி திருக்காவலூரில் இருப்பதாகச் சொன்னார்கள். பின் மணியின் பெற்றோர்களின் வற்புறுத்தலால் உணவுமுடித்து திருக்காவலூர் சென்றோம். தமிழன் ஒவ்வொருவனுக்கும் தாத்தாவென வீரமாமுனிவர் தங்கியிருந்து ஒரு கோயில்கட்டி 'திருக்காவலூர்க்கலம்பகம்' என்றோர் நூல் எழுதற்கும் காரணமாக அமைந்த அவ்வூர் மண்ணில் நடக்கும்போதே ஒரு பெருமித உணர்வு எழுந்தது. அப்பகுதியில் இருக்கும் எத்துணைத் தமிழர்க்கு இவ்வுண்மை தெரியுமோ? வாக்குப்பதிவு நடக்குங்கால் தாழ்த்தப் பட்ட இளைஞர்கள் சிலர் (தி.க.) பண்பாடின்றி கழகத்தை ஏசி, வாய்க்கு வந்தபடி பேசினர். அதை யாரும் பொருட் படுத்த வில்லை. பண்பாட்டழிவை எண்ணி உளம் மறுகியது. யான் நெல்லைப் பகுதியில் கண்ட எழுச்சியை இப்பகுதியில் காண முடியவில்லை. எழுச்சிபெற வேண்டிய வாழ்வின் கடைக்கோடி யில் உழலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மடமையில் அழ்ந்திருப்பது வருத்தந்தந்தது...

## தேர்தல் பொதுக்கூட்டங்கள்

நண்பர்களின் வற்புறுத்தலான் மாலை 5 வரை திருக்காவலூரிலேயே இருந்து மீண்டோம். மீளுங்கால் யானும் மணியும் அவ்வூர்க் கிறித்துவச் சாமியாரைப் பார்த்து வீரமாமுனிவர்த் தொடர்பில் பேசலாமெனச் சென்றோம். ஆள் ஊரிலில்லையாம். மைக்கேல்பட்டி வந்து இராசனின் மகனைப் பார்த்துவிட்டு மணி அகத்தில் பலகாரம் அருந்தி மாந்துறை வந்தோம். விருந்தினரைச் சிறப்பாக அவர்கள் பேணியமுறை நினைவிற் சுழன்றுகொண்டே இருந்தது. எடுத்துச் சென்ற மிதிவண்டியில் விளக்கு வேலை செய்யாமையால் அதை மாந்துறையிலேயே விட்டுவிட்டு காரைக்கால்மேடு கழக நண்பர் மரியநாதன்வழி பெருவளநல்லூர்க் கூட்டத்திற்குச் சென்றேன். முள்ளால் கூட்டத்திற்குச் செல்ல வில்லை. பெருவள நல்லூர்க் கூட்டம் சிறப்பாக இருந்தது. திடுமென ஏற்பாடு செய்யப்பெற்ற அக்கூட்டத்தில், திருச்சி சமால் முகம்மது கல்லூரி மாணவர் சிலரும் பேசினர். செயபால் (காட்டூர்) பேசக்கற்றுக்கொண்டு வளர்ந்துள்ளமையறிந்து மகிழ்ந்தேன். இத்தேர்தலில் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலுமே மாணவர்கள் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றுகின்றார்கள், நான் பேசியபின் குளித்தலை முகியும் கலந்துகொண்டார். பின் அவரொடு பேசிய வாறே பூவாளூர்வழி ஊர் அடைந்தேன். முள்ளாலில் பேசுவதற்குப்

போதிய ஆட்களின்றி இடர்ப்பட நேர்ந்தமையைப் பின்னரே அறிந்தேன். பெருவளநல்லூர் நாராயணசாமியும் ஊர்க்கும் முள்ளாலுக்கும் என்னைத்தேடி இரண்டு மூன்று முறை வண்டியெடுத்து வந்தமையை அவரே சொன்னார். திட்டம் போட்டுப் பணியாற்றும்முறையை இப்பொழுதே வளர்த்துக் கொள்ளல் வேண்டும். சொன்னால் சொன்னதைச் செவ்வனே செய்தல் இன்றியமையாப் பழக்கம். இன்றும் உறங்க பன்னிரண்டரை மணி ஆனது.

(18.2.67)

◆

## அண்ணாவின் தேர்தல் விளக்கக் கூட்டம்

இன்று புள்ளம்பாடியில் அண்ணா கூட்டம். இராமநாதபுரம் வழியே செல்லலாமென இராசனையும் மணியையும் அழைத்திருந்தேன். கந்தசாமி தன் துணைவி, மகளொடு காட்டூர் வந்துள்ளதாகவும் என்னைப் பார்த்துவரச் சொன்னதாகவும் ஓர் ஆள் வந்தான். காட்டூர் சென்று கந்தசாமி, துணைவியாரொடு உரையாடிக் கொண்டிருந்தேன். குழந்தை கண்மணி இப்போது நன்றாயுள்ளது. உரையாடிக் கொண்டிருக்கும் போதே அன்பில் வந்துள்ளதாகவும் அழைப்பதாகவும் ஆள் வந்தது. கந்தசாமியொடு சென்றேன். பின் எல்லோரும் வண்டியில் இராமநாதபுரம் வந்து தெருத்தெருவாக வாக்காளர்களில் முதன்மையான சிலரைக் கண்டு வந்தோம். அப்பா ஊரிலில்லை. மேத்திரியாரைப் பார்த்தோம். அவர் அன்பிலிடம் இளவரசு வந்துவிட்டதால் இனிக் கவலைப்படவேண்டாம் அவரால் பல வாக்குகள் கிடைக்கும் என்றார். பின் காட்டூர் வந்தோம். பரமசிவம், மாவட்டத்தை உணவுக்கு மறைமுகமாக அழைத்துச் சென்றார். அவருடன் வந்த வேறுசிலர்க்குப் பக்கத்துக் கடையில் உணவு அளித்தோம். சென்ற மாவட்டம் நேரமாகியும் திரும்பவில்லையாத லால் பரமசிவம் வீட்டிற்கே வண்டியை விட்டோம். ஏற்கனவே மயக்கத்தில் வந்த அன்பிலுக்கு மேலும் விருந்துவைக்கவே அதிகக் கிறக்கமொடு வந்தார். கொத்தமங்கலத் தில் சில பகுதிகளைச் சுற்றியபின் திண்ணியம் கோமாகுடியைப் பார்க்க மாவட்டத்தை அனுப்பிவிட்டு வட்டப் பரமசிவத்தொடு கந்தசாமி, யான் புள்ளம்பாடி வந்தோம். பக்கத்திலுள்ள எல்லா நண்பர்களையும் பார்க்க வாய்ப்பிருந்தது. உரையாடி மகிழ்ந்தோம். ஆசிரியர் கந்தசாமியொடு அரவரசும் வந்திருந்தார். எல்லா நண்பர்களும் கூட்டத்தில் பேச வற்புறுத்தினர். புள்ளம்பாடி நண்பர்களும் பெயரைக் குறித்துக்கொடுத்துவிட்டனர். கழகக் கூட்டம் நடந்து

கொண்டிருக்கின்ற அதே நேர்ததில் அதே திடலின் வேறொரு பக்கத்தில் பேராயக் கட்சிக்காரனும் திடுமென ஒரே நாளில் காவலர் துணையொடு கூட்டம் போட்டு நான்கு பேரை வைத்துக்கொண்டு கூச்சல்போட்டுக் கொண்டிருந்தான். அண்ணா சரியாக 4 மணிக்கு வந்துவிட்டார். ஆதலால் யான் பேசவில்லை. அண்ணாவின் தேர்தல் விளக்கக் கடைசிக் கூட்டம் இது. அண்ணனின் முகமெல்லாம் கருத்துப் போயிருந்தது. ஓயாத வேலை. ஏறத்தாழ முக்கால்மணிநேரம் பேசினார். அண்ணா பேசிக்கொண்டிருக்கும்போதே பேராயக் கட்சிக்காரன் அவன் மேடையிலிருந்து காட்டுக்கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான். கழகத் தோழர்கள் பலர்க்குப் பெருஞ்சினம். விழியசைத்தால் எலும்பை எண்ணி விடுவார்கள். எனினும் அமைதியாய்க் கூட்டம் முடிந்தது. கூட்டத்தின் பின்னரும் பல நண்பர்களைப் பார்த்தேன். ஆசிரியர் கந்தன் தற்போது சங்கேந்தியில் தானுந்துணைவியும் பணியாற்றுவதாய்க் கூறினார். அருணா வெற்றிவாய்ப்பு உறுதி என்றார். புகைவண்டிவழி ஊர்வர ஏழரை மணி ஆனது. வீட்டில் உண்டு அரவரசொடு திருச்சி வந்தேன்.

*(19.2.67)*

◆

## வீடு வீடாய் தேர்தல் வேலை

நகர் மாப்பிள்ளை நேற்றே வந்திருந்தார். இன்று ஊர் சென்று தங்கையை அழைத்துவந்தார். மருமகள் உடல் வளம் பெற்றிருந்தது. தங்கைதான் மிகவும் இளைத்திருந்தது. அண்ணனைக் கண்டதும் அதற்கு அளவிலாப் பூரிப்பு. நண்பர் பொன்னையா (வழுதியூர்) தான் எம்மூர்த் தேர்தல் அதிகாரி. மாலையிலேயே வந்துவிட்டார். சின்னேரம் உரையாடியபின் வேண்டிய சில வசதிகளைச் செய்துதர ஏற்பாடு செய்தேன். மணியும் இராசனும் வந்தனர். மணியை வீட்டில் விட்டு இராசனை அழைத்துக்கொண்டு ஏறத்தாழ 15 பேர் ஒவ்வொரு வாக்காளரையும் சந்திக்க வீடு வீடாகச் சென்றோம். பகை நட்பின்றி எல்லா வாக்காளர்களின் வீடுகட்குஞ் சென்று பார்த்து வாக்கிடவேண்டினேன். மணி 11க்கு மேலாயிற்று. இந்த வேலைமுடிய. பின் எல்லோரும் பறைத்தெரு சென்றோம். 'பணம் 100 உருபா வாங்கியுள்ளதாகவும் எனினும் எல்லா வாக்குகளும் நமக்கே' என்றுஞ் சொன்னார்கள். அதோடு சின்னையன் 'அடுத்த தேர்தலில் நீங்கள்தான் போட்டியிடுவீர்கள் போட்டியிடவேண்டும்' என்று எல்லோர் முன்னிலையிலும் வேறுசிலர் கூறியதைப் போன்றே கூறினார். எம்.ஏ. முடித்தவுடன் முழுமூச்சாக அரசியலில் ஈடுபட்டிருந்தால் இத்தேர்தலிலேயே

போட்டியிடச் சொல்லும் ஒரு நிலையை உருவாக்கியிருக்கலாம். ஆனாலும் அரசியலில் யாரும் ஈடுபடலாம். கல்வித்துறையில் எல்லோரும் ஈடுபடல் இயலாது. அரசியலினும் கல்வித்துறை ஈடுபாட்டையே நெஞ்சம் விரும்புகின்றது. உணவு முடித்து உறங்குங்கால் மணி ஒன்றிருக்கும்.

*(20.2.67)*

◆

## வாக்குப்பதிவு 8.10க்கு தொடங்கியது

இன்று வாக்குப்பதிவு. 8.10க்குப் பதிவு தொடங்கியது. பல பகுதிகட்கும் சென்று வாக்கிடச் சொன்னேன். சுறுசுறுப்பாகப் பதிவு நடந்தது. எல்லோரும் நல்லமுறையில் வேலை செய்தனர். இன்றும் குருசாமி குடித்திருந்தான். கழகத்திற்கு வேலை செய்கின்ற பலரையும் விடக் குடிப்பழக்கம் அடிப்பழக்கம் ஆகியவற்றில் பேராயக் கட்சிக்கு வேலை செய்யும் சிலர் நல்லவர்களே! பன்னிரண்டேமுக்கால் பேருந்தில் கந்தசாமி குடும்பத்தோடு புறப்பட்டு மதிய உணவைத் திருச்சியில் கந்தசாமி வீட்டில் முடித்து மாலை விரைவு வண்டியில் கிளம்பத் திட்டம். 11 மணி அளவில் காட்டூரில் வாக்குப்பதிவு நடப்பதைக் காண நண்பர்களொடு கிளம்பினோம். விறுவிறுப்பாக நடந்தது. அறிவன் வந்திருந்தார்...

## திருவணந்தபுரம் திரும்பல்

திருச்சி நகர் நிலையத்தில் இறங்கி அறிவனும் யானும் 'பாரதிதாசன் கவிதைகள் முதற்றொகுதியைப் பல கடைகளில் கேட்டோம். இல்லை, விரைவு வண்டியில் எனக்கு விடை தந்து அறிவன் பிரிந்தார். வண்டி ஓடத் தொடங்கியது. என் எதிரில் அமர்ந்திருந்த பார்ப்பனர் ஒருவர் பேராயக் கட்சியின் வீழ்ச்சியைப் பெருமகிழ்வோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினார். ஆட்சி வீழ்ந்தால் பெரிய வழிபாடு நடத்திக் கொண்டாடப் போவதாகச் சொன்னார். எங்கள் பெட்டியிலேயே வேறு பகுதியிலும் பேராயக்கட்சி ஒழிய வேண்டுமெனப் பெரியவர் ஒருவர் பேசி வந்தார்.

*(21.2.67)*

◆

## கழகத்தின் வெற்றி

மொத்த இடங்களில் பாதிக்குமேல் கழகம் பெற்று விட்டது. அன்பில் தோல்வி ஓரளவு வருத்தந்தந்தது. அரியலூர்த் தோல்வி

தலைமைக் கழகத்திற்கு நல்ல பாடம். நல்லதோர் அமைதி யான புரட்சி நாட்டில் நிகழ்ந்து விட்டது. தமிழரசு அமையப் போகிறது. நம்மரசு, நல்லரசு என்பதை எண்ணி மகிழ்ந்தேன். உலகளாவி நிற்கும் தமிழினம் மகிழ்ந்து கூத்தாடும் இனிய செய்தியல்லவா!

(23.2.67)

◆

## கழகத்தின் தனிப்பெரும்பான்மை

கழகம் தனிப்பெரும்பான்மை பெறின் பிற கட்சிகளின் துணையின்றிக் கழகமே ஆட்சி அமைக்கும். அதற்குக் கூட்டணிக் கட்சிகளும் ஒத்துள்ளன என்று அண்ணா கூறினார். காமராசரின் தோல்வி உலக வானொலி நிலையங்கள் பலவற்றிலும் ஒலிபரப்பப் பட்டது. மாணவர்ப்படையின் ஊண் உறக்கமில்லா உழைப்பு வேள்வி ஈட்டித்தந்த ஈடிணையற்ற வெற்றிகள் பக்தவச்சலம் காமராசரின் தோல்விகள்! க.சு. என்னைப் பார்த்துக் கையைக் குலுக்கி வாழ்த்துக்கள் மொழிந்தார். நாக்கில் நரம்பின்றி மறைமுக மாகக் கழகத்தைத் திட்டியோரெல்லாம் என்னைப் பார்க்க நாணினர். சடசடவென ஆட்சி சரிந்தது. 'சார்' வீழ்ச்சி பற்றிப் பாரதி பாடிய பாடலை எனக்கு நினைவூட்டியது. பிற்பகல் முதல் மணி வகுப்பு. பேசவே தெம்பில்லை. நெஞ்சப் புகைச்சல். மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசவேண்டியிருந்தது. ஏறத்தாழ இரண்டு கிழமைகளாக ஓய்வு உறக்கமின்றி ஓடியாடி உழைத் தமையான் ஏற்பட்ட தளர்ச்சி. ஊரிலிருந்து வந்ததும் ஒவ்வொரு நாளும் நலங்குன்றி வரலை என்னால் உணரமுடிந்தது.

(24.2.67)

◆

## பத்மனாபர் கோயில்

சிற்றுண்டி முடித்துப் பத்மனாபர்க்கோயிலுக்குச் சென்றோம். இன்றுதான் முதன்முறையாக அக்கோயிலுள் நுழைந்தேன். உள்ளமைப்பு நன்றாக இருந்தது. நாங்கள் சென்ற நேரத்தில் வழிபாடு நடந்தது. சாமியின் தெற்கே தலை வைத்து, வடக்கே கால் நீட்டிக் கிடந்த பெரியகோலத்தைக் கண்டேன். மேலும் சில பகுதிகளைச் சுற்றிப் பார்த்துக் கிளம்பினோம். நல்ல தேங்காய் நெய்யை ஊற்றிக் கோயிலில் விளக்கெரிக்கிறார்கள். முகர்ந்து பார்த்தேன். கெழுமிய மணம்.

(25.2.67)

◆

## உடல்நலம் குன்றல்; மருத்துவமனையில் சேரல்

உள்ளத்தளர்ச்சியில் பேசற்குக் கூடக் களைப்பு. நெஞ்சப் புகைச்சல். தம்பி வீட்டிற்கு நண்பகல் சென்றேன். நிறை மஞ்சளிட்டு அவர் அன்னையும் தங்கையும் முன்பு குளித்துக் கொண்டிருந்தனர். தம்பி வெளியே வந்தார். உடல்நிலையைச் சொன்னேன். மருத்துவமனையில் பிற்பகல் சேரலாமென்றார். உணவு முடித்து அவரொடு சில பொருள்களை எடுத்துக்கொண்டு மருத்துவமனை சென்றேன். வழியில் வாந்தி எடுத்தேன். அதற்கு முறி மருந்தாகப் பாலிடாத் தேநீர் குடித்தாக வேண்டும் என்றார். முன்னர்த்தயங்கிப் பின்னர் குடித்தேன். சரியான களைப்பு. மருத்துவமனை சென்று படுக்கையிற் சேர்ந்தேன். வெளியே எவரிடமும் சொல்லவேண்டாமென மருத்துவரிடம் சொன்னேன். இரவு ஒரு பையன் வழி மூன்று பழங்கள் வாங்கிக் கொடுத் திருந்தார் மருத்துவர். ஒரு துண்டும் கொணர்ந்தார். மனைவிளக்கு மந்தமாக இருந்தது. அந்த ஒளியில் படிக்க முடியவில்லை. பொன்விலங்கைப் படிக்கத் தொடங்கினேன். இரவெல்லாம் 'ஐயோ... அப்பா' என்ற நோயாளிகளின் ஓய்வில்லாக் கூச்சல். சிலரின் நோய்க் கொடுமை தாங்கா முனகல். அறையினும் ஓரளவு நல்ல தூக்கமிருந்தது. கழிப்பறை படுமோசம். நோயில்லாதான் அந்தக் கழிப்பறையுட் செல்லின் நோய்பெறுவான் எனும் தகைத்து. நோயாளிகட்கு அதைப்பற்றிய பொறுப்பே இல்லை.

*(26.2.67)*

◆

## உடல் நலிவிலும் ஓர் கனவு

செவிலியர் எல்லா நோயாளிகளுடனும் அன்பொடு பழகினர். ஒரு நாளைக்கு இருமுறை வெப்பநிலை கண்டனர். மருத்துவமனையிற் கொடுத்த பொருள்களைப் பெரும்பாலும் யான் வாங்கிக் கொள்ளவில்லை. நோயாளிகளிடை இனம்புரியா ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. எனக்குப் பக்கத்திலிருந்த நோயாளி எனக்காகப் பால் வாங்கி வைத்தார். யான் உரொட்டி, பழம் கொடுத்தேன். எதிர்வரிசையில் பல்கலைக்கழகக் கல்லூரியில் பணியாற்றும் ஒரு தமிழர் வாதப்பிடிப்புக் காரணமாய் சேர்க்கப் பட்டிருந்தார். காலையில் தம்பி அப்பன்வழி நீர்வாங்கவும் புழங்கவும் இரு ஏனங்களைக் கொடுத்தனுப்பினார். நேற்றுமாலை வந்ததாகவும் காண இயலாது எதிர்வரிசைத் தமிழரிடம் பேசிச் சென்றதாகவும் அப்பன் சொன்னார். பொன்விலங்கைத் தொடர்ந்தேன். நண்பகலில் வீ வந்தார். பேராவிடம் சொல்லிவிடக் கூறினேன். சோசப்பு பிற்பகல் வந்தார். தமவே, முத்துச்சாமி

முதலியோர் மாலையில் வந்தனர். மருத்துவர்தான் தொலைபேசியில் அழைத்துச் சொன்னதாகக் கூறினர். மாலையில் அசொ, அறம், வீ வந்தனர். யான் ஆரஞ்சு வாங்கி வைத்திருந்தேன். சுவைத்தோம். ச.வே.சு.வும் மாலை வந்திருந்தார். பொன்விலங்கைப் பார்த்துவிட்டு ‘உன்னைப்போல் ஒரு தமிழாசிரியனின் கதை இது’ என்றார். என்னை நன்கு உணர்ந்துகொண்டுள்ளமை அறிந்தேன். ஏழரைமணி அளவில் மதனனும் தங்கராசும் வந்தனர். பழங்கள் வாங்கி வந்தனர். மருத்துவர்தான் அவர்களிடமும் சொல்லியிருக்கின்றார். ஒருவர்க்கும் தெரியக்கூடாதென்றெண்ணினேன். எல்லோர்க்கும் தெரிந்துவிட்டது. இரவு செய்தித்தாள்களோடு சோசப்பு வந்தார். அண்ணா கழகமே அமைச்சரவை அமைக்கும் என்று கூறியுள்ளார். இடையீடில்லாத ஒரே இருமல். நெஞ்சில் நல்ல புகைச்சல். செவிலியிடம் சென்று மருந்து வாங்கி அருந்தினேன். தீர்ந்தபாடில்லை. பின்னிரவிலேயே கண்ணயர முடிந்தது. ஏதோ ஓர் கனவு. மாணவி ஒருத்தி எனக்கு மாலையிடல் போலும், அம்மாலையைக் கழற்றி யான் அவட்கிடல் போலும் அமைந்த கனவு. தெளிவில்லை.

*(27.2.67)*

◆

## பெரியாரை அண்ணா சந்தித்தார்

இரண்டு சிறு பையன்கள் நோயாளிகளாய் உள்ளனர். இப்போது நோய் தெளிந்தநிலை. சிரித்து விளையாடிப் பல நோயாளிகளுடன் பழகி அவர்கட்கு வேண்டிய பொருள்களையெல்லாம் வாங்கித்தருகின்றனர். மருத்துவமனையின் செல்லப் பிள்ளைகளாக இருவரும் உள்ளனர். அப்பன் காலையில் வீட்டில் சுட்ட இட்டலி கொணர்ந்தார். பொடியும் வெண்ணெயும் அம்மா வைத்திருந்தது. மென்மையாய், சுவையாயிருந்தது. விரும்பி உண்டேன். என்பால் அன்பைப் பொழியும் நண்பர்க்கெல்லாம் யான் ஆற்றும் கைம்மாறு யாதோ? திண்டுக்கல் பகுதியிலிருந்து திருவனந்தபுரத்தில் குடியேறி நிலைத்த ஒரு தமிழர் நெஞ்சுவலி காரணமாக இன்று சேர்க்கப்பெற்றார். பெரிய மருத்துவர் வந்தார். குருதி சோதனைக்கும் புதிர்க்கதிர் எடுப்பிற்கும் ஏற்பாடு செய்தார். இரண்டும் எடுத்து முடிந்தது. உணவுண்ண வேண்டுமென்னும் வேட்கை மீதூர மனைசார்ந்த சிற்றுண்டியகஞ் சென்று உணவருந்தினேன். அந்நேரத்தில் வீயும்கசுவும் எனைத்தேடி வந்தனர். கசு சோறு அருந்தல் வேண்டாம். மருத்துவமனையில் தங்குவதைவிட அறையில் தங்கலே நன்று, மருத்துவமனையில் தங்கின் பிற நோய்கள் தொற்றவும் வாய்ப்புண்டு என்றார். இரவு,

தான் கஞ்சி வைத்துக்கொண்டு தருவதாகக் கூறினார். கோவைமணி தேர்தல் வெற்றிபற்றி எழுதியிருந்தார். நல்லதம்பியும் மருத்துவமனைவிட்டுக் கிளம்பலாமென்றார். தமவே, இராமசாமி, முத்துசாமி, இகோ, கோகு, இராய், சோமன், வவே, மமா முதலிய பல நண்பர்கள் வந்தனர். அசொ வழி அறிந்து யான் மருத்துவ மனையிலிருப்பதை அறியாத அகோகு, இம் முதலியவர்களிடம் சென்று இதுபற்றிக் கேட்டு எல்லோர்க்கும் பரப்பிய பின்னேதான் வந்ததாக இகோ சொன்னார். ஒருவர் எச்சமின்றிப் பலர்க்கும் தெரிந்துவிட்டது. ஞாயிறன்று கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி அண்ணாவைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தபின் அண்ணா ஆட்சி, அரசு, கட்சிகளின் தனித்தன்மைகளைச் சுட்டி ஆட்சியில் கட்சியினர் தலையிடக்கூடாது. பேராயக் கட்சியினர் விரும்பின் துணை அவைத்தலைவர் பொறுப்பை விட்டுக்கொடுக்க லாம்' எனப் பேசியமையைப் பாராட்டி இதழ்கள் எழுதியிருந்தன. ஞாயிறு மாலை வரலாறு காணா அளவில் கடற்கரையில் நடந்த மாபெரும் நன்றியறிவிப்புக் கூட்டத்தில் கூட்டணித்தலைவர்கள் பேசியதாகவும் செய்தி வந்தது. அண்ணா என்றே தலைப்புச் செய்தியில் தினமணியான் எழுதியிருந்தான். காலம் மாறுகிற தல்லவா? கோலம் மாறக்கேட்பானேன். 6 மணி அளவில் நண்பர் களொடு அறை வந்தேன். இரவில் தொலைவையும் தொல்லை யையும் பொருட்படுத்தாமல் க.சு. கஞ்சி வைத்துக் கொணர்ந்தார். நல்ல சுவை, நெஞ்சுசளிக்கு ஏற்ற உணவு. இந்த நேரத்தில் நமக்குக் கஞ்சி கொடுக்கவேண்டுமென்று அவர்க்கு என்ன வந்தது, துன்பத்தில் துணைநல்கும் அவர்போக்கு என்னை நெகிழ்வித்தது. சில நிலையில் அவர்போக்கை நினைத்து வருந்தியதுண்டு. மாணவர்கள் குறைபடுவதுண்டு. சூழ்ச்சிகளில் ஈடுபடுவர் என்றும் சிலர் சொன்னதுண்டு. என்னைப் பொறுத்த வரை நல்ல நிலையி லேயே நடந்து வருகின்றார். அண்ணா மாற்றுக்கட்சியினரை நாவலர் கலைஞருடன் கண்டு வாழ்த்து பெற்றமையறிந்து மகிழ்ந்த யான் அவர் திருச்சி சென்று பெரியாரைச் சந்தித்து வாழ்த்து பெற்றமையறிந்து மிக மகிழ்ந்தேன். இரவு ஒரே இருமல். உறக்கமில்லை. நெஞ்சப்புகைச்சல்.

*(28.2.67)*

◆

# மார்ச் - 1967

## மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பல்

*மாலையில் தம்பி வீட்டிற்கு அழைத்துச்சென்று ஊசி போட்டார். இருமலுக்கும் மருந்து தந்தார். தம்பியின் தாய் இருமல் போக நெஞ்சில் கட்டிக்கொண்டு படுக்கக் கம்பளி தருகிறேன் என்றனர். என்னிடம் உள்ளமை கூறி விடைபெற்றேன். வவே வழி கசு கஞ்சி 9 மணிக்குக் கொடுத்தனுப்பினார். இரவு நல்ல உறக்கம்.*

*(1.3.67)*

◆

## வாசவேச்வரம்

*கிருத்திகாவின் 'வாசவேச்வரம்' என்ற புதினத்தைப் படித்தேன். பார்ப்பன அக்கிரகார வாழ்வை மையமாக வைத்து நிகழ்கின்ற கதை. கதையின் தொடக்கமும் நடுவும் முடிவும் பாலுணர்ச்சித் தூண்டல்களையே பெரிதும் பேசுகின்றன. இறுதிப் பகுதியில்தான் ஓரளவு விறுவிறுப்பு உள்ளது. பாலுணர்ச்சியால் பண்பு பிறழும் போக்கைக் காட்டுவதுதான் புதுமை எனக் கருதியே பார்ப்பனப் பெண்ணாகிய கிருத்திகா இந்தப் புதினத்தைப் படைத்திருக்கவேண்டுமோ என எண்ண வேண்டியிருக்கிறது. பெரியபாட்டி பாத்திரப்படைப்பு நன்று. ஒருவன் மனைவியாய பார்ப்பனத்தி இன்னொருவனோடு கூடுவதையெல்லாங்கூறும் துணிவு பார்ப்பனப் பெண்ணுக்கு வந்துள்ளமை புரட்சிகரமானதே. பார்ப்பனர்கள் இதைப் படிப்பின்... பொரிவார்கள்.*

## மாணவர்கள் வருகை

*நண்பகலில் தமிழவன் ஏனோசு முதலியோர் நலம் உசாவி வந்தனர். பொறுமை என்பதற்கு பொறுதி என்ற சொல் வாசவேச்வரத்தில் கையாளப்பட்டிருந்தது. பொறுதி என்பது நாஞ்சில், நெல்லைப் பகுதியில் வழக்கில் உள்ளதாகவும் அறிந்தேன். மேலும் இளமுளையைத் (நாற்றை) 'தை' என நாஞ்சில் நாட்டார் வழங்குவதாகவும் கூறினர். தம்பி வீட்டில் ஊசி போட்டபின் முதுகலை இறுதி விழாவிற்காகத் துறை வந்தேன். வழியில்*

இலேமுவேல் பார்த்தான். நேற்று தமிழவனோடு பார்க்க வந்ததாகவும் அறை தெரியவில்லையென்றும் சொன்னான். விழியில் ஒளி குன்றியிருப்பதையும் கூறி நலம் உசாவினான். எனக்கு நிறை மகிழ்ச்சி எந்நேரமும் தவறுசெய்பவன் எவனும் இருக்க முடியாது. தீயவர்கள் நெஞ்சிலும் நல்ல நினைவுகள் முகிழ்ப்ப தில்லையா? நல்ல நினைவுகள் வளரவளர வேண்டாதவை விடைபெறல் இயற்கைதானே!

(2.3.67)

◆

## பொற்றைக்காடின் 'புள்ளிமான்'

காலையில் அசொ இட்டலி கொடுத்தனுப்பியிருந்தார். 'நண்பகல் என்ன கொடுத்தனுப்ப' என்று பணிப்பெண்வழி கேட்டிருந்தார். கசு நண்பகல் உணவு கொடுத்தனுப்புவார் அதனால் வேண்டாம் என்றேன். முன் அறிவிப்பின்றி திடுமென அன்பின் காரணமாய்க் கொடுத்தனுப்புகின்றனர். இந்த அன்பு மழையில் குளிக்குங்கால் பிறக்கின்ற இன்பத்தை என்னென்பது. அவர்கட்கெல்லாம் எவ்வாறு நன்றி பாராட்டுவது? இட்டலியும் சட்டணியும் சுவையாயிருந்தன. அண்ணாவின் 'வண்டிக்காரன் மகன்' என்ற நெடுங்கதையைக் காஞ்சி ஆண்டுமலரிற் படித்தேன். தாய்தந்தையர் ஏவலர்களாகப் பணியாற்றும் ஒரு வீட்டிலேயே முதலாளி நிலையில் சிறப்புச் செய்யப்படுகின்றான் மகன். இறுதியில் வண்டிக்காரனின் மகன் என்ற உண்மை தெரிகிறது. தகுதியால் நல்லவன் சாதியால் கெட்டவனாகிறான். இதைப் பேசுகிறது கதை. அப்பன் மொழிபெயர்த்துத் தந்திருந்த பொற்றைக்காடின் 'புள்ளிமான்' என்ற நெடுங்கதையைப் படித்தேன். மகனோடுள்ள இளமை விதவை ஆசிரியை ஒருத்தி அவள் தங்கை ஒருத்தி. முதலில் காதலிப்பதாக நடித்து விதவையின் எழிலை உறிஞ்சிய கதைத்தலைவனே பின் அவள் தங்கையையும் கவர்ந்து விளையாடுகிறான். இந்நிலையெண்ணி வருந்தும் ஆசிரியை இறுதியில் தன் விருப்பத்தின்படி தலைவனுக்குத் தெரியாமல் அவனாலேயே கொல்லப்படுகிறாள். கதையின் இறுதிப்பகுதியில் விதவையின் நெஞ்சஓலைகள் நன்கு வரைந்து காட்டப்படுகின்றன. கதையாசிரியரின் நிலையினின்று கவினாக மாறிப்பேசும் பொற்றைக் காட்டையே பல இடங்களில் பார்க்க முடிகின்றது. அழகாக இயற்கை வண்ணனைகள் சில கதைக்கு மிகையாகவே உள்ளன.

(3.3.67)

◆

## மாலினி

இரவு சண்முக சுந்தரத்தின் 'மாலினி' என்ற கதையைப் (புதினம்) படித்தேன். அவரின் படைப்புக்களிலேயே மட்டமானது.

*(4.3.67)*

◆

## அப்பாவும் புருசனும்

நாறும்பூ தன் கதையொன்று (ஆடு) தினமணி கதிரில் நட்சத்திரக்கதையாக வந்துள்ளது என்றார். கலைமகளில் வந்த 'அப்பாவும் புருசனும்' என்ற அவர் கதை முன்பு வெளியான கதைகளினும் நல்லமொழிநடை உடையதாயிருந்தது என்றேன்.

*(5.3.67)*

◆

## எது இசை

அண்ணா ஆர்.கே.சண்முகம் முதலியவர்களின் கட்டுரை களும் பாவேந்தரின் பாடலும் இணைந்த தமிழிசை தொடர்பான 'எதுஇசை' எனும் நூலைப் படித்தேன். அண்ணா வின் கட்டுரை அரிய கருத்து விளக்கமாக இருந்தது. மாலையில் துறையில் பேரா வைப் பார்த்து உடல்நிலை கூறினேன். நிறைய முட்டை சாப்பிடச் சொன்னதோடு காலையில் உலாவல் வேண்டும் என்றார். கோடையில் ஒரு மாதம் நல்ல ஓய்வெடுத்துக் கொள் என்றார்.

*(7.3.67)*

◆

## நீடாமங்கலத்தில் பெண் பார்க்கிறார்கள்

கலியன் பாவேந்தர் பாடல்கள் முதற்றொகுதியை வாங்கி விடுத்துள்ளதாகவும் எனக்கு நீடாமங்கலத்தில் பெண் பார்ப்பதாக முத்து வைரவன் சொன்னதாகவும் எழுதியிருந்தான்.

*(8.3.67)*

◆

## கொட்டடா பறை

நேற்று தேர்தல் வெற்றித்தொடர்பாக ஆறு எண்சீர் விருத்தங்களடங்கிய 'கொட்டடா பறை' என்றோர் பாடல் எழுதி முரசொலிக்கு விடுத்தேன்.

*(9.3.67)*

◆

## குருதிப்பூ

ஓர் அமெரிக்க எழுத்தாளியின் 'குருதிப்பூ' எனக் க.நா.சு மொழிபெயர்த்த கதைத்தொகுப்பின் முதல் கதையான 'அவள்' படித்தேன். சிறப்பாக இருந்தது. கதைத்தலைவியின் பாத்திரப் படைப்பு நன்று. கதைத்தலைவி தன் கணவன் தன் தோழி ஒருத்தியொடு கள்ளக்காதல் கொண்டிருப்பதை அறிகிறாள். நெஞ்சம் தளர்ந்துவிடுகிறாள். தலைவன் கள்ளக்காதலியொடு படைமுனைக்குப் போகிறான். அங்கே இருவரும் இன்பதுன்பங் களில் இணைந்து நிற்கின்றனர். உழைப்பும் உறுதியுமுடைய கதைத்தலைவி கணவனைப் பிரிந்த துன்பம் சுமந்து வாழ்ந்து வருகிறாள். பல தொல்லைகட்கிடையில் சூல்கொண்ட தன் கள்ளக்காதலியொடு ஊர் திரும்புகிறான் தலைவன். இறுதியில் தன் தோழியைத் தலைவி கொலை செய்கிறாள். உசாவல் நடக்கிறது. தலைவி குற்றமற்றவளாகிறாள். இக்கதையைப் படித்தபோது மூன்று நான்கு மாதங்களின் முன் தஞ்சைப்பகுதியைச் சார்ந்த ஒரு பெண் தன் கணவன் கள்ளநட்பு கொண்டிருந்தமைக்காகத் தன் கணவனையே கொலைசெய்த செய்தி நினைவில் எழுந்தது. அத்தகைய வீறுமிகு மகளிர் இற்றை உலகிற்குத் தேவைதான். தொகுப்பில் வேறு சில கதைகளையும் படித்தேன். சிறப்பாயில்லை.

(10.3.67)

◆

## இருட்டின்றே ஆத்மாவு

மாலையில் தம்பியொடு துறைவந்து 6 மணி அளவில் 'இருளில் ஓர் இதயம்' (இருட்டின்றே ஆத்மாவு) மலையாளப் படம் பார்த்தேன். தம்பி சிலவற்றை விளக்கிச் சொன்னார். படம் மலையாள நாட்டை, பழக்கவழக்கங்களைக் கண்முன் நிறுத்தியது. வேலாயுதன் என்ற குழந்தை மனங்கொண்ட, மற்றவர்கள் பைத்தியக்காரனாகக் கருதும் பாத்திரப்படைப்பு நன்று. பிறரால் எளிதில் படைக்க இயலாத பாத்திரத்தைக் கதையாசிரியர் எம்.டி.வாசுதேவன் நாயர் நன்கு படைத்துள்ளார். மூலக்கதையின் ஆசிரியரே திரைக்கதையில் சில நல்ல மாற்றங்களைப் புகுத்தி அருமையாக உரையாடல் எழுதியுள்ளார். நடிப்பு, ஒளிப்பதிவு, இயக்குதல் முதலிய பல நிலைகளில் படம் அருமை. இப்படத்தைப் பார்த்தவுடன் தமிழ்த்திரையின் அருவருக்கத்தக்க ஆடம்பரப் போக்கும் பாவைவிளக்கை அகிலனே கொலை செய்தமையும் நினைவில் பட்டன. மலையாளத்திரை நல்ல திசையில் நடையிடல் போற்றத்தக்கது.

(11.3.67)

◆

## பொன்விலங்கைப் படித்து முடித்தேன்

மாலையில் அப்பன் வந்தார். இருவரும் புகைவண்டி நிலையம் சென்றோம். அங்குள்ள உணவு விடுதியிலேயே இரவுணவை முடித்துத் 'தாமரை' இதழை வாங்கிக்கொண்டு அண்மைப் பூங்காவில் அமர்ந்து தாமரையில் வந்த கதை, கட்டுரைகளைப் படித்தவாறே உரையாடிக் கொண்டிருந்தோம். பொன்விலங்கைப்பற்றி எழில்முதல்வன் எழுதியிருந்த கட்டுரை திறன் தேர்வதினும் புகழ்பாடுவதாகவே தோன்றியது. இன்னும் நல்லமுறையில் திறனாய்ந்திருக்கலாம். 'சட்டி சுட்டது' பற்றிய மா.பா.குருசாமியின் கட்டுரை தேவலாம். பொதுவில் இதழ் சிறப்பில்லை. அடுத்த இதழ் பாவேந்தர் சிறப்பிதழாக வருவதாய் விளம்பரம் செய்திருந்தார்கள். அறை வந்து பொன்விலங்கை முடித்தேன். இறுதிக் களங்களில் நின்றபோது நெஞ்சம் கரைந்தது. கண்ணீர் உகுத்தது.

*(12.3.67)*

◆

## ஏழையர் தாமிக நல்லவர்

தென்மொழி, தமிழ்ச்சிட்டுக் கட்டு வந்தது. யான் ஊகித்ததற்கேற்ப என் 'ஏழையர் தாமிக நல்லவர்' என்ற பாடல் பாட்டரங்கில் இடம்பெற்றிருந்தது. ஆசிரியவுரை தேர்தல் பற்றியது. பேராயக் கட்சியின் தோல்வி தோல்வியன்றெனவும் கழகத்தின் வெற்றி வெற்றியன்றெனவும் எழுதியிருந்தார். எப்படியாவது அமைதி கூறி ஆறுதலடையட்டும். தென்மொழிக்கெழுதுவதை நிறுத்திவிடலாமா என நினைத்தேன். நண்பர்கள் சிலர் தென்மொழியையே வாங்க வேண்டாம் என்றனர். தனியொருவரின் கேட்பாரற்ற பொருத்தமில் போக்கிற்காகத் தனித்தமிழ் நல்இதழைப் புறக்கணிக்கக் கூடாது என்றேன். வீ என் பாடலைப் பார்த்துவிட்டு இதுவரை வெளியான பாடல்களை நூலாக வெளியிடலாம் என்றார். முன்பே சில நண்பரும் இக்கருத்தை வெளியிட்டனர். மாலையில் க.சு., வீ ஆகியோரை முன்பே சொல்லியாங்கு (கழக வெற்றிக்காக) 'இருட்டின்றே ஆத்மாவு' படத்திற்கு அழைத்துச் சென்றேன். முன்பு புரியாத சில நுணுக்கங்களெல்லாம்புரிந்தன. பல பகுதிகள் சத்தியசித்ரேயொடு போட்டியிட்டன. வேலாயுதன் (தலைவன்) அம்முக்குட்டியை நெஞ்சார விரும்புகிறான் என்பதும் புலப்பட்டது.

*(14.3.67)*

◆

## புதுநெறி காட்டிய பாரதி

ஆர்.கே.கண்ணனின் 'புதுநெறி காட்டிய பாரதி' என்ற நூலைப் படித்தேன். அருமையான வரலாற்றுத் திறனாய்வு நூல், யான் பாப்பா பாட்டுத் தொடர்பாய்க் குறிப்பிட நினைத்துள்ள கருத்தை ஆசிரியர் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார். திறனாய்வை யும் இலக்கியம் போல் எழுதலாம் என்பதற்கு இந்நூலோர் எடுத்துக்காட்டு. ஒரு படி வாங்கவேண்டும்.

*(16.3.67)*

◆

## 'வரப்பிரசாதம்'

அழகிரிசாமியின் 'வரப்பிரசாதம்' என்ற கதைத் தொகுப்பைப் படித்தேன். புதிதாகத் தமிழ்த்துறை நூலகத்திற்கு வந்துள்ளது. ச.வே.சு. கொடுத்தார். பல கதைகள் ஏற்கனவே தீபம், கல்கி இதழ்களில் படித்தவை. 'விட்ட குறையைத் தொட்டகுறை' என்ற ஒரு கதையை மீண்டும் படித்தேன். தான் விரும்புகின்ற ஒருவன் தான் உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த காதலுணர்வைப் புரியாமல் வேறொருத்தியைத் திருமணம் செய்துகொள்ளப் போவதை அவன் வாயிலாகவே அறிகின்ற ஒரு பெண்ணின் அவல உணர்வுகளை நறுக்குத்தெறித்தாற்போல் காட்டுகிறது கதை. இக்கதையைப் படித்தபோது காசி அண்ணாமலை தன் தங்கை பற்றிச் சொல்லிய செய்தி நினைவிற்பட்டது. நெடுங்காலமாக அந்நிகழ்ச்சியை மையமாக வைத்து ஒருகதை எழுதவேண்டும் என்ற வேட்கை உள்ளது. உள்ளூரப் புகைகின்ற ஊமைக்காதற் பெண்மையைப் படம்பிடித்துக் காட்டவேண்டும்.

*(19.3.67)*

◆

## இரகுநாதனின் 'இலக்கிய விமர்சனம்'

பிற்பகலில் இரகுநாதனின் 'இலக்கிய விமர்சனம்' என்ற நூலைப் படித்து முடித்தேன். நல்ல நூல். ஆசிரியன் ஏனோதானோ என்றெழுதாது எண்ணிப் பார்த்து எழுதியிருக்கிறான். இசைப்புலவன் பீத்தோவனுக்குக் காது கேளாது என்ற கருத்தையும் தால்சுதாய் தன் 'போரும் அமைதியும் எழுதப் பல ஆண்டுகள் ஆயின என்பதையும் இந்நூல் வாயிலாகவே அறிய முடிந்தது. பாட்டிற்கு யாப்பின் இன்றியமையாமையை ஆசிரியர் வலியுறுத்துவதோடு 'வசனகவிதை'யைச் சாடுகிறார்.

*(20.3.67)*

◆

## மணமகன் கோலத்தில் தற்கொலையான இளைஞன்

செய்தித்தாளில் வந்த ஒரு செய்தியைக் கண்டு நெஞ்சு நெகிழ்ந்தது. மதுரைப் பகுதியைச் சார்ந்த 25 அகவை எய்திய காளை ஒருவன் தனக்கு மணமாகமாட்டேன் என்கிறதே என்ற துயரால் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டானாம். இறந்ததினும் இறந்தமுறை உருக்கத்தக்கது. தூக்கிட்டுக் கொள்ளுமுன் மணமகனைப் போல புதிய உடைகளை அணிந்து தன்னை மணமகன் கோலத்தில் கண்டு அக்கோலத்தோடேயே இறப்பு மங்கையொடு இன்துயில் கொண்டானாம். கற்பனை நெஞ்சம் வாய்ந்தவன் போலும்! இச்செய்தி பொன்விலங்கின் இறுதியில் மோகினியின் மீளாத்துயிலை நினைவுபடுத்தியது. வாழ்வதற்குத்தான் இந்த மாந்தன் எத்தனை உணர்வுகளோடு மாந்தர்களோடு போராட வேண்டியிருக்கிறது. விலங்கிலிருந்து வந்த இந்த மாந்தனிடம் எத்தனையோ விலங்குணர்வுகள் தங்கி அவனையும் விலங்காக்கிப் பல் விலங்குகள் போட்டுவிடுகின்றன.

*(21.3.67)*

◆

## கோவளத்தில் நல்ல வெயில்; குடை காப்பாற்றியது

கோவளத்தில் அருந்துவதற்குச் சில தின்பண்டங்கள் வாங்கிக்கொண்டு உந்தேறினோம். கோவளம் சேர்ந்தபோது நல்ல வெயில். குடை காப்பாற்றியது, சில பகுதிகளைச் சுற்றிப் பார்த்தோம். முன்பிருந்ததை விடக் குன்றுகளில் ஏற வழியமைத் திருக்கின்றனர். குன்றுச்சியிலிருந்த வீட்டைப் புதுப்பிக்கும் வேலை முடிந்து வாடகைக்கு விடுகின்றனர். சென்று அறை வாடகை கேட்டோம். ஒரு நாட்கு ஒரு படுக்கை உள்ள அறைக்கு 50 உருபா. இரண்டு படுக்கை உள்ள அறைக்கு 60 உருபா. ஓர் ஆளுக்கு உணவிற்கு 11½ உருபா என்றனர். இந்தியாவில்தான் இருக்கின் றோமா என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. வசதியுள்ளவர்கள் தேனிலவு கொண்டாட வரலாம் என எண்ணினேன். குன்றில் ஏறும்போது எதிரில் ஓர் இணை வந்தது. ஆடவர் அதிகம் அகவை யானவர். அப்பெண் எங்களைக் காணாது தன்னை மறைத்துக் கொண்டு சென்றாள். தங்கப்பன் அப்பெண்ணின் போக்கையும் அவள் கழுத்தில் ஏதுமில்லாமையை யும் சுட்டி இவர்கள் கணவன் மனைவியரல்லர் என்றார். ஏன் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறீர். ஒருவேளை காதலர்களா யிருக்கலாம் என்றேன். பின் தின்பண்டமருந்தி குன்றுச்சியில் சிறிது ஓய்வெடுத்தபின் செம்படவர்கள் மீன்பிடிப்பதை அரைமணி நேரத்திற்குமேல் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒருவன் தூண்டிலில் மட்டும்

அடிக்கடி மீன்கள் விழுந்தன. ஐந்தாறு மீன்களைப் பிடித்து விட்டான். நீளமான மீன்கள். ஒவ்வொன்றும் நான்கணா விற்குமாம். திடுமென வந்து தூண்டிற் போட்ட ஒருவன் நெடுநேரத்தின்பின் கிடைத்த ஒரு மீனொடு மகிழ்ச்சியெய்திய வனாய்க் கரையேறிவிட்டான். மெய்ப்பை அணிந்துகொண்டு தூண்டில் வீசிய வேறொரு காளை கடலில் உள்ள மீனைப் பிடிப்பதைவிட அண்மையில் கரையில் நின்ற ஒரு செம்படவப் பெண்மீன் மீதே வலை வீசுவதில் குறியாக இருந்தான். முறைப்பெண்ணோ மனைவியோ தெரியவில்லை. இத்தனைப்பேர் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே என்ற எண்ணமுமில்லை. கடலில் தூண்டிலை வீசுவதன்முன் இவளைப் பார்த்து ஒருமுறை வீசி விளையாடுவது. அவளும் அவ்விளையாட்டை விரும்பி ஏற்றுக்கொள்ளும் முறையில் இளநகை அரும்பிக்கொண்டே இருந்தாள். கடற்கரையில் துள்ளி எழுந்து விழுந்து அலைகின்ற அலைகளோடு போட்டிபோடுகின்ற நிலையில் அவ்வுள்ளங் களிலும் உயிர்ப்பியக்கம். மகிழ்ச்சித் துடிப்பு அலைமோதிக் கொண்டுதான் இருக்கின்றன. செல்வத்தில் என்ன இருக்கிறது? உள்ளத்தில் அல்லவா வாழ்க்கையின் செழிப்பும் வறுமையும் இருக் கின்றன? கரையிலிருந்து ஊர்வந்து 2¼ மணிக்கு உந்தேறினோம். எங்களொடு அவ்வுந்திலேயே குன்றில் கண்ட இணையும் பயணஞ்செய்தது. கிழக்குக் கோட்டை வந்ததும் அப்பெண் மட்டும் எங்களின்பின் இறங்கிச் சென்றாள். ஆண் இறங்கவில்லை. இதைச் சுட்டிக்காட்டி 'நான் சொன்னது சரிதானே' என்றார் தங்கப்பன். அவள் நல்ல நடத்தையள் அல்லள் என்பது அவர் கருத்து. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. புரிந்துகொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன போலும்!

(22.3.67)

◆

## காலக்கொடுங்குதிரை

யாரைக் கேட்டுக்கொண்டு இந்தக் காலக்கொடுங்குதிரை ஓடுகிறது? "அடே, மனிதப்பதரே! என் பின்னே நீதான் நடந்தாக வேண்டும். நீ தூங்குகிறாயா? நன்றாகத் தூங்கு. எனக்கென்ன? என்பின்னே தாம் எல்லாரும் ஓடிவரவேண்டுமே. தவிர நான் யார் பின்னேயும் ஓடமாட்டேன். செவிப்பறையில் தேனிசை விழாதா என நான் காத்திருக்கமாட்டேன். படம் தொடங்காதா தொடங்காதா என வேட்கைவெறியில் நெஞ்சைத் தீட்டிக் காத்துக் கொண்டிருப்பவன் நீயல்லவா? அதுவும் எனக்காக அல்லவா காத்திருக்கிறாய். எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிற உணர்ச்சிப்

புழுவே! உனக்காக நான் என்றாவது தயங்கி நின்ற காற்சுவட்டைக் காட்ட முடியுமா? என்மேல் நீ ஏறிக்கொள். தூக்கிச் செல்கிறேன். இன்பக் கேணியில் குளித்து மகிழலாம். தூங்குகின்ற உன்னை எழுப்ப வருவேன் என்று எண்ணுகின்றாயா? எத்தனையோ பேர் எனக்காகக் காத்திருக்கிறார்கள். ஏ சோம்பேறியே! ஆளைவிடு" எனக் காலக்குதிரை கணவிரைவில் பறந்துவிட்டது. 'தூங்கி எழுந்து நெடடுயிர்ப்போடு விழிகளைச் சிறிது சிறிதாகத் திறந்து திரும்பிப் பார்க்கிறேன். நெஞ்சம் புகைகிறது. அழுகைப்புகைச்சல். கண்களில் நீர் இல்லை. கண்ணீர் மட்டுமா துன்பத்தைக் காட்டும்? மரவேர் கண்ணுக்குத் தெரிகிறதா? அது வளர வளர மண்ணைத் துளைத்து உள்ளுக்குள்ளேயே புதைந்து போகிறதல்லவா? நெஞ்சுக்குள்ளேயே அரித்துக் கொண்டிருக்கிற துயரமுகையை யாரிடம் சொல்வேன். உறக்க விழிப்பின்பின் ஓரிரு கனவுத் தடங்கள் தெளிவில்லாத ீறல்களாய்த் தட்டுப்பட்டு நழுவுகின்றன. நழுவும் அக்கீறல்களைப் பிடித்திழுத்து ஒரு வடிவம் கொடுக்க விரும்புகிறேன்...

## திறையச் செல்லம் – ஆய்வுரை

25.3.67 அன்று அ.கு.ஆதித்தரின் 'திறையச் செல்லத்தைத் திறன் ஆய்ந்து சவேசுவிடம் கொடுத்தேன். அத்திறனாய்வில் குறிப்பிட்டவை.

1) நூலில் கம்பநாடனின் ஓசை ஒழுக்கையும் ஓட்டத்தையும் பரவலாகக் காணமுடிகிறது. (124, 320...) குறட்கருத்து மேற்கோட் பகுதிகளும் (134, 146, 209, 238, 288...) புறத்திணைத்துறைகளைப் பொருத்திக் காட்டும் இடங்களும் (கொற்றவள்ளை 353; மாராயம் 355, மழபுலவஞ்சி 373...) சிறப்பாயுள. கிரேக்க நாட்டு வண்ணனை, எஃகன் பாரிசன் போர், துறைப்போர்ப்பகுதிகள் காப்பிய எழிலுடையன.

2) கற்கூளியன், எஃகன், கிள்ளை திண்டிறன், தத்தை, எல்லி, மாணவன், செல்லம் போன்ற பெயராக்கங்கள் நன்று. யூலிகன், லாமிதன், லீதா போன்ற பெயர்களை மாற்றியிருக்கலாம்.

3) 'வெள்ளை நிறப்பால் தயிர் மோர் பழகுகிற...' (151)

'விடை நடையின் எடுப்படையா...' (154) எனவரும் குலத்தோடொட்டிய உவமைகள் நன்று.

4) மார்புறு புண்ணை வாகை மலராய் (382) நினைப்பதும் விழுப்புண் பெற்றார் மிகற்கண்டு விழுந்த பிணங்கள் துள்ளிக் குதிக்கும் கற்பனையும் நன்று.

5) தன்னையே அழகு என்று தனித்தனி தருக்குக் கொண்டு மன்னிய தெய்வமாதர் விலகினாரல்லர், பெண்மை! (161) பொருள் வலிவோடு பெண்மை என்ற சொல்லாட்சி விழுந்துள்ளது.

6) பொருள், அதைப் புலப்படுத்தும் முறை ஆகிய இரண்டிலும் ஏனைய யாப்புகளில் அமைந்த பகுதிகள் சிறப்பதைப் போல உரைநடைச் செய்யுளில் அமைந்துள்ள பகுதி சிறக்க வில்லை. இப்பகுதி கதையோடு அதிகத் தொடர்பு இல்லாதது போறற்றோன்றுவதில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கலாம், இடையில் வரும் ஆங்கிலப் பெயர்க்குறிப்புக்களை அடிக்குறிப்பாக வோ பிற்பகுதியிலோ தரலாம்.

8) 'ஞானமிளர்வா'வையமெலாம் வாழ்த்த வானளாவு புகழ் நிலைக்கச் செய்வேன்' (167) தொடரமைப்பில் பயனிலை இல்லை.

9) சுபித்தர் அவற்கொரு <u>சுகன்னி</u> சேர்த்தனர் (80) எபேத்தி என்னக் கிரேக்கர்கள் போற்ற (80) அடிக்கோடிட்ட சொற்கட்குப் பொருள் விளங்கவில்லை.

10) 66ஆம் பாடலொன்றே சிறைமீட்கும் வினையைக் குறிக்கின்றது. சிறிது விளக்கமாயிருந்திருக்கலாம். மேலும் அப்பாடலில் வரும் 'ஒன்றிழந்து தாம் ஒன்று பெற்றார் என வந்தார்' எனும் உவமை பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

11) 75 ஆம் பாடல் (ஆங்கிலம்) தேவையன்று. அதை 285ஆம் பாடல் அமைப்பில் கூறியிருக்கலாம்.

12) 203ஆம் பாடற் கருத்தைச் சற்று விரித்திருக்கலாம்.

13) செல்லம் மருது பாரிசனோடு கிளம்பி (246) நார் உறுபூ என அவனொடு நயந்து (253) வாழ்வதாகக் கூறும்பகுதியின் இடையில் சிறு மாற்றமும் விரிவும் இருப்பின் நன்று.

14) நல்ல தமிழில் பாடும் பாவலர் சிங்காரம், சிருங்காரம், சரசம், லீலை, லில்லி, ஆசனம், பிரமை, உபாயம், நித்திரை, லக்கினம், லக்கம் போன்ற சொற்களை நீக்கியிருக்கலாம்.

15) நூலின் சில பகுதிகள் அப்படியே மொழிபெயர்ப்பு போலவும் சிலபகுதிகள் தமிழ்ப் பண்பைத் தழுவி இயல்வன போலவும் தோற்றுகின்றன.

(31.3.67)

◆

# ஏப்பிரல் - 1967

## உணர்வைத் தொட்ட மூன்று நூல்கள்

இலங்கை கணேசலிங்கனின் 'சடங்கு' மகரிசியின் 'மண்ணின் மாண்பு', கேசவதேவின் 'அண்டை வீட்டார்' கல்யாண சுந்தரத்தின் 'இருபது வருசங்கள்' எம்.வி.வெங்கட்ராமின் 'வேள்வித்தீ' முதலிய பல நூல்களைப் படித்தேன். பின் மூன்று நூல்களும் உணர்வைத் தொட்டன. அண்டை வீட்டாரில் வருகின்ற சின்ன முதலாளிச்சி சுமதி, வேள்வித்தீயின் கனவுத் தலைவி கௌசலை (கணவனின் பரத்தமையறிந்து குழந்தையொடு குளத்தில் விழுந்திறப்பவள்) இரு பது வருசங்களின் கேசவராவ் ஆகியோர் நினைவில் நிற்கின்றனர்.

(9.4.67)

◆

## பார்வைத் தீ

நின்றநிலை, விழிபார்த்த பார்வை, இதழ் மலர்ந்து அவிழ்ந்து ஒளிர்ந்த போக்கு... என்னென்பேன் சிநேகிதியில் 'பஞ்சுப் பொதியைப் போன்றிருந்த என் நெஞ்சில் எங்கிருந்தோ வந்து ஒரு நெருப்புப்பொறி விழுந்துவிட்டது. ஐயோ பற்றிக்கொண்டு எரிகிறதே என்செய்வேன்." என்று கதைத்தலைவியின் தோற் றத்தைக் கண்டு தலைவன் புலம்புகின்றானே அது எத்துணைப் பொருண்மையுடையது! எல்லா அழகும் எல்லா உறுப்புக்களிலும் திரண்டு நின்று உன்னை வீழ்த்தியே தீருவேன். என்னைத்தப்பி எங்கே போவாய்' என்று கேட்பது போலக் கொலைக்காரி நின்று கொண்டிருந்தாள். பார்வைத்தீயின் வெம்மையைத் தாங்கமுடியா மல் துறைக்கு ஓடி வந்தேன். வந்தும் அவ்வெம்மை தணியவில்லை. உள்ளத்திலிருந்த ஏதோ ஒன்று எங்கோ ஓடிவிட்டதைப் போன்ற ஓர் உணர்வு, படிப்படியாகச் சூடு தணிந்தது.

'தூண்டில் புழுவினைப்போல் - வெளியே
சுடர்விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடி'

(10.4.67)

◆

# சூலை - 1967

## அண்ணாவின் அறிவுக்கூர்மை

*11.4 முதல் 14, 15 வரை அண்ணாவின் தில்லிப் பயணமும் தில்லியில் அவர்பெற்ற சிறப்பும் பற்றிய செய்திகள் வந்தன. தமிழகம் தவமிருந்து பெற்ற தலைமகனாய அண்ணனின் ஆற்றலை இந்தியத் துணைக்கண்டம் உணர்ந்து வரும் நிலைகளில் இது ஒரு குறிப்பிடத்தக்க கட்டம், உலகம் விரைவில் உணரும். காரிருளா ஞாயிற்றின் ஒளியைப் போக்கும்? செய்தித்தாள்களில் எல்லாம் முதலமைச்சர்களிலேயே அண்ணா ஒரு மறவராகத் திகழ்ந்தார். (Hero) அரசியல் அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தினார். தங்குதடையின்றி வினாக்கட்கு விடையிறுத்தமுறை வியப்பாயிருந்தது என்றெல்லாம் எழுதின. தென்னகத்தமிழர்கள் தொடர்பான 17க்கு மேற்பட்ட கழகங்கள் கூடி அண்ணாவிற்கு வரவேற்பளித்தன. இதுவரை பிறர்க்களித்திராப் பெருமை. எதிர்க்கட்சி முதலமைச்சர்கட்குத் தில்லியில் கொடுத்த வரவேற்பிலும் பிறர் வியக்கப் பேசியிருக்கிறார். எங்கிருந்தாலும் ஒளிரும் கதிர் அவன். எதிர்காலத்தில் இந்திய ஆளுகை எதிர்க்கட்சிக்காரர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டால் அண்ணாவைப் பிறர் அழைத்து 'வழிகாட்டுக' என வேண்டும் நிலை எழலாம். நாளை, அண்ணன் தலைமை அமைச்சராகிறாரோ இல்லையோ நாடு குழப்பமடையுங்கால் தெளிவைக் கூட்டும் பொறுப்பு அண்ணனின் கையில்தான் வந்துவிழுமென்று எண்ணுகின்றேன். அவனைப் பற்றி ஒரு உணர்வுக் கட்டுரை எழுதவேண்டும்...*

## இரண்டு முனைகளிலும் எப்படியடா நிற்கமுடிகிறது?

*அடே! இளவரசு உன் நெஞ்சத்தை உன்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே! போகின்ற போக்கில் விட்டுவிட்டுப் பின் புலம்புகின்றாயோ, போடா முட்டாள்! இரண்டு முனைகளிலும் எப்படியடா உன்னால் நிற்க முடிகிறது! உன் உணர்வுகளுக்கு முறையான போக்கிடமில்லையோ! வெளியே பலரை ஏவல் செய்கிறாய்! மறவனாக உலவுகிறாய். நரகத்திடையே துறக்கமாக வாழ்ந்து விடத் துடிக்கிறாய்! பெருஞ்செயல்களைச் செய்யப்*

பிறந்திருப்பதாகப் பல நேரம் நெஞ்சுக்குள்ளேயே பிதற்றிக் கொள்கிறாய்; அதோடா! உன்னுடைய நண்பர்கள் வேறு உன் பெருமையைப் பலரிடமும் பீற்றிக் கொள்கிறார்கள். 'அண்ணா' என்று உன்னை அழைக்கப் பல தம்பியர்; அன்பைப் பொழிய சுற்றுப்புறத்து ஏழை எளிய மக்கள். எல்லாம் இருக்கிறது. நீ உலகத்தை விட்டாலும் உலகம் உன்னை விடாது போலிருக்கிறது. மலைமுகட்டில் உலவுகின்றாய் நீ. உன் உள்ளமோ சாய்க்கடையில் குளிப்பதில் இன்பங்காணச் சின்னேரம் துடிப்பதேன். நெஞ்சத்தை இழுத்துப் பிடித்துச் சரியான நெறியில் இயக்க இயலாத நீ ஒரு கோழை! முதல்தரமான அடிமை. அடிமைத்தளையை அறுத்தெறி! தூய வெள்ளிய மெய்ப்பையில் விழுந்துவிட்ட ஒரு துளிமை! ஆடையின் வெண்மையெல்லாம் மைத்துளியின் கறையை எடுத்துக் காட்டத்தானோ என்று எண்ணும் வகையில் மாசு தெரிகின்றது. துளி மையின் வேலையைப் பார்த்தாயா? சிறு கசிவே நாளடைவில் பேரணையைத் தகர்த்து விடுவதில்லையா? முள்மரத்தைக் களைந்தெறி வெட்டி வீழ்த்து. காழ்த்தவிடத்து துயர்தரும்...

## உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

அருமையான குறளல்லவா இது. கெட்டுப் படுவோனிடம் ஏறி வந்து அமர்ந்து இனிமையாகச் 'சவாரி' செய்யும் பண்புகள் என்னிடம் துயில்கின்றனவே! உருப்படுவேனா? ஐயங்கொள்ளாதே. அகற்றி எறி அவ்விலங்குகளை. நீயாகவே மாட்டிக்கொண்ட விலங்குகள் அல்லவா? உயரே உயரே பறக்கப்பிறந்தவனடா நீ? விண்ணகத்தில் பறந்து செல்ல எண்ணகத்தில் அகப்படா எத்தனையோ ஆசைகள். மண்ணகத்துப் புழுப்போல ஊர்ந்து செல்வதை எண்ணி மனம் வாடாதே. நெஞ்சத்தைத் திண்ணித் தாக்கிக்கொள். கைபட்டு கைபட்டு, கனிந்த பழம் 'கொளகொள' ஆவதைப்போல மைபட்டுப் போனதே நெஞ்சம் என மயங்காதே, காற்றடிக்கிறது. கொடி அசைகிறது, வளைகிறது. கல் அசைகிறதா? நின்றபடி நிற்கவில்லையா? நீ கல்லாக இருந்தால் காற்றென்ன செய்யும்? மழை பொழிகிறது. மண் கரைகிறது. மரம் கரைகிறதா? நீ மரமாக இரு. வெயிலடிக்கிறது. குளத்துநீர் சுடுகிறது. ஊற்றுநீர் வெம்மையாகுமா? உச்சித்தெங்கில் காய்த்துத் தொங்கும் இளநீரைச் சூடாக்க இந்த ஞாயிற்றால் இயலுமா? தீஞ்சுவை ஊற்றாக தெங்கிள நீராக இரு.

உடலில் ஒருநோய். அஃது எந்நோய்? எப்படி வந்தது? எப்படிப் போக்குவது என்று அறிந்தாலல்லவா அதைப் போக்க இயலும்! உள்ள நோய் உனக்குப் புரியவில்லையா? புரிகிறது. நோய்

முதலை அறிவாய். அது தணிக்கும்வாய் இல்லையா? புலியின்மேல் ஏறியவன் கதைதானோ? இறங்க முடியவில்லையா? அழிந்துதான் போவேன். களிறு வேட்டையாட வேண்டிய ஒருவன் குறுமுயல் வேட்டையில் இறங்கி உயிர்துறந்தான் என்று உலகம் பேசட்டும்.

நன்மை, தீமை தேரும் அறிவுபெற்றும் சிறு குழந்தையாக இருக்கலாமா? ஊருக்கு உலகுக்கெல்லாம் வழிகாட்ட விழைவு. ஊர் உலகெல்லாம் உனக்கு வரவேற்புதான். அந்த வரவேற்பு ஏமாற்றத்தில் முடிந்துவிடக்கூடாது. உலகம் உன்னிடம் ஏதோ இருப்பதாக எண்ணுகிறது. தனக்கு உன் இருப்பு பயன்படும் என்று நம்புகிறது. நம்பிக்கை மோசம் செய்து நாசப்படுத்திக்கொள்ளாதே. ஏக்கத்தோடு உன்னை நோக்கும் விழிகளில் ஒளியேற்று. ஒட்டிய வயிறோடு உலர்ந்த நாவோடு உன்னை வரவேற்கும் உலகிற்கு ஒரு கவளம் சோறும் ஒரு குவளை நீரும் தரக்கூடவா உன்னால் முடியாது! வியர்வை நாற, அழுக்குப்படிந்து வெப்பத்திலும் குளிரிலும் வாடி வதங்கி மேல்ஆடையொன்றின்றி கரிந்த மெய்யோடு கால்கடுக்க நின்றுன்மேல் கனிவைப் பொழியும் தோழர்க்கு இரண்டு முழத்துண்டைத் தரக்கூட உன்னால் இயலாதா? எல்லாந்தர உன்னால் இயலும். உன்னிடம் எல்லாம் இருக்கின்றன. உழைப்பு தேவை. விளக்கு இருக்கிறது. திரி இருக்கிறது. தீப்பெட்டி இருக்கிறது. எண்ணெய்தான் தேவை.

எண்ணெயை ஊற்று. உழைப்பு உழைப்பு உழைப்பு அதுவே வேண்டியது. சோம்பல் சோம்பல் சோம்பல் அதுவே வேண்டாதது. பல நிலைகளில் தனித்தன்மை வாய்ந்தவனாக நீ இருப்பதாக உலகம் எண்ணுகிறது. நீயும் எண்ணுகிறாய். எண்ணிய எண்ணி யாங்கெய்த வேண்டாமா? நெஞ்சந் திண்ணியனாக ஆகு. அதோ! பலகணி வழியாக விழியோட்டு, வளர வேண்டிய, காய்கனி தந்து உலகை வளர்க்க வேண்டிய அந்த மாமரங்களைப் பார். புல்லுருவி கள் பற்றிப்படர்ந்து கிடக்கின்றனவே; உன் நெஞ்சைப் படம் பிடித்துக் காட்டுகின்றனவோ? அதைப் பார்த்ததும் உன்மனம் அமைதி அடைகின்றதோ? இழிந்தவன் இன்னோர் இழிந்தவனைக் காணுங்கால் ஏற்படும் ஆறுதல் போலும்! அடே இளவரசு! அது மரம்; விழுந்த புல்லுருவியை எடுத்தெறிய இயலாது. ஆடி அசைந்து அழுது கொண்டிருக்கிறது. நீ மனிதன், நெஞ்சில் விழுந்தமாசை நீக்கியாக வேண்டும். இதழ் கனிய கண்மலர முகம் ஒளிர எதிர் காலப் பெண் உன்னை வரவேற்கக் காத்திருக்கிறாளே! அவளின் வளைகுலுங்கும்கைகளில் உள்ள மாலை உனக்குத்தானடா! வாயிலில் உன் வருகைக்காகக் காத்திருக்கின்ற அவளின் பின்னே விண்ணே இடிக்க எழுந்துள்ள அரண்மனையும் அதன் நடுவே போடப்பட்டிருக்கும் அரியணை யும் உனக்கல்லவா? இன்னிசை முழக்கம் நின் செவியை முட்டவில்லையா? ஏழிசையாய் இசைப்

பயனாய் இறைவன் இருக்கிறானாமே! அவ்விறைவனே வரவேற்புப் பண்பாடுகிறான். நெடுநிலா முற்றத்து நீ உலவும்போது மூளியாக இருக்கக்கூடாதே என்பதற்காக நாளொரு மேனியாகத் தன்னை வளர்த்துக் கொள்வதில்தான் அந்த நிலவுப் பெண்ணுக்கு எத்துணை ஆவல்! கார் வருவதற்காக முல்லை மலர்கிறது. காதலன் தேர் வருவதறிந்து காரிகை மகிழ்கிறாள். நீ வருவதற்காக என்ற என்ன என்னக் கோலம் பூணுகிறது. பார்த்தாயா எதிர்காலம்? எல்லோரையும் ஏமாற்றிவிடாதே. உலைவின்றி தாழாது உஞற்று. உழைப்பின்வாரா உறுதிகள் உளவோ?

## மண்பானை நெஞ்சம்

பலரிடம் நம் வாழ்க்கையின் கமுக்கங்களைச் சொல்ல முடியாததைப்போல சிலரிடமாவது சொல்லாமலிருக்க முடியாது! அந்தச் சிலரில் ஒருவராகக் கருதி நான் எவ்வளவோ சொல்லிய அப்பனே என்னிடம் மறைத்திருந்ததை எண்ணி நெஞ்சம் மிகக் கவன்றது. அப்போதுதான் நன்றாக எண்ணிப் பார்த்தேன். மற்றவர்கள் நெஞ்சமெல்லாம் கல்லணைகளாக இருக்கின்றன. அவற்றில் எங்கோ எப்போதோ ஏற்படும் ஒரு சிறு கசிவைப் பார்க்கும்போதுதான் 'ஓகோ இவை பெரிய கல்லணைபோலும்' என்று தெரிகிறது. 'நம் நெஞ்சமோ மண்பானையாக அதுவும் ஓட்டைகள் நிறைந்ததாக உள்ளது. உள்ள நீரையெல்லாம் ஒழுகவிட்டுவிட்டு போலிப் பெருமிதத்தில் ஏமாந்து நிற்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டது.

(8.7.67)

◆

# செப்டம்பர் - 1967

## மு.வ. வருகை

மு.வ. பேசினார். அறிவுப்போர் பற்றியமைந்தது அவர் பேச்சு. யான் ஆய்வாளர், ஆசிரியர் சார்பில் வாங்கிய கெ..ம்பாலாகிய ஓடம் ஒன்றைத் 'தங்கள் நெஞ்சக் கடலில் இன்றைய நிகழ்ச்சி என்றும் ஓடமாக மிதந்து கொண்டிருக்க வேண்டும்' எனச் சொல்லிக்கொடுத்தேன். கூட்ட இறுதியில் எதிர்பாராதவிதமாக மாரியப்பப்பத்து உள்ளிட்ட கன்னடப் பேராசிரியர்கள் வந்து கலந்து கொண்டனர். மாரியப்பப்பத்து கன்னடத்திலும் துளுவிலும் சின்னேரம் பேசினார். விழா நிறை சிறப்பொடு நிகழ்ந்தது. ஆசிரியர் அசோவின் துணைவியார் இன்று காலை ஆண்மகவீன்ற செய்தி அறிந்தமையான் விழாவின்பின் அவரை மருத்துவமனை சென்று பார்த்தோம். இரவு மு.வ. தங்கியிருந்த இடம் சென்று அவரொடு மாரியப்பப்பத்தோடும் ஏழெட்டு மாணவர்கள் க.சு. ஆகியோரொடு நீண்டநேரம் உரையாடினோம். தமிழுக்கு இனி நல்ல எதிர்காலம் உள்ளது என்றும் அண்ணா முதலமைச்சராக உள்ளவரை சட்டம் ஒழுங்கு கெடாது என்றும் மு.வ. சொன்னார் பேச்சிடை நிறைய ஆங்கிலச்சொற்கள் கலந்து பேசினார் மு.வ. மாரியப்பப்பத்து நகைச்சுவையோடு உரையாடினார். தன் பிள்ளைகளைத் தமிழ் படிக்க வைத்திருப்பதாகச் சொன்னார். கன்னடர் தமிழ் படிக்க வைத்திருப்பதறிந்து மிக மகிழ்ந்தேன். திராவிட இனப்பெருமையும் தமிழன்பும் உள்ளவர் பத்து. பிரியுங்கால் மாணிக்கத்திடம் நலங்கேட்டதாகச் சொல்கிறேன் என்றார் மு.வ.

*(4.9.67)*

◆

## அவள் வருகை

ஒருநாள் வந்தாள். 'குண்டுமல்லிகை' புதினத்தைத் திருப்பிக் கொடுக்கும்போது அதில் வருகின்ற சகந்நாதனைப் போல (மருத்துவர்) நான் இருப்பதாக அவளின் அம்மா சொன்னதாகக் குறிப்பிட்டாள். என்னையறியா அவள் அம்மா எப்படிச் சொன்னார் எனக் கேட்டதற்குத் தான் முன்பே என்னைப்பற்றி

அவரிடம் சொல்லியிருப்பதாகக் கூறினாள். எப்பண்பில் சகந்நாதனைப் போலுள்ளேன் என்றேன். சிறிது தயங்கியபின் மற்றவர் மனத்திலிருப்பதை அறிந்து சொல்லி விடுவதில் என்றாள். இன்னொரு நாள் வந்து அவன் அம்மா என்னைப் பார்த்ததாகச் சொன்னாள். என் ஊகமும் சரியா யிருந்தது. அவள் சொன்னதற்கு இரண்டு மூன்று நாட்களின்முன் செயசோதியில்' மாலைச் சிற்றுண்டி முடித்து வடக்கே வருகையில் தாணம் அம்மா, தம்பி, இவள் அம்மா மூவரும் எதிரே வந்தனர். தாணம் தம்பியைக் கண்டதும் பெண்டிரில் ஒருவர் இவளின் தாயாக இருக்கலாமென எண்ணினேன். அவர்கள் தாண்டிச் சென்றபின் நான் திரும்பிப் பார்த்தேன். ஒல்லியாயிருந்த இவளின் தாயும்திரும்பிப் பார்த்தார். என் ஊகம் நூற்றுக்கு நூறு உண்மை என்பது அவள் சொன்ன பிறகுதான் தெரியும். நான் திரும்பிப் பார்த்ததையெல்லாம் அப்படியே சொல்லியிருக்கிறார். சென்ற ஆண்டு எடுத்த துறைக்குழுப் படத்தில் என்னைப் பார்த்திருந்த தால் அவர்கள் தெரிந்துகொண்டதாக அவள் சொன்னாள். நான் பலநேரம் செய்கின்ற ஊகங்கள் சரியாக இருக்கின்றன. வேறொரு நாள் வந்தாள். முழுக்க முழுக்கப் பொன் விலங்கு சத்திய மூர்த்தியைப் போன்று யான் இருப்பதாகவும் நடக்கின்ற பல நிகழ்ச்சிகளையும் கதை அப்படியே காட்டுவதாகவும் குறிப்பிட்டாள். இவள் இதை முன்பே சொல்வாள் என நான் எதிர்பார்த்ததுண்டு. முன்பே பலரும் இப்படிக் கூறியிருக்கின்றனர். கைவல்யம் படித்துவிட்டு இப்படியே சொன்னான். கோடி (பொறியியல்) என்னைத் திருவனந்தையில் கண்டவுடன் இதையே சொன்னார். தேர்தலின் பின் மருத்துவமனையில் இருந்தபோது அங்குவந்த ச.வே.சு. அங்கிருந்த பொன்விலங்கைப் பார்த்துவிட்டு 'உன்னைப்போல் ஒரு தமிழாசிரியனின் கதை' என்றார். அவளும் அதையே சொன்னாள். உள்ளந்திறந்து எதையெதையோ சொன்னேன். அவளும் சொன்னாள். வரவர ஓரளவு துணிவு அவள் மாட்டுளது. எல்லாம் முளையிலேயே கருகிப்போனால் நல்லது.

*(6.9.67)*

◆

## அப்படியிருந்தால்...

'அப்படியிருந்தால்...' என்ற தலைப்பில் அவள் தன் உணர்வுகளைச் சொல்வதைப்போல் ஒருகதை எழுதியுள்ளேன். மாதவனிடம் காட்டினேன். தீபத்திற்கு விடுக்கச்சொன்னார். மு.வ., பார்த்தசாரதி கதைகளைப் படிப்பது போன்றுள்ளது என்றார். எனக்கு ஓரளவு நிறைவு தந்த கதையிது. நீண்ட நேரந்திட்டமிடாது

திடுமென எழுதிய கதை. பழைய 'ஊசல்' கதையை முத்தாரத்திற்கு விடுகிறேனென மாதவன் வாங்கிக்கொண்டார்.

*(8.9.67)*

◆

## அண்ணனுக்கு ஒரு நீண்ட மடல்

அண்ணன், அப்பா பணம் தரமாட்டேன என்கிறார். பொய் சொல்கிறார் எனக் குறிப்பிட்டு மடல் எழுதியிருந்தார். அதற்கு முன்பே அப்பா ஓர் அருமையான மடல் எழுதியிருந்தார். தான் குறைந்த படிப்பு படித்திருப்பதால்தான் சாதி, சோதிடம் பார்ப்பதாகவும் இனி உன் போக்குக்கு நான் இணங்குகிறேன் என்றும் பணம் எவ்வளவு செலவானாலும் கவலைப்படவேண்டா மென்றும் ஊர் உலகம் போற்ற நீ வாழ்வதுதான் எனக்குப் பெருமை என்றும் அண்ணனின் போக்கைச் சுட்டி வருந்தியும் எழுதியிருந்தார். அதற்கு மறுமடல் விட்டபின் அண்ணனுக்கும் ஒரு நீண்ட மடல், ஒளிவு மறைவின்றி நெஞ்சுதிறந்து எல்லா வற்றையும் சுட்டி எழுதினேன்.

*(28.9.67)*

◆

# அக்டோபர் - 1967

## அப்பாவின் திடீர் வருகை

*அப்பா திடுமென முன் அறிவிப்பின்றி 2.10. அன்று அனந்தை வந்தார். அப்பாவைப் பார்த்ததும் நெஞ்சம் நிறைந்தது. பங்கு பிரிப்பது பற்றியும் மணம் பற்றியும் என் கருத்தறிவதோடு நலனறிந்து கொண்டும் போகலாமென்ற எண்ணத்தோடே வந்தார். 2.10 மாலை உயிர்க்காட்சி சாலை, பூங்கா சென்றோம். 3.10. காலை நெய்யாறு அணை சென்றோம். மாலை அனந்தை திரும்பி பத்மநாபா திரையரங்கிற்கெதிரிலுள்ள புல்தரையில் சிறிது பேசிய பின் மாதவனை தம்பி இராமசாமியின் அண்ணன் ஆகியோரை அவரவர் கடையில் கண்டு பேசியபின் க.சு. வீடு சென்றோம். நீண்ட நேரம் அப்பா க.சு.வொடு பேசிக் கொண்டிருந்தார். க.சு. துணைவியார் மலரில் வந்திருந்த என் கட்டுரை 'கொள்ளாம்' என்றார்.*

◆

## கலப்புமண எண்ணம்

*ஏற்கனவே (காலையில்) ச.வே.சு. கேட்டதற்கிணங்க இரவு 9.15 மணி அளவில் ச.வே.சு. வீட்டிற்குச் சென்றோம். முன்பே பல இடங்களில் பாலும் காப்பியும் சுவைநீரும் அருந்தியதால் ஒன்றும் வேண்டாம் என்றார் அப்பா. நான் சில பூரியும் உப்புமாவும் அருந்தினேன். 12 மணிவரை உரையாடல் நிகழ்ந்தது. ச.வே.சு. துணைவியாரும் உரையாடலில் கலந்துகொண்டார். அப்பா நெஞ்சு திறந்து பேசினார். நான் கலப்பு மண எண்ணத்தையும் சொன்னேன். பெண்ணைச் சொல்லுமாறு ச.வே.சு.வும் அப்பாவும் கேட்டனர். கோடையில் அதைப்பற்றிய முடிவு சொல்வதாகக் குறிப்பிட்டேன். கலப்புமணம் செய்தால் என்னைப் பெரிதென மதிக்கும் உறவினர் விலகுவர் என்றார் அப்பா. கலப்புமணம் செய்துதான் ஆகவேண்டும் என்ற நிலை வந்தால் அப்பா ஏற்றுக் கொள்வாரென்றே நம்புகிறேன். பலவற்றையும் பேசிப் பிரிந்தோம்.*

*(3.10.67)*

◆

## நிலக்குடைவு ஆற்றுச்சுரங்கம்

காலை இராசகோபால் வந்து எழுப்பினார். எழுந்து உரையாடியபின் வற்கலைக்குப் புறப்பட்டோம். தம்பி இராமசாமி உடன் வந்தான். பெரிதும் உதவியாயிருந்தது. நானும் முதல்முறையாக இப்போதுதான் போனேன். கடற்கரை பார்த்தபின், நாராயணகுரு கல்லறையைப் பார்த்தோம். பின் ½ கல்தொலைவுள்ள ஒரு நிலக்குடைவு ஆற்றுச் சுரங்கத்தைத் தோணியொன்றில் நுழைந்து பார்த்தோம். அருமையான காட்சி. அதன்பின் ஊற்றுநீரை முறைப்படுத்திவிடும் குளியற் பகுதியில் நீராடி மாலை 6 மணி அளவில் அனந்தை மீண்டோம். அப்பா 7.30 விரைவு வண்டியில் ஊர்க்குக் கிளம்பினார்.

*(5.10.67)*

◆

## அதிகாரி சாதி

பள்ளன் பார்ப்பான் என்று இருந்து வரும் சாதி முறையைப் போன்று குமுகாயத்தில் அறிந்தோ அறியாமலோ படித்தவன் அதிகாரி. அதிலும் உயர் அதிகாரி தாழ் அதிகாரி, அவரவர் மாட்டே கொள்ளல் கொடுத்தல் என்ற முறை இருக்கிறது. வளர்கிறது. ஓர் ஐ.ஏ.எசு. அதிகாரி தன் பெண்ணிற்கும் ஐ.ஏ.எசு. மாப்பிள்ளை தேடுகிறான். ஐ.ஏ.எசு. படித்த இளைஞன் அவன் நிலைக்கேற்பவே பெண்கொள்ள விரும்புகிறான். பதவியாலும் பணத்தாலும் உயர்த்தப்பட்டிருப்பவன் தாழ்ந்திருப்பவர்களைத் திரும்பிப்பார்க்க மறந்துவிடுகிறான். அது அவன் குற்றமோ? அவனை உள்ளிட்ட குமுகாயக்குற்றமோ? இந்நிலை ஒழிந்தாக வேண்டும்.

*(11.10.67)*

◆

## சத்தியசித்ரேயின் 'நாயக்' படம்

இன்று காலை இராயின் 'நாயக்' என்ற படத்தைப் பார்த்தேன். சாருலதா அளவிற்குச் சிறப்பின்றெனினும் இராயின் தனித்தன்மை பல இடங்களில் ஒளிர்கின்றது. ஒரு நடிகனின் வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க பகுதிகள் அவன் கல்கத்தாவி லிருந்து தில்லிவரை புகைவண்டியில் பயணம் செய்யும் இடைவெளியில் காட்டப்படுகின்றன. உலகமெல்லாம் வாழ்த்திப் போற்ற வாழ்ந்தாலும் அவன் உள்ளம் நிறைவின்றிப் புலம்பிக் கொண்டிருப்பதை அருமையாகக் காட்டிவிட்டார் இராய். படம்

முடிந்து வெளிவந்து சிறிதுநேரம் வரை நெஞ்சில் ஒரு கிளர்ச்சி. மாம்பழம் வெளியே பார்ப்பதற்கு எவ்வளவு அழகாகச் செக்கச்செவேரெனப் பருத்துப் பழுத்து கனிந்து தொங்குகின்றது. அதன் உள்ளே யாருக்கும் தெரியாமல் ஒரு புழு அரித்துக் கொண்டிருக்கிறதே! இவ்வடிப்படையில் ஒரு கதை எழுத வேண்டுமென்றெண்ணம்...

*(11.10.67)*

◆

## மொட்டை மடல்

இன்று *(11.10)* நல்லமுறையில் ஊர் போய்ச் சேர்ந்ததாக அப்பாவியிடமிருந்து மடல் வந்தது. அப்பாயி உடனே என் திருமணத்தை முடிக்கவேண்டுமென்று சொல்கிறதாம்! அப்பாவின் இந்த மடலோடு வேறொரு மடலும் வந்திருந்தது. 'இளவரசு விரிவுரையாளர், தமிழ்த்துறை' என ஆங்கிலத்தில் முகவரி எழுதப் பட்ட மடல். விடுநர் முகவர் குறிப்பிடும் பக்கத்தில் 'A Jimothy saw B.Sc., 41/2 Williams Road, Trichirappally - 1' என்று எழுதியிருந்தது. என் முகவரியை எழுதும்போது வேண்டுமென்றே L C e T U R E என எழுத்து மாற்றியும் விட்டும் பிழை செய்யப்பட்டிருந்தது. மடலைப் பிரித்தேன். 'good morning Sir' எனத் தொடங்கி முற்றிலும் மலையாளத்தில் எழுதப்பட்டிருந்தது. இறுதியில் ஆங்கிலத்தில் 'This is the first and the last warning' - Be Carefull - Next is to Mohana என எழுதப்பட்டிருந்தது. உள்நாட்டு அஞ்சலுறையில் வந்த இம்மொட்டை மடலில் மாணவி மோளையும் என்னையும் பற்றி எவனோ ஒரு பொறுக்கிப்பயல் எழுதியிருக்கிறான் எனப் புரிந்து கொண்டேன். திருச்சி முகவரி எழுதிய அக்கயவன் நேற்று மாலை திருவனந்தபுரத்தில் அம்மடலை அஞ்சல் செய்துள்ளான் என்பதை அஞ்சல் முத்திரை காட்டிற்று. நம்பகமாக நண்பரொருவரிடம் கொடுத்து மலையாளத்தைப் படித்துப் பொருள் புரிந்துகொள்ள வேண்டும். உலகம் எவ்வளவு கயமையுடையவர்களைச் சுமந்து கொண்டிருக்கிறது? கனவினும் இன்னாத இழி செயல்களிலெல்லாம் இறங்கி விடுகிறார்களே.

*(11.10.67)*

◆

## தி எழுதியிருப்பாளோ?

இரவு நினைத்தேன். ஏன் இவ்வாறு இருக்கக்கூடாது என்று, தி எழுதியிருப்பாளோ? இரண்டு நாட்களின் முன் இருமுறை என்னிடம் வந்து மதிப்பெண் குறைந்தமை குறித்து அழுதாளே,

யான் வேண்டுமென்றே மதிப்பெண்களை அவளுக்குக் குறைத்து மோவுக்கு அதிகம் போட்டிருப்பதாக அவள் கருதியதன் விளைவே இம்மடலாக இருக்கும் என்றெண்ணினேன்.

(12.10.67)

◆

## திடுதிப்பென்று அழைப்பு

இகோ பிற்பகல் காட்சி 'நகரமே நன்னி' படத்திற்குப் போகலாமென்றார். சரியென்று உணவருந்தி வந்தேன். 2¼ மணி அளவில் மாணவர் தேவதாசு வந்து நாளை நாகர்கோயில் இந்துக் கல்லூரியில் பேசவேண்டும், மடல் வந்திருக்கிறது என்று மடலைக் காட்டினார். என்னை முன்பே ஒருமுறை கேட்டிருந்தனர். ஆனால் இப்படித் திடுதிப்பென்று அறிவிப்பார்கள் என்றெண்ணவில்லை. இசைந்து 'மொழியின் வழியே' எனத் தலைப்புங்கொடுத்து அனுப்பினேன். பின் திரைப்படம் செல்லவில்லை. இ.கோ.வை அனுப்பிவிட்டுப் பேச்சுத் தொடர்பாய்க் குறிப்பெடுத்தேன். தம்பி அருள் வந்தான். அவனோடு துறையிலும் இரவு எட்டு மணிவரை யில் அறையிலும் குறிப்பெடுத்தேன். எடுத்த குறிப்புக்களை ஒழுங்குபடுத்தி வடிவங்கொடுக்க இரவு ஒருமணி ஆயிற்று.

(12.10.67)

◆

## 'மொழியின் வழியே' நாகர்கோவில் கல்லூரிப் பேச்சு

பேராவிடம் சென்று நாகர்கோயிற் கூட்டத்திற்குச் செல்வதைக் குறிப்பிட்டேன். 'சென்று வா' என்றதோடு பேசப்போகும் கருத்துக்களைக் கேட்டார். விளக்கிச் சொன்னேன். விரும்பிக் கேட்டு பெரிதும் பயன்படா சில விளக்கங்களைத் தந்து விடுத்தார். உறக்கமின்மையும் வகுப்பெடுத்தமையும் சேர்ந்து என்னைத் தளர்த்தின. 2¼ மணிக்கு இறையடியவன் தேவதாசு முதலியோரொடு அழைக்க வந்திருந்த தமிழ்மன்றச் செயலருட்பட மகிழ்வுந்தில் சென்றோம். 4¼ மணி அளவில் கல்லூரி சென்று முதல்வரைப் பார்த்தபின் பேச்சரங்கு வந்தோம். கூட்டம் ஏறத்தாழ 4¾ மணிக்குத் தொடங்கியது. ஈ.வி. மணி எனும் பேராசிரியர் தலைமை தாங்கினார். தேசியப்பன் வரவேற்றார். யான் 1 மணிநேரத்திற்கு மேல் பேசினேன். தனித்தமிழ்க் கொள்கை என் பேச்சின் உயிர்மையமாக அமைந்திருந்தது. சில கட்டுரைகள் செம்மையாக எழுதும் சிந்தனைத் தெளிவைப்பெற இவ்வாய்ப்பு உதவியது. கூட்டம் நிறைந்திருந்தது. மாணவியர் நிறைய வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எல்லோரும் விரும்பிக் கேட்டனர்

என்றே நம்புகிறேன். தலைவர் முடிவுரையில் பேச்சு சிறப்பாயிருந்த தாகக் குறிப்பிட்டார். நன்றி சொன்ன செயலரும் பாராட்டிச் சொல்லி அவ்வழி நடப்போம் என்றார். கூட்டம் முடிந்து அரங்கினின்று வெளியே வரும்போது ஓர் ஆசிரியர் (ஏறத்தாழ 50 அகவையினர்) என்னிடம் வந்து பேச்சு மிகவும் பயனுடையதாக, சிறப்பாக அமைந்தது என்றார். தமிழ்த்துறை ஆசிரியர்கள் நண்பர்களோடு முதல்வர் அறையில் சிற்றுண்டி அருந்தினேன். முதல்வர் ஒரு மலையாளி, நன்றாகத் தமிழ் பேசுகிறார். என் பேச்சை முழுதுங் கேட்டார். சிற்றுண்டி அருந்தும்போது என் கேட்டலுக்கிணங்கி ஆசிரியர்களை ஈ.வி.மணி அறிமுகப் படுத்தினார். பேச்சு முடிந்ததும் என்னைப் பாராட்டிய தோடன்றி விருந்திலும் என் இடப்பக்கத்தே அமர்ந்து மீண்டும் என்பேச்சின் சில பகுதிகளைச் சுட்டிச்சொல்லி பாராட்டிய பெரியவரின் பெயர் கே.சி.தாணு எனத் தெரிந்துகொண்டேன். தகுதியுடைய ஒருவர். என் பேச்சின் உயிரோட்டத்தை அறிந்து புகழ்ந்ததை எண்ணி மகிழ்ந்தேன். பின் விடைபெற்று மகிழ்வுந்தில் கலைவாணர் வீட்டிற்குப் போனோம். பேச்சைக்கேட்க வந்திருந்த தாணு, கோலப்பனும் வண்டியிலேயே வந்தனர். வரும் வழியில் தாணு பேச்சைப்பற்றி மற்றவர்களிடம் 'இந்த வழிபாட்டரங்கு கட்டிய காலத்திலிருந்து இதுவரை நான் இங்கு படித்தகால முழுவதும் இதுவரை இதுபோல் ஒரு பேச்சைக் கேட்டதில்லை' என்றார். இதைவிட இன்னுஞ் சிறப்பாகப் பேசியிருக்கலாமென்று எண்ணிய எனக்கு அவர் பேச்சு நிறைவு தந்தது. கலைவாணர் வீட்டில் சின்னேரம் தங்கினோம். குடியிருப்பதற்கன்றி கொஞ்சி மகிழ்வதற் கென்றே கட்டப்பட்டதோ எனுமாறு இனிய எழில்மனை அது. அதன் மாடியில் இருந்தால் ஓடிவந்து நெஞ்சில் ஒய்யாரமாக அமர்ந்துகொள்ளும் இன்பம். சரியான முறையில் பாதுகாக்காத தால் வீடும் வீட்டுள் இருக்கும் பொருள்களும் பொலிவிழந்துள. கலைவாணர்க்கு அன்பளிப்பாய் வந்த பல பொருள்களும் உள. வீட்டைப் பார்த்தவுடனே இப்போது வீட்டின் உள் இருப்பார் எவ்வளவு பொருள் தட்டுப்பாட்டில் இருக்கின்றனர் என்பதை அது காட்டிவிட்டது.

*(12.10.67)*

◆

## சினமும் துயரும் தந்த மலையாள மொட்டைமடல்

சோசப்பு மலையாள மொட்டைமடற் செய்தியைத் தன் மனைவி வழி தமிழில் எழுத்துப் பெயர்த்துக் கொண்டு வந்தார். யான் சின்னப்பெண்களைக் காதலிப்பதாகவும், மோவைக் காதலிக்க வேறு ஆள் உள்ளதாகவும், எல்லாவற்றையும்

தமிழ்நாட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடின் நரம்பை வெட்டுவோம்' என்றும் மடலில் குறிப்பிடப்பட்டிருந்தது. பெண்டிருக்குள்ள ஒரு நோயையும் மடல் குறித்துள்ளதாகச் சோசப்பு சொன்னார். படித்தபோது சிரிப்பும் சினமும் துயரும் எழுந்தன. இழிந்த நெஞ்சமொன்று எப்படிப் பளிச்சிடுகின்றது மடலில்! தி.தான் எழுதியிருப்பாள் என்று நம்பினேன்.

(13.10.67)

◆

## வந்தது, இருந்தது, போய்விட்டது: சிரிப்பாக இருந்தது

அவளைப் பற்றி இதில் எழுதாமலிருக்கலாம் என்று பலநேரம் நினைப்பேன். எழுதாவிட்டால், நிகழ்வின் உணர்வின் ஒரு பகுதியை மறைத்தவனாவேன் என்பதால் எழுதிவிட விரும்புகின்றேன். வாங்கிச் சென்ற தமிழ்ச்சங்க மலர், காஞ்சிமலர் கொடுத்தாள். சங்க மலரில் என் நாட்குறிப்புப்பகுதி நன்றாக இருந்தது என்றாள். என்ன நன்றாக இருந்தது என்றேன். சில பகுதிகளைச் சுட்டிச் சொன்னாள். பெண்களை 'வந்தது, இறந்து போய்விட்டது' என அஃறிணை நிலையில் எழுதியிருந்தது சிரிப்பாக இருந்தது என்று குறிப்பிட்டாள். இப்பகுதியில் பார்ப்பனரைப் போல அவள் இவள் என்றே மகள், தங்கை முதலிய அனைவரையும் அழைப்பரென்றாள்...

### நகரமே நன்னி

மாலைக் காட்சிக்கு 'நகரமே நன்னி' என்னும் மலையாளப் படம் பார்க்கச் சென்றேன். அப்பப்பா படமா அது! அதுதான் படம்! எப்படி எடுத்திருக்கிறான்! இப்படி எடுப்பான் என நான் எதிர்பார்க்கவில்லை. சென்னை நகரில் சென்று வாழும் மலையாளிகளில் ஒருவன் மகிழ்வுந்தோட்டி, ஊரிலிருந்து தாய் தங்கையைச் சென்னைக்கழைத்து வீடெடுத்து வாழ்கிறான். அவன் தம்பி பொறுப்பற்றவன், தங்கையை நகரில் இழிதொழிலில் ஈடுபட்டு வாழும் 'செல்வ' மலையாளத்தி ஒருத்தி கெடுத்தல், இறுதியில் உந்திலடிபட்டு அண்ணன் இறத்தல் - நகரமான சென்னைக்குச் சென்ற மலையாளத்தாயும்மகளும் திரும்பல் முதலியனவே மைய நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சிகளை மிகமிக இயல்பாக அவன் காட்டியுள்ள அருமையே அருமை. படத்தில் மலையாளிகளின் வறுமையும், செல்வநிலையும், உயர் பண்பும் தாழ்பண்பும், நகரம் நரகம் என்பதும் நன்றாகக் காட்டப் பட்டுள்ளன. சென்னை வாழ்க்கையில் அவர்களுக்கும் தமிழர் களுக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பும், அங்கும் அவர்கள் தம் தனித்தன்மைகளைப் பேணிக்கொள்ளும் போக்கும் நன்கு

காட்டப்பட்டுள்ளன. படம் முழுவதும் சென்னையிலேயே நடப்பதாக இருப்பினும் பார்க்கச் சலிக்காத பலநிலைகளில் சென்னையைக் காட்டுகின்றனர். படம் பார்த்து வெளியே வரும்போது நெஞ்சில் ஓர் துயர்க்கனம். கெட்டுப்போன தங்கை புகைவண்டியில் அமர்ந்திருக்கிறாள். ஊரை நோக்கிப் பயணம் திரும்பும்நிலை, அவளைப் பார்க்கையில் 'அடீ! அறிவில்லாதவளே! தின்று தீர்த்தவளே! உன்னை உயிரினும் மேலாகப் பாதுகாத்த பண்பாளன். குடும்பத்தை உழைத்து உழைத்துக் காப்பாற்றிய அண்ணன் உன்னால் அன்றோ உயிர்துறந்தான். கொடியவளே! நீ இன்னும் வாழவேண்டுமா' என நெஞ்சம் கேட்கும் நிலையில் படம் முடிகிறது. படம் முடிந்து சௌராட்டிரா வில் உண்டு அறை நோக்கித் திரும்பும் வரையில் ஐயோ பாவம்! இப்படியா அந்தக் குடும்பம் ஆகவேண்டும்' என்ற எண்ணக்கசிவே நெஞ்சில் வழிந்தது. பார்த்தது ஒரு திரைப்படம். காட்டப்பட்டது ஒரு கதை என்ற நினைப்பறிவை மீறிய உணர்ச்சிக் கிளர்ச்சி, தமிழ்ப்படம் எடுப்பவனெல்லாம் இப்படி ஒரு படம் தம்மால் எடுக்கமுடியுமா என எண்ணிப் பார்த்துத் தற்கொலை செய்து கொள்ளலாம். மானங்கெட்டவர்கள்! ஆடு, மாடு, நாய், நரிகூடத் தான் துணையை நாடுதலிலும் மருவுதலிலும் தமிழ்த் திரைப்படக் கதைத்தலைவன் தலைவியைவிட ஓரளவு நாகரிகமாக ஒழுகும். ஒரே ஆட்டம், பாட்டு, அடி, தடி, ஆடைக்குறைப்பு அவலநிலை. தமிழ்ப்பண்பு இம்மியளவாவது காட்டப்பெறு கின்றதா? எல்லாக் கதைகளும் ஒரே மாதிரிக்குப்பை. மக்களின் மனத்தைக்கெடுக்கும் இழிதகை ஆட்டம் பாட்டம்! செம்மறி யாட்டுக் கும்பலைப்போல் இந்தக் காட்டுமிராண்டித் திரைப்படச் சுவைஞர்கள்தாம் அப்படங்களை எத்தனை முறை பார்க்கின்ற னர்! இந்த நிலை நீடித்தால் தமிழ்த்திரையும் நாடும் உருப்படா! உருப்படியான நடவடிக்கை எடுத்துப் போக்கைத் திருப்ப வேண்டும். படம் எடுப்பவன் கையில் இருக்கிறது தரமான சுவைஞர்களை உருவாக்குவது. 'நகரமே நன்னி', 'அசுவமேதம்', 'அக்கினிப்புத்திரி', 'இருட்டின்றே ஆத்மாவு', 'செம்மீன்', 'முறைப்பெண்', 'ஓடையில் நின்னு' முதலிய அருமையான மலையாளப்படங்கள் என் நெஞ்சில் மலையாளத் திரையைத் தமிழினும் பன்மடங்கு உயர்த்தின. 'ஏ, மலையாளி! உன் தாய்மொழியில் உன் நாட்டான் 'நகரமே நன்னி' போன்ற அருமை யான படங்கள் எடுப்பதை யெண்ணி நீ நிமிர்ந்து நடக்கலாம்! எண்ணச்சிறகை விரித்து எங்கும் பறந்து திரியலாம். உன் முன், திரைத்துறையை எண்ணுங் கால் என்னால் நிமிர்ந்து நடக்க இயலவில்லை.

*(14.10.67)*

◆

## பிறப்பியத்தை நம்பும் கற்ற மடையர்கள்

பின் க.சு. தம்பிக்கு (இளையதம்பி - மருத்துவர்) ஒரு மருத்துவப் படிப்புப் பெண்ணைப் பார்த்ததையும், அப்பெண் க.சு.தம்பிக்கு மிகவும் பிடித்தும், பெற்றோர்க்குப் பிடித்தும் இறுதியில் பிறப்பியம் பொருந்தி வராததால் வேண்டாமென்று சொல்லிவிட்டதையும் கூறினார். பெண்ணிற்கு ஆணையும் ஆணிற்குப் பெண்ணையும், பெற்றோர்க்கு இருவரையும் பிடித்தும் பிறப்பியத்திற்குப் பிடிக்கவில்லை. பிறப்பியத்திற்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் கல்வியறிவுள்ள க.சு. குடும்பத்தார் 'பிறப்பியமே உன் காலைப்பிடித்தோம் நின்வழியே நம்வழி எம்வழி' என வீழ்ந்து விட்டனர்! கற்றமடையர்கள்! என்று திருந்துமிந்த மானிடச் சாதி?

*(15.10.67)*

◆

## கோவை மணியிடமிருந்து மடல்

கோவை மணியிடமிருந்து மடலும் மருத்துவ நண்பர் பத்மநாபனின் மணஅழைப்பும் வந்தன. மடலில் மணி குறிப்பிட்டிருந்த ஒரு செய்தி மனவருத்தந் தந்தது. கோவையில் தான் பார்த்த பெண்ணை எல்லார்க்கும் பிடித்தும் இறுதியில் சாதகம் பொருந்தாததால் தங்கள் வீட்டார் வேண்டாம் என்று சொல்லி விட்டனர் என்று எழுதியிருந்தார். இன்றைய மணமக்கட்கு வேண்டியது நெஞ்சப்பிடிப்பு, பிணைப்பு அன்று; பிறப்பியப் பொருத்தம், செல்வப்பிடிப்பே வேண்டியது. என் மணத்தில் இந்நிலை வர இடந்தரமாட்டேன். பெண்ணைப் பார்த்து எனக்குப் பிடித்தால் என்னை அவளுக்குப் பிடித்தால் போதும் அதற்குமேல் பிறப்பியப்பொருத்தம் இல்லையென்றாலும் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை.

*(16.10.67)*

◆

## பெரிய கல்லணைதான் நெஞ்சம்

தென்மொழியில் வெளியான 'பைந்தமிழ்ப் பணி' பாட்டில் இறுதியில் 'அடடா' என வருவதன் பொருள் என்ன என்றாள். உணர்ச்சிச் சிலிர்ப்பைக் காட்டுவது அது என்றேன். பின் அலைகளில் வரும் 'முத்துச்சாமி மனைவியின் மறைவு' பற்றிய கருத்து சிறப்பாக இருந்தது என்றாள். அதைச் சொன்னதும் உன்னைப் பற்றியும் ஒன்று அதில் எழுதியுள்ளேனே உனக்குப் புரிந்திருக்கவேண்டுமே என்றேன். பேசாமல் நின்றாள். பின் புரிய

வில்லை என்பதுபோல் தலையாட்டினாள். பெரிய கல்லணைதான் நெஞ்சம்! விழியும் நகையும் முகமும் காட்டும் மொழிகளை வாய்பேச மாட்டேனென்கிறதே! வாய்பேசாததாலேயே விழியும் முகமும் நகையும் காட்டியதும் சொன்னதும் இல்லையென்று போய்விடுமா? அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறாளோ? சராசரி மாந்தனைவிடப் பலநிலைகளில் உயர்ந்துவாழ முயலும் நான் உள்ளுக்குள்ளேயே எந்த அளவு போராட வேண்டியுள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டினேன். 'நீ எவ்வளவு ஆட்டிப் படைத்திருக்கிறாய் தெரியுமா? என வினவியபின் பிறிதொருநாள் எல்லாவற்றைப் பற்றியும் விரிவாகச் சொல்லவா என்றேன். சரி நான் கேட்கிறேன் என்பதைப்போல் தலையாட்டினாள். என் தலைநரை திருமண நோக்கம் பற்றியும் சுட்டிக்காட்டினேன். இன்னொரு நாள் எல்லாச் சுமைகளையும் நெஞ்சிலிருந்து இறக்கி எடுத்துச் செல்லடி பெண்ணே என்று கொடுத்துவிடவேண்டும். என்னை உன் அண்ணன்போல் கருதி உளந்திறந்து பேசு என்றாலும் மரக்கட்டையைப்போல் நிற்கிறாள். இவளைப் புரிந்து கொள்வதே பெரும்பாடாக இருக்கும் போலிருக்கிறதே...

## தூறுதல்: மலையாளத்தில் வேறுபொருள்

இரு நாட்களாக இடையீடில்லாத மழை, கனத்துப் பொழிவதில்லை. கசிந்து தூறுகிறது. தூறுதல் என்பதற்கு வெளியே (இரண்டுக்கு) போதல் என்ற பொருள் மலையாளத்தில் உளதாம். நாகர்கோயில் பகுதியிலும் இப்பொருள் வழங்குவதாகத் (தமிழில்) தெரிகிறது. ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாகத் திருவனந்தையில் இருக்கிறேன். இங்கு வரும்போது மலையாளத்தில் பாடல்கள் எழுதவும் மேடையில் பேசவும் தக்கநிலையில் மலையாள அறிவுபெற வேண்டுமென்றெண்ணியதுண்டு, வந்தபின்னோ தேவையின்மையால் ஒருவிதப் புறக்கணிப்பு ஏற்பட்டது. ஆய்வு வேலையும் அப்பக்கம் கவனத்தை விடவில்லை. ஆசிரியர் மமாவும் ஏனைத்தம்பிகளும் 'மலையாளத்தைப் படிக்கப் படிக்க' என்று எழுதுகின்றனர். போவதன்முன் ஓரளவாவது அறிவுபெற வேண்டும்...

## உள்ளுறை பற்றிய கட்டுரை

கு உள்ளுறை பற்றிய 'Suggestiveness A Study' என்ற கட்டுரையைப் படித்தேன். உழைப்பு தெரிந்தது. விளக்க வேண்டிய வைகள் சில விளக்கப்படவில்லை. பாடலாசிரியர் கூறாத சில இடங்களில் உரையாசிரியர்களே உள்ளுறை உவமங்களை (வருவித்து) உருவாக்கிக் கூறுவதாகக் கூறப்பட்டிருந்த கருத்திற்குச் சான்று காட்டப்படவில்லை. தொல்காப்பியர் உள்ளுறை

வகைகளாகக் குறிப்பிடுகின்ற உடனுறை உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்ற ஐந்தினும் உவமம் எனப்படும் உள்ளுறை உவமம் மட்டுமே விளக்கப்படுகின்றது. ஏனையவை பற்றிய குறிப்பு எதையும் காணோம்.

'உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பெனக் கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே' (238) என்பது தொல் நூற்பா. இறைச்சி குறிப்பு மொழி முதலிய கூறுகள் இன்னும் செம்மையாக விரிவாக விளக்கப்பெறல் வேண்டும், சங்க இலக்கியங்களில் மொத்தம் வருகின்ற உள்ளுறை உவமம் எத்தனை, இறைச்சி குறிப்புமொழி எத்தனை என்ற கணக்குக் கொடுத்து அதனடிப்படையில் இக்கட்டுரையை எழுப்பியிருந்தால் நன்றாக இருக்கும். உரையாசிரியர்களில் சிலர் உள்ளுறை உவமம் என்பதைப் பிறர் இறைச்சி என்று கூறும்நிலை உரைகளில் காணப் படுவதாக எனக்கு ஓர் நினைவு. அதை வாய்ப்பேற்படுங்கால் பார்க்க வேண்டும். உள்ளுறை உவமம் இறைச்சி முதலிய நுண் அமைப்புகள் பெரும்பாலும் மகளிர் கூற்றாக வரும் பாடல்களி லேயே வருதலை நோக்கவேண்டும். புறநானூற்றுப் பாடல்களையும் தன் கட்டுரைக்குப் பயன்படுத்திய கு அகம், புற இருதிணைப் பாடல்களுமுள்ள பரிபாடலை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று தெரியவில்லை. உள்ளுறைகள் இலக்கியத்தில் இடம்பெற்றமைக்கு மூன்று காரணங்கள் காட்டப்பட்டுள்ளன கட்டுரை தொடக்கத்தில் 1) நுணுகிய உணர்வாகிய காதல் மறைமுகமாக உணர்த்தப்பட வேண்டியமை 2) தமிழின் செழித்திருந்த இலக்கிய மரபு. 3) சங்கப் பாடல்கள் நாடகத் தனியுரைகள் (dramatic mondogics) போன்றிருத்தல். இறுதிக்காரணம் வினாதற்குரியது. தனியுரை உள்ளுறை பெற்றுவரும் இன்றியமை யாமை உடையதா எனப் பார்க்கவேண்டும். பொதுவாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை தமிழில் இருந்தால் கருத்தும் புதுமையும் செறிவும் இன்மை நெற்றித்திலகமாய்த் தெரியும்.

## தமிழில் எழுதும் மடலில் 'Dear akka'

பி.தா. கு விற்கு ஒரு குறிப்பெழுதி கு-வின் மேசைமீது வைத்திருந்தது. தமிழில் எழுதப்பட்டிருந்த அக்குறிப்பின் தொடக்கம் Dear akka என ஆங்கிலத்தில் இருந்தது. இரண்டாண்டு காலம் அப்பெண்ணின் செவியில் விழுந்த என் சொற்களால் எப்பயனும் விளையவில்லையோ என்றெண்ணி வருந்தி அதைக் கூப்பிட்டுக் கேட்டேன். அதன் வீட்டிலும் சூழலிலும் தமிழைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. தானே வீட்டாரின் விருப்பமின்மையோடே தமிழ் படிக்க வந்ததாகக் குறிப்பிட்டது. எப்படியிருந்தாலும் தமிழில் எழுதும் மடலில் எல்லாமே தமிழில்

எழுதினால் என்ன கெட்டுப் போய்விட்டது என்று கேட்டு அனுப்பினேன். பொதுவாகக் கிறித்துவர்களிடைத் தமிழ் உணர்வைத் தேடவேண்டியிருந்தது.

*(20.10.67)*

◆

## சொற்பயிற்சி மன்றம்

தமிழ்த்துறையில் 11 மணிக்குச் சொற்பயிற்சி மன்றம் தொடங்கியது. என் முயற்சியால் இவ்வாண்டு ஏற்பட்ட புதிய அமைப்பிது பயனுடையது. இன்று நிகழ்ந்த கூட்டம் இரண்டாவது. மாணவர் நால்வரும் மாணவியர் இருவரும்பங்குபெற்றனர். மாணவர்களில் முதலாண்டு பரமசிவத்தின் பேச்சு என்னை நெகிழ்த்தியது. 'புரியவில்லையே ஏனோ' என்ற தலைப்பில் இறைவன் படைப்பின் புதிர்களை மையமாக வைத்து மொழி யிலும் பொருளிலும் பண்பாடு மிளிர உலகின் கயமைகளெண்ணி கசியும் ஒரு நெஞ்சத்தை அவர் பேச்சு காட்டியது. மேலை அறிஞனொருவன் பட்டப்பகலில் கொளுத்தும் வெயிலில் கையில் விளக்கோடு வழியில் எதிர்ப்படுகின்ற ஒவ்வொருவர் முகத்தையும் உற்றுப் பார்த்துச் செல்ல அவனைக் கண்டவர் என்ன பைத்தியக் காரர்போல பட்டப்பகலில் விளக்கெடுத்து வீதியில் எதைத் தேடுகிறீர்' என்று கேலிபேச அவரோ 'நான் மனிதரைத் தேடுகின்றேன்' என்றாராம். எவ்வளவுப்பொருள் பொதிந்த கூற்றது! அவரைப்போல தமிழுணர்வும் பண்பாட்டுச் செழுமையும் உடைய நெஞ்சங்களைத் தேடிக்கொண்டிருக்கின்ற எனக்கு ஒரு மணியாகக் கிடைத்துள்ளார் மாணவர் பரமசிவம். கூட்டம் முடிந்து பின் பேச்சு எப்படி என்று வந்து கேட்ட அவரிடம் மேல் எழுதியதைத் தான் சொன்னேன். மாணவியர் தாயம்மாள் வேல் இருவரும் பேசினர். தாயம்மாள் நெஞ்சில் நடுக்கமிருந்தமை தெரிந்தது. எண்ணுவதைத் தெளிவாக எடுத்துரைக்க இயலவில்லை. ஆனால் பேசற்கு வேண்டிய துணிவும் ஆர்வமும் சொல்விரைவும் குரல் தெளிவும் உள்ளன. முயன்றால் விரைவில் முன்னேறலாம்.

*(21.10.67)*

◆

## என்னடா நெஞ்சம் இது

பாவேந்தரின் ஆத்திசூடியை உரையோடு எழுதிமுடிக்க மணி 5½க்கு மேலானது. பின் புல்வெளியில் சிறிது ஓய்வெடுத் தேன். நெஞ்ச நிலையின்மையைப் பற்றிப் பாட்டெழுதும் எண்ணம் திடுமெனக் கருக்கொண்டது. எண்ணக்கரு பாட்டுக் குழந்தையாய்

முழு பிறப்பெடுக்க மணி 9 ஆனது 'என்னடா நெஞ்சமிது' என்ற தலைப்பில் அப்பாட்டை எழுதிக்கொண்டேன்.

என்னடா நெஞ்சமிது! சின்னேரம் வான்முகட்டில்
எண்ணத் தொலையாத எத்தனை எத்தனையோ
பென்னம் பெரிய பிறரால் இயலாத பீடுதருஞ் செயல்கள்
பின்வருவோர் நெஞ்சில் பெயர்பொறிக்கும் நற்செயல்கள்
இன்னே தொடங்கி இனிதே செயவேண்டும்
என்னும் நினைவில் இறக்கைகள் தாம்விரித்துச்
சின்ன மணிக்குயிலாய்த் தேன்வழியும் பாட்டிசைத்துத்
தெம்பாய்ப் பறந்து திமிராய்த் திரிகிறது!
பின்னைப் பெரும்பொழுதில் விண்ணைத் துறந்துவிட்டுப்
பேசினால் நாஅழுகும் பீழை பல நிறைந்த
மண்ணில் சிறுகோழி குப்பை மலக்குழியில்
வாய்க்கும் புழு பூச்சி மற்ற இழிபொருட்காய்ச்
சின்னஞ் சிறிய சிவந்திருக்கும்தன் காலில்
சீய்த்துக் களிப்பதைப்போல் செம்மையிலாப் புன்நினைவில்
என்னடா நெஞ்சமிது! இன்பத்தைக் காண்கிறது!
எச்சில் இலைநாய்போல் ஏனோ குரைக்கிறது?
மின்னும் தளிர்மெத்தை மீது துயின்றெழுந்து
மெல்ல மலர்க்கிண்ணத் தேனில் உடல்குளித்து
சின்னக் குழந்தையைப் போல் தெற்கில் இருந்துவரும்
தென்றலென நெஞ்சம் சிலநாள் தவழ்ந்திருக்கும்
பின்னை ஒருநாள் பேரிரைச்ச லோடெழும்பிப்
பேணும் மரங்கள் பிறசெல்வம் தானழித்து
'என்ன இனி உளது?' என்னும் கொடும்புயலாய்
என்னடா நெஞ்சமிது! சீறி இரைகிறது!
சின்ன மணிக்குயிலா? சீய்கோழி தானிதுவா?
தென்றல் இளங்காற்றா? சீற்றக் கொடும்புயலா?
என்ன இது? நெஞ்சம் இரும்பா? நறும்பஞ்சா?
இல்லை கருங்கல்லா? இதழ்விரித்த மென்மலரா?
பொன்னியின் நீரா? பொசுக்கும் எரிமலையா?
புள்ளிமான் தானோ? கொலைசெய் புலிப்போத்தோ?
என்னடா நெஞ்சமிது! இத்தனையும் சேர்ந்ததுவோ?
எண்ணியெண்ணிப் பார்க்கின்றேன்: ஏதும் புரியவில்லை!

பாடலை எழுதி முடித்தபின் சௌராட்டிரா சென்று உண்டேன்.

(22.10.67)

◆

## பாலரசுவின் மடல்

பாலரசு மடல் விடுத்தார். 12.10. முதல் 15.10 வரை ஊர் சென்று அண்ணன் மற்ற உறவினருடன் மணத் தொடர்பாக பேசியதாக எழுதினார். மடலில் சிறு பகுதி 'முன்பெல்லாம் என் விருப்பத்திற்கே விட்டுவிடுவேன் என்று கூறிய அண்ணன் இன்றுதான் பாசம் என்ற ஒன்றையே பற்றியிருப்பதாகவும் நான் பாசம், நிலை (அந்தஸ்து!) என்ற இரண்டுக்கும் இடையே தவித்துக் கிடப்பதாகவும் கூறினார். 15.10.67 அன்று மாலை 6½ மணி அளவில் நம் தோட்டம் அருகிலுள்ள ஆற்றுமணலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது அழுதார். 25 ஆண்டுகளாக என்னை வளர்த்து ஆளாக்கிய பாசம் அழுதது. வெளியிடத்தில் அதுவும் சென்னை போன்ற இடங்களில் நான் மணம் புரிந்து கொண்டால் குடும்பக் கட்டுக்கோப்பை விட்டுவிலகி ஓடிப்போவேனோ என்று அஞ்சுகிறார். அதிகம் படித்த பெண் கூடாது என்றார். சொந்தத்தி லிருப்பது நல்லது என்றார். ஆனால் சொந்தத்தில் பெண் ஓரளவுக்குப் படித்த பெண் இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறார். திருச்சி வட்டாரத்திலேயே பெண்கிடைத்தால் நல்லது என்றாலும் அங்கு பெண் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போது பெண் கொடுக்க இசைபவர்கள் மூவர். ஒருவர் திரு. சி. மற்றொருவர் திரு. வெ. இன்னும் ஒருவர் திரு. சு. என்பவர். மூவரும் ஐ.ஏ.எஸ். முன் இருவர் பற்றியும் நீங்கள் அறிவீர்கள். பின்னவர் தென்னாற்காடு மாவட்டத்தில் 3 ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்தவர். அவரது இரண்டாம் பெண் M.Sc., முதல் ஆண்டு 'Home Science' படிப்பதாக அறிந்தேன். அவர் தன் முதல் பெண்ணை முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களின் மகனுக்குக் கொடுத்துள்ளார்.

மூவரும் நம்மைவிடப் பொருள் நிலையில் வசதியுள்ள வர்கள். அப்படிப்பட்ட இடத்தில் மணம் புரிந்தால் நம் குடும்பத் தையும் பெற்றோரையும் அண்ணன் அக்காவையும் பெண்ணும் அவள் குடும்பத்தினரும் மதிக்காமல் போய்விடுவார் களோ என அண்ணன் அஞ்சுகிறார். எனினும் சிவானந்தம் பெண்ணைப் பார்க்க சென்னைக்கு நவம்பரில் செல்வதாக அண்ணன் எழுதி யுள்ளார். மணத்தொடர்பாக எண்ணிப்பார்க்க வேண்டியவை எவ்வளவோ இருக்கிறது என்பதை மடல் காட்டிற்று.

## கருத்தரங்கில் சத்தியமூர்த்தி கட்டுரை

தமிழ்த்துறைக் கருத்தரங்கில் பாரதி சக்திதாசன் என்ற கருத்தை விளக்கி 'பாரதியார்' என்ற கட்டுரையை முதலாண்டு மாணவர் சத்தியமூர்த்தி படித்தார். இந்தக் கோணத்தில் பல

கருத்துக்களை முதன்முறையாக அவர் திரட்டித்தந்தது நன்றாக இருந்தது. பாரதியின் ஒன்றிறை, அறிவிறைக் கொள்கையைப் பற்றிக் குறிப்பிடாமல் அவன் எந்நேரமும் சக்தியின் அடியில் வீழ்ந்து கிடந்தவன் என்ற கருத்தை எழுப்புவதாகக் கட்டுரை அமைந்தது. உரையாடல் மிகவும் சூடாக இருந்தது. பாரதியை ஒரு கண்ணன் அடியான் என்ற நோக்கில் பார்ப்பதற்கும் நிறைய கருத்துக்கள் உள்ளன. அவன் நாமம் போட்டிருந்தது, பார்த்த சாரதியைப் பாடியது, கண்ணன் பாட்டு வரிசை என்பன போலப் பல காரணங்களைக் காட்டி இக்கருத்தை நிறுவலாம். ஆனால் எல்லாவற்றிலும் அவன் ஒன்றிறை, அறிவிறைக் கொள்கை உடையவன் என்ற நிலையில் அவனை நோக்கலே அவனுக்கும் நமக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

*(23.10.67)*

◆

## நாகர்கோவில் கல்லூரிச் சொற்பொழிவு: பாராட்டு மடல்

24 காலை கலித்தொகை வகுப்பு முடிந்ததும் தாயம் ஒரு மடல்தந்தது. நாகர்கோயில் இந்துக்கல்லூரியில் உரையாளராகப் பணியாற்றும் தன் தோழி மாணிக்கம் அம்மாள் 'நான் அங்குப் பேசிய பேச்சுப் பற்றி எழுதிய மடலது. என்னை ஒரு கருத்துக் குவியல் என்றும் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல தமிழ்ப் பேச்சைக் கேட்டதாகவும் எழுதியிருந்தது. மேலும் ஔவையார் வழி தமிழ்ச்சங்கமலர் பெற்று 'அலைகள்' நாட்குறிப்புத் தொகுப்பைப் படித்ததாகவும் நன்றாக இருந்ததாக வும் குறிப்பிட்டிருந்தது. நாகம்மாள் என்ற ஓர் ஆசிரியை (உரையாளர்) நான் அதிக நேரம் (1½ மணி) பேசியதாகவும் குறிப்பிட்டதாக அப்பெண் எழுதியிருந்தது. தேவையின்றி ஓரளவு சில இடங்களில் ஒலியெழுப்பிப் பேசியது உண்மைதான். இன்னும் நன்றாகப் பேசியிருக்கலாம் என்பதே என் கருத்து. இந்த மடலை எழுதிய பெண் என் பேச்சை ஒலிவிடாமல் கேட்டிருக்கிறது என்பதை மடலின் பிற பகுதிகள் காட்டின.

### நண்பர்கள் சிரிக்கச் சிரிக்க

பின் 3.20 வண்டியில் தவமணி, மணி, விசுவநாதனோடு கோவளத்திற்குச் சென்றேன். கடற்காட்சி அருமையாக இருந்தது. எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காது. குன்றின் மேல் நின்றும் நடந்தும் விழிகளால் கொள்ளை அழகை உண்டோம். வாங்கி வைத்திருந்த சிற்றுண்டியை மலைமேல், தென்னையடியில் இளங்காற்று தண்மையையும் கடலின் இசையையும் சுமந்துவந்து

மேனியைத் தழுவ அமர்ந்துகொண்டு உண்ணும்போதுதான் ஆகா! என்ன இன்பம். வானைக்கருமுகில் போர்வை மூடிக்கொண்டது. மழை முத்துக்கள் ஒன்றிரண்டு உதிர்ந்தன. கீழே பயணிகள் விடுதியை நோக்கி நடந்தோம். மைய அரசுப் போக்குவரத்து அமைச்சர் கரன்சிங் கோவளக் கடற்கரையைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். அவரையும் பார்த்தோம். அன்று இரவு அவரின் தாய் இறந்துபோனதாகப் பிறகு செய்தித்தாளில் பார்த்தேன். அவர் சென்ற சிறிது நேரத்தில் நல்ல மழை பிடித்துக்கொண்டது. பயணிகள் விடுதியின் முகப்பில் அமர்ந்தவாறே கடலில் பெய்யும் மழையைக் கண்டு கொண் டிருந்தோம். வளிநிலை நன்றாக இருந்தது. உடலில் கதகதப்பு. உள்ளத்தில் மகிழ்ச்சிச் சிலிர்ப்பு! வழிகின்ற உவகையில் சொற் களை வாரி இறைத்தேன். நண்பர்கள் சிரிக்கச் சிரிக்கக் கேட்டுக் கொண்டிருந்தனர். என் ஆசைகள் பலவற்றை எடுத்துச் சொன்னேன். இறக்கும் நிலையில் நான் படுக்கையில் கிடக்க வேண்டும். வேண்டியவர்கள் என்னைப் பார்த்து அழவேண்டும். அவர்கள் உண்மையிலேயே அழுகிறார்களா? எப்படி அழுகிறார் கள் என்பதைக் காணவேண்டும். தாய் குழந்தையைக் கையிலேந்திக் கொண்டு 'எங்கே அப்பா சொல்லு' எனக் கொஞ்சுவதைப் போல நானும் படுக்கையில் கிடந்து கொண்டு 'எங்கே அழு அழு' என ஒவ்வொருவரையும்அழச் செய்யவேண்டும் என்ற என் ஆசையைக் கூறினேன். நிறைய பேசினோம். மழை நின்றது. கடற்கரையில் அலையைக் கால்கள் அளாவச் சிறிது நேரம் ஓடிவிளையாடி னோம்.

*(28.10.67)*

◆

## 'சோழ நாட்டுப்புலி' – உருவகக் கதை

என்னையும் அவளையும் வைத்துத் திடுமென ஓர் உருவகக் கதை எழுதினேன். அது இது.

"அது ஒரு சோழ நாட்டுப்புலி. பிறக்கும்போதே அதற்கு வாலில்லை. இனத்திற்கே உரிய வால் அதற்கு இல்லாததால் ஏனைய புலிகள் அதை இழிந்ததாகக் கருதின. அந்தப் புலியோ வாலின்மையால் தன்னை உயர்ந்த இனமாகக் கருதியது. பிஞ்சுமன்று, கனியுமன்று, நல்லகாய். ஐந்தடி எட்டரை அங்குல நீளமுள்ள வலிய உடலில் தளர்ச்சி. வயிறு ஏறி இறங்கி இளைப்பைக் காட்டுகிறது. நடையில் துரும்பளவும் தளர்ச்சி யில்லை. அதன் கைகளாகிய முன் கால்கள் இரண்டையும் பின் கால்கள் துரத்துகின்றன. வாய் பிளந்தபடி இருக்கிறது. கண்களில்

சிறிதளவும் கடுமையில்லை. எட்டி இருக்கின்ற எதன்மேலோ விழியை நட்டவாறு விரைந்து செல்கின்றது. செல்கின்ற நிலம் சேரமண்.

வான்முகட்டில் கதிர்ச்செல்வன் தாங்க முடியாக் கொதிப் பால் தவிக்கிறான். அவனைப் பார்த்த நிலமகளும் துயரச்சூட்டில் வேகின்றாள். கால் சுடுவதைப் பற்றியோ மேல் எரிவதைப் பற்றி யோ கவலைப்படாத அந்தப் புலிக்குத் தணியாத நீர் வேட்கை.

வழியின் எதிரே வெறுமை. இருபக்கங்களிலும் பச்சை வண்ணம் கொட்டிக் கிடக்கின்றது. இடப்பக்கத்தில் ஒரு மலைமகள் பொறுமையோடு நின்ற வண்ணம் புலியைப் பார்க்கின்றாள். வாலில்லாத புலி என்பதால் இரக்கமேற்படுகிறது. அதுவும் கொளுத்தும் வெய்யிலில் எதையோ குறிவைத்துப் போகின்றதே என்று வருந்தி “களைத்த புலியே! களைத்த புலியே! இங்கே வா. என் மரக் கைகளின் அணைப்பில் கிடைக்கும் நிழலில் சற்று இளைப்பாறு'' என்று அழைக்கின்றாள். புலி இதைப் பொருட்படுத்தவில்லை. போடு போடென்று போகின்றது.

சிறிது தொலைவில் வலப்பக்கத்தில் நின்றவாறு வேறொரு மலைத்தாய் புலியை வரவேற்கிறாள். ‘பசிக் கொடுமையால் காதடைத்து வருகிறது இப்புலி என்றெண்ணிய அவளின் தாய்மை கனிந்த மார்பகத்திலிருந்து அருவிப்பால் சுரந்து வழிகிறது. “புலிமகனே! புலிமகனே! வா வா, பாலைக்குடி, பசி தீரட்டும். பயணந்தொடரலாம்” என்று அழைக்கின்றாள். புலியின் காதில் இத்தாய்மொழி வீழ்ந்ததாகவே தெரியவில்லை. புதுமிடுக்கோடு விரைந்து நடைபோடுகிறது.

வழியில் ஒரு சுனைமகள் பச்சை இலைப்பட்டாடையை உடுத்திக்கொண்டு தாமரை முகம் மலர வண்டு விழிகளில் மது தேக்கி இப்புலியைச் சுண்டி இழுக்க வேண்டுமென்று நின்று கொண்டிருக்கிறாள். வழக்கமாகப் புலிகட்குள்ள வாலும் கண்களில் கடுமையும் இல்லாததால் அப்புலிமேல் சுனைத்தை யலுக்கு நிறைமையல். புலியின் நீர்வேட்கையைப் புரிந்து கொண்டதில் அவளுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. தன்னிடம் உள்ள நீரைநாடி அப்புலி ஓடிவரும் என்று நம்புகிறாள். அது அவள் பக்கம் பார்க்கவே இல்லை. உடனே ‘புலி அன்பா! புலி அன்பா! எங்கே போகிறாய்? இங்கே வா, நிறைய நீர் தருகிறேன், தாகந் தீர்ந்ததும் தழுவி விளையாடுவோம்!’ என்று இழுமென் மொழியில் இசைக்கிறாள். கூர்மையான செவியையுடைய அப்புலி இப்போது செவிடாகிப் போய் விட்டதோ என்று ஐயப்படும் நிலையில் எதையும் காதில் வாங்கிக்கொள்ளாது ஓரிடத்தில் விழியை நட்டவாறு ஒட்டிய வயிறு ஏறி இறங்க ஓடிக்கொண்டிருக்கிறது.

சேர மண்ணில் கால்வைக்கத் தொடங்கிய சின்னேரத்தி லேயே வழியின் எதிரே ஓடிக்கொண்டிருக்கும் கரையில்லாத ஓர் ஆறு அதன்கண்ணில் படுகிறது. அவ்வாற்றின் நெளிந்து வளைந்து அசைந்து செல்லும் மெல்லலைகளின் அழகு புலியின் நெஞ்சைப் பறித்துக் கொள்கிறது. ஆறு 'என் மடியில் தவழ வா வா என அழைப்பதைப் போல் புலிக்கு ஒரு மயக்கம். அதனால் தான் மலைமகளின் நிழலையோ மலைத்தாயின் பாலையோ சுனைமகளின் நீரையோ புலி பொருட்படுத்தவில்லை.

புலி நடக்க நடக்க ஆறும் 'என்னைத் தொட உன்னால் இயலுமா? எங்கே, தொடு பார்க்கலாம்' என்று வேடிக்கை காட்டி நடந்துகொண்டே இருக்கிறது. புலிக்கு வேறு எந்நினைவும் இல்லை. ஆறு காட்டுகின்ற வேடிக்கையில் அறிவு மயங்கி 'எப்படியும் உன்னை அடையாமல் விடமாட்டேன். உன் நீரைக் குடித்து என் அகச்சூட்டையும் நீரில் குளித்து என் புறச்சூட்டையும் போக்கிக் கொண்ட பிறகுதான் எனக்கு வேறு வேறு என்று ஓடிக்கொண் டிருக்கிறது. வழி ஓடஓட என் பின்னே வா வா என ஆறும் ஓடிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு நேரம்தான் புலியால் ஓட முடியும்? தளர்ந்து தடுமாறி விழுகிறது. சின்னேரத்தில் எழுகிறது. மீண்டும் ஓட்டம்.

ஓடிக்கொண்டிருக்கும் வழி முடிகிறது. எதிரே சோலை ஆற்றைக்காணோம். ஆறு சோலைக்குள் போய் ஒளிந்து கொண்டதா? இருண்ட கண்களால் சுற்றுமுற்றும் பார்க்கிறது புலி. அப்போதுதான் சற்றுத் தொலைவில் வாலுடைய வேறொரு புலி வயிறு வீங்கிச் செத்துக்கிடப்பது தெரிகிறது. ஏமாற்றத்தோடும் ஐயோ என்ற இரக்க உணர்வோடும் நிற்க இயலாமல் பொத் தென்று விழுகிறது புலி. ஐந்தடி எட்டரை அங்குல நீளமுள்ள அந்தச் சோழ நாட்டுப் புலியின் உடலில் அசைவில்லை.

சேரநாட்டுச் சோலைக்குள்ளிருந்து வளையல் குலுங்கு வதைப்போல் நகைத்து 'நான்தான் 'கானல்' என்றது ஓர் பெண்குரல்.

(29.10.67)

◆

## நவம்பர் - 1967

### மீள்வதில் என்ன இருக்கிறது : நட்சத்திரக் கதை

*தினமணிக் கதிரில் சந்திரமௌலி என்பவர் (பாலரசின் நண்பராக இருக்கலாம்) எழுதிய 'மீள்வதில் என்ன இருக்கிறது' என்ற 'நட்சத்திரக்கதை'யைப் படித்தேன். நான் என் உணர்வுகளை அப்படியே எழுதியதைப் போன்ற அருமையான கதை. ஒருத்தியின் மாட்டு உள்ளத்தைக் கொடுத்துவிட்ட ஒருவனின் நெஞ்ச அழுகை முனகல்கள் ஒலிக்கின்ற இக்கதை உணர்வுப் படப்பிடிப்பு. ஆசிரியன் வாழ்வொடு உறுதியாகத் தொடர்புடைய கதை இது. சந்திரமௌலிக்குக் 'கதிர்' வழி மடல்விட வேண்டும்...*

### 'ஆலயம்' திரைப்படம்

*நண்பகல் ச.வே.சு. வீட்டில் உணவு முடிந்தபின் 'ஆலயம்' திரைப்படம் சென்றோம். சிறிய படம். 2½க்குத் தொடங்கி 5க்கு முடிந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஓர் அருமையான தமிழ்ப்படம் பார்த்த நிறைவு. தமிழ்த்திரை நிலையெண்ணி எரிந்து கொண்டிருக்கும் என் நெஞ்சில் ஓரளவு நீர் வார்த்தது இப்படம். ஓர் எளிய, இனிய, செவ்விய மனிதன் ஒருவனின் ஒருநாள் வாழ்வு படமாக்கப்பட்டுள்ளது. நேர்மை பிறழாது வாழ்கின்ற அவன் அதற்காகச் செய்யும் போராட்டங்கள், ஊசலாட்டங்கள், இறுதியில் செவ்விய இராமலிங்கம்பிள்ளையாகவே இறத்தல். இதுதான் கதை. சில கலை நுணுக்கக் குறைகள் இருந்தாலும் மனிதன் கடமையைச் செவ்வனே செய்யவேண்டும். மனச் சான்றுக்கு மாறுபட்டு நடக்கக்கூடாது என்ற மையக்கருத்து அருமையாக வலியுறுத்தப்படுகிறது. ஈடு இணையற்ற வாழ்க்கை வாழ்ந்த இராமலிங்கம்பிள்ளை என் முதுகில் தட்டிக்கொடுத்து 'தம்பீ! உனக்கு வரும் சிறு இன்ப துன்பங்களில் நெகிழ்ந்து மனச்சான்றுக்கு மாறுபட்டு நடக்காதே! பண்பைப் பெரிதென்று கருதும் உன் நெறியில் துணிந்து நட. கவலைப்படாதே' என்று சொல்வதுபோல் இருந்தது.*

## செயகாந்தனுக்குப் படுவீழ்ச்சி

*வியாழன் காலை ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் வந்த செயகாந்தனின் 'பாவம் பக்தர்தானே' சானகிராமனின் 'இசைப் பயிற்சி' பிலகரியின் 'இரு பிள்ளைகள்' முதலிய கதைகளைப் படித்தேன். செயகாந்தனுக்குப் படுவீழ்ச்சி. அண்மையில் வெளிவந்த செயகாந்தனின் கதைகள் நம்பிக்கையைத் தளர்த்து கின்றன. ஒரு பார்ப்பனர் பார்ப்பனரல்லாத சேரிவாழ் ஒருவனுக்கு இசை சொல்லிக்கொடுப்பதைப் பற்றிய 'இசைப் பயிற்சியும்' ஒரு தந்தையையும் அவரின் பணக்கார, ஏழைகளாகிய இரு பிள்ளை களையும் வைத்தெழுந்த 'இரு பிள்ளைகளும்' சிறப்பாயிருந்தன.*

## ஒன்றும் ஒன்றும் இரண்டுஃ இலக்கியமாகுமா?

*மோகன குமாரி இனியவை நாற்பது பயனிலக்கியம் என்று குறிப்பிட்டது. பயனிலக்கியத் தொடர்பான சில நல்ல கருத்துக் களை எழுதியிருந்தது. நான் இனியவை நாற்பது இலக்கியமாகுமா? வெறுமனே ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பதுபோல இது நல்லது இது நல்லது எனக் கருத்துக்களை எந்நயமும் இன்றி யாப்புக்குள் அடைத்துச் சொன்னால் இலக்கியமாகிவிடுமா என்று கேட்டேன். உடனே சவேசு அப்படிப் பார்த்தால் குறள் இலக்கியமாகுமா என்றார். நான் வள்ளுவர் அறங்கூறும்போதும் கலைநுணுக்கத் தோடு பல வகைகளில் கூறுகிறார் என்பதைச் சில குறள்கள் வழி விளக்கினேன்...*

## 'நாம் இறந்துபோனால் எப்படியிருக்கும்?'

*அவளைப் பற்றிய நினைவு அரித்துக் கொண்டே இருந்தது. பலநேரம் நாம் இறந்துபோனால் எப்படி இருக்கும் என்று எண்ணுவதைப்போல இன்றும் எண்ணினேன். யான் ஒரு நாள் இங்கு இறந்துவிட்டால் முறைப்படி செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் செய்து என் பிணத்தை ஊருக்கு அனுப்பியபின் இங்கிருக்கின்ற சிலரின் மனம் எப்படியிருக்கும்? துறை நிலை எப்படியிருக்கும்? ஏதோ ஒருவன் வந்தான், இருந்தான் ஏதேதோ பேசினான். இன்று எல்லோரும் போகின்ற இடத்திற்குப் போய்விட்டான் என்று எண்ணி ஓரிருவராவது வருந்துவார்கள் என்று எண்ணிப் பார்த்தேன். துயர்ச்சுமை நெஞ்சை அழுத்தியது.*

*(2.11.67)*

◆

## தமிழைப் புகழ்ந்த அமைச்சர் கோயா

மாலை பல்கலைக்கழகக் கல்லூரியில் வீரபத்திரனார் கல்வி உதவி நிதி அளிப்பு விழா நடைபெற்றது. அழைப்பு வந்ததாற் சென்றேன். அமைச்சர் கோயா பேசினார். இந்தியை விட இந்தியாவின் ஆட்சிமொழியாகும் தகுதி தமிழுக்கே உண்டு, வடநாட்டில் பீகாரில் சில பகுதிகளில் தமிழோடு தொடர்புடைய மொழியைப் பேசும்மக்கள் வாழ்கின்றனர். பலுசித்தானத்திலும் மலேயா, இலங்கை முதலிய பிற நாடுகளிலும் தமிழ் சிறப்பிக்கப் படுகிறது என்று பலவாறாகத் தமிழைப் புகழ்ந்து பேசினார்.

அடுத்து ஐஏஎசு சுவாமிநாதன் பேசினார். தமிழ்ச் சங்கம் ஆண்டு மலர் வெளியீட்டுவிழாவில் பேசியதை அப்படியே திருப்பிப்போட்டார். தனித்தமிழைக் கிண்டல் செய்தார். படிப்புக்கும் பதவிக்கும் தகுந்த தரத்தோடு பேச்சில்லை. மலையாளத்தையும் ஆங்கிலத்தையும் எல்லையின்றி கலந்து பேசினார். தமிழில் பேச அவர் படாத பாடுபட்டார். தமிழில் பேச இயலாமல் ‘அது கொண்டு அதனால் தன்னே, ஞான் சம்சரிக்கிறது’ போன்று மலையாள முறையில் பேசியபோது சிலர் நகைக்கவும் செய்தனர். கருத்துக்களை முன்வைத்து வாதிடாது பொருளற்ற வகையில் சில மொழிபெயர்ப்புப் பிழைகளை வைத்துக்கொண்டு அவர் பேசிவருவதை நுணுகிக் கேட்டேன். அந்தக் கூட்டத் தொடர்பில் ஒரு சொல்கூடக் கூறாது மலையாள அமைச்சர் தமிழை உயர்த்திப் பேசியபின், தமிழ் மாணவர்கள் நடத்தும் ஒருவிழாவில் தமிழன் என்று தன்னைச் சொல்லிக்கொள்கிற ஒருவன் தமிழைப் பேசத் தெரியாமல் தமிழ் மறுமலர்ச்சியைக் கிண்டல் செய்வதை எண்ணி என் நெஞ்சம் எரிந்தது.

மேடை கிடைக்கின்ற இடமெல்லாம் இதையே பேசி வருகின்ற இந்த ஆளுக்கு அறிவு புகட்டவேண்டுமென்று நினைத்தேன். கூட்டம் முடிந்ததும் மாணவர்களோடு அவரைக் கண்டு பேசினேன். ‘வாரும் ஒரு கூட்டத்தில் இருவரும் பேசலாம் நீர் கலப்புத் தமிழைப் பற்றிப் பேசும். நான் தனித்தமிழ் பற்றிப் பேசுகிறேன்’ என்றேன். முதலில் தயங்கிய அவர் பின் ஒப்புதலாகத் தலையாட்டினார். நான் உம்முடைய இரண்டு பேச்சுக்களையும் கேட்டேன். இந்தப் பகுதியில் நீர் இப்படிப் பேசுவது சரியன்று. தமிழையே சரியாகப் பேச இயலாத நீர் தனித்தமிழைப் பற்றித் தாழ்த்திப் பேசுவது கோழை ஒருவன் போர் தீது என்பதைப் போல் உள்ளது. ஆங்கிலத்தில் பேசுங்கால் பிறசொற்களைக் கலந்து தமிழில் பேசியதைப்போல் பேசுவீரா! இப்படிப் பேசுவதை யெல்லாம் விட்டுவிடவேண்டும்’ என்றேன்.

உணர்ச்சி துள்ளப் பேசிக் கொண்டிருக்கும்போது சேசுதாசன் வந்து இப்படி வந்து இங்குப் பேசக்கூடாது என்றார். 'நான் அவரைக் கேட்டுக் கொண்டுதான் பேசுகிறேன். நீர் உம் வேலையைப் பாரும்' என்றேன். எல்லா வற்றையும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த அவர் சென்றார். அந்த ஆள் இனி எந்தக் கூடத்திலும் இப்படிப் பேசமாட்டார். இந்த அடியே போதுமானது என்றனர். என்னுடன் சூழ்ந்துவந்த மாணவ நண்பர்கள், நேர்மைக்காகவும் நெஞ்சு சரியென்று சொல்வதற்காகவும் போராடுகின்ற வலுவற்ற கோழைகள் சிலர் விரிந்த விழிகளால் என்னைப் பார்த்தனர்.

இற்றைக்கல்வி எதைக் கற்றுக் கொடுக்கின்றது? எச்சில் இலையை நக்கித் திரியும் நாய்களைப் போல் வயிற்றை நிரப்பும் வழிவகைகளை, மானத்தைக் குழிதோண்டிப் புதைத்து அதன்மீது வயிறு வளர்க்கும் போக்கினைத்தான் கற்றுத் தருகின்றது. கொடுமை கண்டு கொதித்தெழ வேண்டிய இளைஞர்கள் கோழையராய் ஏனோதானோ என்ற புறம்போகிகளாய் வாழ்வதை என்னென்பது?

மறுநாள், ஓரிருவர் கல்லூரியிலேயே சாமிநாதனிடம் பேசி யிருக்கக்கூடாது. வீட்டில் பார்த்துத் தனியாகப் பேசியிருக்கலாம் என்று என்னிடம் சொல்லினர். சொன்னவர்கள் எப்படிப்பட்ட மறவர்கள் என்பது எனக்குத் தெரியும்! இந்தக் கோழைகளுக்கு என் செயலைப் பற்றிப் பேசுவதற்கே இம்மியளவும் தகுதியில்லை என்பதும் இதுவரை நேர்மைக்காகப் போராட வேண்டிய சூழலில் ஒரு சொல்லாவது உதிர்த்திருக்க மாட்டார்கள். ஒளிந்து ஒதுங்கிப் போய் இருப்பார்கள், இருக்கிறார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

வழியிலே கிடக்கின்ற வாழைப்பழத் தோலை எடுத்தெறிய மனமில்லாத 'பொதுநலத் தொண்டன்' ஒருவன் வீதியைக் கூட்டித் தூய்மைப்படுத்துபவனைப் பார்த்து 'அப்படிக் கூட்டியிருக்கலாம் இப்படிக் கூட்டியிருக்கலாம்' என்றானாம். வாய் இருக்கிறது. எலும் பில்லாத நாக்கால் எதைத்தான் பேசமுடியாது! கையாலாகாத கோழைகட்குத் திறனாய்வதில்தான் எத்துணை ஆர்வம்!

*(5.11.67)*

◆

## மொழியின் வழியேஃ முத்திரைப் பேச்சு

மாலை இடைநிலைக் கல்லூரியில் ச.வே.சு. தலைமையில் 'மொழியின் வழியே' என்ற தலைப்பில் பேசினேன். நாகர்கோயில்

பேச்சுப் பொருளையும் சிறிது மாற்றி நயஞ்சேர்த்து பேசினேன். ஒருமணி நேரத்திற்கு மேல் பேச்சு நீண்டது. உணர்வு வழிய உள்ளந்திறந்து பேசினேன். எனக்கு நல்ல நிறைவு இருந்தது. திருவனந்தையில் யான் பேசிய முதல் பேச்சு இது. முத்திரைப் பேச்சாகவும் அமைந்திருந்தது என்பது பேச்சின்பின் பலர் பாராட்டியதால் புலப்பட்டது. இவ்வளவு சிறப்பாகப் பேசுவேன் என்று எதிர்பார்க்கவில்லை என்றார் இகோ. ஆசிரியர் சனார்த்தனம் பலமுறை புகழ்ந்தார். நண்பர்கள் என்னைவிட மகிழ்ந்திருந்தனர். 'இதுபோன்று நான்கு சொற்பொழிவுகள் திருவனந்தையில் நிகழ்த்தினால் போதும். பெரிய மாற்றம் நிகழ்ந்து விடலாம்' என்று மறுநாள் வ.வே. சொன்னார். என்னைப்போல் நான்குபேர் இருந்தால் தமிழுக்கு எந்தக் குறையும் நேராது என்று தாயமும் மமாவும் கூறினர். எல்லாப் புகழ்ச்சியையும் கேட்டு மகிழ்ந்தேன். என் ஆற்றற்கு மீறிய என்னை அமிழ்த்திவிடக்கூடிய புகழ்ச்சியாயிருந்தால் நாணி ஒதுங்கும் என்மனம் என் தகுதிக்குரிய, மேலும் ஊக்குவிக்கும் புகழ்ச்சியை, பாராட்டை ஏற்றுக் கொண்டது. என் செயல் சிறந்தது என்பதற்கான சான்றிதழ் களல்லவா அவை? சான்றிதழ்க்காக நான் செயலாற்றவில்லை யென்றாலும் சான்றிதழ் செயலை முடுக்கி விடுகின்றதல்லவா?

*(6.11.67)*

◆

## ஔவையாளர் திருமண வாழ்த்து

ஔவையார் திருமண அழைப்பிதழ் விடுத்தார். கூட்டப் பேச்சைக் கேட்டதால் முன்பின் பழக்கமில்லாத எனக்கு அழைப்பு விடுத்திருந்ததை எண்ணி மகிழ்ந்தேன். அகவலில் ஒரு வாழ்த்து எழுதி விடுத்தேன். அது இது,

அந்தநாள் ஒருத்தி ஔவைப் பெயரினள்
எந்தநாள் முகிழ்த்தது என்றறி யாத்தமிழ்
செழித்திடப் பற்பல செய்தனள், இற்றை
விழித்திட லின்றி வீட்டினுள் முடங்கி
மொழியை நாட்டை முற்றிலும் மறந்து
கழியும் காலம் கணக்கிடும் மாதர்
நிலையை எண்ணி வருந்துமென் நெஞ்சம்
இலையின் ஊடே எழுந்தா மரையாய்
முகிலின் ஊடே முளைத்த மதியாய்
புகையின் ஊடே பொங்கொளிச் சுடராய்
அந்தநாள் ஔவை பைந்தமிழ் காக்க
வந்தனள் வந்தனள் வந்தன ளேஎனக்

கண்டது உம்மைக் கவின்மண மகளே!
வண்டிசை செந்தமிழ் வாவிஉம் நெஞ்சில்
ஆடித் திளைத்தே அகப்பொருள் தெளிந்து
நாடி உலகின் நன்மையைப் பேண
தேடித் தேர்ந்துன் செழுங்கை பற்ற
ஓடி வந்தார் உடலுரஞ் சான்ற
'அழகப் பர்'எனும் ஆற்றல் மறவர்!
பழகுதேன் தமிழைப் பயிற்றுக அவர்க்கே!
மல்லிகை நறுமணம், மழைநீர்த் தூய்மை
வெல்லாத் தமிழின் வீயா இளமை
எல்லாம் இயைக! இல்லறஞ் செழிக்க!
பொல்லாக் குறும்புசெய் புதல்வரைப் பெறுக!
ஆட்டுக தொட்டில்! அது பேரின்பம்
நாட்டின் மேன்மை வீட்டின் சிறப்பில்
நல்ல குடும்பமோர் பல்கலைக் கழகம்
என்பதை உணர்த்தும் வகையில் இருவரும்
மண்பதை சிறக்க வாழிய நன்றே!

*(27.11.67)*

◆

## டிசம்பர் - 1967

### முத்தாரத்தில் என் முதல் கதை

*முத்தாரத்தில் 'ஊசல்' என்ற என் முதல் கதை 'அழுதால் தீருமா?' என்ற தலைப்பில் வெளியானது. சில இடங்களில் மாற்றம் செய்திருந்தனர். நயமான சில பகுதிகள் கைவிடப்பட்டிருந்தன. இனி நிறைய எழுதவேண்டும். நேரம்தான் இல்லை. தீபத்தில் கழகத்தாரையும் தனித்தமிழையும் கிண்டல் செய்நிலையில் 'தொனி' என நா.பா. எழுதிய கதைக்கு மறுப்பாக அவரின் 'மொழியின்வழியே' குறிஞ்சிமலர் பொன்விலங்கை அடிப்படை யாக வைத்து ஒரு கதை எழுதவேண்டும் என்ற ஆவல் உள்ளது...*

### நா.பா.விற்குப் பாடற்கடிதம்

*நா.பா.விற்கு 'என்னடா நெஞ்சமிது' என்ற பாடலையும் 'அப்படியிருந்தால்' என்ற கதையையும் விடுத்து நான் எழுதிய மடற்கு இதுவரை மாற்றில்லை. 'இனிமேல் உங்கள் நெஞ்சில் ஒரு பூரணியோ ஒரு மோகினியோ சத்தியமூர்த்தியோ கருக்கொள்ள முடியுமா என ஐயப்படுகிறேன். தங்களின் நிகழ்காலப் போக்கை எண்ணிக் கவலைப்படுகிற பலரில் நானும் ஒருவன்' என்று நான் எழுதியிருந்தது நா.பா.விற்கு மருந்தாயிருக்கலாம்...*

### பதேர் பாஞ்சாலி

*சத்திய சித்ரேயின் கதைத் தொடர்ச்சியுள்ள 'பதேர் பாஞ்சாலி' 'அபராசிதா' நினைவில் நின்றன. ஒரு வங்காளக் குடும்பம் எப்படி நசிகிறது போராடுகிறது என்பதை உணர முடிகிறது. படம் பார்க்கும் உணர்வின்றி கண்முன் நிகழும் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு இருந்தது. உணர்வு நாடிகளைச் சில இடங்கள் அளந்துவிடுகின்றன. ஐயோ இப்படி ஆகிவிட்டதே என உள்மனம் அமைதியாக அலறுகிறது. பதேர் பாஞ்சாலியின் இறுதியில் கல்கத்தாவை விட்டுக் காசிக்கு அக்குடும்பம் ஒரு வண்டியில் கிளம்பும்போது அக்குடும்பத்தலைவியின் துயரந்தளும்பும் முகம்...*

படம் முடிந்து அறைக்கு வந்து சின்னேரம் வரை நெஞ்சில் துயர நமைச்சல்.

(11.12.67)

◆

## கானற்கனவுகள்

கணக்கிலடங்கா கானற்கனவுகளில் நினைவில் நிற்பன இரண்டு. மறைந்த வேலவன் உயிரோடு வந்து துறையில் உலவு வதாகவும் என்னோடு உரையாடுவதாகவும் ஒரு கனவு. கனவின் கங்கில் நடப்பது மெய்தானா என்ற ஓர் ஐயமும் இழையோடியது. சின்னாட்களின்முன் கண்ட இரண்டாம் கனவில் நான் மணமகன். மணப்பெண் என் அறைக்குச் சிறிது தொலைவில் உள்ள அந்தச் சிறு பார்ப்பனப் பெண். குறுகிய காலத்தில் வளர்ந்து நிற்கும் அப்பெண் மணக்கோலத்தில் என்னைப் பார்த்து மகிழ்ச்சி நகை பூக்கிறது. நானும் மலர்கிறேன். எப்படித்தான் இக்கனவு வந்ததோ? அப்பெண்ணைப் பற்றி நான் இப்படி நினைத்த தில்லையே!

(11.12.67)

◆

## மாலைமுரசில் கதைத் தேர்வு

நீண்ட நாட்களுக்கு முன்பு மாலை முரசுக்கு விடுத்திருந்த என் முதற்கதை 'ஊசல்' வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டுளதாக வும் என் நிழற்படத்தை உடனே அனுப்பி வைக்க வேண்டு மென்றும் கேட்டு மடல் வந்தது. கதை முத்தாரத்தில் வெளியானது அவர்கட்குத் தெரியாது போலும். முத்தாரத்தில் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் வெளியிட்டதைப்போல மாலை முரசில் வெளியிடாது நான் கொடுத்த உருவம் சிதையாமல் வெளிவரும் என நம்புகிறேன். கலந்துகொண்ட முதல் கட்டுரைப் போட்டி பேச்சுப் போட்டி ஆகியவைகளில் யான் முதற்பரிசைப் பெற்றதைப்போல என் முதற்கதையும் கதைப்போட்டியில் வென்று இருபது உருபாயைக் கொண்டுவரப்போகிறது என்பதை எண்ணுகையில் நெஞ்சம் மகிழ்கிறது.

(12.12.67)

◆

## வேலம் வருகை

பிற்பகலில் அவள் வந்தாள். ஏதேதோ பேசினோம். எதையாவது பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்ற ஆவல்,

இருமருங்கும் என்முன் தான் எளியவளாவதன் மூலம் என்னையும் எளியவனாக்கி விடுகிறாள். கைபட்டால் குலைந்துபோகும் கனியாகக் கிடக்கின்றது என் நெஞ்சம். பிறர் கேட்காமலே காய் கனியானதும் தன் மணத்தை மற்றவர்க்குக் கொட்டிவிடுவதைப் போல என் நெஞ்சமும் அவளிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறது. அவளும் சொல்கிறாள். முன்பிருந்த அச்சமில்லை. முன்பைவிட நெகிழ்ச்சி இருக்கிறது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ? துணிவாகச் சிலவற்றைப் பற்றிப் பேசுகிறாள். அவளும் நானும் பேசிக்கொண்டிருப்பது சில புல்லியர்க்குப் பொறுக்க முடியாததாய் இருக்கலாம் என்பதை ஒரோவொருகால் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படி நாம் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து மற்றவர்கள் ஏதும் நினைக்க மாட்டார்களா' என்று முன்பொருநாள் நான் அவளைக் கேட்டேன். 'மற்றவர்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு போகட்டுமே! என்றாள். அந்த அளவுக்குத் துணிவு வந்திருக்கிறது.

*(12.12.67)*

◆

## இயற்கைக் காட்சி

ஒருநாள் காலை அறையின் முன்னே நின்றவாறே சுற்றுப்புற இயற்கையை உற்றுநோக்கிக் கொண்டிருந்தேன். தொலைவில் கிழக்கே தோன்றும் குன்றச்சாரலில் வெண்புகை யெனப் பனிப்படலம் அடைகாத்துக் கொண்டிருந்தது. பக்கத்தே தென்னைகளும் பிற மரங்களும் பசுமை பூத்து நின்றன. ஏற்றமும் இறக்கமுமான நிலத்தில் எத்தனையோ வகையில் எத்தனையோ வீடுகள்! எத்தனை வகையான மனிதர்கள்! எதை எதையோ எண்ணியவாறே அறையில் முகப்பை நோக்கினேன். அங்கே தரையில் ஏழெட்டு எறும்புகள் சேர்ந்துகொண்டு ஓர் இறந்துபோன பெரிய பூச்சியை இழுத்துக் கொண்டிருந்தன. 'அறைக்குள்ளிருந்து வெளியே கொண்டுவரவேண்டும். இடையே நிலைப்படி! எவ்வளவு எளிதாக ஒன்றுபட்டு அப்பூச்சியை வெளியே இழுத்து வந்தன! ஒற்றுமையின் வலிமையை என்றும் என் கண்முன் கொணரும் அக்காட்சியை விழியை வாங்காது பார்த்தேன். நெஞ்சில் பதிந்துகொண்டது. மாந்த வாழ்வின் படிநிலை வளர்ச்சியை ஒவ்வோர் உயிரிலும் காணலாம் போலும்! விலங்குகளினின்றும் உயர்ந்தவனல்லவா மனிதன்! ஆதலால்தான் அவைகட்கியல்பான இனிய பண்புகளை விட்டுவிட்டான் போலும்!...

## 'கண்ணன் வந்தான்' சிறுகதை

*'ஊசல்' எனும் என்முதல் கதைப்படைப்பு 'கண்ணன் வந்தான்' எனும் பெயரில் 23.12. மாலைமுரசில் (நெல்லை) வெளியானது. எவ்வளவு நேரம் எண்ணிப்பார்த்து இருபொருள்பட நான் தலைப்புக் கொடுத்தேன். எளிதாக மாற்றிவிட்டார்களே! முத்தாரத்தில் 'அழுதால் தீருமா?' என்பது தலைப்பு. எழுதுபவனின் நெஞ்சம் அவன் கதையில் இருக்கவேண்டாமா? வெளியிடு பவனின் விருப்பு வெறுப்பை ஏற்றிக்கொண்டல்லவா எழுத் தோவியம் இடம்பெறுகிறது. மாலைமுரசின் நற்றமிழ்ச் சொற்களை நீக்கிக் கொலை செய்து என் முதலெழுத்தையும் 'ரா' ஆக்கி வெளியிட்டிருந்தான். பார்த்ததும் பற்றி எரிந்தது. பணம் விடுத்தால் அதைத் திருப்பி அனுப்பிவிடலாமா என்றெண்ணினேன்.*

*(24.12.1967)*

◆

## மாப்பிள்ளை பார்ப்பு

*ஆறு மணி அளவில் வந்தனர். பலவற்றைப் பற்றிப் பேசினோம். பெண்ணின்தாய் அண்ணியொடு பேசிக்கொண் டிருந்தார். வழக்குரைஞர் அவரை அழைத்து என்னை அறிமுகப்படுத்தினார். அமைதியும் பொலிவும் வாய்ந்த தோற்றம்! சிவந்தநிறம். ஏறிய நெற்றியில் குங்குமப்பொட்டு. குழலை வாரி முடித்திருந்தார்கள். இதழ்க்கடையில் ஒரு கனிவுச் சிரிப்பு. என்னை அவர்கட்கெதிரே, நாற்காலியில் அமரச் சொன்னார்கள். எப்படி இருக்கிறான் ஆள் என்று பார்க்க வேண்டாமா? இத்தனை ஆண்டுகளாகப் பெற்று வளர்த்துப் பேணும் மகளை ஒப்படைக்கத் தகுந்தவன் தானா? பொலிவான தோற்றமுடையவனா? மகளுக்கு இணை பொருத்தமாக இருக்குமா என்றெல்லாம் பார்க்க வேண்டியவர்களாயிற்றே! பார்த்தார்கள். பேசினார்கள். என்னை அளவிடுவதைப்போல் என்னிடம் பேச வேண்டாத சிலவற்றையும் பேசினார்கள்.*

*இந்த அளவுக்குப் பரந்த பழக்கமும் உரையாடுந் திறனும் உடையவனாக நான் இருப்பேன் என்று அவர்கள் எதிர்பார்க்க வில்லை. நெஞ்சம் திறந்து வீட்டுநிலை என் கொள்கைகள் பற்றியெல்லாம் பேசினேன். சாதி அடிப்படையில் உங்கள் வீட்டில் வந்து பெண் பார்ப்பதே எனக்குப் பிடிக்கவில்லை. வேறு சில தகுதிகளடிப்படையில்தான் உங்கள் வீட்டுக்குப் பெண்பார்க்க வந்தேன்' என்றேன். 'அதனால்தான் வேறு சாதிப்பெண்ணை நான் எங்கே மணந்து கொள்வேனோ என என் அப்பா அச்சப்படுவதாக வழக்குரைஞர் சொன்னார். தாங்கள் சாதகப்பொருத்தம் பார்க்க*

வேண்டும் என்றும் அது பொருந்தியிருந்தால் நான் பெண்ணைப் பார்க்கலாம் என்றும் சொன்னார்கள். சாதகத்தில் எனக்கு நம்பிக்கையில்லை என்பதைக் கூறி என் திருமணத் தொடர்பாக சாதகம் பார்க்கப்பட்டு அதனால் தடையேற்பட்டால் அதை இழிவாகக் கருதுவேன் என்பதை வெளிப்படுத்தி உங்களுக்கு அதில் நம்பிக்கை இருந்தால் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். சாதகமெல்லாம் பொருந்தியிருக்கும் நீங்கள் ஊர்க்குப் போங்கள். எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம் என்றார் வழக்குரைஞர். மூத்த பையனும் நன்றாக உரையாடினான். இலக்கிய நெஞ்சமும் ஆர்வமும் உடையவன் என்பதை அறிந்து கொண்டேன். என் நெஞ்சவலுவின்மை, இதழ்களில் நான் எழுதுவன பற்றியெல்லாம் தேவையில்லாமல் காலில் விழுவதைப் போல் பேசச் செய்தது.

*(27.12.67)*

◆

1968

# சனவரி - 1968

## மாணவர்கள் திருச்சி வருகை

31 காலை மாணவமாணவியர் ஆசிரியர் க.சு. அனைவரும் திருச்சி அடைந்தனர். வண்டி வந்தபோது வரவேற்க நான் இல்லை. கந்தசாமி எல்லோரையும் வரவேற்று வெளியே அழைத்து வரும்போதுதான் நானும் சாத்தையாவும் நிலையம் சேர்ந்தோம். பின் அரவரசும் வந்தார். அன்று திருவரங்கம் கல்லணை, மலைக்கோட்டை முதலிய பகுதிகளைக் காட்டினோம். பொழுது இனிதாய்ப்போனது. அவளை அரவரசு நான் அறிமுகப் படுத்தாமலே அறிந்துகொண்டார். நண்பகல், இரவு உணவு வீட்டில்தான். அண்ணி செல்வி முதலியோர்க்கு நிறைய வேலை வீடோ குறுகியது சிறியது. எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உண்ணற்கு இடமில்லை. எப்படியோ சமாளித்தோம். அவளும் தாயமும் அண்ணியிடம் நிறைய பேசினார்களாம். என் வழியாக அண்ணியைப் பற்றி அவர்களும் அவர்களைப் பற்றி அண்ணியும் ஓரளவு அறிந்திருக்கிறார்கள். நண்பர்களும் அவர்களிருவரும் நன்றாகப் பழகியதாகச் சொன்னார்கள். சாத்தையாவிற்கு ஒரு மயக்கம். அவரைப்பற்றி அவர்களிடம் நிறைய சொன்னதாகக் கந்தசாமி சொன்னார். மாந்தர்களுக்கு இயல்பாக ஏற்படும் நெகிழ்ச்சிதானே.

*(1.1.1968)*

◆

# மார்ச் - 1968

## மாநாடு பற்றிய மதிப்பீடு

சென்னை சேர்ந்ததும் மாநாடு முடிந்து 12 இரவு சென்னையினின்று கிளம்பியதும் அதற்கிடையில் நிகழ்ந்தவை களும் பெருங்கதைகள். மாணவர்களை அழைத்துச் சென்றதால் எனக்குப் பல தொல்லைகள், உடல் நலமில்லா நிலை; ஓயா அலைச்சல் வேறு. தாங்க முடியா மனத்தொல்லை. மாநாட்டு நிகழ்ச்சிகளில் சரிவரப்பங்கு பற்ற முடியாத நிலை. முதல் இரண்டு நாட்களில் எல்லா நிலைமைகளையும் சரியாக்கிவிட்டு ஓரளவு மாணவர்களிடமிருந்து விலகினேன். மாநாட்டுப் பயணம் உலகின் சில பகுதிகளை எனக்குக் காட்டியது. பட்டறிவு வாய்த்தது. பட்டுக்கெட்டு வருவதுதானே பட்டறிவு. எட்ட நின்று எரிந்து விழுந்தால்தான் இந்த மாணவர்கள் அஞ்சி ஒழுங்காக நடப்பார்கள். கிட்ட நெருங்கி ஒட்டிப்பழகி அன்பு பாராட்டில் உரிய மதிப்பையும் தரமாட்டார்கள் என்றுணர முடிந்தது. 'நாம் உண்டு நம் வேலை உண்டு' என்றிருப்பதை விடுத்து நாயினுங்கீழான பயல்களோடு நாயாய் நாம் ஏன் அலைவானேன் என்றெண்ணினேன். இவர்களுக்கா உடல் நலிய அண்ணி முதலியோர் உணவு படைக்க வேண்டும் என்று நைந்த என் மனம் அவர்களிடையேயுள்ள சில மணிகளை அறிந்து ஆறுதலடைந்தது...

மருத்துவமனைக்கும் மற்ற இடங்கட்கும் அலைந்தது போக எஞ்சிய நேரமெல்லாம் கருத்தரங்கில்தான் இருந்தேன். கருத்தரங்கின் காலை நிகழ்ச்சிகளே எல்லோரும் ஒருங்கிருந்து கேட்கும் நிலையில் அமைந்திருந்தன. பெரும்பாலான காலை நிகழ்ச்சிக் கட்டுரைகளில் தமிழ்க்குச் சிறப்புத்தரும் செய்திகள் பேசப்பெறவில்லை. மாறான செய்திகளே இடம்பெற்றன. இ.லெ.ப. கரு.இராமநாதனின் கட்டுரை போன்ற ஒன்றுமில்லாதவைகளும் அங்கு இடம்பெற்றன. மு.வ.வின் கட்டுரைத் தொடர்பில் நான் மூன்று கேள்விகள் கேட்டேன். சரியான விடைகளை அவர் தரவில்லை. அன்றைய கருத்தரங்கு முடிந்ததும் என்னை வெளியே கண்டு திருநாவுக்கரசு (வில்லவன் கோதை) என்ற ஒரு நண்பர் பாராட்டினார். ஓவியர் அய்க்கண் சுவைநீர் அருந்துமிடத்தில்

கண்டு 'உங்கள் வினாக்களுக்குச் சரியான முறையில் விடை தரவில்லையே மு.வ.' என்றார். நாம் என்ன செய்வது? அமீது 'முவவிடம் நான் கேட்ட இரண்டு கேள்விகள் சிறந்தன' எனப் பலமுறை பாராட்டினார். ஒவ்வொரு நாளும் மாலையில் பல பகுதிகளாகக் கட்டுரைகள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் படிக்கப் பெற்றன. நான் எல்லா நாட்களும் 'தமிழில் கட்டுரைகள்' என்ற பகுதிக்கே சென்றேன். முதல் நாள் தனிநாயக அடிகள் ஒரு கட்டுரை படித்தார். நல்ல கட்டுரை. நான் சில கேள்விகள் கேட்டேன். என்னைப் பாராட்டி என் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார். கருத்தரங்கில் நேரமாக ஆக ஒரே அமைதியின்மை! தலைவர் கூற்றுக்கு மதிப்பின்மை! வருந்தினேன். பின் எல்லா நாட்களுமே கருத்தரங்கில் குறிப்பாகத் தமிழ்ப்பகுதியில் ஒழுங்கில்லை. கண்டவனெல்லாம் கூச்சல் போட்டான். வாய்க்கு வந்ததையெல்லாம் சிலர் கேட்டனர். மாநாட்டில் நாம் படிப்பது ஆய்வுக்கட்டுரை என்ற நினைப்பில்லாமலேயே கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தன. படிக்கப்பட்டன. கேட்டவர்களுக்கும் இது கருத்தரங்கு என்ற நினைவில்லை. கட்டுரையின் சொல்லிலும் தரமில்லை. கேட்டவர்களின் செயலிலும் தரமில்லை. தலைவர் களைப் போட்டதிலும் அறிவில்லை. ஒருநாள் நான் வெளிப்படை யாகவே இது ஆய்வரங்கா அங்காடியா என்று கேட்டுவிட்டேன். அ.மு.பரமசிவானந்தம் ஐந்து மணித்துளி சிந்தனையைக் கூடத் தாங்கியிராத ஒரு கட்டுரையைப் படித்தார். இந்த ஆளெல்லாம் பேராசிரியராக இருக்கின்றாரே என்ற வியப்பு எனக்கு' நண்பர் கருமாணிக்கம், ஆசிரியர் சொக்கலிங்கம் ந.சஞ்சீவி, பார்த்தசாரதி ஆகியோரின் கட்டுரைகளில் சில ஐயங்களைக் கேட்டேன். ஒருநாள் கருத்தரங்கு முடிந்தபின் மாலையில் என்னை நாடிவந்து ஒருவர் 'உங்கள் கேள்விகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன. ஏதோ அருள் வேட்டல் இருக்கிறது. உங்களுக்கு எதிர்காலம் சிறப்பாக இருக்கும்' என்று பாராட்டினார். 'மிக்க நன்றி. நீங்கள் யார்' எனக் கேட்டேன். நான் பாலசுப்பிரமணியம் இங்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர்' என்றார். என் நெஞ்சம் நிறைந்தது. பெறவேண்டிய மகிழ்ச்சியை உதறித்தள்ளிவிட நான் என்ன முனியா? விழைவதும் விட்டேன் என்றிருக்க! இப்படி என் சுவடுகளை ஒரோவொருகால் பதிக்கின்ற வாய்ப்பை இம்மாநாடு தந்தது.

மாநாட்டில் நான் சிலவற்றை அறிந்துகொண்டேன். தமிழைப் பேசவோ எழுதவோ படிக்கவோ, பேசினால் புரிந்துகொள்ளவோ தெரியாத வெளிநாட்டானெல்லாம் தமிழறிஞனென அழைக்கப்படுவது, அவர்கள் சிந்தனை வடமொழிச் சார்பினதாய் அமைந்திருப்பது.

பெரும் பேராசிரியர்களெல்லாம் வெறும் பேராசிரியர்களாய் இருப்பது. ஊதிய சங்கை ஊதிய முறையிலே ஒலி மாறாமல் ஊதிக்கொண்டிருப்பது. அறிந்தோ அறியாமலோ ஆங்கிலத்திற்கு மனம் அடிமைப்பட்டுக் கிடப்பது. இதுவரை சொல்லி வந்ததற்கு மாறாக எதாவது சொன்னால்தான் அது ஆராய்ச்சி என்று 'அறிவியல் ஆய்வாளர்கள்' கருதுவது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த பேராளர்களெல்லாம் தமிழகத்தின் புறப்பகுதிகளிலிருந்து சென்றிருந்த என்னைப் போன்றவர்கட்குச் செய்து தரப்பட்ட வசதிகளை அறிந்து வயிறு எரிந்துபோனார்கள். தனிப் பார்வையாளர் அட்டையை வைத்துள்ள தமிழக ஆசிரியர் சிலர் பேராளரோடு எல்லா நிகழ்ச்சிகளிலும் இடையில் நுழைந்து கொண்டனர். விருந்துண்ணுவதற்காகத்தான் சென்னை வந்தனரோ என்னும் வகையில் பந்தியிலே நெஞ்சை வைத்திருந்த பலரைக் கண்டேன். எங்கெங்கே என்னென்ன பொருள்களைக் கொடுக்கிறார்கள் என்பதைக் கழுகுமூக்கு வியர்ப்பதைப் போலக் கணித்து வைத்திருந்தனர் பலர். கொடுத்ததையெல்லாம் குறைவறப் பெற்றுக்கொண்டனர். 'அப்பன் வீட்டுச் சொத்தா போகிறது. அகப்பட்டது ஆதாயம்' இலங்கையிலிருந்தும் மலேசியாவிலிமிருந்து வந்த எத்தனைப் பேர்கட்குத் தமிழ் தெரியும்? ஏதோ ஆர்வம்! தமிழின் பெயரைச் சொல்லியாவது ஊர் சுற்ற ஒரு வாய்ப்பு! நேரத்திற்கொரு உடையில் நெளிந்து வளைந்து செல்லும் இலங்கை மலேசியப் பெண்கள் இந்த எண்ணத்தைத்தான் உறுதிப்படுத்தினர்.

போனால் கிடைக்காத வாய்ப்பல்லவா? சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாமா? கருத்தரங்கில் படிக்கப் படுகிற கட்டுரைக்கும் தன்வினாவிற்கும் தொடர்பு இருக்கவேண்டு மென்பது என்ன கட்டாயம்? ஒரு பேராசிரியர் தான்செய்து வைத்துள்ள மருந்துகளை விளம்பரப்படுத்தினார். இன்னொரு பேராசிரியர் தனக்கு ஒரு வைத்தியரால் கிடைத்த பயனை விளக்கி னார். வேறொருவர் தான் வெளியிட்டுள்ள நூல்களின் பட்டிய லையடுக்கினார்! கருத்தரங்கா அது! கேலிக்கூத்தாக இருந்தது. பார்த்தசாரதி கிண்டலும் கேலியும் செய்துகொண்டே கூத்தடித் தான். ஒருநாள் சித்தர்களைப் பற்றிய கட்டுரை படிக்கப்பட்டது. கட்டுரையாளர் சித்தர்களின் கொள்கைகளே சித்தாந்தம் என்பது என்றார். அவன் 'மார்க்சிய சித்தாந்தம், இலெனினிய சித்தாந்தம் என்கிறார்களே. அவை சித்தர்களோடு தொடர்புடையனவா' என்று கேட்டான். பின் ஒருமுறை மூச்சை அடக்குவது பற்றிப் பேசும்போது மூச்சை அடக்குவதா மூச்சு அடங்குவதா எனக் கேட்டான். அடுத்து மாணிக்கம் 'ஊடல்' என்ற கட்டுரையைப் படிப்பார் என்றவுடன் தலைப்பு 'ஊழலா ஊடலா' என்றான். இப்படி ஒரே கேலிக்கூத்து! மாணிக்கத்தின் கட்டுரைத்தொடர்பில்

நான் கேள்வி கேட்கச் சென்று என் வினாவை ஒரு மணித்துளியில் முடித்துக் கொள்வேன் எனத் தொடங்கினேன். உடனே அவன் 'ஒரு மணித்துளியென்பது ஒரு நிமிசமென்பது நண்பர்க்குத் தெரியுமென்று நினைக்கிறேன்' என்றான். அவன் செய்த கேலிக்கூத்தையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு நல்லசினம்! 'அது அறிவுடையவர்களுக்கும் அறிவுடைமையோடு தொடர்புடையவர்களுக்கும் தெரியும்' என்றேன். ஒரே கைதட்டல். வாயடங்கிப் போனான். கோவி மணிசேகரன் 'என்ன இந்தப் போடுபோட்டு விட்டீர்களே ஆள் இனிமேல் மூச்சுவிடமாட்டான்' என்றார். ஒருநாள் மாமல்லபுரம் சென்றோம் (பேராளர்களெல் லாம்) வழியில் புலிக்குகை என்ற ஓர் இடத்தைப் பார்க்க இறங்கினோம். நானும் அருணாசலமும் தனியே புலிக்குகையின் வடப்புறத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். பார்த்தசாரதி வந்தான். 'என்னங்க பிச்சை நேற்று ஒரேயடியாகக் கோபப்பட்டு விட்டீர்களே' என்றான். 'பண்பு நிறைந்த பாத்திரங்களை உருவாக்கிய உங்களிடம் அப்பாத்திரங்களின் பண்பு நலம் இல்லாமை கண்டு வருந்து கிறேன்!' என்றேன். பொன்விலங்கையும் குறிஞ்சிமலரையும் புதையலாகக் கருதி அவைகளைப் படைத்த ஆசிரியனைப் போற்றிக் கொண்டிருப்பவனல்லவா நான்! அவன் இப்படியிருந்தால் எனக்கு எப்படி இருக்கும்! காவிரி ஆறென எண்ணிக்கொண்டிருப்பது கூவமாக இருந்தால்! என் விடையைக் கேட்டபின் 'சும்மா நகைச்சுவையா எல்லோரும் சிரிக்கட்டுமே என்று சொன்னேன்!' என்றான். நான் 'அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார், பெரும்பயன் இல்லாத சொல்' என்ற குறளைச் சொன்னேன். ஆள் அசந்து அடங்கிப்போய்விட்டான். அருணாசலத்திற்கு ஒரே வியப்பு. 'என்ன இந்தப் போடு போட்டுவிட்டீர்களே! நேற்றுக் கருத்தரங்கில் சொன்னதைவிட இன்றைக்கு அதிகம்! என்றார். இப்படி ஒரு வேடிக்கையான, நெஞ்சிலே நினைக்கத்தக்க நிகழ்ச்சி.

இன்னும் எவ்வளவோ எழுதலாம். பார்த்த நண்பர்கள் பேசிய நண்பிகள், இனிமேல் வாழ்நாள் முழுவதும் கலைநிகழ்ச்சி யோ விருந்தோ வேண்டாமென்னும் அளவுக்கு நடந்த கலை நிகழ்ச்சிகள் விருந்துகள் இவைகளைப் பற்றியெல்லாம் எழுதி நேரத்தை வீணாக்குவானேன்? கல்கி தோட்ட விருந்தில் எம்.எசு.சுப்புலெட்சுமியின் பாட்டும், கோயங்கோ விருந்தில் யாமினி நடனமும் அடையாறு கலாநிலைய ஆண்டாள் நாட்டிய நாடகமும் நெஞ்சை விட்டு' நீங்காதவை. மாநாட்டுத் தொடர்பான அண்ணாவின் பேச்சுக்கள் சிறப்பாயிருந்தன.

*(1.3.1968)*

◆

## அப்பாயி மறைவு

திடுமென 28.2. காலை 10½ மணி அளவில் 'அப்பாயிக்கு உடல் நலக்கேடு, உடனே கிளம்புக' என்றொரு தொலைவரி வந்தது. மாமா தங்கவேல் கொடுத்திருந்தார். 27 இரவு 10½ மணிக்குக் கொடுத்த தொலைவரி. ஏனோ சுணங்கி வந்தது. இதற்குள் அப்பாயி இறந்திருக்கலாம் என்றோர் எண்ணம். நெஞ்சம் அழுதது. வாழ்வாங்கு வாழ்ந்துதான் அது போகப்போகிறது என்றாலும் துணைவியையும் என்னையும் இணைத்துப் பார்க்காமல் போய்விட்டதோ என்றோர் புலம்பல். உடனே கிளம்பி நாகர்கோயில் மதுரை வழி உந்தில் இரவு 12 மணிக்குத் திருச்சியடைந்து கந்தசாமி வீட்டில் தங்கி மறுநாட்காலை 6 மணி அளவில் வீடு சேர்ந்தேன். உயிர் போகவில்லை. ஆளைக்கண்டு கொண்டது. உயிரோடு பார்க்கமுடிந்ததே என்ற ஆறுதல். சாத்துக்குடி வாங்கிச் சாறுபிழிந்து கொடுத்தேன். வியாழன் வெள்ளி இரண்டு நாட்களும் ஓரளவு நலமாக இருந்தது. இனிமேல் அதிக நாள் தாங்காது என்றநிலை. ஞாயிற்றுக்கிழமை அனந்தை திரும்பலாமென்றெண்ணினேன். சனிக்கிழமை பகலெல்லாம் உடம்பு எரிகிறது எரிகிறது என்று அப்பாயி படாத பாடுபட்டது. இந்தப் பாடுபடுவதைவிட அமைதியாக இறந்துவிட்டால் துன்ப மில்லையல்லவா என்றெண்ணினர். ஞாயிறு காலை 3 மணி அளவில் உயிர் பிரிந்தது. நான் அப்பா, அத்தை எல்லோரும் அருகிலிருந்தோம், நீர் ஊற்றினோம். குடும்ப முன்னேற்றத்திற்கு அடித்தளமாக இருந்து எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கி விட்ட உயிர் போய்வருகிறேன், விடைகொடுங்கள் என்று போய் விட்டது. என் திருமணத்தைக் காண வேண்டும் காணவேண்டும் என்று துடித்த என் அப்பாயி அதைக் கண்டு 'பேரா! நீயும் நின்துணையும் நீண்டகாலம்வாழ்க' என வாழ்த்தாமல் 'ஏப்பா! பிச்சை! ஏமாற்றிவிட்டாயே' என்று கேட்பதைப்போல் விடை பெற்றுக் கொண்டது. துயர் நமைச்சலால் நெஞ்சம் சின்னேரம் துடித்தது...

## அருப்புக்கோட்டை சண்முகவேலு மடல்

அருப்புக்கோட்டையிலிருந்து பி.சண்முகவேலு என்னும் புதிய நண்பர் 19.2.இல் ஒரு மடல் விடுத்திருந்தார். 21.2 இல் எனக்குக் கிடைத்தது. 12 பக்க மடல் அது. நண்பர் கால்நடை மருத்துவமனையில் உதவியாளராகப் பணியாற்றுகிறாராம். திருவனந்தபுரம் தமிழ்ச்சங்க மலரில் என் நாட்குறிப்புத் தொகுப்பான 'அலைகளை ஒருநாள் படித்தாராம். படித்ததும் ஒரு மயக்கம். ஊன்றிப்படித்து அக்கட்டுரையின் உயிரை அறிந்து

கொண்டிருக்கிறார் என்பதை மடல் திறந்து காட்டியது. என்னோடு தொடர்பு கொள்ள விழைகின்றாராம். மடல் விடவேண்டும். அலைகளைப் புகழ்ந்து எழுதியிருந்த பகுதிகளில் சில.

'...உண்மையிலேயே நாட்குறிப்பின் அழகு வடிவத்தை நாட்குறிப்பின் சிறப்பை, நாட்குறிப்பின் இலக்கணத்தை உங்கள் 'அலைகள்' எனக்குக் காட்டியது. தமிழ்ச்சுவை உங்கள் அலைகளில் கலந்து என்னைப் போன்ற தமிழ்(ப்) பற்றுடையோனுக்கு விருந்தளிக்கின்றது. உங்கள் கற்பனைகளை எண்ணங்களை உங்கள் அலைகள் எனக்குக் காட்டும்பொழுது என் நினைவு தாகூரை நோக்கி ஓடுகின்றது. அவர் பாடிய கீதாஞ்சலி போன்ற சிந்தனை ஓட்டத்தை உங்கள் கட்டுரையின் சில பத்திகள் காட்டுகின்றது...'

'...நான்தான் உங்களைத் தெரியாமல் கேட்கிறேன். இந்த இயற்கையான நடை, பிற மனிதர்களை(ச்) சிலிர்க்கச் செய்யும் நடை, தமிழ்கொஞ்சும் அழகு நடையை எங்குதான் கற்றீர்கள்... நீங்கள் காணவிரும்பும் அந்தப் புதுச் சமுதாயத்தைக் காண வேண்டும் என்ற வெறி என்னைப் பற்றியுள்ளது. ஒன்று கூறுகின்றேன். அச்சமுதாயம் அமைந்தே தீரும்...' இம்மடலைப் படித்ததும் நிறைபயன் கண்ட உழவன் போல் நெஞ்ச நிறைவு ஏற்பட்டது.

*(19.3.68)*

◆

# மே - 1968

## காலம் பதித்த சுவடுகள்

எடுத்த பணியை உரிய காலத்தே முடித்தாக வேண்டும் என்று எண்ணுகின்ற மனம்தான் ஏனோதானோவென்று எதிலும் பிடிப்பிலாது எதெதிலோ பட்டும்தொட்டும் ஊசலாடுகிறது. நானும் ஆடுகிறேன். அலைகிறேன். எதையோ தேடுகிறேன். தேடுவது கானல் நீரா? கல்மேல் எழுத்தா? மெய்ப்பொருள் காணும் அறிவு எங்கு ஓடிவிட்டது? சீரழித்து விடுமோ இக்கூத்தாடும் உணர்வு? என் நெஞ்சு மென்நெஞ்சு என்றும் அதனால்தான் கலையுணர்வின் மீது அலைகிறது என்றும் என்னையே நான் முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறேன்! அதை எண்ணித் துயர்ச்சிரிப்பு நெஞ்ச அரங்கிலே குமைகின்றது. காலில்லாத நான் நீள ஓட்டத்தில் பங்குபெறுவதா? பூத்துக் குலுங்கும் மாமரத்தின் மீமிசைக்கோட்டில் விண்ணும் மண்ணும் மஞ்சள் பூசிக் குளிக்கும் மாலைப்பொழுதில் கன்னங்கரிய சின்னக் குயிலொன்று காவியம் பாடுகின்றதாம். கேட்கவோ பார்க்கவோ என்னால் இயல்கின்றதா? செவிடனால் கேட்க முடியுமா? குருடனால் பார்க்க இயலுமா? ஊமையன் பாவேந்தரின் 'துன்பம் நேர்கையில்' பாட விழைந்தானாம். என் நிலையை எப்படிச் சொல்வது? மண்ணுக்கும் விண்ணுக்கும் இடைப்பட்ட அண்ட வெளியில் தண்ணீரால் ஒருகோட்டை கட்டிக்கொண்டிருப்ப வனை என்னென்பது! எண்ணங்களாலே எத்தனை மாளிகை! அவற்றில் இன்பமயமாகக் கழித்த பொழுதுகள் எத்தனை! வானத்து மின்னலாய்ப் பளிச்சிட்டு மறைந்த அந்நினைவுப் பொறிகள் மண்ணகத்து அகல்விளக்காய்க் கூட ஆகாமற்போய் விடுமோ என்ற அச்சம், அவலம்! ஆகாமற்போய்விடும்போல் தோன்றுகிறதே எனும் எண்ணப்புலம்பலில் அடிபட்டுத் தேம்பு கின்ற சிறு குழந்தையாய்ப் படுகிறபாடு! நெஞ்சம் வழிய நினைவுகளை ஏந்திக்கொண்டு ஒன்றிரண்டு எண்ணங்களைக் கூட உருப்படியாய்ச் செயற்படுத்த முனையாது நிலைக்குப் பொறை யாய்க் காலக்காற்றில் சிறு சருகாய்ப் பறந்து கொண் டிருக்கிறேன். என்ன செய்கிறேன்? ஏதோ செய்கிறேன். செய்ய வேண்டியதைச் செய்கிறேனா? செய்ய விரும்புவதைச் செய்கிறேன். செய்ய

விரும்புவதா? எதையும் செய்யாமல் எதையோ செய்து கொண்டிருப்பதாக என்னை நானே ஏமாற்றிக் கொண்டிருக் கிறேன். எதையும் ஒழுங்காகச் செய்யாமல் அதையே ஓர் ஒழுங்காக்கிக் கொண்டு தவிக்கின்ற என்னால் இந்நாட்குறிப்பையும் ஒழுங்காக எழுத இயலவில்லை. முழுமதி நாளில் முடங்கிக் கிடந்துவிட்டு மதிமறை நாளில் விழித்தெழுந்து ஒளியைக் காணோமே என்று வருந்திப் பயன்?

காலம் பதித்த சுவடுகள் சில மறையாத்தழும்பாக மனத்தில் பதிந்து விடுகின்றன. இடைக்காலத்தில் ஏற்பட்ட வடுக்கள் சிலவற்றை எழுதிப்பார்க்கலாம்.

(21.5.68)

◆

## பார்த்தோம் தவித்தோம் பிரிந்தோம்...

நெஞ்சங்கலந்த இருவரும் 'பார்த்தோம் தவித்தோம் பிரிந்தோம்' எனப் பிரிந்து போக வேண்டியதுதானா? பிரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. காலத்தின் கைப்பொம்மையாய் அழுகின்ற நெஞ்சோடும் வழிகின்ற கண்ணோடும் 'இதுதான் உலகம்' என்ற போலி அமைதியோடு பிரிந்துபோக வேண்டியது தானா? எதிர்காலத்தைப் பற்றி அவள் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாள் என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டு நாமும் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். நெஞ்சக்கலப்பால் வருகிற இன்பத்தைப் பலிகொடுக்க அவளுக்கு விருப்பமில்லை. குடும்பப் பிணைப்பை எப்படி அறுப்பது வீட்டார் அறிந்தால்... என்ற அச்சவுணர்வும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே என்ற ஏமாற்றத்துன்பமும் அவளைப் படாதபாடுபடுத்துகின்றன என்பதை உணர்கிறேன். பெற்று வளர்த்தவர்களை விட்டுப் பிரிய அவளால் இயலுமா என்பது ஐயமே! இருவரும் நெஞ்சந்திறந்து பேசவேண்டும். பேசியபின் இறுதியும் உறுதியுமான ஓர் முடிவுக்கு வந்தாக வேண்டும். வந்த பின்னே மற்றவற்றைப் பற்றி எண்ணவேண்டும் என்கிறது மனம்.

(21.5.68)

◆

## தவமணி நெஞ்சம்

குழந்தை நெஞ்சம் வாய்ந்த தவமணிக்கு வாழ்வுப் பொறுப்பு வரவேண்டும். தவமணியோடு நெஞ்சம் திறந்து சிலநேரம்

பேசியிருக்கிறேன். ஒருநாள் இரவு பழைய அறையில் (சுப்பிரமணிய அய்யர் வீடு) மணிப்பையன் தொடர்பை விளக்கிப் பேசினேன். பேசும்போது துடித்த நெஞ்சால் குரல் குழற விழி கண்ணீரைப் பொழிந்தது. என்றோ கண்களால் ஏற்படுத்திக் கொண்ட உறவு நெஞ்சைப் பிழிந்தது. இதையெல்லாம் மறந்து விடவா பேசினேன். நெஞ்சத்துடிப்பு அடங்கச் சின்னேரமானது. தவமணியும் என் நிலையைக் கண்டு துடித்துப்போனார். உணர்வைப் புரிந்து கொண்ட அவர் நெஞ்சம் ஓரளவு ஆறுதல் தந்தது. பின்னொருநாள் அன்றைய நெகிழ்ச்சியைப் பற்றி நாட்குறிப்பில் எழுதியிருந்த பகுதியைக் கொடுத்தார். படித்தேன். எனக்காக வருந்திய அவர் நெஞ்சில் என்னைப் பற்றிக் கொண்டிருந்த மதிப்பை அறிந்து வெட்கிப்போனேன். நண்பர்களெல்லாம் காட்டுகின்ற அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய வனாக நான் நடந்துகொள்கிறேனா என்றவினா நெஞ்சுள் வேதனை விளைத்தது. தவமணியும் நானும் சில இரவுகள் குடித்திருக்கிறோம். மயக்கத்திலிருந்த அப்போதுதான் உண்மை மனிதர்களாகவும் இருந்திருக்கிறோம். ஒளிவு மறை வில்லாது உள்ளந்திறந்து பேசியிருக்கிறோம். உலகத் துன்பத்தை யெல்லாம் ஓரளவு ஓட்டிவிட்டு மகிழ்ந்திருக்கிறோம். குடியைப் பற்றி உலகம் தவறாகக் கருதுகிறது. அவ்வுலகமே என்னை உயர்வாக நினைக்கிறது. தாங்கள் உயர்வாகக் கருதுகிற ஒருவன் தங்களால் தாழ்வு என்றெண்ணப்படும் ஒரு செயலைச் செய்தால்...? என் உள்ளம் குடியை இழிவாகக் கருதவில்லை. திரு.வி.க. சொன்னது போல் கள்ளார் அண்ணனென்றால் காப்பியார் தம்பி என்றே நினைக்கிறேன். குடியே குடியாகக் கொள்ளாமல் அதை ஒரு சிறப்பு நீருணவாகக் கொள்ளும் நிலை வரவேற்கத்தக்கதே. குடியை இழிவாகக் கருதாத நானே குமுகாயத்தளத்தினின்று பார்க்கையில் அதை கமுக்கமாகவே அச்ச ஐய உணர்வோடே செய்யவேண்டி யிருக்கிறது. எளிய மாந்தன் செய்யும் எல்லாச் செயல்களும் செய்துகொண்டே தன்னை உயர்ந்தவன் என்று எண்ணிக் கொள்வது எத்துணைப் பொய்ம்மை என்று நாணியிருக் கிறேன். தவமணி அவளை நான் விரும்புவதை அறிந்துகொண்டார். நான் வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. அவளின் தோழியும் தனக்கு உறவுப்பெண்ணும் இளமை விளையாட்டாளியுமான காந்தியைத் தவமணி நெஞ்சார விரும்புகிறார். இருவரின் நெஞ்சப் புணர்ச்சியையோ இணைப்பொருத்தத்தையோ எண்ணிப் பார்க்காத குமுகாயம் எங்கே துன்பநெருப்பில் பொசுக்கிவிடப் போகிறதோ எனத் துடித்துக் கொண்டிருக்கிறார். வாயிருந்தும் ஊமையாக நெஞ்சிருந்தும் பிணமாக எப்படி அந்தக் காந்தியால் இருக்கமுடிகிறது? 'பழிகாரி பார்த்தால்கூட ஓடிவிடுகிறாளே' என்று சினமுறுகிறார். அது பெண்களுக்கே உரிய பொதுப் பண்பு என்று

அமைதியடைய வேண்டும், கோழைகளுக்கு நெஞ்சத்தையும் கொடுத்து வைத்திருக்கிறானே; அந்நெஞ்சம் விரும்புவதற்கு மட்டுமா? துணிவதற்கல்லவா? விருப்பங்களெல்லாம் செயலா காமல் எண்ணங்களாகவே நின்றுவிட்டால் எதற்கிந்த உயிர் வாழ்க்கை? தமக்கும் துணிவில்லாது ஆண்களிடமிருக்கும் துணிவையும் அடிவேரோடு பறித்துக்கொண்டு ஆட்டிப்படைக்கும் பெண்மையே, நீ அழிந்துபோ!

*(21.5.68)*

◆

## தனித்தமிழ் இலக்கியக் கழகத் தமிழ்த்திருவிழா

சென்றமாத நடுவில் திருநெல்வேலி சென்றிருந்தேன். தனித்தமிழ் இலக்கியக்கழகத் தமிழ்த்திருவிழாவில் பேசுதற்கு வளன் அழைத்தார். உரையரங்கில் பாவேந்தர் பனுவல்கள் தழுவி 'மலர்ந்தது காலை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினேன். பேசிய எனக்கும் கேட்ட பிறர்க்கும் ஒரு நிறைவு கிடைத்தது. 'ஏடெடுத் தேன்' பாட்டை விளக்கியமுறை இனிமையாக இருந்ததாக வளன் சொன்னார். மறுநாள் காலைப் பாவரங்கிற்குத் தலைமையேற்க வேண்டிய முடியரசனார் வரவில்லை. என்னைத் தலைமையேற்கு மாறு நண்பர்கள் வேண்டினர். இரவுப் பத்து மணிவரை மறுத்தேன். ஆளைவிடவில்லை. பின் பொறுப்பை ஏற்று எழுத அமர்ந்தால் ஏதும் வரவில்லை. இரண்டு மணி வரை மரம்போல் இருந்தேன். பின்னரே ஒருவாறு எழுதினேன். இரவு உறக்கத்தைத் துரத்திவிட்டேன். சில விருத்தங்கள் எனக்குப் பிடித்திருந்தன. பாவரங்கிலும் பிற நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றிய நற்றமிழ் உணர்வுடை நண்பர் முத்தரசு எண்சீர் விருத்தங்கள் எல்லாம் கற்கண்டுக் கட்டிகள் என்று புகழ்ந்தார். எதிர்பாரா நிலையில் இப்படி ஒரு பொறுப்பு! அதையும் என்மனம் ஓரளவு நிறைவுற மற்றவர் மனம் மகிழச் செய்துவிட்டேன்.

*(21.5.68)*

◆

## சாத்தான்குளம் அ.இராகவனுடன் சந்திப்பு

விழா முடிந்த இரவு இளைஞர் இருவரோடும் அ.இராகவன் அவர்களின் வீட்டிற்குச் சென்றேன். அகவையான போதும் உழைப்பார்வமும் அரிய துறைகளினீடுபாட்டால் அன்னைத் தமிழுக்கு ஆக்கம் தேடவேண்டும் என்ற நோக்கும் கொண்ட அவர் சில ஆண்டுகட்குமுன்பே இந்தியா வந்தாராம். நிறைய கலைப்

பொருட்களைச் சேர்த்து வைத்திருக்கிறார். பாராட்டும் வகையில் பல கால நாணயங்களைச் சேர்த்துப் பாதுகாத்து வைத்திருக்கிறார். அவரின் சில பொருள்களும் விழாத் தொடர்பில் திறந்த கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. 'அணிகலன்கள்' என ஒரு நூல் வெளியிடக் கட்டுரைகள் பல எழுதி வைத்திருந்தார். அவற்றை வாங்கி முற்பகுதியை மேலோட்டமாகப் படித்துப் பார்த்தேன். தமிழ் இலக்கியங்களை அவர் நுணுகிப் பார்க்கவில்லை என்று தெரிந்தது. ஓரளவு அகலமிருக்கலாம் ஆழமிருக்குமா என்பது ஐயமே. அவளின் ஆய்வோடு ஒப்பிட்டு நோக்கினேன். அவளாய்வு கால நூலெல்லைக்குட்பட்டிருப்பினும் சிறப்பாயமைந்திருப்ப தாகவே எண்ணமுடிந்தது. தொல்காப்பியத்தில் 'காதொன்று களைதல்' 'ஊழணிதைவரல்' முதலிய மெய்ப்பாட்டியல் தொடர் பான கருத்துக்களை அவர் மேலோட்டமாகக் குறிப்பிட்டிருந்தார். அவளாய்வில் அது இடம்பெறவில்லை என்பதை உணர்ந்தேன். ஏறத்தாழ ஒருமணி நேரம் உரையாடிக் கொண்டிருந்து விடைபெறும்போது அவரின் நூல் வடிவிலமைந்த இரண்டு மூன்று கட்டுரைகளைக் கொடுத்தார். தொடர்புகொள்வதாக விடை பெற்றேன்.

*(21.5.68)*

◆

## ஆபிரகாம் அருளப்பனுடன் சந்திப்பு

மறுநாட்காலை பேரா. ஆபிரகாம் அருளப்பன் அவர்களை வீட்டில் வளனொடு கண்டேன். அமைதியும் நெஞ்சழகும் வாய்ந்தவர். யான் விழாவிற்கு வருவதறிந்து சி.சு.மணி எனும் இலக்கியக் கழகத் துணைத் தலைவரிடம் தன் சார்பெழுத்து பற்றிய நூலை என்னிடம் தருமாறு கொடுத்திருந்தார். அந்நூலில் யான் பிழையெனக் கருதிய ஓரிரண்டு கருத்துக்களைப் பேசும்போது அவரிடம் குறிப்பிட்டேன். பின் அதைப்பற்றி ஒரு மடல் எழுதுவதாகவும் சொன்னேன். விடைபெறுங்கால் ஆகுபெயர் - அன்மொழித்தொகை பற்றிய அவர் நூலையும் கொடுத்தார். இதுவரை அவரோடு மடல் தொடர்பு கொள்ள வில்லை. விரைவில் நூற்களைப் படித்த என் கருத்துக்களை மடல்வழி விடல்வேண்டும். ஊர் திரும்பும் காலைப் பொழுதில் வளன் வீட்டிற்குச் சென்று சுவையான புட்டு+பழம் உண்டேன். அவர் துணைவியையும் மகனையும் கண்டேன். துணைவியார் நிறைசூல் தாங்கியிருந்தார். இரண்டாண்டிற்குள்ளான இடைவெளிதான் இருக்கும். இந்த அளவிற்காவது இடைவெளி இருக்கிறதே என்பதினும் இன்னும் ஓரிரண்டாண்டு இடைவெளி யிருப்பின்

நன்றென நினைத்தேன். வளனுக்கு எழுதிய மடலிலும் அதைக் குறிப்பிட்டேன். என்ன நினைத்தாரோ?

(21.5.68)

◆

## வேலம் மடல்

கேட்டாங்கு 23.5. ஒரு மடல் எழுதித்தந்தாள்.தன் நிலையை ஓரளவு விளக்கியிருந்தாள்.

"இந்தத் தமிழ்த்துறைக்கு வரும்போது கற்கவேண்டும் என்ற ஆவலோடு, சுதந்திரமான, மகிழச்சியான உள்ளத்தோடு வந்தேன். இப்போது விடுபட முடியாத துயரச் சுமைகளோடு திரும்பிச் செல்கிறேன். துறைக்கு வருமுன் உங்களைப் பற்றிச் சிறிது அறிந்திருந்தேன். எங்களுக்குப் பாடம் சொல்லித்தர வந்தபோது உங்கள் பெருமையை நன்கு உணர்ந்துகொண்டேன். கதையிலே நான் பார்த்த அரவிந்தனையும் சத்தியமூர்த்தியையும் உங்களிடம் கண்டேன். சாதாரணமாக எல்லா ஆசிரியர்களிடமும் ஏற்படும் அன்பும் மதிப்பும் இருந்ததோடு, நான் விரும்பிய அந்த இலட்சிய வீரர்கள் சாயல் இருந்தமையால் இன்னும் மதிப்பு வளர்ந்தது. உங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தமைக்குப் பெருமை கொண்டேன்.

நீங்கள் முதன்முதலில் என்னிடம் உங்கள் மனநிலையைத் தெரிவித்தபோது எனக்குப் பெரிய அதிர்ச்சியாகத்தான் இருந்தது. உண்மையிலேயே எனக்கு எந்த எண்ணமும் இல்லாததால் இல்லை என்றேன். பின் நீங்கள் அதை மறந்திருப்பீர்கள் என்று எண்ணினேன். என்னால் உங்கள் உள்ளம் அசைவுற்றுவிட்டதே என்று வருந்தினேன். உள்ளம் புண்பட்டு விட்டது என்பதைப் பேச்சிலிருந்து உணர்ந்துகொண்டேன். உங்கள் துயரை என்னால் பொறுக்க முடியவில்லை. காரணமாக இருந்ததற்காக அழுது அழுது மனச்சுமையைக் குறைக்க எண்ணினேன். கூடியதே தவிரக் குறையவில்லை.

உறுதியாக இருந்த என்மனம் மாறத் தொடங்கியது. எனக்கே என்னைப் புரிந்துகொள்ள இயலவில்லை. உள்ளம் ஊசலாடத் தொடங்கியது. போராட்டம் இப்படியே சில காலம்.

மிகப் பிற்பட்ட காலத்தில்தான் என் உள்ளம் முற்றிலும் மாறியது. காரணம் யார்? பிழையாயின் என் பிழையா? என் நிலை, எனக்கே என்னைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. எதையுமே சரியாகச் செய்வதில்லை. என்ன படித்தேன்? என்ன எழுதினேன்? மாணிக்க வாசகர் பாடியதுபோல்,

'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்'

என்ற நிலைதான் எனக்கும்.

'தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்'

என்ற அவர் பாடலும் என் நிலைக்குப் பொருத்தமாக அமைந்து விட்டது இல்லையா?

உங்களை நினைக்கும்போது எப்படியிருந்த உங்களை இந்நிலையாக்கியது நான்தானே; இந்தத் தமிழ்த்துறைக்கு நான் வராமல் இருந்திருந்தால் நீங்கள் நிம்மதியாக ஆய்வு செய்து முடித்திருப்பீர்களே என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது. நீங்கள் என்னைப் புரிந்துகொள்ளாமலே இருப்பது நல்லது என்று நினைத்தேன். அதனால் நீங்கள் என்ன கேட்டாலும் பேசுவதில்லை என்று முடிவு செய்தேன். பேச நினைத்தாலும் முடியவில்லை. அதனால் என்னை வெறுப்பீர்கள் என எண்ணிய நான் உங்கள் உறுதியின் முன் தோற்றுவிட்டேன். இன்றைய நிலை பறிகொடுத்த மனத்தை மீட்க முடியாமல் தவிக்கிறேன். நீங்களும் நானும் நினைத்தால் மட்டும் போதுமா? குமுகாயத்தில் அடக்கப்பட்ட பெண்ணினத்தைச் சார்ந்தவள்தானே நான். எனக்கு என்ன சொல்வது, செய்வது என்று புரியவில்லை. ஒரே குழப்பம். பிழையாயின் மன்னிக்க வேண்டுகிறேன்"

மடலைப் படித்தேன். பலமுறை படித்தேன். துன்பப் படுகிறாள் என்பது தெரிந்தது. துணிவில்லை என்பதும் புரிந்தது. 'யார் யார்க்கு எழுதுவது என்றில்லாமல் முதலும் முடிவுமின்றி எழுதியிருக்கிறாயே இந்த மடலை வைத்துக் கொண்டு ஆசிரியன் ஏதும் செய்துவிடுவானோ என்று அஞ்சுகிறாய் போலும்' என்றேன். எப்படித் தொடங்குவது என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத்தான் தெரியுமே' என்றாள்.

(24.5.68)

◆

## வீட்டில் சந்தித்துப் பேசல்

இன்று (27.5.) பிற்பகல் துறைக்கு வருவதாயும் வந்தபின் இருவரும் வீட்டிற்குச் (என்) செல்லலாமென்றும் கூறினாள். சரியென்று ஒப்பி எதையெதைப் பேசலாம் என்று எண்ணிப் பார்த்தேன். மூன்றரை மணி அளவில் வீட்டிற்குப் புறப்பட்டோம். நான் முன்சென்று நகர் உணவு விடுதிக்குப் (Town Hotel) பக்கத்தில்

நின்றேன். பின் வந்தாள். மாதா கோயில்வழியே வீட்டிற்குச் சென்றோம். வீட்டுச் சொந்தக்கார அம்மாவைக் கண்டு அவளை அறிமுகப்படுத்திவைத்தேன். சிறிது நேரம் உரையாடியபின் என் வீட்டிற்குச் சென்றோம். வீட்டைச் சுற்றிப்பார்த்தாள். அழகாக இருப்பதாகக் கூறினாள். மேசைமேல் இருந்த என் படத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். மிகவும் அழகாக இருப்பதாகக் கூறினாள். 'அழகாகவா இருக்கிறது? உன்னை நினைத்துக் கலங்கிய விழிகளல்லவா அவை' என்றேன். பேச்சு தொடங்க மணி 4 ஆனது. 6 மணி வரை பேசிக் கொண்டிருந் தோம். என் கடந்தகாலக் காதல் நினைவுகளைச் சொன்னேன். அவள் துறைக்கு வருமுன்பு அவள் பற்றிய என் அறிவையும் வந்தபின்பு உள்ளம் எப்படி ஒட்டிக்கொண்டது என்பதையும் கோடிட்டுக் காட்டினேன். எனக்கு ஏமாற்றந்தந்த எதிர்பார்ப்பு களை எடுத்துக்காட்டினேன். கற்பனை எண்ணங்களைக் கோடிட்டுக் கூறினேன். என் அரிமாப் பீடு அவள் முன் எப்படி அடங்கிக் கிடக்கின்றது என்பதை விளக்கி னேன். துயர்வடிய அமர்ந்திருந்தாள். எதிர்காலத்தை எண்ணித் தான் இடையிடையே நெஞ்சத்தை மறைத்துக்கொண்டு விலகிச் செல்ல முனைந்ததாகக் கூறினாள். (வ.வே. உன்னை விரும்புவாரோ என்று நான் நினைத்ததைக் கேட்டேன். அவர்க்கு விருப்ப மிருந்ததை என்னால் உணர முடிந்தது. தெரிந்ததும் நான் தெளிவுபடுத்திவிட்டேன். எண்ணத்தை மாற்றிக்கொண்டார் என்றாள்.) மேலும் இரு நாட்களின்முன் 'ஐயாவும் நீயும் நாள்தோறும் என்ன பேசிக் கொள்கிறீர்கள். முன்புதான் ஆய்வு என்று சொல்லிச்சென்றாய். இப்போது எத்தொடர்பில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று வ.வே. கேட்டதாகச் சொன்னாள். எதையெதையோ பேசிக் கொண்டிருந்தோம். எண்ணியதை எண்ணியாங்கு எடுத்துரைக்க இயலவில்லை. நேரமுமில்லை. 'என் சாதி பற்றி உனக்குத் தெரியுமா' என்றேன். 'எனக்குத் தெரியாது. தெரியவும் வேண்டாம். சொல்லாதீர்கள்' என்றாள். தான் யார் கேட்டாலும் தன்சாதி 'தமிழ்ச்சாதி' என்றுதான் கூறுவேன்' என்பதை நேற்றுக் குறிப்பிட்டாள். இன்னொருநாள் என்ன செய்வது என்பதுபற்றிப் பேச வேண்டும் என்ற என் கருத்தையும் கூறி நான் எதையும் செய்யத் தயார். 'முடிவெடுக்க வேண்டியது உன் பொறுப்பு. தொல்லை வேண்டாம் என்றால் இதோடு விட்டுவிடுவோம். அம்மாவிடம் குறிப்பாக உணர்த்தப்பார்' என்று சொன்னேன். அம்மாவுக்குத் தெரிந்தால், இவ்வளவு துணிவு உனக்கு வந்துவிட்டதா? என்று சினமடையும். அப்பாவை நினைத்தால் ஒரே அச்சமாக இருக்கிறது. நம் திருமணம் நடந்து விட்டால் தங்கைகட்கு நடக்குமா என்றெல்லாம் சொன்னாள். எல்லா வற்றையும் நல்லமுறையில் எண்ணிப்பார். நான் என்ன

செய்யவேண்டும் என்று சொல்கிறாயோ அதைச் செய்கிறேன்' என்றேன். ஆறுமணி அளவில் வீட்டினின்று கிளம்பிச் சாலை வழியே இருவரும் இணைந்து பேசிக்கொண்டே நடந்து வந்தோம். ஓரளவு அவளுக்குத் துணிவு வந்தது. பல்கலைக்கழகக் கல்லூரி வாயில் வரை இணைந்து வந்தோம். 'வீட்டிற்கு வருவதென்றால் வாருங்கள். இணைந்தே செல்லலாம்' என்றாள். பிறகு வருவதாகக் கூறினேன். இருவரும் வாயிலிடை நிற்கையில் அவள் ஆசிரியர் சேசுதாசன் வந்தார். அவள் சிரித்தவாறே வணக்கஞ் செய்ய முயன்றாள். அவரோ காணாதவரைப் போல கண்டும் பார்க்க விரும்பாதவரைப்போல முகத்தை வைத்துக் கொண்டு கல்லூரிக்குள் நுழைந்தார். எனக்கு என்னவோ போல் இருந்தது. அவளுக்கும் இருந்திருக்கும். அவரைப் பொருட்படுத்தாமல் இருந்திருக்கவேண்டும். நாளை மறுநாள் வருவதாகக் கூறி விடைபெற்றாள். நான் துறை வந்தேன். தில்லிக்கு விசு, செழியன் ஆகியோர்க்கும் அரவரசிற்கும் நல்கைக்குழு உதவித்தொகை தொடர்பாக மடல் எழுதி அஞ்சலகம் சென்று விடுத்தேன். பின் சவேசு வீடு சென்றேன். துறையில் இல்லை. வீட்டிலும் இல்லை. அவரைக் கண்டு அவளொடு வீட்டிற்குச் சென்றதைக் கூறவேண்டும், கூறி ஒரு முடிவு பற்றிக் கேட்கவேண்டுமென்று விரும்பினேன். சில நாட்களுக்குள் செய்தியெல்லாம் அவரிடம் சொல்லவேண்டும். செல்லத்திடம் வந்து சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தேன். செல்லத்திடமும் இச்செய்தியைச் சொல்ல லாமா என்றோர் எண்ணம். சொல்லவில்லை. அப்போது (மருத்துவர்) தம்பி வந்தார். என்ன முகத்தைப் பார்த்தால் ஏதோ பெரிய மாற்றமாக இருக்கிறதே என்னவோ நடந்திருக்க வேண்டும். சொல்லுங்கள்' என்றார். நானும் அவளும் வீட்டிற்குச் சென்ற போது அங்கிருந்த குட்டித்தம்பிதான் ஏதோ சொல்லியிருப்பான் என்றெண்ணினேன். இரவு வீட்டிற்குச் சென்றதும் ஒரே களைப்பு. தம்பி வந்தார். மணி பத்திற்கு மேலாகிவிட்டது. கையில் காசில்லை. வாடிக்கைக்கடையை மூடிவிட்டார்கள். மருத்துவர் வீட்டிற்கு வந்து மூன்று பூரியும் பழமும் அருந்தினேன். உண்ணும்போது 'தன்னிடம் குட்டித்தம்பி கூறியதாகவும் உடனே வீட்டிற்கு வந்து பார்த்ததாகவும் நாங்கள் பேசிக்கெண்டிருந்துவிட்டு ஆறு மணிக்குக் கிளம்பியதாகவும்' கூறினார். வீண் ஆசைகளை விடமுடியாமல் ஓடிவந்து பார்த்திருக்கிறார்! பின் வீடு வந்தோம். தம்பியும் உடன்வந்தார். சிறிதுநேரம் உரையாடினோம். அவள் மடலைக் காட்டினேன். மனச்சோர்வும் உடற்சோர்வும் வாட்டின. உறங்கப் படுத்தேன். சரியான உறக்கமில்லை. அவள் எப்படி இருக்கிறா ளோ? ஆறரை மணிக்குத்தான் வீட்டிற்குச் சென்றிருப்பாள். நேரம் கழித்து வருவது பற்றி ஏதாவது கேட்டார் களோ, என்னவோ? இவள் என்ன மறுமொழி கூறினாளோ? நெஞ்சந்துடி துடிக்கிறது.

அவளுக்கு ஏதாவது துன்பம் வந்தால் என்னால் பொறுக்க முடியாது. எனக்கு வரும் துன்பத்தைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. இரவு அவள் அழுதாலும் அழுதிருப்பாள். அழுகின்ற நெஞ்சோடு பிரிந்துவிட வேண்டியது தானா? அதுதான் முடிவா யிருக்கும் போலும்!

உள்ளம் என்பது இடுகாடு – அதில்
உள்ளவை எத்தனை கல்லறையோ?

(27.5.68)

◆

## திரைப்படப் பைத்தியம் என்றுதான் தீருமோ?

காலை செய்தித்தாளைப் பார்த்தேன். இறப்புச் செய்திகள் எங்கும். வான ஊர்தி எரிந்து விழுந்தது. புகைவண்டி மோதி 'நொறுங்கிற்று, மகிழ்வுந்து புரண்டு கவிழ்ந்தது' என்று பல ஏதச் செய்திகள். பிறப்பைப்போல இறப்பும் விரைகிறதோ? வருதண்ணீரைப்போல் வந்து மாயக்காற்றைப்போல் மறையும் இந்த வாழ்க்கையில் எதையெதையோ செய்து முடிக்கவேண்டும் என்று எத்தனை விழைவுகள், கற்பனை மாளிகைகள், அடுத்த மணித்துளி வாழ்க்கையும் உறுதியில்லை என்றபோதும் உலகத்தையே வாரிக்கொள்வதைப்போல எத்தனை ஆசைகள்! இரேணுகுண்டாவில் நிகழ்ந்த புகைவண்டி மோதலில் பலர் இறந்தனராம். உயிர் பிழைத்த இரு குழந்தைகளை உயிரோடுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. குழந்தைகளுடன் வந்த பெற்றோரோ மற்றோரோ இறந்திருப்பர் போலும்' ஏதிலராகிய அக்குழந்தைகள் மருத்துவமனையில் (திருப்பதி) உள்ளனராம். சரியானபின் யாரிடம் சேர்க்கப் போகின்றனரோ என்பது செய்தி. ஏதுமறியாத இளசுகளை இயற்கை எப்படி வஞ்சித்து விடுகிறது! தினத்தந்தியில் படித்த செய்தியொன்றும் நெஞ்சில் நிற்கிறது. ஒரு பெண் திரைப்பட அரங்கில் பெண் குழந்தை பெற்றாளாம். நிறை சூலுற்றிருந்த அவள் வீரபாண்டியக் கட்டபொம்மன் படம் பார்த்தாளாம். வெள்ளையத்தேவனும் வெள்ளையம்மாளும் காதலிக்கும் கட்டத்தில் குழந்தை பெற்றாளாம். படம் நிறுத்தப்பட்டு குழந்தைக்கு வெள்ளையம்மாள் எனப் பெயரிட்டு தாயும் சேயும் வீட்டிற்கு அனுப்பட்டனராம். எவ்வளவு இழிதகு செய்தி! இந்தத் திரைப்படப் பைத்தியம் என்றுதான் தீரும்? ஐயகோ, என்னருமைத் தமிழ்நாடே! நீ உருப்படுவாயா? வெட்கந்தந்த இச்செய்தி வேதனையும் தந்தது.

(29.5.68)

◆

## 'என் நெஞ்சம்' நேரில் நின்றபோது...

தவிக்கின்ற மனதை ஆற்றலாம் என்றெண்ணி முன்பே காண்டேகர் நூற்களிலிருந்து எடுத்த குறிப்புக்களை நல்ல குறிப்பேட்டில் பெயர்த்தெழுதிக் கொண்டிருந்தேன். 'கிணறு அகலமாக இல்லாமலிருக்கலாம். ஆழமாக மட்டும் இருக்க வேண்டும் கோடைக்காலத்தில் வற்றிவிடாமல் இருப்பதற்கு. காதலும் அதைப்போன்றதுதான்' என்னும் வெண்முகிலில் இடம்பெற்ற ஒரு கருத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது பொருத்தமாக அவள் வந்தாள். நீண்ட வெயிலில் நடந்தவன் நிழலைக் கண்டதைப்போல் எத்துணை ஆறுதல்! குளித்து குழல் அலைய ஒற்றைப் பின்னலோடு மஞ்சள் ஒளிரும் முகமும் செவ்வட்டக் குங்குமம் பொலியும் நுதலுமாக நீலவண்ணப் பூப்போட்ட சேலையும் 'தெரிகாட்டன்' இளம்பச்சை மெய்ப்பைத் துணியிலேயே மேலணியும் உடுத்து என் நெஞ்சம் நிறைய நேரில் அவள் நின்றபோது... என் அரிமாப்பீடுதான் அவளிடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றதே! ஏதாவது நடந்ததா என்று கேட்டேன். ஒன்றுமில்லை என்றாள். என்னோடு வீட்டிற்கு வந்ததை நான் சொன்னதைப்போல அம்மாவிடம் கூறினாளாம். உங்களிருவரையும் பார்த்தவர்கள் ஏதாவது நினைத்துக் கொள்ள மாட்டார்களா என்று அம்மா கேட்க 'என்ன சொல்வார்கள், எதை நினைத்தாலும் நினைத்துக் கொள்ளட்டுமே' என்றாளாம்.

(29.5.68)

◆

## உன் கண்ணில் நீர் வழிந்தால்...

'உன் கண்ணில் நீர் வழிந்தால் - என் நெஞ்சில்
உதிரங் கொட்டுதடீ'
என் கண்ணிற் பாவையன்றோ? - கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ'

குழந்தையைப் பார்த்துப் பாரதி இப்படிப் பாடுகின்றான். குழந்தையாகி நின்ற எனக்கு அவளும் ஒரு குழந்தைதான். அவள் மாட்டு ஓடிவிட்ட என் நெஞ்சை அருமையாகக் காட்டுகின்றன மேல்வரிகள்.

(30.5.68)

◆

## ஒரு எச்சிற்பயல்

*நண்பகலில் விசயலட்சுமியில் உணவருந்தினேன். இக்கடையில் உணவருந்திய தொடங்கியது தொட்டு நான் ஒன்றைக் கவனித்து வருகின்றேன். கடையில் இருப்பவர்கள் எல்லாரும் அமைதியும் அப்பாவித்தனமும் உடையவர்களாக இருக்கிறார்கள். உண்ண வருகின்ற, அண்டையிலிருக்கின்ற எச்சிற்பயல்கள் அவர்களை ஆணையிட்டு அதட்டுவதைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு என்னவோ போல் ஆகிவிடுகிறது. நண்பகல் எனக்கு எதிரில் அமர்ந்து உணவுண்ட ஒரு எச்சிற்பயல் பரிமாறிகளையும் உரிமையாளரையும் முறைத்த முறைப்பு எனக்குச் சினமூட்டியது. ஒருவேளை உணவுக்குக் கூட அவன் இல்லத்தில் வக்கிருக்கிறதோ என்னவோ? ஏதோ எந்நேரமும் பாயசத்தோடும் பலவகைக் கறிகளோடும் உண்பவனைப்போல அதட்டலும் மிரட்டலும்! அருவருப்பான அவன் முகம்! உண்டு முடித்து வெளிவரும்போது கடைக்காரரிடம் சொன்னேன் 'நீங்கள் எல்லாம் அப்பாவிகளாக இருக்கிறீர்கள் கொஞ்சமாவது நெஞ்சுரம் வேண்டும்' என்று.*

*(30.5.68)*

◆

## அவள் வீட்டில்...

*எதற்கும் வேலுவை (சவேசு மகன்) அழைத்துச் செல்லலாம் என்றெண்ணிச் சவேசு அகம் சென்று அவனை அழைத்துக் கொண்டு மல்லிகைப்பூ வாங்கிச் சென்றேன். பிள்ளையார் கோவில் முக்கம் திரும்பும்போதே அவள் முன்வீட்டு வாயிலில் எதிர்பார்த்து நின்றாள். என்னைக் கண்டதும் உள்ளே ஓடித்தன் வீட்டு வாயிலில் நின்று வரவேற்றாள். என்னை எதிர்பார்த்து எங்கே வராமல் போய்விடுவேனோ என்றெண்ணி வாடிய முகத்தோடிருந்த அவளுக்குக் கண்டதும் ஒரு மலர்ச்சி! 'அப்பா அம்மா தங்கையர் இருவர் ஆகிய அனைவரும் இருந்தனர். ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் உரையாடிவிட்டு எட்டுமணி அளவில் பிரிந்தேன். அவள் அப்பா நான் எதிர்பார்த்ததைவிட நல்லவராக இருந்தார். காலையில் தேய்த்துக் கழுவிய வெண்கலச் செம்பைப்போல் மாசில்லாக் குழந்தைமுகம் அவர்க்கு, தோற்றத்திலிருந்த அமைதித் தூய்மை அவர் சொல்லிலுமிருந்தது; நான்தான் அவரின் குடும்பம், அலுவல் பற்றிய பலவற்றையும் கேட்டேன். என்னைப்பற்றி எதையும் அவர் கேட்கவில்லை. வேலைவிட்டு வீடுவந்தால் இந்த அறையில்தான் இருப்பேன் என்றார். 'கதர்க்கடைக்குப் போவீர்களாமே' என்றேன். கதர்க்கடைச் சூழலோடு தன்னை இணைத்துப் பேசுவதை விரும்பாதவராய் உடனே 'இல்லையே அங்கெல்லாம்*

அடிக்கடி போகமாட்டேன். எப்போதாவது போவேன். அதுவும் இப்போ தெல்லாம் செல்வதில்லை' என்றார். அவள் அம்மா வொடும் இடைஇடையே உரையாடினேன். நல்ல தமிழிலே உரையாடினார்கள். இடைஇடையே அவர் உதிர்த்த சில சொற்கள் நிறைய சரக்குள்ளவர் என்பதை எனக்குக் காட்டியது. 'பெண்க ளெல்லாம் மிகவும் கோழைகளாயிருக்கிறார்கள்' 'நாம் எண்ணு வதையெல்லாம் செய்ய இயலுமா?' வள்ளுவர்க்கு என்ன வேலை ஏதாவது சொல்லி வைத்து விட்டுப் போவார்' என்றெல்லாம் ஒலித்த அவர் குரல் எனக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

*(30.5.68)*

◆

# சூன் - 1968

## தம்பி அருளின் கேள்வி

'தம்பி அருள்' ஏன் இப்படி இவர்கள் நடுங்குகிறார்கள் என்றான். எனக்குச் சினம் பற்றிக்கொண்டு எரிந்தது. உந்தில் ஏறியதும் ஓரத்தில் அமர்ந்துகொண்டு வெளியே நின்ற எங்களோடு பேசிக் கொண்டிருந்தது. அப்போது 'பெண் கழுதைகள்' ஏன் இப்படி அஞ்சிச் சாகிறீர்கள். மனம் தூய்மையாயிருந்தால் மற்றவர் களைப் பற்றி எதற்கு அஞ்சவேண்டும். உங்களைப் பற்றி மற்றவர் கள் சொல்வதை வைத்துக்கொண்டு தவறாகப் பெற்றோர்களே ஐயப்பட்டால் அவர்கள் பெற்றோர்களா? ஊரார் ஆயிரம் சொன் னாலும் தன் பிள்ளையின் அழகு அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். வழியில் போகிறவன் சொல்வதை யெல்லாம் கேட்டு நாளைக்கு வருகிற மாப்பிள்ளை மணந்து கொள்ள மாட்டானோ என்று அஞ்சுகிறீர்களா? அப்படிப்பட்ட மாப்பிள்ளையை மணந்துகொண்டு வாழ்வதுதான் வாழ்க்கையா? அப்படி வாழ்வதினும் உயிரை விட்டுவிடலாமே' என்றெல்லாம் பேசினேன்.

*(5.6.68)*

◆

## பசித்தவன் முன் பாற்சோறு

காலையிலேயே அவள் வருவாள் என எதிர்பார்த்தேன். வரவில்லை. அவளுக்கென எழுதிய மடல் என்னிடமே உள்ளது. நேற்று அவள் முகத்தைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. இன்றும் வராமல்போய் விடுவாளோ என்ற ஏக்கம். வேறு எந்த வேலையுமே செய்யமுடியவில்லை.

நாளொன்று கண்ணே! நாவல் விழிச்சுடர்
நான்பட வில்லையென்றால்
வாளொன்று நெஞ்சை வகிர்ந்ததைப் போல
வாடிப் புலம்புவதேன்!

என்று சென்ற ஆண்டில் அவளை நினைத்து எழுதிய வரிகளில் எத்துணைப் பொருண்மை! பிற்பகல் 2½ மணி அளவில் வந்தாள்.

வாட்டும் கோடையில் வந்த மழை! பசித்தவன் முன் பாற்சோறு! விழிகளால் உண்டேன். இருவரும் எளியவர்களானோம். காதல்முன் பட்டமாவது, தகுதியாவது? உயர்வேது தாழ்வேது? அவளுக்கு நான் அடிமை. எனக்கவள் அடிமை! ஏற்றமோ இறக்கமோ இல்லாத நிலை.

*(6.6.68)*

◆

## விளக்கமறிவதற்காக மடல்

இறுதியான ஒரு முடிவுக்கு இருவரும் வரவேண்டும் என்ற எண்ணத்தில் அவளிடம் சில வினாக்களை எழுப்பி விளக்க மறிவதற்காக நான் எழுதிய மடலைக் கொடுத்தேன். அம்மடல்:

உணர்வின் மையமாய் உயிர்ப்பின் விசையாய்ப்
பாலிற்படு நெய்யாய் என்னுள் செறிந்திருப்பவளே!

'ஒவ்வொரு நாளும் நீ வருமுன் உன்னைக் காணவில்லையே, காணவில்லையே' எனுந்துடிப்பு. கண்டபின் 'போய்விட்டாளே போய்விட்டாளே' எனும் புலம்பல். பேசக் காத்துத் தவிக்கிறேன். காத்துப் பேசித் தவிக்கிறேன். தவிப்பே எந்நேரமும் என்னுள் நிறைந்திருக்கிறது. சின்னாட்கள் உன்னைப் பிரிந்திருந்தால் செத்து விடுவேனோ என்னவோ? உள்ளத்தில் உள்ளதைச் சொல்கிறேன். உயர்வு நவிற்சியாய் எண்ணிவிடாதே!

எண்ணம் நெஞ்சளவிலேயே நின்றுவிடக் கூடாது என்பதால் கீழ்க்கண்டவற்றை எழுதுகிறேன். எண்ணித் துணிக துணிந்தபின் எண்ணுதல் இழுக்கு.

என்னையும் இல்லத்தாரையும் நிறுத்துப்பார்
இன்பத்தையும் துன்பத்தையும் எண்ணிப்பார்!
இழப்பையும் ஊதியத்தையும் கணித்துப்பார்.

ஆர அமர்ந்திருந்து தீர எண்ணி மனத்தில் படுவதை மறைக்காமல் சொல். நம் இருவரிடை எந்தக் கமுக்கமும் இருக்கக் கூடாது.

நம் நெஞ்சப் புணர்ச்சி திருமணத்தில் முடிய வேண்டு மென்று விரும்புகின்றாயா? விருப்பமில்லையென்றால் ஒரே சொல்லில் இல்லையென்று சொல்லிவிடு. பின்வருவனவற்றைப் படிக்க வேண்டிய தொல்லையை எடுத்துக்கொள்ள வேண்டாம். விருப்பமிருந்தால் கீழ்க்கண்டவற்றிற்கு விளக்கம் தா.

நம் உள்ளப்பிணைப்பு திருமணத்தில் முடியுமென்று நம்புகின்றாயா?

*திருமணத்திற்குள்ள தடைகள் எவையெனக் கருதுகின்றாய்? அத்தடைகளை எப்படித் தவிர்க்கலாம்?*

*திருமணத்தால் இல்லத்தார்க்கு என்னென்ன தொல்லைகள் ஏற்படலாம்?*

*மண நம்பிக்கையிருந்தால் எக்காலத்தில் எச்சூழலில் மணம் நிகழ்வது நன்றெனக் நினைக்கிறாய்?*

*இத்தொடர்பில் நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்? உன்னால் என்ன செய்ய முடியும் என்று நம்புகிறாய்.*

*எண்ணிய திண்ணியராகப் பெறின் எண்ணியாங்கு எய்த லாம். காலங்கருதி இடத்தால் செயின் ஞாலத்தையும் கையகப் படுத்தலாம். எனக்காக எந்த முடிவுக்கும் வந்துவிடாதே. முதலில் உனக்காக, பின் நமக்காக என்ற வரிசையில் எண்ணிப்பார். எண்ணியதை எண்ணியாங்கு எனக்குச் சொல்.*

*(6.6.68)*

◆

## பேராசிரியருடன் மகிழ்ச்சி நிறைந்த சந்திப்பு

*பிற்பகல் பேரா வந்தார். வேலை எந்த அளவு நடந்திருக்கிறது என்றார். சொன்னேன். அடுத்த சூனில் இடத்தினின்று விடைபெறவேண்டும். அதற்குள் வேலை முற்றுப்பெறல் வேண்டும். நானும் வேலை தொடர்பாக உதவுவேன் என்றார். தென்மொழி, பாவாணர் பற்றிப் பேசினார். மாணவர்களின் போக்கைப்பற்றி நான் எண்ணியாங்கே நன்கு உணர்த்தினார். மேலைநாட்டினர் எதையும் இளமை முதலே எழுதி எழுதிப் பழக்கப்படடவர். அதனால் எதையும் முறைப் படுத்தித் தெளிவாகச் சரியாகச் சொல்வர். நம்மவர் எதையுமே பேசிப்பேசிப் பழக்கப்பட்டவர். கேட்பவர்க்கு இன்பம் பயக்கவேண்டும் என்றும் சூழ்நிலைக்கேற்பச் சுவையாகப் பேசவேண்டும் என்பதுமே பேச்சில் கவனிக்கப் படுபவை. ஆதலால் ஆய்வுநிலையில் நம்மவர் முறை சிறப்பான தாகக் கொள்ளப் பெறுவதில்லை என்றார். மொழியியல் நூல் வெளியிடுவதைப் பற்றிப் பேசினேன். ஆய்வை முடித்துச் செய்வதே நலம். அதன்முன் நூலைத் தட்டச்சிலிட்டு மாணவர்க்கு நடத்திப் பார்த்துச் செப்பம் சேர்த்து வெளியிடல் நன்று என்றார். என் அருகே வந்தமர்ந்து மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தது எனக்கு இன்பந்தந்தது. கடுமையாக வேலைசெய்து விரைவில் முடித்துவிடவேண்டும் என்ற முனைப்பு எழுந்தது.*

*(8.6.68)*

◆

## ஒரு மழைப்பொழுதில் அவள் வருகை

மாலையில் மழைபெய்து கொண்டிருக்கையில் திடுமென அவள் வந்தாள். வந்தபோது மணி ஆறரை. கருப்பு மெய்ப்பையும் சிவப்புச் சேலையுமாய் குளித்து முடித்துக் கூந்தலைப் பின்னலிடாமல் உலரவிட்டு மாலையில் மலர்ந்த முல்லையாய் அவள் கண் நிறைய எதிர்நிற்கையில் கண்களுக்குத்தாம் என்ன இனிமையான உணவு. நெஞ்சவயிறு நிறைய விழிவாய் உண்டது.

(13.6.68)

◆

## தங்கப்பன் வருகை

துறைக்கு வருகையில் தங்கப்பன் ஏட்டுச் சுவடி நூலகப் பகுதியில் வந்து கொண்டிருந்தார். கண்ணாடிக்காரைப் பார்த்ததும் எனக்கு வியப்பாக இருந்தது. நேற்று இரவே அனந்தை வந்து விட்டதாகவும் இரவெல்லாம் பல பகுதிகளிலும் முகவரியில் குறிப்பிட்ட இடம் தெரியாமல் அலைந்து பின் அருணா விடுதியில் அறை எடுத்து தங்கியுள்ளதாகவும் கூறினார். பின் இருவரும் வீட்டிற்குச் சென்று சிறிதுநேரம் இருந்தபின் பழவங்காடி சென்று சௌராட்டிராவில் உண்டோம். உந்துநிலையம் சென்று அண்மையில் உள்ள பூங்காவில் அமர்ந்து பேசினோம்.

(17.6.68)

◆

## மணியைப் பார்த்தேன்

இரவு 10½ மணியளவில் கோபி மணமண்டபம் அடைந்தேன். மணியைப் பார்த்தேன். என்னைக் கண்டதும் மணிக்கு ஒரே மகிழ்ச்சி. தவமணி வராமையறிந்து வருந்தினார். மற்ற நண்பர்களும் வந்து மகிழ்வோடு உரையாடினர். மணவிழா நாளை காலை. இன்றிரவு ஒரு இசை நிகழ்ச்சி நடந்தது. பலவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தோம். இரவும் உறக்கமில்லை.

## தம்பி சீனுவின் வீட்டில்...

காலை 10 மணியளவில் பாலக்காடு சென்று ஓர் உணவு விடுதியில் காலைக் கடன்களை முடித்து 1½ மணியளவில் கோவை சேர்ந்து பின் தம்பி சீனு வீட்டிற்கு வந்தேன். அவன் அப்போதுதான் வெளியே கிளம்பினான். எனைக் கண்டதும் திரும்பினான். வீட்டிற்குச் சென்று உடைமாற்றிக் கொண்டு சிற்றுண்டியருந்தினேன். அவன் துணைவி செய்திருந்த சிற்றுண்டி.

அருமையாக இருந்தது. தம்பிக்கு அகமும் புறமும் அழகிய, சமையற்கலையில் கைதேர்ந்த துணைவி வாய்த்தது பெரும்பேறு தான். சுவை கெழுமிய தேங்காய்ப் பருப்பி செய்திருந்தது. அதைத்தின்னும்போது என்னவளின் நினைப்பு எனக்கேற்பட்டது. அவளும் இதைத் தின்னவேண்டும் என்ற ஆசை எழுந்தது. இப்பொழுது எப்படி இருக்கிறாளோ என்ற எண்ணம் வேறு. ஊர்க்குச் செல்லும்போது உன் அண்ணிக்கு இதைக் கொண்டு போக வேண்டுமென்று சீனுவிடம் சொன்னேன். நாளைக்குச் செய்துகொண்டு போகலாம் என்றான். துணைவியிடம் சொன்னேன். அவனோடும் அவன் துணைவியோடும் பேசிக் கொண்டிருக்கும்போதெல்லாம் நெஞ்சம் மகிழ்ச்சிக் கூத்தாடியது. உடன் பிறந்த தம்பி தம்பி துணைவியிடம் பழகுவதைவிட நிறைவுணர்வு வாய்த்தது. என்னவளும் அச்சூழலில் இருந்தால் இன்னும் இனிமையாக இருக்குமல்லவா என்றெண்ணினேன்.

(19.6.68)

◆

## ஆறரை மணிக்கே மணவிழா

மணவிழா 6½ மணிக்கே தொடங்கிவிட்டது. தம்பி சண்முக சுந்தரம் என்னைத் தேடி வந்திருந்தான். இருவரும் மணமண்ட பத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். மேளம் முழங்க இசை மயங்க மண்டபம் எங்கும் மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டி ருந்தது. என் மனமோ என்னவளை எண்ணி ஏங்கிக் கொண்டி ருந்தது. இப்படி மேளம் கொட்ட சுற்றமும் நட்பும் சூழ வாழ்த்திசைக்க மணவிழா நிகழுமா என்றெல்லாம் எண்ணிப் பார்த்தேன். அவளின் பெற்றோரில்லாமலேயே மணம் நடக்கும் ஒரு நிலை வந்தால் அவள் எப்படி இருப்பாள். மணமேடையில் அமர்ந்திருக்கும் போது பெற்றோரில்லையே என வருந்த மாட்டாளா என்றெல்லாம் நினைவுகளை ஓடவிட்டு உள்ளம் வருந்திக் கொண்டிருந்தேன். மணம் 6¾ மணிக்கெல்லாம் முடிந்துவிட்டது. பின் மணவிழா மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தேன். ஒரே நேரத்தில் ஏழு திருமணங்கள் நடத்தலாமாம். அருமையான இடம். பெருந்திரளாகக் கூடி மணம் நிகழ்த்த ஏற்ற அவ்விடத்திற்கு ஒரு காசு கூட வாடகையில்லை என்றதுதான் எனக்கு வியப்பாக இருந்தது. உணவு சமைக்க, பரிமாற வேண்டிய ஏனங்களெல்லாம் அவர்களே தருகிறார்களாம். இதைப்போன்ற அருமையான மண்டபம் (சீதா கல்யாண மண்டபம்) வேறெங்காயினும் இருக்குமா என்பது ஐயமே.

(20.6.68)

◆